


மாமியார்
அமுதா கணேசன்


மாமியார்
அமுதா கணேசன்

MAR 2004

# மாமியார்

## 1

அங்கமுத்து அலங்காரத்தை முடித்துக் கொண்டு ஒரு மணி நேரத்துக்கு மேலாகி விட்டது!

ஆனால், நாலுமணிக்கே வீட்டுக்கு வந்துவிட வேண்டும் என்று அவள் சொல்லி அனுப்பியவர்களில் ஒருவர்கூட இன்னும் வரவில்லை.

"கிளிப்பிள்ளைக்குப் போல சொல்லி அனுப்பினேனே" என்று, கிளிப்பிள்ளை போல, அங்கமுத்து சொல்லிக் கொண்டே இருந்தாள்.

ஓர் இடத்தில் உட்கார முடியவில்லை; அப்படியும் இப்படியும் நடந்து கொண்டு இருந்தாள். வாசலைப் பார்த்துப் பார்த்து, கண் பூத்துப் போய் விட்டது. யாரையும் காணோமே என்ற எரிச்சல் வேறு! அவள் உடம்புக்கு இதெல்லாம் தாங்குமா? வியர்த்துக் கொட்டியது.

கைக்குட்டையால் முகத்தை ஒற்றிக் கொள்வதும்-கண்ணாடி முன்னே நின்று பவுடர் சரியாக இருக்கிறதா என்று பார்த்துக் கொள்வதுமாக இருந்தாள்.

நேரங்காலம் தெரியாமல் வேலைக்காரி முனியம்மா வந்து "அம்மா, காப்பி ஆறிப்போகிறது" என்றாள்.

"கொண்டு போய் வாழை மரத்தடியில் கொட்டு!" என்று அங்கமுத்து கர்ச்சித்தாள்!

ஆமாம், கர்ச்சிக்கத்தான் செய்தாள்!

அவளுக்கு சாதாரணமாகவே பேச வராது. வாயைத் திறந்தால் கர்ச்சனை தான்!

'அவள் என்ன சிங்கமா?' என்று கேட்டார்கள்.

ஆமாம், அவள் சிங்கம்தான்!

ஆண் சிங்கமாகப் பிறந்திருக்க வேண்டியவள்! ஓர் இலக்கம் தவறிப் போய், பெண்ணாகப் பிறந்து விட்டாள்!

ஆள் பார்வைக்குத்தான் யானைக் குட்டி போல இருப்பாளே தவிர . உறுமினால், சிங்கம்தான்! பார்வை-பேச்சு-மூச்சு எல்லாமே சிங்கம்தான்.

அவளுக்கு என்று ஒரு பார்வை இருக்கிறது பாருங்கள். அது சிங்க நோக்கு! அந்தப் பார்வையைத் தாங்கிக் கொள்ள யாராலும் முடியாது! "அய்யப்பா சரணம்" என்று அவளுடைய காலடியில் விழுந்துவிட வேண்டியது தான்!

பஞ்சுப் பொதி போல குண்டு திண்டான உடல், அங்கங்கே சதை பிதுங்கிக் கொண்டு இருந்தது.

கொடியிடை-பிடியிடை-நூல் இடை என்றெல்லாம் சொல்லுவார்கள். 'அவளுக்கு இடை இருக்கிறதோ இல்லையோ' என்று வர்ணிப்பார்கள். ஆனால், அங்கமுத்துக்கு இடையே கிடையாது! இடை என்று ஒன்று அவள் உடலில் இல்லை! எடைதான் உண்டு! மரத்தில் மறைந்த மத யானை போல, அந்த எடையில் இடை மறைந்து விட்டது! உள்ளங்கால்



முதல் உச்சிவரை பூசிவிட்டது போல ஒரே உருவம்! மதுரை திருமலை நாயக்கர் மண்டபத் தூணை கட்டிப் பிடிக்க முடிந்தாலும், அங்கமுத்துவின் இடையைப் பிடிக்கவே முடியாது!

ஆனால், கைகள் இடை அளவுக்கு இல்லை. "இதுதான் கை" என்று தனியே சொல்லிவிட முடியும்! ஒரு யானையின் துதிக்கை அளவு இருக்கும், அவ்வளவுதான்!

கை நிறைய வளையல்கள், கழுத்து நிறைய சங்கிலிகள், காதில் வைரம், அள்ளி முடிந்த கூந்தல், எந்த நேரமும் காஞ்சிபுரம் தான் கட்டியிருப்பாள். தங்கப் 'பிரேம்' போட்ட கண்ணாடி அவளது கம்பீரமான தோற்றத்தை அதிகப்படுத்தத் தான் செய்தது.

அங்கமுத்துக்கு நாற்பது வயது இருக்கும். யாருக்கு வஞ்சகம் செய்தாலும், வாய்க்கும் வயிற்றுக்கும் செய்யவே மாட்டாள்! அவள் வாய் நெல் அரைக்கும் ஆலை! வயிறு, வந்த தெல்லாம் கொள்ளும் ஏலேல சிங்கன் கப்பல்! எந்நேரமும் எதையாவது தின்று கொண்டே இருப்பாள். அதனால் தான் இப்படி பலூன் போல இருக்கிறாள். இதைப்பற்றி அவள் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

அலங்காரத்திலும் குறை வைத்துக் கொள்ள மாட்டாள். தலையில் ஒரே ஒரு நரைமுடி தெரிந்தது. அன்று முதல் தலைக்கு சாயம் தடவத் தொடங்கி விட்டாள். முகத்துக்கு தினசரி ஒரு டப்பா பவுடருக்கு மேல் பூச மாட்டாள். ஒவ்வொரு சாப்பாட்டுக்குப் பின்னும் உதட்டுச் சாயம் பூசிக் கொள்ள தவறமாட்டாள். எந்நேரமும் தலை நிறையப் பூ வேண்டும்.

அங்கமுத்துதான் அந்த வீட்டுக்கு எஜமானி. அவள் இடுப்பில் தொங்கும் சாவிக் கொத்தைக் கொண்டே இதைத் தெரிந்து கொள்ளலாம்.

நாடாளும் ராணியை ஆங்கிலேயர்கள் "கிங்" என்பார்கள். அப்படிப் பார்த்தால் வீடாளும் அங்கமுத்துவை "கிங்" என்றுதான் சொல்ல வேண்டும். "கிங்காங்" என்று சொன்னாலும் தவறு இல்லை!

வீட்டில் எல்லாமே அவள் அதிகாரம்தான். அவள் வைத்ததே சட்டம். அவளது ஆணையில்லாமல் ஒரு துரும்பு கூட அசையாது! அசையக் கூடாது!

அவள் ஆணையிடுவதுடன் சரி. அவளாக ஒரு துரும்பைக் கூட அசைக்க மாட்டாள். அது முனியம்மாவின் வேலை. ஆனால், அங்கமுத்து வீட்டுக்காரர்களையும் விடுவது இல்லை. எல்லோரையும் பம்பரமாக ஆட்டி வைத்தாள்.

அவள் ஒரு சிறந்த சமூக சேவகி. அவள் உறுப்பினராக இல்லாத மன்றம்-கிளப்-சங்கம் எதுவுமே கிடையாது. பல சங்கங்களில் தலைவியாகவும் இருக்கிறாள். பாவம், அவளுக்கு சமூக சேவைக்கே நேரம் போதவில்லை. வீட்டு வேலைகளை எப்படிக் கவனிப்பாள்!

அங்கமுத்துக்கு பக்தியும் அதிகம். கோவில் விழாக்கள் கும்பாபிசேகம் வாரியார் கதாகாலட்சேபம்... தீட்சிதர் உபந்யாசம் எதுவானாலும், முதல் வரிசையில், பட்டுச் சேலையும்-வைரக் கம்மலும் மினுமினுக்க அங்கமுத்து அமர்ந்து இருப்பதைக் காணலாம். காலையில் குளித்ததும் பூஜை செய்வாள். திங்கட்கிழமை விரதம் இருக்கிறாள். அன்று மட்டும் அவள் சாப்பாட்டு அறைக்குள்ளேயே போவது இல்லை. இரண்டு சீப்பு மலைப்பழம், ஒரு டஜன் ஆப்பிள், ஒரு கூஜா பசும்பால், ஒரு குடம் காப்பி, ஆறே ஆறு இட்லி, எண்ணி எட்டே எட்டு தோசை, பத்து இருபது அப்பம், அரை லிட்டர் உளுந்தை ஆட்டிச் செய்த வடை அதோடு சரி! அதற்கு மேலே வாயில் பச்சைத் தண்ணீர் கூடப்படாது.

அங்கமுத்துக்கு வாய் வரண்டது.

"அடி முனியம்மா! காப்பி கொண்டு வா" என்று குரல் கொடுத்தாள்.

"இதோ வருகிறேன், அம்மா" என்று பதில் குரல் கொடுத்த முனியம்மா, அந்தக் குரலின் பின்னேயே ஓடி வந்தாள்.

அவள் கையில் ஆவி பறக்கும் காப்பி!



அங்கமுத்துக்காக எப்பொழுதும் ஒரு பெரிய "பிளாஸ்க்"கில் காப்பி தயாராக வைத்திருப்பாள், முனியம்மா.

காப்பியைக் குடித்து, நாக்கை நனைத்துக் கொண்ட அங்கமுத்து, "ஏண்டி முனியம்மா, நான் எத்தனை முறை சொல்லி அனுப்பினேன்? யாராவது வந்திருக்கிறார்களா பார்த்தாயா?" என்று குறைபட்டுக் கொண்டாள்.

அப்பொழுது மணி நான்கு அடித்தது!

"எல்லாம் வருகிற நேரம்தான். அம்மா" என்று முனியம்மா கனிவாகச் சொன்னாள்.

அங்கமுத்து போய், நிலைக் கண்ணாடி முன் நின்று உதட்டுச் சாயத்தை சரி செய்து கொண்டாள்.

அப்பொழுது கயல்விழி வந்து காரில் இறங்கினாள்.

"அம்மா" என்று அழைத்துக் கொண்டே, வீட்டுக்குள் நுழைந்தாள்.

"வாடியம்மா வா" என்று அவளை வரவேற்ற அங்கமுத்து "மணி என்ன பார்த்தாயா?" என்று சுவர்க் கடிகாரத்தைக் காட்டினாள்.

"கொஞ்சம் நேரமாகி விட்டது. அம்மா" என்று செல்லமாகச் சொன்ன கயல்விழி "இதோ ஒரு நொடியில் கிளம்பி விடுகிறேன்" என்றாள்.

"முதலில் போர்ன்விடாவைக் குடித்துவிட்டுப் போ." என்ற அங்கமுத்து, மீண்டும், "முனியம்மா" என்று குரல் கொடுத்தாள்.

'என்' என்றால் எண்ணெயாக வந்து நிற்பவள், முனியம்மா. போர்ன்விடா, முந்திரிப்பருப்புப் பகோடா, காரட் அல்வா அனைத்தும் எடுத்துக் கொண்டு வந்தாள்.

கயல்விழி போர்ன்விடாவை மட்டும் பருகினாள். மற்றதை தொட்டுப் பார்க்கக்கூட இல்லை. தானும் அம்மாவைப் போல ஆகிவிடுவோமோ என்ற அச்சம் அவளுக்கு எப்பொழுதும் உண்டு!

"அல்வாவை ஏன் வைத்துவிட்டாய்? சாப்பிடு" என்றாள், அங்கமுத்து.

"போதும் அம்மா" என்று சொல்லிவிட்டு, கயல்விழி மாடிக்கு ஓட்டம் பிடித்தாள்.

அவளையே திரும்பிப் பார்த்த அங்கமுத்து, "ஏண்டி, முனியம்மா, அவள் ஏன் நாளுக்குநாள் மெலிந்து கொண்டே போகிறாள்?" என்று கேட்டாள்.

"வளர்கிற வயதில் அப்படித்தாம்மா இருப்பார்கள்" என்றாள், அவள்.

"இவள் எல்லாம் கண்டவள்... போடி உள்ளே" என்று அங்கமுத்து கர்ச்சித்தாள்.

முனியம்மா ஓட்டம் பிடித்தாள்.

"அவள் ஒழுங்காக சாப்பிடுவதே இல்லை. டாக்டரிடம் சொல்லி, பசியெடுக்க ஏதாவது மருந்து வாங்கிக் கொடுக்க வேண்டும்" என்று அங்கமுத்து சொல்லிக் கொண்டாள்.

அவளுக்கு கயல்விழி செல்லப் பெண், ஒரே மகள். அவளிடம் மட்டும் கர்ச்சிப்பது இல்லை. அவள் தன்னைப் போல இல்லையே என்ற கவலை அங்கமுத்துக்கு உண்டு.

கயல்விழிக்கு பாவாடை கட்டும் பருவம். பளிங்குச் சிலை உருவம். பத்தாம் வகுப்புப் படித்துக் கொண்டு இருக்கிறாள்.

அங்கமுத்து மீண்டும் கடிகாரத்தைப் பார்த்தாள்.

சரியாக ஐந்து மணிக்கெல்லாம் பெண் பார்க்க வருவதாக அவள் சொல்லியிருந்தாள்.

"இந்த மனிதனாவது காலா காலத்தில் வரக்கூடாது" என்று அவள் கரித்துக் கொட்டிக் கொண்டு இருந்த பொழுதே, சுப்பிரமணியம் வந்து விட்டார்.



அவரைப் பார்த்ததும் அங்கமுத்து கர்ச்சித்தாள். "மணியைப் பார்த்தீர்களா? ஐந்து மணிக்கெல்லாம் நாம் பெண் வீட்டில் இருக்க வேண்டும்"

"போக வேண்டியது தான்."

சுப்பிரமணியத்துக்குக் குரல் வெளியில் வரவில்லை.

அவர்தான் சம்பாதித்துக் கொண்டு வந்து கொட்டுகிறவர். ஆனால், வீட்டில் அங்கமுத்துக்கு அவர் ஒரு நாய்க்குட்டி!

அவர் குரல் கேட்டதும், முனியம்மா காப்பியும் சிற்றுண்டியும் கொண்டு வந்தாள்.

"இப்பொழுது எதற்கு காப்பி? அதுதான் பெண் வீட்டில் கொடுப்பார்களே!" என்று அங்கமுத்து கர்ச்சித்தாள்.

"அம்மா, நம் எல்லோருக்கும் தினசரி மாலை காபி பலகாரம் ஏதாவது ஒரு பெண் வீட்டில் என்று ஆகிவிட்டது, இல்லையா!" என்று சொல்லிக்கொண்டே மன்னன் வந்தான்.

முனியம்மா கையில் இருந்த காப்பியை அவன் வாங்கி அப்பாவிடம் கொடுத்தான்!

"அடி முனியம்மா! தெருக் கோடியில் செருப்புத் தைக்கிறவன் இருப்பான். அவனைக் கூட்டிவா. இவன் வாயைத் தைக்க வேண்டும்!" என்று அங்கமுத்து கர்ச்சித்தாள்.

"அதோ அவனே வந்துவிட்டான்" என்றான், மன்னன்.

"செருப்புத் தைக்கிறவனா?" என்று கேட்டுக்கொண்டே அங்கமுத்து வாசலைப் பார்த்தாள்.

கண்ணன் வந்து கொண்டு இருந்தான்.

"காலாகாலத்தில் வரக்கூடாதா? அப்படி என்ன வெட்டி முறிக்கிறாய்?" என்று வக்கனை பேசிய அங்கமுத்து, "மசமச என்று நிற்காதீர்கள். எல்லோரும் சீக்கிரம் புறப்படுங்கள். இன்னும் பத்து நிமிடம்தான் இருக்கிறது" என்று கட்டளையிட்டாள்.

மணி ஐந்து அடித்தபொழுது அந்த மாளிகையில் இருந்து ஒரு கார் வெளியில் கிளம்பிச் சென்றது!

## 2

ஐந்து விரல்களும் ஐந்து விதம்!

அதே 'அவதாரம்' தான் அங்கமுத்துவின் குடும்பமும்!

ஆமாம், அது அங்கமுத்துவின் குடும்பம்தான்! அவள் தான் குடும்பத்தை அடக்கி ஆளுகிறாள்.

அவளுடைய கணவர் சுப்பிரமணியம் அவளை கை பிடித்த பொழுது, அவர் சாதாரண சுப்பிரமணியம் தான். இப்பொழுது இலட்சாதிபதி சுப்பிரமணியம். லாட்டரி இலட்சாதிபதி அல்ல! உழைப்பினால் உயர்ந்தவர்.

ஆனால், அங்கமுத்து "நான் வந்த யோகம்தான்" என்று அடிக்கடி சொல்லிக் கொள்ளுவாள். சுப்பிரமணியமும் அதை நம்பினார். அவள் மீது அளவற்ற அன்பு காட்டினார். அந்த அன்பு அவரை மனைவிக்கு அடிமை ஆக்கியது. அவர் கோழையானார்! அங்கமுத்து காளையானாள்! 'அவள் வைத்தால் குடுமி! சிறைத்தால் மொட்டை!' என்றாகிவிட்டது!

பணம் பெருகப் பெருக, அவளும் கனமானாள். மண்டையும் கனம் ஆயிற்று!

அவர்களின் மூத்த மகன் கண்ணன். அவன் அப்பாவைப் போல! அப்பாவி. அம்மாவுக்கு அடக்கம். கிழித்த கோட்டைத் தாண்டமாட்டான். அப்பாவுக்கு உதவியாக அவருடன் இருந்து தொழிலைக் கவனித்துக் கொண்டு இருக்கிறான்.

அடுத்தவன் மன்னன். அவனுக்கு அங்கமுத்து வைத்த பெயர் ராஜ ராஜன். அவன் தன் பெயரை 'மன்னாதி மன்னன்' என்று மாற்றிக் கொண்டான். சுருக்கமாக 'மன்னன்' என்று அழைப்பார்கள்.



பெயரை மாற்றிக் கொண்டதில் இருந்தே அவனது குணச் சிறப்பை அறிந்து கொள்ளலாம்! கல்லூரியில் வேறு படித்துக் கொண்டு இருக்கிறான்! கல்லூரி மாணவிகளுக்கே அவன்தான் நாகரிகம் கற்றுக் கொடுக்கிறான். கிருதாவும் புருதாவும் பார்க்க சகிக்காது! ஏராளமான தோழிகள்; ஓர் இந்திப் படம் தவற விடமாட்டான். ஹேமாமாலினியின் ரசிகன்.

அங்கமுத்துவின் அதிகாரத்துக்கு அறைகூவல் விடும் ஒரே ஆள், மன்னன்தான்! அவள் எது சொன்னாலும், காதில் வாங்கிக் கொள்ளமாட்டான். அவளிடம் இருந்து அவன் வாங்கிக் கொள்வது ஒன்றே ஒன்றுதான். அதுதான் பணம்!

"அரட்டை," "அகராதி" என்றெல்லாம் அவனுக்கு அங்கமுத்து பட்டம் சூட்டியிருக்கிறாள். ஆனாலும், என்னவோ அவன் மீது மட்டும் அவளுக்கு தனிப்பாசம் உண்டு! பாயசம் செய்தாலும் சரி, பால்கோவா கிண்டினாலும் சரி, அவனுக்கு என்று முதலில் தனியே எடுத்து வைத்துவிடுவாள். அவன் பணம் கேட்டு, அவள் இல்லை என்றது இல்லை. 'இதெல்லாம் என்னடா வேடம்?' என்று சுப்பிரமணியம் எப்பொழுதாவது அவனை கண்டிப்பது உண்டு. 'ஏன் அவனை கரித்துக் கொட்டுகிறீர்கள்? இது அவனுக்கு அழகாகத்தான் இருக்கிறது!' என்று உடனே அங்கமுத்து பரிந்து கொண்டு வந்து விடுவாள்.

கடைக்குட்டி கயல்விழி. வீட்டில் எல்லோருக்குமே அவள் செல்லப்பிள்ளை. பெற்றோருக்கு ஒரே பெண். அண்ணன் மாருக்கு அருமைத் தங்கை. அத்தனை பேரும் அவள் மீது அன்பைப் பொழிந்தார்கள். அதற்குத் தகுதியானவளாகத்தான் அவளும் இருந்தாள். நல்ல அழகு. நளினமான குணம். சிரித்த முகம், கண்ணாடித் தொட்டிக்குள் விடப்பட்ட மீன்குஞ்சு போல, எந்நேரமும் வீட்டை வளைய வளைய வந்து கொண்டு இருப்பாள். அவள் ஒரு கடல் கன்னி!

"ஏன், அம்மா, நாளை மாலை யார் வீட்டில் காப்பி?"

காரில் நிலவிய அமைதியை மன்னன் கலைத்தான்.

"கொஞ்ச நேரம் உன் வாயைப் பொத்திக் கொண்டு இருடா!" என்று அங்கமுத்து சீறினாள்.

"அம்மா, வாயைப் பொத்திக் கொண்டு இருந்தால் பெண் பார்க்கப் போகிற இடத்தில் எப்படி அல்வாவையும், முந்திரிப்பருப்பு பகோடாவையும் சாப்பிடுவது?" என்று மன்னன் குத்தலாகக் கேட்டான்.

"மூக்குக்குள் திணி!" என்றாள், அங்கமுத்து.

"போகிற இடத்தில் அல்லாவும், முந்திரிப்பருப்பும் பகோடாவுந்தான் என்று ஏற்கனவே முடிவு செய்து விட்டீர்களா?" என்று கயல்விழி கேட்டாள்.

"பெண் பார்க்க வரும்பொழுது என்னென்ன சிற்றுண்டி வைக்க வேண்டும் என்று ஏற்கனவே அம்மா சொல்லி அனுப்பியிருப்பார்களே" என்றான் மன்னன்.

அவனும், சுப்பிரமணியமும் முன் இருக்கையில் அமர்ந்து இருந்தார்கள்.

அங்கமுத்து கயல்விழி, கண்ணன் மூவரும் பின் இருக்கையில். கண்ணன் எப்பொழுதும் பெண்கள் வரிசையில் தான்.

"அம்மா, சேலை வாங்கப் போகிற பெண்கூட ஒரு கடைக்கு இரண்டு கடை பார்த்து ஒரு சேலையை வாங்கி விடுவாள். நீங்கள் அண்ணனுக்கு இதுவரை அறுபத்தி ஏழு பெண் பார்த்து விட்டீர்கள்" என்றான் மன்னன்.

"அப்பா சித்திரபுத்திரா! வாங்கி வந்த சேலை பிடிக்கா விட்டால், கடையில் கொண்டு போய் திருப்பிக் கொடுத்து விடலாம் அல்லது பெட்டிக்குள் போட்டுவிட்டு வேறு சேலை வாங்கிக் கொள்ளலாம். பெண்ணை அப்படி செய்ய முடியுமா?" என்றாள், அங்கமுத்து. அவளுக்கா பேசச் சொல்லிக்கொடுக்க வேண்டும்!



"நம் வீட்டிலும் ஒரு பெண் இருக்கிறாள். நாளை ஒருவன் வந்து அவளைப் பார்த்துவிட்டு, "எனக்குப் பிடிக்கவில்லை" என்று சொன்னால், நமக்கு எப்படியிருக்கும்?" என்றான் மன்னன்.

அதைக் கேட்டதும், தாயும் மகளும் சீறிப் பாய்ந்தார்கள்.

"அவன் கண்ணைத் தோண்டி விடுவேன்!" என்று கயல்விழி கூவினாள்.

"பொன்னும் வைரமுமாக மின்னும் என் பெண்ணையும் ஒருவன் பிடிக்கவில்லை என்று சொல்லிவிடுவானோ? அவன் நாக்கை அறுத்து விடமாட்டேனா!" என்ற அங்கமுத்து ஆவேசத்துடன், நாக்கை அறுப்பது போல கை விரலை வீசிக் கொண்டு கூறினாள்.

"அப்படிப் பார்த்தால், கண்ணனுக்கு இந்நேரம் கண்ணும் இருக்காது! நாக்கும் இருக்காது" என்றான் மன்னன்.

"உன்னை அழைத்துக் கொண்டு வந்ததே தப்பு" என்று அங்கமுத்து அங்கலாய்த்துக் கொண்டாள்.

அவர்கள் இவ்வளவு பேசிக் கொண்டு வந்தும், சுப்பிரமணியம் தவஞானி போல ஆட்டமல் அசையாமல் அமர்ந்து இருந்தார். அவர் முகத்தில் எவ்வித உணர்ச்சியும் இல்லை.

கண்ணன் கண்ணாடி வழியே வெளியே பார்த்துக் கொண்டே வந்தான். இவர்கள் பேச்சு அவன் காதில் விழுந்ததோ இல்லையோ!

இத்தனைக்கும் அவன்தான் மாப்பிள்ளை! அவனுக்குத் தான் பெண் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். மூன்று மாதமாக இந்த முயற்சி நடக்கிறது. நாள் தோறும் மாலையில் ஒரு பெண்ணைப் பார்க்கப் போய் விடுவார்கள். 90 நாளில் 67 பெண்தான் பார்த்திருக்கிறார்கள் என்றால், மற்ற தினங்களில் நாள்-நட்சத்திரம் சரியில்லாததே காரணம்! ஒரே நாளில் இரண்டு பெண்களைப் பார்க்கப் போவது கிடையாது. அங்கமுத்து ஒரே

வீட்டில் வயிற்றை நிரப்பிக் கொள்வாள். அடுத்த வீட்டை மறுநாளைக்காக 'ரிசர்வ்' செய்து வைத்துக் கொள்வாள்.

இந்தப் போக்குப் பிடிக்காமல் பல நாளாகவே மன்னன் கண்டித்துக் கொண்டு இருக்கிறான். 'நான் வரவில்லை' என்று சிலநாள் முரண்டு பிடிப்பான். "உனக்கு அண்ணியாக வரப் போகிறவள்; உனக்குப் பிடிக்க வேண்டாமா?" என்று அங்கமுத்து அவனையும் காரில் தூக்கிப் போட்டுக் கொண்டு தான் போவாள்.

"அம்மா. இன்று இந்தப் பெண்ணை எப்படியும் முடித்து விட வேண்டும்" என்றான். மன்னன்.

"ஏன்? அப்படி என்ன அவசரம்?" என்று அங்கமுத்து கர்ச்சித்தாள்.

"அசிங்கமாக இருக்கிறது. அம்மா" என்று மன்னன் அழுது வடிந்தான்.

"இல்லாவிட்டாலும். இவர் பெரிய சிங்கம் தான்!" என்று அங்கமுத்து அவனை கேலி செய்தாள்.

"அம்மா. இப்படி பார்த்துக் கொண்டே போனால் பெரிய அண்ணா பிள்ளையார் போல இருக்க வேண்டியது தான்!" என்றாள். கயல்விழி.

"அம்மா. நாளை மாலை ஓர் இடத்துக்கு பெண் பார்க்கப் போகலாமா?" என்று மன்னன் கேட்டான்.

"எங்கேடா?" அங்கமுத்து ஆவலாக வினவினாள்.

"பஸ் ஸ்டாண்டுக்கு!" என்றான். மன்னன். "பஸ் ஸ்டாண்டில் பார்த்துக் கொண்டே போனால், நிறையப் பெண்கள் நிற்பார்கள்."

"ஆனால், காப்பி-பலகாரம் கிடைக்காதே. அண்ணா" என்றாள். கயல்விழி.

"அப்படியானால். கடற்கரைக்குப் போகலாம் அங்கே தேங்காய் மாங்காய் பட்டாணி சுண்டல். முறுக்கு. ஐஸ்கிரீம் எல்லாம் கிடைக்கும். வாங்கித் தின்று கொண்டே.... கடற்கரைக்கு



நிறையப் பெண்கள் வருவார்கள். ஒவ்வொருத்தியாகப் பார்க்கலாம். நமக்குப் பிடித்த கழுதையை அப்பொழுதே கழுத்தில் கயிற்றைக் கட்டி வீட்டுக்கு இழுத்துக் கொண்டு வந்து விடலாம்" என்றான் மன்னன்.

"கடைசியில் பெரிய அண்ணாவுக்கு கழுதைதான் கிடைக்குமா!" கயல்விழி 'கலீர்' என்று சிரித்தாள்.

"என்னடி சிரிப்பு வேண்டியிருக்கிறது?" அங்கமுத்து கர்ச்சித்தாள்.

கயல்விழி பயந்து போய் கையினால் வாயைப் பொத்திக் கொண்டாள்.

கார் நின்றது.

காத்திருந்த பெண் வீட்டார் கை கூப்பி வரவேற்றார்கள்.

காரில் இருந்து இறங்கிய அங்கமுத்து. கறுப்புக் கண்ணாடியை மூக்கில் மாட்டிக் கொண்டு கம்பீரமாக அவர்களை ஒருபார்வை பார்த்தாள்.

"வாங்கம்மா வாங்க!" பெண்ணின் தகப்பனார் அவளை தனி மரியாதையுடன் வரவேற்றார்.

அங்கமுத்து முன்னே செல்ல. சுப்பிரமணியமும் கண்ணனும் அவளைப் பின் தொடர்ந்தார்கள்.

தயங்கி நின்ற மன்னன். கயல்விழியைப் பிடித்து நிறுத்தினான்.

"கயல்விழி நாம் இப்படி நாள்தோறும் வீடு வீடாகப் புகுந்து பெண் பொறுக்குவது நன்றாகவா இருக்கிறது?" என்று அவளிடம் இரகசியமாக கேட்டான்.

"எனக்கு இது கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. அண்ணா அம்மாதான்..." என்றாள் அவள்.

"கூர்ந்து பார்த்தால். குதிரைகூட கழுதையாகத் தெரியுமாம்! குறையில்லாத பெண் யார்? எல்லாப் பெண்ணுமே ரம்பை.

ஊர்வசி போல இருப்பாளா? பார்த்தோம்-பிடித்தது-முடித்தோம் என்று இருக்க வேண்டாமா?" என்றான், மன்னன்.

"அம்மாதான் அப்படி முடிக்கமாட்டேன்கிறார்களே" என்று கயல்விழி குறைபட்டாள்.

"இந்தப் பெண்ணைப் பார்ப்போம். மூக்கும் முழியுமாக இருந்தால், இந்தப் பெண்ணையே முடித்து விடவேண்டும். நாம் இருவரும் அம்மாவிடம் சொல்ல வேண்டும். சரி தானா?"

"சரி."

இந்த முடிவுடன் இருவரும் உள்ளே சென்றார்கள்.

சுப்பிரமணியத்தின் நண்பருடைய நண்பரின் வீடு, இது.

அந்த நண்பர் வந்து சுப்பிரமணியத்திடம் சொன்னார். அவர் வந்து அங்கமுத்துவிடம் கூறினார். "போய்ப் பார்ப்போமே. நமக்குப் பெண் பிடித்தால்தானே செய்து கொள்ளப் போகிறோம்" என்றாள், அவள். அதன் பேரில், நண்பர் மூலம் பெண் பார்க்க வருவதாக சுப்பிரமணியம் சொல்லி அனுப்பியிருந்தார்.

வீடு ஒன்றும் அப்படி 'ஒகோ' என்று இல்லை. அடக்கமாக இருந்தது. சன்னல்களில் திரைச் சீலை இல்லை; அழகான சிலைகள் இல்லை. அங்கமுத்து இதையெல்லாம் கவனிப்பாள்! வீட்டை ஒரு நோட்டம் விட்டே, ஆள் பசையுள்ளவர்தானா - பணத்தை பச்சைத் தண்ணீராக இறைப்பவர் தானா என்பதைத் தெரிந்து கொண்டு விடுவாள். அவளுக்குக் கழுகுக்கண்! மூக்கும் வியர்க்கக் கூடியது!

அனைவரும் அமர்ந்ததும், சிற்றுண்டி வந்தது.

கண்ணை அசைக்காமல் அங்கமுத்து அதையே பார்த்துக் கொண்டு இருந்தாள்!

அதிலும் ஒரு சூட்சுமம் இருக்கிறது!



## 3

அங்கமுத்து உலகத்தை நன்றாக அறிந்தவள்! ஆட்களை எடை போடுவதிலும் திறமைசாலி. அது அவளுக்கும் பரம்பரையாக வந்த ஒரு பண்பு.

அவள் அப்பா ஒரு வியாபாரி. பெற்றோருக்கு அவள் ஒரே மகள். செல்லமாக வளர்ந்தாள். செல்வத்திலும் செழிப்பிலும் வாழ்ந்தாள். அவள் அப்பாவுக்கு அதிகப் படிப்பு கிடையாது. அம்மாவும் அப்படித்தான். ஆகவே, வீட்டுக்கணக்கு, வியாபாரக் கணக்கு எல்லாமே அங்கமுத்துவிடம்தான். ஏன், அவள் ஏழு வயது சிறுமியாக இருந்த பொழுதே, அவள் இடுப்பில் சாவிக்கொத்து தொங்கத் தொடங்கிவிட்டதே. அவள் பிஞ்சில் பழுத்தவள்.

புகுந்த வீட்டிலும் அவள் ஒரே மருமகள். 'பெரிய இடத்துப் பெண்' என்ற சிறப்பு வேறு. அந்தச் சிறப்பு அவளுக்கு செருக்கை அளித்தது. மாமியாரை மதிக்கமாட்டாள். வீட்டில் புகுந்த நாளில் இருந்து ஆட்சி-அதிகாரம் எல்லாமே அங்கமுத்து கையில்தான். ஆனால், அவளது அதிகாரம் மாமியாரிடம் நீண்டநாள் செல்லவில்லை. அதற்குள் அந்த அம்மா இந்த உலகத்தில் இருந்தே போய்விட்டார்கள். (இப்பொழுதெல்லாம் சிலபேர் அடிக்கடி இந்த உலகத்தில் இருந்து வெளியில்- சந்திர மண்டலத்துக்குப் போய் வருகிறார்கள். எனவே, இனி 'இந்த உலகத்தில் இருந்தே போய்விட்டார்' என்பதை, 'எங்கே போனார்?' என்பதைத் தெளிவாக எழுதினால் நல்லது என்று நினைக்கிறேன்!)

சிறு வயதில் இருந்தே வீட்டு விவகாரங்களை கவனிக்கத் தொடங்கி விட்டதால், அங்கமுத்துக்கு உலகம் அத்துபடி. மனிதர்களையும் சுலபமாகப் புரிந்து கொண்டாள்.

அவளுக்கு பாதாம் அல்லாவும், பால்கோவாவும், முந்திரிப் பருப்பு பகோடாவும் முறுகலான போண்டாவும் 'எவர்சில்வர்' தட்டுகளில் கொண்டுவந்து வைத்தார்கள். தண்ணீரும் 'எவர்சில்வர்' தம்ளர்தான். காப்பியும் அதே தம்ளர்தான். 'வெள்ளி தம்ளருக்கூட வக்கு இல்லாதவர்கள்' என்று அங்கமுத்து மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்.

சிற்றுண்டிகளை முதலில் அவளுக்குத்தான் கொண்டு வந்து வைத்தார்கள். அவள்தான் குடும்பத்தில் பெரிய மனுசி என்பதை, அவள் நடை உடையைப் பார்த்தே பெண் வீட்டார் தெரிந்து கொண்டார்கள். முயல் பிடிக்கிற நாய், முகத்தைப் பார்த்தால் தெரியுமே!

மற்றவர்களுக்குக் கொண்டு வந்து வைக்குமுன், அவள் தட்டுகள் காலி! 'இன்னும் கொஞ்சம் கொண்டு வரவா?' என்று மரியாதைக்குக்கூட யாரும் கேட்கவில்லை. 'எண்ணிச் சுட்ட பணியாரம்' என்கிற கதையாக இருந்தது! 'ஓட்டலில் இருந்து வாங்கி வந்திருப்பார்கள்' என்று அங்கமுத்து உதட்டை பிதுக்கிக் கொண்டாள்.

தாயின் தட்டுகள் காலியாக இருப்பதைப் பார்த்த கயல்விழி, "அம்மா, அல்வா வேண்டுமா?" என்று தனது தட்டை எடுத்து நீட்டினாள். அவளுக்குத்தான் இனிப்புப் பிடிக்காதே.

அதை வாங்கிக் கொள்ள அங்கமுத்து கையை நீட்டினாள்.

அதற்குள், சிறுமி கையில் இருக்கும் மசால் வடையை கொத்திக் கொண்டு செல்லும் காக்காய் போல, கயல்விழியின் கையில் இருந்த தட்டை மன்னன் "லபக்" என்று பறித்துக் கொண்டான்.

"அம்மா, நீங்கள் இங்கே எவ்வளவு பேச வேண்டியிருக்கிறது? அல்வா தின்றால், வாய் ஒட்டிக்



13621

கொள்ளும்!" என்று சொல்லிக் கொண்டே, அவன் அல்வாவை விழுங்கினான்.

அங்கமுத்துக்குக் கோபமான கோபம்.

சிற்றுண்டி முடிந்ததும், "பெண்ணை வரச் சொல்லுங்களேன்" என்றாள், அங்கமுத்து.

சண்முகம் மனைவியைப் பார்த்தார். அவர்தான் பெண்ணின் தந்தை.

மகளை அழைத்துவர சுந்தரவடிவு உள்ளே சென்றாள்.

லெட்சுமி அலங்காரத்துடன் தயாராக இருந்தாள்.

சுந்தர வடிவு அவளை அழைத்துக்கொண்டு கூடத்துக்கு வந்தாள்.

சாவி கொடுக்கப்பட்ட பொம்மை போல லெட்சுமி ஊர்ந்து வந்து நின்றாள். வாழைக்குலை போல தலை தரையை நோக்கியது.

அங்கமுத்து பெண்ணை கூர்ந்து பார்த்தாள்.

பெண்ணின் மூக்கு, முழி, பல், நிறத்தைப் பற்றி அவள் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. சேலை, நகை இந்த இரண்டையும்தான் கவனித்தாள்.

லெட்சுமி பெயருக்கு ஏற்றபடி லெட்சுமி போல இருந்தாள். பதினெட்டு, பத்தொன்பது வயது இருக்கும். பாவை போன்ற தோற்றம். பால் நிலவு முகம் பம்பர விழிகள், பவள நிறம். அடர்ந்த கூந்தல். கூந்தல் நிறையப் பூ, பூப்போன்ற கன்னம். நீண்ட மூக்கு. ஆரஞ்சு சுளை அதரங்கள். அல்லித்தண்டு இடை அல்லித் தண்டில் தாமரை மொட்டுகள். பார்த்ததுமே யாருக்கும் பிடித்து விடக்கூடிய எழில் ஓவியமாகத் திகழ்ந்தாள்.

ஆனால், அங்கமுத்துக்குப் பிடிக்கவில்லை. லெட்சுமி கட்டியிருந்தது, காஞ்சீபுரம் அல்ல. சின்னாளப்பட்டு போல இருந்தது. காதில் வைரம் இல்லை, மூக்கில் எதுவும் இல்லை.

கழுத்தில் ஓர் ஆரம். அது அவளுடையதோ? அவள் அம்மாவுடையதோ? ஒரு கையில் மட்டுந்தான் மூன்று வளையல், இன்னொரு கையில் கைக் கடிகாரம். வேலைக்குப் போகிற பெண் போலத் தோன்றினாள்.

"பெரியவர்களை வணங்கிக் கொள்ளம்மா."

மகளைப் பார்த்து சண்முகம் சொன்னார்.

"இருக்கட்டும்."

அங்கமுத்து அலுத்துக் கொண்டாள்.

ஆனாலும், லெட்சுமி அவள் காலில் விழுந்து எழுந்தாள்.

"பெண்ணுக்கு பாடத் தெரியுமா?" அங்கமுத்து கேட்டாள்.

மன்னன் குறுக்கிட்டான். "நமது வீட்டில் பாட்டுக் கச்சேரி ஏதாவது நடத்தப் போகிறீர்களா, அம்மா?"

அதைக் கேட்டு லெட்சுமிக்குக் கூட சிரிப்பு வந்தது. ஆனால், பயத்துடன் அடக்கிக் கொண்டாள்.

"அம்மா, அப்பா உங்களைப் பார்க்க வந்தபொழுது, நீங்கள் பாடினீர்களா?" மன்னன்தான் தொடர்ந்து கேட்டான்.

"பாடியிருக்க மாட்டார்கள்" கயல்விழி பதில் சொன்னாள். "ஆனால் அப்பா அம்மாவைப் பாடச் சொல்லிக் கேட்டிருக்க வேண்டும்."

"ஏன்?" என்றான், மன்னன்.

"இப்பொழுது இப்படி அகப்பட்டுக் கொண்டு இருக்க மாட்டார். அப்பொழுதே எழுந்து ஓடியிருப்பார்!" என்று கயல்விழி சிரித்தாள்.

"வாயை மூடுடி!" அங்கமுத்து கர்ச்சித்தாள். "அந்தக் காலத்தில் நான் பாடினால்..."

அவள் முடிக்குமுன் மன்னன் வெட்டினான். "உங்கள் பாட்டை கேட்டுக் கேட்டுத்தான் உங்கள் அப்பா, காதுக்கு



'ஹியரிங் எய்டு' வைத்துக் கொண்டதாக சொல்லுவார்களே, அம்மா" என்றான்.

அங்கமுத்துக்கு ஒரே அவமானமாகப் போய்விட்டது! முகத்தில் இரத்தம் ஏறிச் சிவந்தது! பல்லைக் கடித்துக் கொண்டு அவனைப் பார்த்தாள்.

மன்னன் நல்ல பிள்ளையைப் போல வாயைப் பொத்திக் கொண்டான்.

அதற்குள் கயல்விழி, "அண்ணா! அம்மா இப்பொழுது ஒரு பாட்டுப் பாடி உன் மூக்கை அறுக்கப் போகிறார்கள்!" என்று அறிவித்தாள்.

அங்கமுத்து முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன.

சண்முகம் நிலைமையைச் சமாளிக்க முன் வந்தார். "லெட்சுமிக்கு நன்றாக சமைக்கத் தெரியும்" என்றார்.

"எங்கள் வீட்டு வேலைக்காரி முனியம்மா இவளைவிட நன்றாக சமைப்பாள்!" அங்கமுத்து அலட்சியமாகச் சொன்னாள்.

உடனே மன்னன் சொல்லம்பு விடுத்தான். "அப்படியானால், முனியம்மாவையே அண்ணனுக்கு முடித்துவிட்டால் என்னம்மா!"

"சீ! நீ சுத்த மோசம் அண்ணா!" என்று கயல்விழி அவனைக் கண்டித்தாள். "அம்மாவுக்கு நன்றாகப் பாடுகிற பெண்ணாக தான் வேண்டும். ஏன், அம்மா, எல்.ஆர். ஈசுவரியை அண்ணனுக்கு முடித்து விட்டால் என்ன?" என்றவள், "எலந்தப் பயம்...எலந்தப் பயம்!" என்று பாடத் தொடங்கி விட்டாள்.

"இன்று இரண்டு பேரும் பேசி வைத்துக் கொண்டு வந்திருக்கிறீர்களா?" அங்கமுத்து இரகசியமாக சிடுசிடுத்தாள். "வீட்டுக்கு வாருங்கள், சொல்லுகிறேன்."

சுப்பிரமணியத்துக்கு இதெல்லாம் சகிக்கவில்லை. இவ்வளவு நேரமும் ஆமையாக அமர்ந்து இருந்த அவர், வாய் திறந்தார். "பாட்டும் கூத்தும் நமக்கு எதற்கு? நல்ல இடமா என்று முதலில் பார்."

அங்கமுத்து வேண்டுமென்றே வீட்டை ஒரு நோட்டம் விட்டாள். பிறகு, "இடம் பரவாயில்லை. நம் வீட்டு அடுப்படியை விடப் பெரிதாகத்தான் இருக்கிறது" என்று ஏளனமாகச் சொன்னாள்.

அதைக் கேட்டதும், சண்முகத்துக்கு உதடு துடித்தது. ஆனால் அடக்கிக் கொண்டார். பெண்ணைப் பெற்ற பாவி ஆயிற்றே!

"அம்மா, நாம் இங்கே வீடு வாங்க வரவில்லை" மன்னன் நினைவு படுத்தினான்.

"எனக்குத் தெரியுமடா!" அங்கமுத்து அவனை கடிக்காத குறைதான்!

"பெண் உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?" சண்முகம் பயத்துடனும் நயத்துடனும் அங்கமுத்துவிடம் கேட்டார்.

"வீட்டுக்குப் போய் சொல்லி அனுப்புகிறோம்" அங்கமுத்து வழக்கமான பதிலைச் சொன்னாள்.

"அண்ணா உங்களுக்கு பெண் பிடித்திருக்கிறதா?" மன்னன் கேட்டான்.

கண்ணன் பதில் சொல்லவில்லை. தலை குனிந்தபடி அமர்ந்து இருந்தான்.

"அப்பாவுக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கிறது!" மன்னன் அவனை கேலி செய்தான்.

இதற்குள் அங்கமுத்து, "அவனை ஏண்டா கேட்கிறாய்? என்னிடம் கேள். பெண் எனக்குத்தான் பிடிக்க வேண்டும்" என்று அதிகாரத்துடன் கூறினாள்.

உடனே கயல்விழி, "அம்மா, நாம் இப்பொழுது சேலைக் கடையில் இல்லை" என்றாள்.

அங்கமுத்துக்கு ஆவேசம் வந்து விட்டது. "அவனோடு சேர்ந்து நீயும் வாயாடியாகப் போய் விட்டாய். வீட்டுக்கு வா, உன் நாக்கை நறுக்குகிறேன்" என்று கர்ச்சித்தாள்.



"மம்மிக்குப் பெண் அம்மியாகப் பிறந்திருக்கிறது!" என்றான், மன்னன்.

"மெதுவாகப் பேசுங்கள் அம்மா" என்றாள், கயல்விழி. "மகளையே நாக்கை அறுப்பவள் மருமகளை மூக்கை அறுக்காமல் விடுவாளா என்று பெண் கொடுப்பவர்கள் பயந்துவிடப் போகிறார்கள்!"

அங்கமுத்துக்கு அவமானத்துக்கு மேல் அவமானம். இன்னும் அங்கேயிருந்து அவமானப்பட விரும்பாமல், "ஏன் இன்னும் குத்துக்கல்லு போல உட்கார்ந்து இருக்கிறீர்கள். எழுந்திருங்கள், போவோம்" என்று கர்ச்சித்துக் கொண்டே எழுந்தாள்.

பொத்தானை தட்டியதும் விளக்கு எரிவது போல, அவள் குரல் கேட்டதுமே சுப்பிரமணியமும், கண்ணனும் எழுந்து நின்றார்கள்.

மன்னனும் கயல்விழியும் இன்னும் அமர்ந்து இருந்தார்கள்.

"அம்மா, இவர்களை எனக்கு மிகவும் பிடித்து விட்டது. இவர்கள்தான் எனக்கு அண்ணியாக வரவேண்டும்" என்றான் மன்னன்.

"அம்மா எனக்கும் இந்த அண்ணியைப் பிடித்திருக்கிறது, அம்மா" என்று குழைந்தாள், கயல்விழி.

"அதற்குள் அண்ணியாமே! எழுந்திருங்கள்!" என்று கர்ச்சித்த அங்கமுத்து, இரண்டு கையையும் நீட்டி, இருவர் காதுகளையும் பிடித்துத் தூக்கினாள்!

வலி தாளாமல் துடித்துக் கொண்டே அவர்கள் எழுந்து நின்றார்கள்.

அவர்களை முன்னே தள்ளிக் கொண்டே அங்கமுத்து நடந்தாள்.

"நாங்கள் போய் சொல்லி அனுப்புகிறோம்."

சண்முகத்திடம் சொல்லிக் கொண்டு, சுப்பிரமணியம் அங்கமுத்துக்கு நிழல் ஆனார்! கண்ணன் அவளை பின் தொடர்ந்தான்.

சண்முகமும், சுந்தரவடிவும் வாசல்வரை வந்து அவர்களை வழி அனுப்பி வைத்தார்கள்.

கார் கிளம்பிச் சென்றதும் "நல்ல குடும்பம்" என்று நகைத்தார்.

"பதில் சொல்லி அனுப்புவார்களா?" சுந்தரவடிவு கவலையுடன் கேட்டாள்.

"முதலில் லெட்சுமியின் சம்மதம் தெரிய வேண்டும்" என்றவராக சண்முகம் வீட்டுக்குள் வந்தார்.

## 4

"**சா**ப்பாட்டு மேசையா சந்தைக் கடையா?" என்று அங்கமுத்து சந்தேகப்படும் அளவுக்கு ஒரே கூட்டம்!

வட்ட மேசை மாநாடு நடப்பது போல, அத்தனை பேரும் சாப்பாட்டு மேசையைச் சுற்றி அமர்ந்து இருந்தார்கள்.

வழக்கமாக அங்கமுத்து ஒருத்தி தான் இரவில் சாப்பிடுவாள். மற்றவர்கள் 'பெண் பார்க்கப் போன வீட்டில் சாப்பிட்டதே போதும்' என்று சொல்லிவிடுவார்கள்! இன்று அங்கமுத்துக்குப் போட்டி போல, அத்தனை பேரும் வந்து குந்திக் கொண்டார்கள்.

முனியம்மா சாப்பாட்டுத் தட்டுகளை எடுத்து வைக்கத் தொடங்கினாள்.



"ஏண்டி முனியம்மா, எல்லோருக்கும் சாப்பாடு இருக்கிறதா?" அவளிடம் அங்கமுத்து கேட்டாள். "பெரிதாகப் பெண் பார்க்க வாங்க என்று அழைத்தாள். அங்கே கொடுத்தது அரை வயிற்றுக்குக்கூடப் போதவில்லை."

"இருக்கிறதை எடுத்துக் கொண்டு வந்து வைக்கிறேன் அம்மா" என்றாள், முனியம்மா.

உடனே மன்னன், "பகிர்ந்து தின்றால் பசி ஆறும்" என்றான்.

"ஆனால், நாங்கள் உங்களிடம் பங்கு கேட்க வரவில்லை அம்மா" என்றாள் கயல்விழி.

"பிறகு எதற்கு வந்திருக்கிறீர்கள்?" அங்கமுத்து கண்களை உருட்டினாள்.

"இன்று போய்ப் பார்த்துவிட்டு வந்தோமே; அந்தப் பெண்ணைப் பற்றிப் பேசி ஒரு முடிவு செய்ய" என்றான் மன்னன்.

அதைக்கேட்டு அங்கமுத்து 'குபீர்' என்று சிரித்து விட்டாள்.

அந்தச் சிரிப்பு கேட்டு அவளுக்கு என்னவோ ஏதோ என்று சுப்பிரமணியம் பயந்துவிட்டார்.

சிரித்து ஓய்ந்ததும், "எல்லோரும் ஓட்டுப் போட்டு தீர்மானிக்கப் போகிறீர்களா?" என்று அங்கமுத்து கர்ச்சித்தாள்.

"தேவையானால், ஓட்டுக்கும் விடவேண்டியதுதான்" மன்னன் அலட்சியமாகச் சொன்னான்.

"அம்மா அம்மா எனக்கு ஒரு பத்து ரூபாய் கொடுங்கள், அம்மா" கயல்விழி குழைந்தாள்.

"எதுக்கு கண்ணு?" அங்கமுத்து அன்பு ஒழுகக் கேட்டாள்.

"நான் உங்களுக்கே ஓட்டுப் போடுகிறேன், அம்மா" கயல்விழி குழந்தை போல் கூறினாள்.

"சீ!" எண்ணெய்ச் சட்டியில் போட்ட கடுகு போல அங்கமுத்து வெடித்தாள். "ஓட்டு கீட்டு என்றால் எல்லோருக்கும்

வேட்டு வைத்து விடுவேன்! இந்த வீட்டுக்கு வரப் போகிற மருமகள் எப்படியிருக்க வேண்டும் என்பதை நான்தான் தீர்மானிப்பேன்" அவள் அழுத்தமாகச் சொன்னாள்.

"அவளோடு வாழப் போவது நீங்கள் அல்ல; அண்ணன்" என்று மன்னன் படபடத்தான். அதே மூச்சில் "அண்ணா! வாயில் வைத்திருக்கும் குழக்கட்டையை வெளியில் துப்புங்கள்! பேசுங்கள்!" என்று கண்ணனை நோக்கி இரைந்தான்.

கண்ணன், சுப்பிரமணியம் இருவரையும் மன்னன்தான் மிகவும் சிரமப்பட்டு சாப்பாட்டு அறைக்கு அழைத்து வந்து இருந்தான். அவர்கள் இருவரும் வாய் திறக்கவில்லை. இடித்த புளியாக இருந்தார்கள்!

"வருகிறவள், என் மருமகள்; நாளை அவளால் வரப் போகும் நல்லது கெட்டதுக்கு பதில் சொல்ல வேண்டிய மாமியார் நான்தான்" என்று அங்கமுத்து கர்ச்சித்தாள்.

"அம்மா, அந்தப் பெண்ணுடன் வாழப் போவது நீங்களா? அண்ணனா?" பெரிய வக்கீல் போல மன்னன் கேட்டான்.

"அவளோடு நாள் முழுவதும் போராடப் போகிறவள் நான்தான்" என்று அங்கமுத்து 'பளிச்' என்று பதில் சொன்னாள்.

"போராட்டம் என்பது இப்பொழுதே உறுதியாகி விட்டதா!" மன்னன் கையை உதறினான்.

"அண்ணா ஒரு கார் வாங்குவது என்றால், நம் விருப்பப்படி வாங்கக் கூடாது. அந்தக் காரோடு நாள் தோறும் போராடப் போகிற டிரைவர் விருப்பப்படிதான் வாங்க வேண்டும்" வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல கயல்விழி சொன்னாள்.

அங்கமுத்து அவள் காதைப் பிடித்தாள்! "கார் என்ஜின் நல்லதா காலனுக்கு எவ்வளவு மைல் ஓடும்-சத்தம் இல்லாமல் இருக்குமா என்பதெல்லாம் அனுபவப்பட்ட டிரைவருக்குத்தான் தெரியும்!" என்று கூறியபடியே காதைத் திருகி விட்டாள்.

கயல்விழி காதைத் தேய்த்துவிட்டுக் கொண்டாள்.



"அம்மா, நீங்கள் அனுபவப் பட்ட டிரைவர்தான். உங்கள் யோசனையைச் சொல்லுங்கள். ஆனால், உங்கள் விருப்பப்படி தான் முதலாளி நடக்க வேண்டும் என்று கட்டாயப் படுத்தாதீர்கள்" என்று மன்னன் அமைதியாகச் சொன்னான்.

"இந்த வீட்டில் முதலாளி-தொழிலாளி எல்லாம் நான்தான். எல்லோரும் எழுந்து போங்கள்" என்று அங்கமுத்து கட்டளையிட்டாள்.

ஆனால் யாரும் எழுந்திருக்கவில்லை.

கயல்விழி முனியம்மாவை அழைத்தாள்.

"முனியம்மா, அம்மாவுக்கு சாப்பாடு எடுத்து வை அவர்களுக்கு அகோர பசி போலிருக்கிறது. வயிறு நிறைந்தால், கொஞ்சம் சாந்தமாகப் பேசுவார்கள்!" என்றாள்.

முனியம்மா சாப்பாடு எடுத்து வைத்தாள்.

அங்கமுத்து சாப்பிட்டாள்.

மன்னன் திடீர் என்று "திருவள்ளுவர் ஒரு தவறு செய்து விட்டார்" என்றான்.

"என்ன?" என்று கயல்விழி கேட்டாள்.

"செவிக்கு உணவு இல்லாதபொழுது வயிற்றுக்கு ஈயப்படும் என்றாரே; அது தவறு. முதலில் வயிற்றை நிரப்பி விட வேண்டும். அதன்பிறகு பேசினால்தான் காதில் ஏறும்" என்றான், மன்னன்.

"அது சரிதான், அண்ணா. ஆனால், திருவள்ளுவர் நம் அம்மாவுக்காக திருக்குறளை பாடவில்லையே" என்று கயல்விழி சொல்ல; மன்னன் சிரித்துவிட்டான்.

அந்த ஓசை கேட்டு அவர்களை நிமிர்ந்து பார்த்த அங்கமுத்து, "நீங்கள் இன்னும் போகவில்லையா?" என்றாள்.

இப்பொழுது அவளுக்கு அரை வயிறு நிறைந்து இருந்தது.

"அம்மா இந்தப் பெண்ணை அண்ணனுக்கு மிகவும் பிடித்துவிட்டதாம். என்னிடம் சொன்னான்" என்றான், மன்னன்.

"அய்யய்யோ... நான் சொல்லவே இல்லை அம்மா. அவன் பொய் சொல்லுகிறான்!" தேள் கொட்டியவன் போல கண்ணன் துள்ளிக் குதித்தான்.

"எனக்குத் தெரியும்டா கண்ணா!" அங்கமுத்து செல்லம் கொஞ்சினாள்.

"நீயெல்லாம் ஏன் வேட்டி கட்டுகிறாய்? சேலை கட்டிக் கொள்வதுதானே!" மன்னன் அண்ணனை ஏசினான்.

"வேட்டி கட்டினால் மட்டும் ஆண்பிள்ளை ஆகி விடுவாரா? நான்கூடத்தான் வேட்டி கட்டியிருக்கிறேன்!" கயல்விழி தனது லுங்கியைத் தூக்கிக் காட்டினாள்!

"சும்மா இரு. பிறகு அண்ணியிடம் சொல்லி, உன்னை அடிக்கச் சொல்லுவார்!" என்று மன்னன் அவளை போலியாகக் கண்டித்தான்.

அப்பொழுது யானை கொட்டாவி விட்டதுபோல ஒரு பெருத்த ஓசை கேட்டது!

மன்னன் திரும்பிப் பார்த்தான்.

நீர்யானை போல வாயைப் பிளந்து கொண்டு அங்கமுத்து ஏப்பம்விட்டுக்கொண்டு இருந்தாள்!

அவள் சாப்பாடு அவ்வளவுதான். நாலு ஆப்பிள்பழம், ஆறு ஆரஞ்சுப்பழம், ஒரு சீப்பு மலைப்பழம் சாப்பிட்டுவிட்டு, ஒரு கூஜா பாலையும் குடித்துவிட்டு சிவனே என்று முடங்க வேண்டியதுதான்!

மாநாடு இடம் மாறியது. கூடத்தில் கூடினார்கள்.

"உங்களுக்கெல்லாம் தூக்கம் வரவில்லையா?" ஆப்பிளை கடித்துக்கொண்டே அங்கமுத்து கேட்டாள்.

"இன்று ஒரு முடிவு செய்யாமல் நாங்கள் தூங்கப்போவது இல்லை" என்றான் மன்னன்.

"தூங்கா விரதமா!" என்று அங்கமுத்து கேலி செய்தாள்.



Dharini VII'F

"தொடர் தூங்கா விரதம்! நான் தூங்கும்பொழுது அண்ணன் விழித்திருப்பான்; அண்ணன் தூங்கும் பொழுது நான் விழித்திருப்பேன்" என்றாள் கயல்விழி.

"இன்றைக்குப் பார்த்த பெண்ணைப்பற்றி ஒரு முடிவு செய்ய வேண்டும். அப்படித்தானே!" அங்கமுத்து கேட்டாள்.

"ஆமாம், அம்மா."

இரட்டை நயனம்போல மன்னனும் கயல்விழியும் ஆவலுடன் சொன்னார்கள்.

"நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

அருகில் அமர்ந்து இருந்த கணவரின் பக்கம் திரும்பி அங்கமுத்து கேட்டாள்.

அவர் அவளைப் பார்த்தாரே தவிர, வாயைத் திறக்கவில்லை.

"அம்மாவே கேட்கிறார்கள். அப்பா சொல்லுங்கள்" என்று மன்னன் அவரை ஊக்கப்படுத்தினான்.

"அங்கமுத்து, ஆண்டவன் அருளால் நமக்கு ஒரு குறையும் இல்லை. சொத்து சுகம் நிறைய இருக்கிறது. ஆகவே, பெரிய இடத்துப் பெண்தான் நமக்கு வேண்டும் என்பது இல்லை" சுப்பிரமணியம் அமைதியாகச் சொன்னார்.

"பெரிய இடத்துப் பெண் என்றால் என்ன கேடு? நான் பெரிய இடத்துப் பெண்தானே?" அங்கமுத்து பெருமையாக நெஞ்சை நிமிர்த்திக் கொண்டாள்.

"பெரிய இடத்துப் பெண் என்றால், உங்கள் தலையில் மிளகாய் அரைத்துவிடுவாள்" என்றான் மன்னன்.

"அப்பா தலையைப் பாருங்கள். பாவம், மிளகாய் அரைத்து அரைத்து தேய்ந்துபோன அம்மி மாதிரி இருக்கிறது!" என்று கயல்விழி அனுதாபப்பட்டாள்!

"நம்மைவிட கொஞ்சம் தாழ்ந்த இடத்தில்தான் பெண் எடுக்க வேண்டும் என்று சொல்லுவார்கள்" என்றார், சுப்பிரமணியம்.

"அனுபவம் பேசுகிறது!" கயல்விழி பாராட்டினாள்.

"அப்பொழுதுதான் சமத்துவ சமதர்ம சமுதாயம் ஏற்படுமோ!" அங்கமுத்து கேலி செய்தாள்.

"அம்மா பணக்காரப் பெண் என்றால், உங்கள் கைக்கு அடங்க மாட்டாள்..." என்று மன்னன் சொல்லிக் கொண்டு இருந்த பொழுதே கயல்விழி குறுக்கிட்டாள். "அம்மாவை யார் என்று நினைத்தீர்கள்? அடங்காத குதிரைகளையெல்லாம் அடக்கிய தேசிங்கு ராஜன்!"

மன்னன் தொடர்ந்தான். "ஏழைப் பெண் என்றால், நீங்கள் கிழித்த கோட்டை தாண்டமாட்டாள் பணக்காரப் பெண் என்றால், அண்ணன் அவளுக்கு வேலைக்காரனாகத்தான் இருக்க வேண்டும். ஏழைப் பெண் என்றால், அண்ணனுக்கு அவள் மனைவியாக இருப்பாள். பணக்காரப் பெண் என்றால், 'இது என்ன வீடு? எங்கள் வீட்டு அடுப்படி போல இருக்கிறது!' என்பாள். ஏழைப் பெண் என்றால் எந்தப் பிறவியில் என்ன புண்ணியம் செய்தேனோ; எனக்கு இவ்வளவு பெரிய இடம் கிடைத்து இருக்கிறது என்று நம் எல்லோரிடமும் மதிப்புடனும் மரியாதையுடனும் நன்றியுடனும் நடந்து கொள்ளுவாள்."

மன்னன் சொல்லச் சொல்ல, அங்கமுத்துவின் நெஞ்சம் மலர்ந்தது. ஆவலுடன் கேட்டுக் கொண்டே, சிந்தனையில் ஆழ்ந்தாள்.

"மனைவியாக வரப்போகிறவள் வயது, வசதி, படிப்பு பணம் எல்லாவற்றிலும் ஒருபடி குறைவாக இருப்பதுதான் நல்லது" என்று சுப்பிரமணியம் சொன்னார்.

"நல்லதுதான்."

அங்கமுத்து சிந்தனையுடன் சொன்னாள்.

மன்னனின் முகம் மலர்ந்தது.

"அப்படியானால் அண்ணனுக்கு இந்தப் பெண்ணையே முடித்துவிடுங்கள் அம்மா."



கயல்விழி மகிழ்ச்சியுடன் அம்மாவின் கழுத்தை கட்டிக் கொண்டாள்.

அங்கமுத்து சொன்னாள்; ஆனால்....

மன்னனின் முகம் உலர்ந்தது!

## 5

"மருமகள் என்ன கொண்டு வந்தாள்?" என்று கேட்பது நமது நாட்டு வழக்கம்!

மருமகள் இன்னென்ன கொண்டு வந்தாள் என்று பெருமையாகச் சொல்லிக்கொள்வது நமது பழக்கம்!

கேட்பது போல கிண்டி விடுபவர்களும் உண்டு!

சொல்லுவது போல கிள்ளுகிறவர்களும் உண்டு!

தன் வீட்டுக்கு வரும் மாட்டுப் பெண் என்னென்ன கொண்டு வர வேண்டும் என்று அங்கமுத்து ஏற்கனவே பட்டியல் தயாரித்து வைத்திருந்தாள்.

அதை இப்பொழுது ஒப்பித்தாள்.

"என் மகனுக்கு இம்பாலா கார் வாங்கிக் கொடுக்க வேண்டும். எனக்கு ஓர் இலட்ச ரூபாய் தரவேண்டும். பெண்ணுக்கு இலட்ச ரூபாய்க்கு நகை போட வேண்டும்."

அவள் சொல்லச் சொல்ல, கயல்விழி "ஒன்று... இரண்டு" என்று விரல்களை விட்டுக் கொண்டு வந்தாள்.

அவள் சொல்லி முடித்ததும், மன்னன் தங்கையைப் பார்த்தான்.

கயல்விழி பட்டை நாமம் போல மூன்று விரலை தூக்கிக் காட்டினாள்!

அதைப் பார்த்து சிரித்துக்கொண்டே மன்னன் தனது பையில் இருந்து ஏதோ எடுத்தான்.

"இந்தாருங்கள், அம்மா, நீங்கள் கேட்டதெல்லாம்" என்று அங்கமுத்துவிடம் அதைக் கொடுத்தான்.

"என்னடா, இது?" கையில் இருந்த சிறு தாளை அங்கமுத்து பார்த்தாள்.

"பூட்டான் லாட்டரி சீட்டு!" என்றான், மன்னன். "முதல் பரிசு ஐந்து கோடி ரூபாய்! அதோடு ஒரு கார்."

"இதை வைத்துக்கொண்டு என்னை லாட்டரி அடிக்கச் சொல்லுகிறாயா!" என்று அங்கமுத்து சீறினாள்.

"சங்கர.. சங்கர.. சம்போ...." என்று கயல்விழி துந்தனா பாடினாள்.

"வாயை மூடுடி!" என்று அங்கமுத்து அவளை அடக்கினாள்.

"அம்மா, பெட்ரோல் விற்கிற விலையில் நமக்குக் கார் தேவைதானா?" என்று மன்னன் கேட்டான்.

"பிறகு? மாட்டுவண்டி கேட்கச் சொல்லுகிறாயா?" என்று அங்கமுத்து வக்கணை பேசினாள்.

கயல்விழிக்கு களிப்பு தாங்கவில்லை. "மாப்பிள்ளை வந்தார் மாப்பிள்ளை வந்தார் மாட்டு வண்டியிலே! பொண்ணு வந்தாள் பொண்ணு வந்தாள் பொட்டு வண்டியிலே!" என்று பாடினாள்.

"என்னடி, இன்று ஒரே பாட்டா வருகிறது!" என்று அங்கமுத்து அவளை முறைத்துப் பார்த்தாள்.

"மில்லி போட்டு இருக்கிறாளோ என்னவோ!" என்றான், மன்னன். "பாட்டில் உள்ளே போனால், பாட்டு வெளியே வரும்!"



"வரவர உனக்கு என்னதான் பேசுவது என்று இல்லாமல் போய்விட்டது" அங்கமுத்து மகனை கடிந்து கொண்டாள்.

"அம்மா, அண்ணன் சொல்லுவதை புரிந்து கொள்ளாமல் கோபித்துக் கொள்ளுகிறீர்கள்!" கயல்விழி பரிந்து கொண்டு வந்தாள். "கார் வேண்டாம்; தேர் கேளுங்கள் என்று அண்ணன் சொல்லுகிறார்."

"தேர் என்றால் என்னடி? கட்டாயம் கார் வேண்டும்."

"அம்மா, நீங்கள் இப்படிக் கேட்பீர்கள் என்று உங்கள் திருமணத்துக்கு முன்பே தெரிந்து இருந்ததால், உங்களிடம் சீதனமாக போயிங் ஜெட் கேட்கும்படி அப்பாவிடம் நான் சொல்லியிருப்பேன்" மன்னன் விறைத்துக் கொண்டு கூறினான்.

"அம்மாவுக்கு இந்த விஷயம் தெரிந்துதான், உங்களை கல்யாணத்துக்குப் பிறகு பெற்றார்கள்!" என்று கயல்விழி ஒரு குண்டைத் தூக்கிப் போட்டாள்!

அங்கமுத்துக்கு வந்த ஆத்திரத்தில், ஆவேசத்தோடு அவளை அடிக்கப் பாய்ந்தாள். கயல்விழி தப்பிப் பிழைத்து தலை தெறிக்க ஓடினாள்.

சற்று நேரம் அங்கே அமைதி நிலவியது.

மன்னன் அம்மாவுக்கு ஆரஞ்சுப்பழம் உறித்துக் கொடுத்தான்.

கயல்விழி மிகவும் சாதுப்பிள்ளையாக, "அம்மா பால் குடிக்கிறீர்களா?" என்று கேட்டுக் கொண்டே, பால் கூஜாவுடன் பூனை போல மெல்ல வந்தாள்.

அங்கமுத்து பழங்களை முடித்து, பால் குடித்து ஏப்பம் விட்ட பின்புதான் மன்னன் மீண்டும் பேச்சைத் தொடங்கினான்.

"அம்மா, பெண்களுக்கு புன்னகைதான் பொன்னகை என்று சொல்லுவார்கள்" என்று மெல்லக் கூறினான்.

"வரும்பொழுதே 'இ...' என்று இளித்துக் கொண்டே வந்தால் போதும் என்கிறாயா!" என்று அங்கமுத்து இளித்துக் காட்டினாள்.

"ஏனம்மா பணம் வெள்ளை எவ்வளவு வேண்டும்? கறுப்பு எவ்வளவு வேண்டும்?" என்று கயல்விழி கேட்டாள்.

"வெள்ளையோ கறுப்போ, ஒரு லட்சம் வேண்டும்" என்றாள், அங்கமுத்து.

"பெண்களை பெற்றஒவ்வொருவரும் கள்ள நோட்டு அச்சிட வேண்டியதுதான்!" என்றான், மன்னன்.

"கள்ள நோட்டு அச்சிட்டால் கம்பி எண்ண வேண்டியது தான்" எஃறாள், அங்கமுத்து.

"வரதட்சணை கேட்டாலும் கம்பி எண்ண வேண்டும் அதற்கு சட்டம் இருக்கிறது" என்றான், மன்னன்.

"நீங்கள் என்னப்பா சொல்லுகிறீர்கள்?" தந்தையிடம் கயல்விழி கேட்டாள்.

"அவள் பெயர்தான் லெட்சுமி. ஆனால், அவள் இலட்சாதிபதி அல்ல. என் மருமகள் பணக்காரி என்று சொல்லிக் கொள்வதைவிட, குணக்காரி என்று கூறிக் கொள்வதையே நான் பெருமையாகக் கருதுகிறேன்" என்று சுப்பிரமணியம் சொன்னார்.

"வீசிய கையும் வெறுங்கையுமாக மருமகளை வரச் சொல்லுகிறீர்களா?" அவர் வாயை மூடியதும் அங்கமுத்து சீறினாள்.

"நம்மிடம் கார் இல்லையா! பணம் இல்லையா? நகை இல்லையா? நல்ல பெண்ணாக இருந்தால் போதும்" என்றார், சுப்பிரமணியம்.

"அப்படியானால், நம் வீட்டில் நல்ல பெண்தான் இல்லை என்று சொல்லுகிறீர்களா, அப்பா?" என்று மன்னன் குறுக்கிட்டுக் கூறினான்.

அங்கமுத்து கண்களால் அவனை சுட்டு எரித்தாள்!

"அம்மா, மருமகள் வீசிய கையும் வெறுங்கையுமாகத்தான் வர வேண்டும். அப்பொழுதுதான், 'உன் அப்பன் வீட்டில் இருந்து



என்னடி கொண்டு வந்தாய்?' என்று அவள் குமட்டில் குத்த முடியும்!" என்று கயல்விழி சொன்னாள்.

'அதுவும் நல்லதுதானோ!' என்று அங்கமுத்து கண்களை அகல விரித்தாள்.

"பெற்ற பெண்ணுக்கு என்னென்ன செய்ய வேண்டும் என்று பெற்றவர்களுக்குத் தெரியும். எல்லாவற்றையும் அவர்கள் விருப்பத்துக்கே விட்டுவிடுவதுதான் சரி" என்றார், சுப்பிரமணியம்.

"நீ என்ன, அண்ணா, சொல்லுகிறாய்!" கண்ணனிடம் மன்னன் கேட்டான்.

"என்னை ஏண்டா வம்புக்கு இழுக்கிறாய்!" கண்ணன் பரிதாபமாக அழுது வடிந்தான்.

அப்பொழுது மணி பத்து அடித்தது.

அங்கமுத்து எழுந்தாள்.

"இந்த வீட்டில் என் பேச்சை யார் கேட்கிறார்கள்? அவரவர் நாட்டாமை ஆகிவிட்டது! தலை இருக்க வால் ஆடுகிறது! என்னவோ செய்யுங்கள்!"

கொட்டாவி விட்டுக் கொண்டே படுக்கச் சென்றாள்.

லெட்சுமியின் வீடு.

வேடத்தை கலைத்துக் கொண்டு இருந்த லெட்சுமிக்கு சிரிப்பு சிரிப்பாக வந்தது.

சண்முகம் உள்ளே வந்தார்.

"என்னம்மா நீயாக சிரித்துக் கொள்ளுகிறாய்?"

"வந்து போனவர்களை நினைத்தால், சிரிப்புத்தான் வருகிறது, அப்பா!"

லெட்சுமி வாய் விட்டு சிரித்தாள்.

"மாப்பிள்ளையை உனக்குப் பிடித்து இருக்கிறதா லெட்சுமி?"

"மாவுப்பிள்ளை போல இருக்கிறார்! மாமியாரை நினைத்தால்தான் கொஞ்சம் பயமாக இருக்கிறது, அப்பா."

"அதுதான் நானும் யோசிக்கிறேன்."

"ஆனால் நான் சமாளித்துக் கொள்ளுவேன், அப்பா, நல்ல பொழுது போக்காக இருக்கும்."

"அப்படியானால் இந்த சம்பந்தம் உனக்குப் பிடித்திருக்கிறது என்று சொல்."

"அவளுடைய தம்பியையும், தங்கையும் எனக்கு மிகவும் பிடித்து இருக்கிறது, அப்பா. இருவரும் சிரிக்கச் சிரிக்கப் பேசுகிறார்கள் அல்லவா?"

"மாப்பிள்ளை தான் மண் பிள்ளையார் போல இருக்கிறார்."

"மருமகனை அப்படியெல்லாம் சொல்லாதீர்கள், அப்பா."

"திருமணம் நிச்சயமாகி விடும் என்றே நினைத்து விட்டாயா!"

"சின்னவரும், கடைக்குட்டியும் சேர்ந்தே, நிச்சயம் பண்ணி விடுவார்கள், அப்பா."

"உனக்கு விருப்பம் என்றால், எங்களுக்கு ஆட்சேபனை இல்லை."

"அப்பா அதற்கு முன் அவர் ஊமைப்பிள்ளை இல்லையே என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்!"

கேலியாகச் சொன்ன லெட்சுமிக்கு சிரிப்பு பொங்கியது!

மறுநாள் காலை.

லெட்சுமி வீட்டு முன் ஒரு கார் வந்து நின்றது.

அதில் இருந்து புன்னகையுடன் சுப்பிரமணியம் இறங்கினார்.

இதை சிறிதும் எதிர்பாராத சண்முகம், வியப்புடன் அவரை வரவேற்றார்.

"முகூர்த்த நாள் பார்க்க வேண்டியதுதான்" என்று கூறிக் கொண்டே சுப்பிரமணியம் அமர்ந்தார்.



"நகை நட்டு...சீர் செட்டு..." நடுங்கிக் கொண்டே சண்முகம் கேட்டார்.

"நாங்கள் ஒன்றும் கேட்கப் போவது இல்லை. எல்லாம் உங்கள் விருப்பம்தான்" என்றார், சுப்பிரமணியம்.

சண்முகத்துக்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை!

லெட்சுமி காப்பி கொண்டு வந்தாள்.

குனிந்த தலை நிமிராமல் நின்ற அவளை சுப்பிரமணியம் ஏறிட்டுப் பார்த்தார்.

நேற்றுப் பார்த்ததைவிட இன்று தான் அவர் கண்களுக்கு அவள் அதிக அழகாகத் தோன்றினாள்.

அங்கமுத்து வீட்டில் கொட்டு மேளம் முழங்கிக் கொண்டு இருந்தது.

சுப்பிரமணியமும் மன்னனும் வாசலில் நின்று வந்தவர்களை வரவேற்றுக் கொண்டு இருந்தார்கள்.

உள்ளே அங்கமுத்துவின் அதிகாரம் கொடிகட்டி பறந்து கொண்டு இருந்தது!

கயல்விழி பட்டுப் பாவாடை கட்டி, பட்டாம்பூச்சி போல பறந்து கொண்டு இருந்தாள்.

கண்ணனுக்கு மாப்பிள்ளை அலங்காரம் நடந்து கொண்டு இருந்தது.

"இன்னமும் முடியவில்லை?"

மதயானை போல பிளிறிக் கொண்டே அந்த அறைக்குள் அங்கமுத்து நுழைந்தாள்.

"முடிந்து விட்டது."

மாப்பிள்ளையை அலங்காரம் செய்து கொண்டு இருந்தவர் அஞ்சி நடுங்கிக் கொண்டே கூறினார்.

"நேரமாகிறது அல்லவா? புறப்படுங்கள்!"

அடுத்த நிமிடத்தில் மாப்பிள்ளை ஊர்வலம் புறப்பட்டது!

# 6

ஓடியாடி வேலை பார்த்ததில் அங்கமுத்துக்கு தலை வலிக்கத் தொடங்கிவிட்டது. முனியம்மாவைக் கூப்பிட்டு, காப்பி கொண்டுவரச் சொன்னாள்.

ஆவி பறக்கும் காப்பி. ஆனால், சூடே தெரியாதவளாக அங்கமுத்து வாயில் கொட்டிக் கொண்டாள்.

அப்பொழுது கயல்விழி வந்தாள். "அம்மா, மாப்பிள்ளை ஊர்வலம் புறப்பட்டு விட்டது" என்று தெரிவித்தாள்.

காலி தம்ளரை முனியம்மாவின் கையில் கொடுத்து விட்டு, பட்டுச் சேலையால் வாயைத் துடைத்துக் கொண்டே அங்கமுத்து வெளியில் வந்தாள்.

மாப்பிள்ளை ஊர்வலம் நகர்ந்து கொண்டு இருந்தது.

அதைப் பார்த்ததும் அவள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன!

அதற்குக் காரணம், காரில் போக வேண்டிய மாப்பிள்ளை, கட்டை வண்டியில் போனதுதான்!

மாப்பிள்ளை ஊர்வலத்துக்காக அழகான காருக்கு அங்கமுத்து ஏற்பாடு செய்து இருந்தாள். அந்த அலங்காரக் காரைக் காணோம்! அதற்குப் பதில் கட்டை வண்டி! அதுவும் மொட்டை வண்டி! மாப்பிள்ளைக்கு மட்டுமல்ல; மாடுகளுக்கும் மாலை! வண்டி முழுவதும் மலர் அலங்காரம்! அங்கங்கே வண்ணத் தாள்கள் ஒட்டி அழகு படுத்தியிருந்தார்கள்.

"நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்!" என்று கூவிக் கொண்டே அங்கமுத்து ஓடி வந்தாள்.



ஊர்வலம் நின்றது.

"என்னம்மா?" என்று கேட்டுக்கொண்டே மன்னன் எதிரில் வந்தான்.

"ஏண்டா, இதெல்லாம் உன் வேலைதானா?" அவன் வேலை தான் என்பதை அங்கமுத்துவும் அறிந்து இருந்தாள். "அந்தக் கார் எங்கே?"

அலங்காரக் கார் தனது வீட்டுமுன் வந்து நின்றதும், அங்கமுத்து போய்ப் பார்த்தாள். அலங்காரம் தடபுடலாக இருக்கிறதா என்பதைக் கவனித்தாள். மேலும் அழகு படுத்த யோசனைகள் சொல்லிவிட்டுப் போனாள்.

அவள் போனதும், மன்னன் வந்தான். அந்தக் காரை போகச் சொல்லி விட்டான். தயாராக வைத்திருந்த மாட்டு வண்டியைக் கொண்டுவந்து வீட்டுமுன் நிறுத்தினான். மாப்பிள்ளையை மாட்டு வண்டியில் ஏற்றி விட்டவனும் அவன்தான்.

"அம்மா, இது புதுமையாக இருக்கிறது அல்லவா?"

அங்கமுத்துவின் கோபம் தெரியாமல், கயல்விழி கேட்டாள்.

"இது புதுமை அல்ல. காட்டுமிராண்டித்தனம்!" என்று அங்கமுத்து கர்ச்சித்தாள்.

"புதுமை புதுமை என்று போகப் போக, பழைய காட்டு மிராண்டித்தனம்தான் வரும்" என்றான், மன்னன். "அதோ பாருங்கள், அம்மா அந்தப் பெண் தொப்புள் தெரிய, வயிறு சரிய சேலை கட்டியிருக்கிறாள்" என்று ஊர்வலத்தில் நின்ற ஒரு பெண்ணை சுட்டிக் காட்டினான். "அது புதுமை என்று அவள் நினைக்கிறாள். ஆனால், நரிக்குறத்திகள்தான் அப்படி வயிற்றை காட்டிக் கொண்டு இருப்பார்கள்! புதுமை என்ற பெயரால் நரிக்குறத்தி நாகரிகத்துக்குத்தான் நாம் போய்க் கொண்டு இருக்கிறோம்!"

"உன்னோடு பேச என்னால் முடியாது. முதலில் மாப்பிள்ளையை கீழே இறக்கி, காரில் ஏற்று" என்றாள் அங்கமுத்து.

"அம்மா, இது பெட்ரோல் பஞ்சகாலம். பெட்ரோலை மிச்சப்படுத்த வேண்டும்" என்றான் மன்னன்.

"ஒரு டின் பெட்ரோலை உன் தலையில் ஊற்றி தீ வைக்க வேண்டும்" என்று அங்கமுத்து சீறினாள்.

அப்பொழுது கயல்விழி "அம்மா, அண்ணா பாண்டு வாத்தியக்காரர்களையும் அனுப்பிவிட்டார்" என்று தீயை பற்றவைத்தாள்.

அங்கமுத்து அதிர்ச்சியுடன் திரும்பிப் பார்த்தாள்.

மகாராஜாக்களைப் போல அலங்கார ஆடை அணிந்த பாண்டு வாத்தியக்காரர்களைக் காணோம்!

நாலுமுழ வேட்டியும், துண்டுமான நையாண்டி மேளக் காரர்கள் நின்றார்கள்!

"டேய், அவர்கள் எங்கேடா?"

பல்லைக் கடித்துக்கொண்டு பிள்ளை பக்கம் அங்கமுத்து திரும்பினாள்.

அவள் எவ்வளவு செலவு செய்து, ஊரிலேயே மிக உயர்வான பாண்டு வாத்தியக்காரர்களை ஏற்பாடு செய்து இருந்தாள்!

"அனுப்பிவிட்டேன்" மன்னன் அலட்சியமாகச் சொன்னான்.

"மாப்பிள்ளை ஊர்வலத்தைப் பார்த்து, இந்த ஊரே மூக்கில் விரல் வைக்க வேண்டும் என்று நான் நினைத்தேன் இப்படிக் கெடுத்துவிட்டாயேடா" என்று அங்கமுத்து புலம்பினாள்.

"இப்பொழுதுகூட எல்லோரும் மூக்கில் விரல் வைக்கத்தான் செய்கிறார்கள், அம்மா" என்றாள், கயல்விழி.

"உன் மூக்கை அறுத்து காக்காவுக்குப் போட!" என்று அவளை திட்டிய அங்கமுத்து, "ஏண்டா, மாப்பிள்ளை யார்?" உன் அண்ணனா? இந்த மாடுகளா? என்று மன்னனிடம் கேட்டாள். "மாடுகளும் கழுத்தில் மாலையுடன் நிற்கின்றனவே!"



"அம்மா, அண்ணி வீட்டில் பசு மாடு இருக்கிறதா? இந்தக் காளைக்கும் அந்தப் பசுவுக்கும் கல்யாணம் பண்ணி வைத்து விடலாம்!" என்று கயல்விழி கேட்டாள்.

இதற்குள் நாலைந்து பெரியவர்கள் வந்து "முகூர்த்தத்துக்கு நேரமாகிறது, அம்மா" என்று அங்கமுத்துவிடம் சொன்னார்கள்.

பாவம், அவள் இருதலை கொள்ளி எறும்பு போல தவித்தாள்!

"ஒரு கூண்டு வண்டியாவது வைத்திருக்கக் கூடாதா? வெறும் கட்டை வண்டி" அழமாட்டாக் குறையாக அவள் சொன்னாள்.

"கார் மட்டும் திறந்து இருக்க வேண்டும் என்கிறோமே" என்ற மன்னன், "உம்...ஊர்வலம் போகட்டும் என்று கையைக் காட்டினான்.

ஊர்வலம் மீண்டும் ஊர்ந்தது!

நையாண்டி மேளக்காரர்கள், "என்னடி ராக்கம்மா"வை தவிடு பொடி ஆக்கிக் கொண்டு போனார்கள்!

இந்தப் புதுமையான மாட்டு வண்டி ஊர்வலத்தைப் பார்க்க தெருவெங்கும் ஒரே கூட்டம்.

பார்த்தவர்கள் விழுந்து விழுந்து சிரித்தார்கள்!

அங்கமுத்துக்குத்தான் தலை தொங்கிவிட்டது!

மாப்பிள்ளை ஊர்வலம் பெண் வீட்டை அடைந்தது.

அங்கே போனதுமே அங்கமுத்துவின் அதிகாரம் கொடி கட்டிப் பறந்தது.

சம்பந்தி வீட்டு அம்மாவை அழைத்தாள். "எனக்கு காப்பி எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும் என்று சொல்லி அனுப்பினேனே; இருக்கிறதா?" என்று அதிகாரத்தோடு கேட்டாள்.

"வெயிலில் வந்தது தலையை சுற்றுகிறது" அங்கமுத்து அலட்டிக் கொண்டாள். 'ஒரு தம்ளர் காப்பி கொண்டு வாருங்கள்.'

சுந்தரவடிவு விரைந்து சென்று வெள்ளித் தம்ளரில் காப்பி கொண்டு வந்து கொடுத்தாள்.

காப்பி சூடாகத்தான் இருந்தது. ஆனால், ஆவி பறக்கவில்லை.

"இது என்ன காப்பியா? கழுநீர் தண்ணீரா?"

அங்கமுத்து ஆந்தைக் கண்களை உருட்டினாள்!

சுந்தரவடிவு நடுங்கி விட்டாள். "சுட வைத்துக் கொண்டு வரட்டுமா?"

"இந்தக் காப்பியை எங்கள் வீட்டு மாடு கூடக் குடிக்காது!"

அங்கமுத்து ஆர்ப்பரித்தாள்.

"அடியே முனியம்மா! அந்தக் காப்பிக் குடத்தைத் தூக்கி வா."

காளியாகக் கட்டளையிட்டாள் அங்கமுத்து!

கூலியாக ஓடினாள், முனியம்மா.

ஒரு குடம் நிறைய காப்பி இருந்தது. அந்தக் குடத்தைத் தூக்கிக் கொண்டு வந்தாள்.

"அப்படியே கொண்டு போய் வாழை மரத்துக்குக் கொட்டு! காப்பி போட்டு இருக்கிறார்களாம் காப்பி."

அங்கமுத்து ஆணையிட்டாள்.

முனியம்மா தயங்கி நின்றாள்.

"இப்படி கொடுடி!"

குடத்தை அங்கமுத்து ஆவேசமாகப் பறித்தாள்!

மதயானை போல கொல்லைப் புறம் போனாள்!

அங்கேயிருந்த ஒரு வாழை மரத்தடியில் மடமட என்று ஒரு குடம் காப்பியையும் கொட்டினாள்!



கொட்டி முடித்ததும், குடத்தையும் தூக்கி எறிந்தாள்.

இது விஷயம் தெரிந்து வெளியில் நின்ற சண்முகம் ஓடி வந்தார்.

"நாம் பெண்ணைப் பெற்றவர்கள்!"

சுந்தரவடிவு ஒரே வார்த்தையில் அவரைத் தடுத்து நிறுத்தினாள்.

பெண் அலங்காரம் நடந்து கொண்டு இருந்தது.

பெண்ணுக்கு பட்டுச் சேலை, வைரத் தோடு வளையல் கழுத்தணி முதலியவற்றை அங்கமுத்து கொண்டு வந்தாள். அவை மாப்பிள்ளை வீட்டு சீர்.

அவற்றை எடுத்துக் கொண்டு, அங்கமுத்துவும், கயல்விழியும் பெண்ணைத் தேடிப் போனார்கள்.

அவர்கள் பின்னேயே மன்னனும் வந்தான்.

பெண்ணைப் பார்த்ததும் அங்கமுத்துக்குப் பெரிய அதிர்ச்சி ஆகிவிட்டது!

லெட்சுமியின் காதில் நட்டு! கையில் நட்டு! கழுத்தில் நட்டு! அத்தனையும் இரும்பு நட்டுகள்!

"இது என்ன கோலம்!" என்று அங்கமுத்து இரைந்தாள்.

"புது பாஷன்! அழகாக இருக்கிறதே" என்று கயல்விழி கண்களை மலர்த்தினாள்.

"அம்மா. நாம் சொல்லிவிட்டதில் பாதியைத்தான் நிறைவேற்றியிருக்கிறார்கள்."

மன்னன் அமைதியாகப் பதில் சொன்னான்.

"நாம் என்னடா சொல்லி அனுப்பினோம்?"

"பெண்ணுக்கு நிறைய நகை.... நட்டு போட வேண்டும் என்று சொல்லி அனுப்பினோம் அல்லவா? நட்டு மட்டும் போட்டு இருக்கிறார்கள்."

"ஏண்டா எல்லோருமாகச் சேர்ந்து என்னை பைத்தியம் ஆக்குகிறீர்களா?"

"அம்மா, தங்கம் விற்கும் விலையில் யாரால் நகை போட முடியும்? நட்டுதான் போட முடியும்!"

லெட்சுமிக்கு சிரிப்பு வந்தது. சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

"நட்டு போடுகிறாளா, நட்டு! வீட்டுக்கு வரட்டும், அவள் நட்டை கழற்றுகிறேன்."

அங்கமுத்து பொருமினாள்.

"அம்மா, இதையெல்லாம்..."

கயல்விழி கையில் இருந்த தாம்பாளத் தட்டை நீட்டினாள். சேலைகளும் நகைகளும் அதில்தான் இருந்தன.

"போட்டுத் தொலை! இந்தக் கண்ணறாவியைப் பார்க்க என்னால் முடியாது."

அங்கமுத்து விருட்டென்று வெளியில் போய் விட்டாள்.

கலாட்டா எதுவும் இல்லாமல் முகூர்த்தம் முடிந்தது!

பால் பழம் சாப்பிட மணமக்களை உள்ளே அழைத்துச் சென்றார்கள்.

மற்றவர்கள் விருந்து உண்ணச் சென்றார்கள்!

முதல் பந்தியில் முதல் ஆளாக அங்கமுத்து அமர்ந்தாள். அவள் என்றைக்குமே பந்திக்குப் பிந்துகிறவள் அல்ல!

இலை போட்டு பந்தி பரிமாறினார்கள்!

அப்பொழுது அங்கமுத்துக்கு மேலும் ஓர் அதிர்ச்சி!

சோறு, கூட்டு, சாம்பார் எல்லாம் மண் சட்டியில் வந்தன! பரிமாறுகிறவர்கள் கையில் அகப்பை!

"கூப்பிடு சம்பந்தியை!" என்று கூச்சல் போட்டாள், அங்கமுத்து.

சண்முகம் அன்னநடை நடந்து வந்தார்.



"இது சம்பந்தி விருந்தா? பிச்சைக்காரர்களுக்கு சாப்பாடா?" அங்கமுத்து இரைந்தாள்.

"நீங்கள் மிகவும் சுத்தம் என்று உங்கள் பையன்தான் சொல்லி அனுப்பினார்."

சண்முகம் அமைதியாகக் கூறினார்.

"அந்தப் பயலை..."

அங்கமுத்து பல்லை கடித்தாள்!

## 7

சர்க்கரை இல்லாத பொங்கலும், சம்பந்தி சண்டை இல்லாத கல்யாணமும் இனிக்குமா!

"இது என்ன கல்யாண வீடா? உப்பும் இல்லை! சப்பும் இல்லை!" என்று வந்தோர் போனோரிடம் எல்லாம் வாய் வலிக்காமல் சொல்லிக் கொண்டு இருந்த அங்கமுத்துக்கு கொடி கட்டவும் ஒரு வாய்ப்புக் கிடைத்தது;

முதல் இரவை யார் வீட்டில் வைத்துக் கொள்வது என்ற கேள்வி எழுந்தது.

"எங்கள் வீட்டில் வைத்துக் கொள்வதுதான் முறை" என்று லெட்சுமியின் தந்தை சண்முகம் சொன்னார்.

அவ்வளவுதான், அங்கமுத்து 'போர்! போர்! போர்!' என்று முரசு கொட்டிவிட்டாள்!

"இதுவும் ஒரு வீடா? எங்கள் வீட்டு மாட்டுத்தொழுவம் போல இருக்கிறது! இங்கேயா என் மகனுக்கு முதல் இரவு!" என்று அங்கமுத்து கர்ச்சித்தாள்.

"மாட்டுத் தொழுவில் மகாத்மாக்களே பிறந்திருக்கிறார்கள்" என்று சுப்பிரமணியம் சிரித்தார்.

சும்மாவே ஆடும் பேய், கொட்டுக் கண்டது போல ஆயிற்று!

"இந்தப் பரதேசிகள் சம்பந்தமே வேண்டாம் என்று தலையில் அடித்துக் கொண்டேன்!" என்று அங்கமுத்து பரணி பாடினாள்!

"படுப்பதற்கு பழைய பாய்கூட இங்கே இருக்காது. பகலிலேயே மூட்டைப்பூச்சி கொசுக்கடியும் ஆளைக் கொல்லுகின்றன! இங்கே என் மகனுக்கு முதல் இரவா?" என்று முழக்கினாள்.

"தாலிகட்டிய பின்பு அவள் எங்கள் பெண்! அவளை எங்கேயும் இழுத்துக் கொண்டு போவோம். டேய் கண்ணா, அவள் குடுமியைப் பிடித்து இழுத்துக் கொண்டு வாடா!" என்று மகனை விரட்டினாள்.

அங்கமுத்து போட்ட ஆட்டத்தில், கல்யாண வீடு, பாத்திரக் கடைக்குள் மதயானை புகுந்தது போல ஆயிற்று! எல்லோரும் கிடுகிடு என்று நடுங்கிப் போனார்கள். சம்பந்தி வீட்டார் வாயைப் பொத்திக் கொண்டார்கள். அங்கமுத்துவை யார் சமாதானப் படுத்த முடியும்? எலிகள் கூடி பூனைக்கு மணி கட்டிய கதை தான்! மன்னன் கூட எங்கோ போய் பதுங்கிக் கொண்டான்!

திருமண வீடு செயல் இழந்து நின்றுவிட்டது!

அதைப் பார்த்த பின்புதான், இடி மின்னலுடன் "சோ" என்று கொட்டிய மழை ஓய்ந்தது போல, அங்கமுத்து அமைதியானாள்.

கயல்விழி சுடச்சுட காப்பி கொண்டு வந்து கொடுத்தாள்.

மன்னன் தென்னை விசிறியால் அம்மாவுக்கு வீசி விட்டான்.

அங்கமுத்துவின் அதரங்கள் சற்றே மலர்ந்தன.



அப்பொழுது "அம்மா, அண்ணி நம் வீட்டுக்கு வந்த பின் இங்கே வரவேமாட்டார்கள் அல்லவா?" என்று மன்னன் மெல்லக் கேட்டான்.

"இங்கே அவளுக்கு சோறு ஏது?" அங்கமுத்து அலட்சியமாகச் சொன்னாள்.

"பாவம், அப்படியானால், ஒரு வாரம் அங்கே இருந்து விட்டு வரட்டுமே, அம்மா" கயல்விழி கெஞ்சலாகச் சொன்னாள்.

"நீங்கள் அனுமதி கொடுத்தால் தான், அம்மா வீட்டுக்கே வரமுடியும் என்பதை இன்றைக்கே நிலைநாட்டி விட வேண்டும், அம்மா."

தாய்க்கு சாவி கொடுப்பது போல மன்னன் கூறினான்.

அங்கமுத்துக்கு உச்சி குளிர்ந்து விட்டது!

"சரி...சரி..."

பிச்சை போடுவது போலச் சொன்னாள்.

லெட்சுமியின் வீட்டிலேயே முதல் இரவு; அங்கேயே கண்ணனுக்கு பத்து நாள் மாப்பிள்ளை சாப்பாடு; அதன் பின் இருவரும் அங்கமுத்துவின் வீட்டுக்கு வந்து சேர வேண்டும் என்று முடிவு ஆயிற்று.

முதல் இரவு என்றால், முக்கனியாக இருக்கும்; முதல் இரவு அறை "வசந்த மாளிகை" போல இருக்கும் என்றெல்லாம் இன்பக் கனவு காணும் 'பக்குவம்' கண்ணனுக்கு இல்லை. அவன் இன்னும் பச்சை மண். அதனால் தலைக்கு மேல் தொங்கிய மல்லிகைச் சரத்தை கையில் பிடித்து ஆட்டிக் கொண்டே பொறுமை இழந்து அமர்ந்து இருந்தான்.

அங்கமுத்து ஏதேதோ பேசிவிட்டதால், சண்முகம் நூறு இருநூறு அதிகமாகச் செலவழித்தே அந்த அறையை அலங்காரம் செய்து இருந்தார். மல்லிகை மணம் அறை

முழுவதும் மண்டிக்கிடந்தது. வாசனை பத்தியின் நறுமணம் மல்லிகையுடன் போட்டியிட்டது. இரண்டு பேர் மல்யுத்தம் செய்து கொள்ளத்தக்க அளவுக்கு பெரிய கட்டில். புத்தம் புதிய மெத்தை. மெத்தை மீது முல்லை மலர்ப் படுக்கை.

கண்ணனுக்கு தூக்கம் கண்களை சுழற்றியது. கொட்டாவியும் விட்டு விட்டான். அப்பொழுதுதான் கதவு திறக்கும் ஓசை கேட்டது.

கண்ணன் திரும்பிப் பார்த்தான்.

அஜந்தா ஓவியம் போல லெட்சுமி நின்று கொண்டு இருந்தாள்.

'ஒரு பெண் இவ்வளவு அழகுடனும் இருப்பாளா?'

கண்ணன் திகைத்தான்.

அவன் கண்களில் மலர்ச்சி.

அவன் முகத்தில் மலர்ச்சி.

வைத்த கண் வாங்காமல், லெட்சுமியையே பார்த்தான்.

அவன் எந்தப் பெண்ணையும் இதுவரை இப்படிப் பார்த்தது இல்லை!

அவள் அந்தி வானம் போன்ற செக்கச் செவேர் என்ற பட்டுச் சேலை கட்டியிருந்தாள்.

கதம்பமும் மல்லிகையும் கலந்து தலை நிறைய சுமந்து கொண்டு இருந்தாள்.

கைவிரல்களில் மருதாணி கொஞ்சியது.

நிறை நிலா ஒன்று நிலத்துக்கு வந்து தலை குனிந்து நிற்பது போன்று தோன்றியது.

கண்ணன் அவனை அறியாமலே எழுந்தான்.

அவன் கால்கள் அவளை நோக்கி நகர்ந்தன.

அருகில் சென்று, அஞ்சி நின்று, ஆவலுடன் அவளையே பார்த்தான்.



13641

அவன் கை அவளை மெல்ல தொட்டுப் பார்த்தது!

'சட்'டென்று கைகளை பின்னே இழுத்துக் கொண்டாள்.

அவனது செய்கை, லெட்சுமிக்கு சிரிப்பை ஊட்டியது. வாயை அடக்கிக்கொண்டு, கதவை தாழிட்டாள்.

கதவு தாழிடப்படுவதைக் கண்டதும், கண்ணனுக்கு உடல் முழுக்க வியர்த்துக் கொட்டியது!

"எதுக்கு கதவைப் பூட்டுகிறாய்...?" நடுக்கத்துடன் கேட்டான்.

"கதவைப் பூட்டாவிட்டால், கொசு வரும்!"

சொல்லிக் கொண்டே லெட்சுமி படுக்கையை நெருங்கினாள்.

கையில் இருந்த தட்டை, கட்டிலுக்கு அருகில் இருந்த பலகையில் வைத்தாள்.

கண்ணன் அவள் பின்னேயே வந்தான்.

லெட்சுமி அவன் கால்களில் விழுந்து வணங்கினாள்.

"வேண்டாம், வேண்டாம்! எழுந்திரு!" கண்ணன், பின்னே சென்றான். "ஏன் என் காலில் விழுகிறாய்?"

'நீங்கள் என் காலில் விழுந்தால் நன்றாக இருக்காதே!' என்று லெட்சுமி சொல்லவில்லை. "எனக்கு இனி உங்கள் காலடிதானே சொர்க்கம்" என்று கூறினாள்.

"காலில் விழுகிறவர்களை நம்பக் கூடாது என்று என் அம்மா சொல்லுவார்கள். காலில் விழுவது போல காலை வாரிவிட்டு விடுவார்களாம்!"

சிறுபிள்ளை போல கண்ணன் சொன்னான்.

"இப்படியும் ஓர் அப்பாவி இருக்கிறாரே!" என்று லெட்சுமி அனுதாபப்பட்டாள். அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் "உங்கள்- அதாவது என் மாமியார், வேறு என்ன சொல்லியிருக்கிறார்கள்?" என்று மிகவும் அக்கறையுடன் கேட்டாள்.

MAR 2004

"உன் பேச்சை கேட்கவே கூடாது என்று அம்மா சொல்லியிருக்கிறார்கள்" என்றான், கண்ணன்.

லெட்சுமி சிரித்துக் கொண்டாள். "பிறகு..."

"நீ சொக்குப்பொடி போடுவாயாம்; நான் மயங்கக் கூடாதாம். நீ தலையணை மந்திரம் போடுவாயாம்; நான் தலையை ஆட்டக்கூடாதாம். உன் அழகைப் பார்த்து நான் ஏமாந்துவிடக் கூடாதாம்" கண்ணன் சொல்லிக் கொண்டே வந்தான்.

"அழகு என்றால் என்ன?"

ஓரக்கண்ணால் ஒய்யாரமாக அவனைப் பார்த்துக் கொண்டே, தெரியாதவள் போல லெட்சுமி கேட்டாள்.

"அழகு என்றால்... அழகுதான்...இல்லை-அழகு... எனக்குத் தெரியாது. நீதான் சொல்லேன்."

அவளைப் பார்த்துக்கொண்டே கண்ணன் உளறிக் கொட்டினான். அவனுக்கு அவளை பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போல இருந்தது.

"லொக்..."

லெட்சுமிக்கு இருமல் வந்தது.

ஒரு சிறு காகித பொட்டலத்தைப் பிரித்தாள்.

அதில் ஏதோ ஒரு பொடி இருந்தது.

"அது என்ன?" கண்ணன் வியப்புடன் வினவினான்.

"பயப்படாதீர்கள் இது சொக்குப்பொடி இல்லை. சுக்குப் பொடி!" என்று லெட்சுமி சிரித்தாள். "இருமலுக்கு நல்லது" என்று சொல்லிக்கொண்டே சுக்குப்பொடியை வாயில் போட்டுக் கொண்டு, ஒரு மடக்கு தண்ணீர் பருகினாள்.

பிறகு "உட்காருங்கள்" என்று கண்ணனின் கையைப் பற்றி அவனை கட்டிலில் அமர்த்தினாள்.

அவன் அவளுக்கு நெருக்கமாக அமர்ந்து கொண்டு "லெட்சுமி, நீ அழகாக இருக்கிறாய்" என்று அவள் கன்னத்தைத் தொட்டான்.



அவளோ, "அம்மா-" என்றாள்.

"அய்யோ..." என்று அவன் துள்ளிக் குதித்து எழுந்தான்.

"அம்மா இங்கே இல்லை. அழகைக் கண்டு மயங்கக் கூடாது என்று அம்மா சொன்னார்கள் என்றீர்களே அதை நினைவுபடுத்தினேன்" என்று லெட்சுமி சிரித்தாள்.

"அம்மாதான் வந்து விட்டார்களோ என்று பயந்து விட்டேன்," என்ற கண்ணன், மீண்டும் அவள் அருகில் அமர்ந்தான்.

"சாப்பிடுங்கள்."

தட்டில் இருந்து கொழுக்கட்டைகளை எடுத்து, லெட்சுமி அவனிடம் நீட்டினாள்.

"கொழுக்கட்டையா..." அவன் விழித்தான்.

"ஆமாம், கொழுக்கட்டை என்றால், உங்களுக்குக் கொள்ளை ஆசையாமே?"

"யார் சொன்னது?"

"உங்கள் தங்கைதான்!"

"கயல்விழியா? என்ன சொன்னாள்?"

"என் அண்ணாவுக்கு கொழுக்கட்டை என்றால் மிகவும் பிடிக்கும். எந்நேரமும் வாயில் கொழுக்கட்டை வைத்திருப்பார். வாயைத் திறந்து பேசவே மாட்டார் என்று சொன்னாளே."

வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல லெட்சுமி சொன்னாள்.

"போக்கிரிப் பெண்" கண்ணன் தங்கையைக் கடிந்து கொண்டான். "நான் அம்மா முன்னேதான் வாயைத்திறக்க மாட்டேன். இப்பொழுது உன்னோடு பேசவில்லையா?"

"பேசிப் பேசி தொண்டை வறண்டு இருக்கும். பாலைக் குடியுங்கள்!"

லெட்சுமி பால் புட்டியை எடுத்து நீட்டினாள்!

கண்ணன் திகைத்தான். "நான் என்ன பச்சை பாப்பாவா?"

"அமாம். நீங்கள் இன்னும் அம்மா பிள்ளைதானே!"

லெட்சுமி எங்கோ பார்த்துக்கொண்டு சொன்னாள்.

"நீயும் போக்கிரிப் பெண்தானா!"

கண்ணன் அவள் காதைப் பிடித்தான்.

வெட்கமும், மகிழ்ச்சியும் பெருக, வெல்லப் பாகுபோல லெட்சுமி உருகிப் போனாள்!

இருகை கூப்பி தொழுது கொண்டே இல்லறம் இனிதே நடக்க இறைவனை வேண்டினாள்.

"ஏய் என்ன செய்கிறாய்?" கண்ணன் கூவினான்.

"தலையணை மந்திரம் போடுகிறேன்!"

சிரித்துக்கொண்டே, லெட்சுமி விளக்கை அணைத்தாள்!

கண்ணன் தன்-குடும்ப விளக்கை அணைத்தான்!!

## 8

காப்பியும் கையுமாக லெட்சுமி அறைக்குள் நுழைந்தாள்.

அவள் அப்பொழுதுதான் குளித்து, ஆடை மாற்றியிருந்தாள். ஈரக் கூந்தலை அள்ளி முடிந்து இருந்தாள். அதில் பனித்துளி போல நீர்த்துளிகள் நின்றன. மஞ்சள் முகம். நெற்றி நிறைய குங்குமம். நேற்றுவரை கன்னிப் பெண்ணாக - காட்டு மலராக இருந்தவள், ஒரே நாளில் குடும்பப் பெண்ணாக- குத்துவிளக்காக ஆகிவிட்டாள்.

கண்ணன் கட்டிலில் கண் மலர்ந்து கிடந்தான்.



நேற்று இரவில் நடந்ததெல்லாம் ஏதோ ஓர் இன்பக்கனவு போல இருந்தது. அதை நினைத்து நினைத்து இன்பபோதையில் நீந்திக் கொண்டு இருந்தான்.

லெட்சுமியைப் பார்த்ததும் அவன் முகம் மலர்ந்தது. அவள் இப்பொழுது புதிய அழகுடன் விளங்குவது போல அவனுக்குத் தோன்றியது.

"விழித்து விட்டீர்களா?" என்று கேட்டுக் கொண்டே லெட்சுமி அவனை நெருங்கினாள். "காப்பி சாப்பிடுங்கள்."

அவன் அவளையே சாப்பிட்டு விடுவது போலப் பார்த்தான். காப்பியை வாங்குவது போல, அவள் கையைப் பற்றினான்.

முகம் சிவக்க அவள் நாணிக் கோணி அவனுக்கு முதுகைக் காட்டினாள்.

காப்பியைப் பருகிய அவன், "லெட்சுமி" என்று அவள் இடுப்பைப்பற்றி, அவளை தன் பக்கம் திருப்பினான்.

"நான் குளித்துவிட்டேன். என்னைத் தொடாதீர்கள்" என்று அவள் புழுப்போல நெளிந்தாள்.

"நான் நேற்றே குளித்துவிட்டேன்-இன்பக் கேணியில்" என்று அவன், அவளை இழுத்து தன் மடியில் போட்டுக் கொள்ள முயற்சித்தான்.

அவளோ வெட்கம் பிடுங்கித் தின்ன ஒரே ஓட்டமாக ஓடிவிட்டாள்!

வெந்நீர் தயார்.

"மாப்பிள்ளையை சீக்கிரம் குளித்து சாப்பிடச் சொல்லம்மா" என்று சண்முகம் விரட்டிக் கொண்டு இருந்தார்.

பல்குச்சி-பசை, சோப்பு, துண்டு முதலியவற்றை எடுத்துச் சென்று, லெட்சுமி குளியலறையில் வைத்தாள்.

பிறகு கண்ணனை அழைத்து வந்தாள்.

அவனுடன் அவளும் குளியலறைக்குள் நுழைந்தாள்.

"எனக்குச் சோப்புப் போடப் போகிறாயா?" அவன் கேலியாகக் கேட்டான்.

"நான் ஏன் உங்களுக்கு சோப்புப் போடுகிறேன். நீங்கள் தான் எனக்குச் சோப்புப் போட வேண்டும்" என்றாள், லெட்சுமி.

"சரி, வா; உனக்கு சோப்புப் போட்டு விடுகிறேன்" என்று கண்ணன் அவளை இழுத்தான்.

"எனக்குச் சோப்புப் போடுவது இருக்கட்டும். முதலில் உங்கள் பல்லைக் காட்டுங்கள்" என்று லெட்சுமி பல்குச்சியை கையில் எடுத்தாள்.

"எனக்கு பல் துலக்கிவிடப் போகிறாயா?" அவன் 'ஈ' என்று பல்லைக் காட்டினான்.

"உங்களுக்கு உங்கள் அம்மாதானே பல் துலக்கிவிடுவார்களாம்! கயல்விழி சொன்னாளே" என்று லெட்சுமி கூறினாள்.

கண்ணனுக்கு ரோஷம் பொத்துக்கொண்டு வந்தது. "அவளை வீட்டில் போய் கவனித்துக் கொள்ளுகிறேன்" என்று கறுவிக் கொண்டே, லெட்சுமியின் கையில் இருந்த 'பிரஷ்'சை 'வெடுக்'கென்று பறித்து, வேகமாக பல்லைத் துலக்கினான்.

கண்ணன் குளித்துவிட்டு வந்தான்.

லெட்சுமி அவனுக்கு மாற்று உடைகளை எடுத்து வந்தாள்.

கையில் சீப்பு ஒன்றை எடுத்துக்கொண்டு, "உட்காருங்கள்" என்றாள்.

"எனக்கு தலை கோதிவிடப் போகிறாயா?" கண்ணன் அவளைப் பார்த்தான்.

"தலை கோதி, பொட்டு வைத்து, பவுடர் பூசி, கண் மை போட்டு, புது சட்டை போட வேண்டாமா? பெண்பிள்ளை என்றால், தலைக்கு பூகூட வைக்கலாம்" லெட்சுமி குரலை இழுத்துக் கொண்டு கூறினாள்.



"சோறுகூட ஊட்டிவிடுவாய் போலிருக்கிறதே" கண்ணன் சிரித்தான்.

"உங்கள் அம்மா செய்வதை தான் செய்யக்கூடாதா?" லெட்சுமி அப்பாவி போல சொன்னாள்.

"என் அம்மா எனக்கு சோறு ஊட்டி விடுகிறார்களா?" அவள் தோளைப் பற்றிக் கொண்டு கண்ணன் கேட்டான்.

"எனக்கு என்ன தெரியும்? நான் பார்த்தேனா? உங்கள் தங்கைதான் சொன்னாள்!" லெட்சுமி அமைதியாகக் கூறினாள்.

"கயல்விழி இன்னும் என்னென்ன சொல்லியிருக்கிறாள்?"

"உங்களுக்கு மிட்டாய் என்றால், மிகவும் பிடிக்குமாம். எப்பொழுதும் மிட்டாய் வைத்திருக்க வேண்டுமாம். நீங்கள் கட்டை விரல் சூப்புவீர்களாம்! மண் தின்பீர்களாம்! அம்மா மடியில் தான் படுத்துத் தூங்குவீர்களாம்."

"அது ஒன்றுதான் உண்மை. இனி உம் மடியில்தான் தூங்கப் போகிறேன்."

"ஊகூம். அதோ பாருங்கள்."

லெட்சுமி சுட்டிக் காட்டிய இடத்தை கண்ணன் பார்த்தான்.

அங்கே சேலையில் ஒரு தொட்டில் கட்டி தொங்கியது.

அதைப் பார்த்து கண்ணன் சிரித்தான்.

"லெட்சுமி அந்தத் தொட்டிலில் நான் வேண்டுமானாலும் படுத்துக் கொள்ளுகிறேன். நீ மட்டும் ஒன்றை பெற்று விடாதே. கட்டிலுக்குப் பக்கத்தில் தொட்டில் போட கொஞ்ச நாள் ஆகட்டும். அதுவரை நாம் ஜாலியாக இருப்போம்" என்று சொல்லிக்கொண்டே அவளது பக்கம் திரும்பினான்.

அவளோ அறைக்கு வெளியில் ஓடிக்கொண்டு இருந்தாள்.

விளையாட்டுப் பேச்சு வினையாகி விட்டது!

கண்ணனுக்கு தலை கோதுவது, உடை மாற்றுவது எல்லாமே லெட்சுமிதான். அவனுக்கு ஊட்டி விடவும் செய்தாள். அந்தப்

'போக்கிரிக் குழந்தை' ஓரிருமுறை அவள் விரலைக் கடித்துவிட்டது!

அவன் அவளுக்கு ஒரு குழந்தை போல ஆகிவிட்டான்.

அவனும் எடுப்பார் கைபிள்ளை போலத்தான் இருந்தான்.

பத்து நாட்களும் பத்து நிமிடம் போல பறந்து விட்டன. நேரம் போனதே தெரியவில்லை.

நாளை லெட்சுமி புக்ககம் போக வேண்டும்!

இரவு அவள் மடிமீது தலை வைத்து கண்ணன் படுத்திருந்தான்.

"லெட்சுமி..."

"உம்..."

"என்னை ஒரு குழந்தையாக ஆக்கி விட்டாய்."

"மனைவிக்கு கணவன்தானே முதல் குழந்தை!"

"இத்தனை நாளும் எல்லோரும் என்னை 'அம்மா பிள்ளை' என்று கேலி செய்தார்கள். இனி 'பெண்டாட்டி பிள்ளை' என்று கிண்டல் பண்ணுவார்கள்."

"தாய்க்குப் பின் தாரம்தானே!"

"ஆமாம் அம்மாவின் முதுகுக்குப் பின்னேதான் நீ எனக்குத் தாரம்! அம்மாவுக்கு முன்னே நீ எனக்கு வெகு தூரம்."

"அதை நினைத்தால்தான் எனக்கு இப்பொழுதே வயிற்றைக் கலக்குகிறது."

"எனக்கும் தூக்கமே வரவில்லை. விளக்கை அணை."

"தூக்கம் வரவில்லை என்கிறீர்கள். பிறகு ஏன் விளக்கை அணைக்க வேண்டும்?"

"அது உன் விருப்பம்."

அவன் அவளை அணைத்தான்.

அவள் அவசரமாக விளக்கை அணைத்தாள்!



வாடகைக்கார் வந்து நின்றது.

கண்ணன், லெட்சுமி, சண்முகம் மூவரும் காரில் இருந்து இறங்கினார்கள்.

"வா லெட்சுமி, வாருங்கள், மாமா" என்று சொல்லி விட்டு கண்ணன் முன்னே நடந்தான்.

சண்முகம் காரில் இருந்த சாமான்களை எடுத்தார்.

அவரது சக்திக்குத் தகுந்தபடி மகளுக்கு சீர்வரிசை செய்திருந்தார். சம்பந்தி வீட்டு அம்மாவின் குணம் அறிந்து, சுந்தரவடிவு தனது சக்திக்கு மேலேயே சீர் வாங்கியிருந்தாள்.

"வேலைக்காரர்கள் எடுத்து வருவார்கள், மாமா. நீங்கள் வாருங்கள்" என்று கண்ணன் அவரை அழைத்தான்.

"வலது காலை எடுத்து வைத்து உள்ளே போம்மா" என்று சண்முகம் மகளிடம் சொன்னார்.

மூவரும் உள்ளே வந்தார்கள்.

அங்கமுத்து, சுப்பிரமணியம், மன்னன், கயல்விழி அனைவரும் அவர்களை வரவேற்கக் கூடத்தில் தயாராக அமர்ந்து இருந்தார்கள்.

கயல்விழி ஓடிவந்து, "அண்ணி!" என்று லெட்சுமியை கட்டிப் பிடித்துக் கொண்டாள். அண்ணியை தனக்குப் பக்கத்தில் அமர வைத்துக் கொண்டாள்.

"என்ன அண்ணா, புது பெல்ட் வாங்கியிருக்கிறீர்களா? பழைய 'பெல்ட்' என்ன ஆயிற்று?" என்று மன்னன் கேலி செய்தான்.

சும்மா சொல்லக்கூடாது, கண்ணன் கொஞ்சம் பருத்துத்தான் இருந்தான்.

"அண்ணி அண்ணனுக்கு சோறு போட்டீர்களா? அல்லது சோற்றுப் பானையையே வயிற்றுக்குள் திணித்து விட்டீர்களா!" என்று கயல்விழி கேலி செய்தாள்.

'போக்கிரிக் குழந்தை' ஓரிருமுறை அவள் விரலைக் கடித்துவிட்டது!

அவன் அவளுக்கு ஒரு குழந்தை போல ஆகிவிட்டான்.

அவனும் எடுப்பார் கைபிள்ளை போலத்தான் இருந்தான்.

பத்து நாட்களும் பத்து நிமிடம் போல பறந்து விட்டன. நேரம் போனதே தெரியவில்லை.

நாளை லெட்சுமி புக்ககம் போக வேண்டும்!

இரவு அவள் மடிமீது தலை வைத்து கண்ணன் படுத்திருந்தான்.

"லெட்சுமி..."

"உம்..."

"என்னை ஒரு குழந்தையாக ஆக்கி விட்டாய்."

"மனைவிக்கு கணவன்தானே முதல் குழந்தை!"

"இத்தனை நாளும் எல்லோரும் என்னை 'அம்மா பிள்ளை' என்று கேலி செய்தார்கள். இனி 'பெண்டாட்டி பிள்ளை' என்று கிண்டல் பண்ணுவார்கள்."

"தாய்க்குப் பின் தாரம்தானே!"

"ஆமாம் அம்மாவின் முதுகுக்குப் பின்னேதான் நீ எனக்குத் தாரம்! அம்மாவுக்கு முன்னே நீ எனக்கு வெகு தூரம்."

"அதை நினைத்தால்தான் எனக்கு இப்பொழுதே வயிற்றைக் கலக்குகிறது."

"எனக்கும் தூக்கமே வரவில்லை. விளக்கை அணை."

"தூக்கம் வரவில்லை என்கிறீர்கள். பிறகு ஏன் விளக்கை அணைக்க வேண்டும்?"

"அது உன் விருப்பம்."

அவன் அவளை அணைத்தான்.

அவள் அவசரமாக விளக்கை அணைத்தாள்!



வாடகைக்கார் வந்து நின்றது.

கண்ணன், லெட்சுமி, சண்முகம் மூவரும் காரில் இருந்து இறங்கினார்கள்.

"வா லெட்சுமி, வாருங்கள், மாமா" என்று சொல்லி விட்டு கண்ணன் முன்னே நடந்தான்.

சண்முகம் காரில் இருந்த சாமான்களை எடுத்தார்.

அவரது சக்திக்குத் தகுந்தபடி மகளுக்கு சீர்வரிசை செய்திருந்தார். சம்பந்தி வீட்டு அம்மாவின் குணம் அறிந்து, சுந்தரவடிவு தனது சக்திக்கு மேலேயே சீர் வாங்கியிருந்தாள்.

"வேலைக்காரர்கள் எடுத்து வருவார்கள், மாமா. நீங்கள் வாருங்கள்" என்று கண்ணன் அவரை அழைத்தான்.

"வலது காலை எடுத்து வைத்து உள்ளே போம்மா" என்று சண்முகம் மகளிடம் சொன்னார்.

மூவரும் உள்ளே வந்தார்கள்.

அங்கமுத்து, சுப்பிரமணியம், மன்னன், கயல்விழி அனைவரும் அவர்களை வரவேற்கக் கூடத்தில் தயாராக அமர்ந்து இருந்தார்கள்.

கயல்விழி ஓடிவந்து, "அண்ணி!" என்று லெட்சுமியை கட்டிப் பிடித்துக் கொண்டாள். அண்ணியை தனக்குப் பக்கத்தில் அமர வைத்துக் கொண்டாள்.

"என்ன அண்ணா, புது பெல்ட் வாங்கியிருக்கிறீர்களா? பழைய 'பெல்ட்' என்ன ஆயிற்று?" என்று மன்னன் கேலி செய்தான்.

சும்மா சொல்லக்கூடாது, கண்ணன் கொஞ்சம் பருத்துத்தான் இருந்தான்.

"அண்ணி அண்ணனுக்கு சோறு போட்டீர்களா? அல்லது சோற்றுப் பானையையே வயிற்றுக்குள் திணித்து விட்டீர்களா!" என்று கயல்விழி கேலி செய்தாள்.

கண்ணன் எதற்கும் பதில் சொல்லவில்லை. அம்மாவுக்குப் பக்கத்தில் நல்ல பிள்ளையாக உட்கார்ந்து கொண்டான்.

சிறிது நேரம் பேசிக் கொண்டு இருந்து விட்டு, சண்முகம் புறப்பட்டார்.

"லெட்சுமி" என்று மகளை அழைத்து, "மாமியார் மெச்சிய மருமகளாக நடந்து கொள்" என்று புத்திமதி கூறினார். "இனி இதுதான் உன் வீடு. இவர்கள் தான் உன் தாய்-தந்தை. மாமியாரின் மனங்கோணாமல் நடந்து கொள்."

அங்கமுத்துவிடம் விடை பெற்றுக் கொண்டபொழுது, "அம்மா, லெட்சுமி இனி உங்கள் மகள்" என்று கூறினார்.

"ஏண்டி, உனக்கு பள்ளிகூடத்துக்கு நேரமாகவில்லை?" என்று அங்கமுத்து சட்டென்று கயல்விழியின் காதைப் பிடித்து முறுக்கி, முதுகில் ஒன்று வைத்தாள்.

அதன் பொருள் சண்முகத்துக்குப் புரிந்தது. "அம்மா கோழி மிதித்து குஞ்சு முடம் ஆகாது. நான் வருகிறேன்" என்று விடை பெற்றுச் சென்றார்.

அவர் போனதும், "முனியம்மா" என்று அங்கமுத்து கூவி அழைத்தாள்.

"என்னம்மா?" என்று கேட்டுக் கொண்டே முனியம்மா ஓடி வந்தாள்.

அங்கமுத்து இடுப்பில் சொருகியிருந்த மூன்று பத்து ரூபாய் நோட்டுகளை எடுத்தாள்.

"இந்தா உன் சம்பளம். இன்று முதல் நீ வேலையில் இருந்து நின்று கொள்" என்று முனியம்மாவிடம் அதை கொடுத்தாள்.

முனியம்மா திகைத்தாள்.

மற்றவர்கள் மலைத்தார்கள்.

"ஏனம்மா முனியம்மாவை வேலையில் இருந்து நிறுத்துகிறீர்கள்?" மன்னன் கேட்டான்.



"ஒரு வீட்டுக்கு இரண்டு வேலைக்காரி எதற்கு?"

அங்கமுத்து புன்னகைத்தாள்!

லெட்சுமிக்கோ நெஞ்சு 'திக்' என்றது!

## 9

"படபட-படபடபடபடபட"

பட்டாசுச் சரம் வெடித்தது போல ஓசை கேட்டது.

அரைத் தூக்கத்தில் இருந்த லெட்சுமி திடுக்கிட்டு விழித்தாள்.

தூக்கக் கலக்கத்துடன் எழுந்து சென்று, கதவைத் திறந்தாள்!

அங்கமுத்து நின்று கொண்டு இருந்தாள்!

எதிர்பாராது அவளைப் பார்த்ததும் லெட்சுமி பேயடித்தவள் போல பயந்து விட்டாள்!

"ஏண்டி! நீ குடும்பப் பெண்தானா? மணி என்ன ஆகிவிட்டது தெரியுமா? இப்படி கும்பகர்ணன் போலத் தூங்குகிறாயே! எத்தனைமுறை கதவைத் தட்டுவது? இடி விழுந்தாலும் எழுந்திருக்க மாட்டாயா? உன் காது என்ன டமாரக் காதா?"

அங்கமுத்து கர்ச்சித்தாள்.

பாவம் லெட்சுமி தேள் கொட்டிய திருடன் போல நின்றாள்!

"குடும்பப் பெண் என்றால் கோழி கூவுமுன்னே எழுந்திருக்க வேண்டும்! அப்போதுதான் அந்த வீடு உருப்படும்... என்னை ஏண்டி இப்படிப் பார்க்கிறாய்? கடிகாரத்தைப் பார்!"

லெட்சுமியின் குமட்டில் குத்தினாள்!

லெட்சுமி கழுத்தைத் திருப்பினாள்.

சுவரில் இருந்த கடிகாரம் அவள் கண்ணில் பட்டது.

அப்பொழுதுதான் மணி ஐந்து ஆகிக் கொண்டு இருந்தது.

"இனிமேல் எழுந்து விடுகிறேன், அத்தை" என்று அவள் சொல்லிக் கொண்டு இருந்தபொழுது எங்கோ கோழி கூவியது.

லெட்சுமி தலை நிமிர்ந்து நோக்கினாள்.

அந்தப் பார்வையில் ஆயிரம் கேள்விகள் இருப்பதை அங்கமுத்து அறிந்தாள்!

லெட்சுமி நேற்றுத்தான் புகுந்த வீட்டுக்கு வந்தாள். முதலில் இருந்தே அவள் குடுமியைப் பிடிக்க வேண்டும்- கொஞ்சம் விட்டாலும் கை நழுவி விடக்கூடும் என்று அங்கமுத்து நினைத்தாள். அந்த நினைப்பில் நேற்று முழுவதும் அவள் தூங்கவே இல்லை. அதிகாலையில் தான் கொஞ்சம் கண் அயர்ந்தாள். ஆனால், சிறிது நேரத்தில் திடுக்கிட்டு விழித்து விட்டாள். பொழுது புலர்ந்து விட்டதாக நினைத்துக் கொண்டு, லெட்சுமியை எழுப்ப வந்து விட்டாள்.

இப்பொழுதுதானே அத்தை கோழி கூவுகிறது? என்று லெட்சுமி கேட்பது போல இருந்தது. வேறு ஒருத்தியாக இருந்தால், வெட்கத்தால் தலை குனிவாள். ஆனால், அங்கமுத்து பனங்காட்டு நரி!

"ஏண்டி மரம் போல நிற்கிறாய்? மளமளவென்று வீட்டு வேலைகளைப் பார். முனியம்மா இல்லை. தெரியும் அல்லவா?" என்று அதட்டலாகச் சொன்னாள்.

"தெரியும் அத்தை" என்றாள் லெட்சுமி.

"உனக்கு என்னடி தெரியும்? காலையில் எழுந்ததும் என்ன செய்ய வேண்டும் என்று தெரியுமா?" அங்கமுத்து அலட்சியமாகக் கேட்டாள்.



"வாசல் பெருக்கி, தண்ணீர் தெளித்து, கோலம் போட வேண்டும். குளித்து முடித்து பால் கறந்து-காய்ச்சி உங்களுக்குக் காப்பி கொண்டு வந்து கொடுக்க வேண்டும். பிறகு மற்றவர்களுக்கும் காப்பி தர வேண்டும். அதன்பின் வீட்டைத் துடைத்து சுத்தம் செய்ய வேண்டும். அது முடிந்ததும் எல்லோருக்கும் காலை சாப்பாடு கொடுக்க வேண்டும். அந்த வேலை முடிந்த கையோடு மதியச் சமையலைத் தொடங்க வேண்டும். இடையில் உங்களுக்குக் கால் வலித்தால் பிடித்து விட வேண்டும்..."

பள்ளிக்கூடப் பிள்ளை போல அமைதியாகப் பட்டியலை ஒப்பித்தாள், லெட்சுமி. எல்லாவற்றையும் முனியம்மாவிடம் அவள் நேற்றே கேட்டு தெரிந்து வைத்துக் கொண்டாள்.

இவ்வளவையும் கேட்க அங்கமுத்துக்கு ஆச்சரியமாக இருந்தது. "உம் வேலைக்காரி குடும்பந்தானே!" அலட்சியமாகச் சொல்லிக்கொண்டே நடந்தாள்.

லெட்சுமிக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. அதரங்களை அழுந்தக் கடித்துக் கொண்டாள்.

கண்ணனுக்கு நல்ல தூக்கம். எழுந்திருக்க எட்டுமணி ஆகும் என்று அவனே சொல்லியிருக்கிறான்.

அது குளியலறையுடன் கூடிய படுக்கையறை. லெட்சுமி குளியலறைக்குள் சென்று, பல் துலக்கி முகம் கழுவிக் கொண்டு வந்தாள்.

கண்ணனின் கால்களை தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டாள். மாங்கல்யத்தையும் எடுத்து அவ்விதமே கண்களில் ஒற்றிக் கொண்டாள். அதன்பின் மாடியில் இருந்து கீழே இறங்கி வந்தாள்.

பம்பரம் சுழலும் என்பார்களே; அப்படிச் சுழன்றாள், லெட்சுமி. வீட்டு வேலைகள் அவளுக்குக் கைவந்த கலை. சிறு வயதில் இருந்தே அவள்தான் அம்மாவுக்குக் கையாதரவு

கல்லூரியில் படிக்கும் பொழுது கூட, வீட்டு வேலைகளை அவள் விடவில்லை. காகம் கரையும் நேரத்தில் கண் விழிக்கும் வழக்கத்தை அவள் வைத்திருந்தாள்.

வீட்டு வாசலில் சிமெண்டு தளம் அதைப் பெருக்கி, தண்ணீர் தெளித்தாள். அழகாகக் கோலமிட்டாள்.

அந்த வேலை முடிந்ததும், குளித்தாள். உடை மாற்றினாள். ஈரக் கூந்தலை கொண்டை முடிந்து கொண்டு தோட்டத்துக்குப் போனாள். அப்பொழுது பூத்த அழகிய மலர்களை பறித்தாள்.

பூஜை அறைக்குச் சென்றாள். விளக்கேற்றித் தொழுது, நெற்றியில் திருநீறு இட்டாள். மங்கல குங்குமம் வைத்துக் கொண்டாள்.

சேலையை வரிந்து கட்டிக்கொண்டு, பால் கறக்கச் சென்றாள். அதுதான் அவளுக்குப் பழக்கம் இல்லாத வேலை. நல்லவேளை, தோட்டக்காரன் உதவி செய்தான்.

பால் செம்புடன் அடுப்படியில் புகுந்தாள். பால் காய்ச்சினாள். காப்பி கலந்தாள்.

ஒரு தம்ளர் காப்பி ஊற்றிக்கொண்டு, முதலில் அங்கமுத்துவின் அறைக்குப் போனாள்.

அவள் கட்டிலில் கம்பீரமாக அமர்ந்துகொண்டு, கொக்கு போல காத்துக்கொண்டு இருந்தாள்.

"இந்தாருங்கள், அத்தை, காப்பி."

அங்கமுத்து பருகினாள்.

அட அட அடடா! அது காபிதானா! அங்கமுத்து எத்தனையோ இடங்களில் காப்பி சாப்பிட்டு இருக்கிறாள். ஒரு "கப்" காப்பி ஐந்து ரூபாய்க்கு விற்கப்படும் டெல்லி அசோகா ஓட்டல் காப்பியைக்கூட பருகியிருக்கிறாள். ஆனால், அதில் கூட இவ்வளவு சுவையில்லை! என்ன மணம்! என்ன சுவை!

அங்கமுத்துவின் மலர்ந்த முகம் 'சட்'டென்று மாறியது. "சீ! இது என்ன காப்பியா?"



வெறும் வாய்தான் பேசியது. காப்பியைத் துப்பிவிட வில்லை.

லெட்சுமி தலை குனிந்தாள்.

"லெட்சுமி, இன்னொரு தம்ளர் காப்பி கொண்டு வாயேன்."

அங்கமுத்து மெல்லச் சொன்னாள்.

லெட்சுமிக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை! சிரித்துக்கொண்டே சென்றவள், இன்னொரு தம்ளர் காப்பி கொண்டு வந்து கொடுத்தாள்.

"கழுநீர் தண்ணீர் போல இருக்கிறது மாடுகூடக் குடிக்காது!"

சொல்லிக் கொண்டே அங்கமுத்து பருகினாள்.

சிரித்துக் கொண்டே லெட்சுமி வெளியில் வந்தாள்.

மாடிக்குப் போனாள்.

கணவனை எழுப்பினாள்.

அடுப்படியில் தூங்கிய பூனைபோல உடலை நெளித்துக் கொண்டு அவன் எழுந்தான்.

"காப்பி எங்கே?"

"முதலில் பல் துலக்குங்கள்."

"காப்பி இருந்தால்தான் பல் துலக்குவேன்."

"வாய் கொப்பளிக்க காப்பி வேண்டுமா? எழுந்திருங்கள்! உங்கள் வீட்டுக்கு வந்ததும், பழைய பழக்கம் வந்து விட்டதா?"

அவனைத் தூக்கி, தரதர என்று இழுத்துச் சென்று, குளியலறைக்குள் தள்ளினாள்.

அவன் அவளையும் உள்ளே இழுத்தான்.

"அம்மா" என்று அவள் பூச்சி காட்டினாள்.

"அய்யோ..." என்று அவளை விட்டுவிட்டு, அவன் அவசரமாக குளியலறையை தாழிட்டுக் கொண்டான்.

குலுங்கக் குலுங்க சிரித்துக்கொண்டே, லெட்சுமி கயல்விழியின் அறைக்கு வந்தாள்.

அவளுக்கு நல்ல தூக்கம். அடித்துத்தான் எழுப்ப வேண்டியிருந்தது.

எழுந்ததும், அவளும் காப்பிதான் கேட்டாள். பல் துலக்கினால்தான் காப்பி என்று லெட்சுமி கண்டிப்பாகச் சொல்லிவிட்டாள்.

"போய், உன் சின்ன அண்ணாவை எழுப்பிவிடு" என்றாள் லெட்சுமி.

"அய்யய்யோ! நான் மாட்டேன். அடிப்பாரு" என்று கயல்விழி நடுங்கினாள்.

"நானும் வருகிறேன் வா" என்று லெட்சுமி அவளை இழுத்துக்கொண்டு அடுத்த அறைக்குப் போனாள்.

போர்வையை இழுத்து போர்த்திக் கொண்டு மன்னன் நன்றாகத் தூங்கினான்.

"உன் சின்ன அண்ணா தூக்கத்தில் மன்னன் போலிருக்கிறது!" என்று லெட்சுமி கேலி செய்தாள்.

கயல்விழி பயந்து கொண்டே அவனை எழுப்பினாள். அவன் எழவில்லை. குறட்டைதான் பலமாயிற்று!

அங்கே ஒரு "டிரான்சிஸ்டர்" இருந்ததை லெட்சுமி பார்த்தாள். அதை முழு சக்தியுடன் இயக்கினாள்.

"பாப்" இசை காதைத் துளைத்தது!

மன்னன் படுத்தபடியே ஆடினான்! அவன் உடல் முழுவதும் ஆடியது! ஆடிக்கொண்டே எழுந்தான்! கட்டிலில் இருந்து கீழே இறங்கியும் ஆடினான்!

லெட்சுமிக்கு ஒரே சிரிப்பு. கயல்விழி வியப்புடன் அண்ணனைப் பார்த்தாள்.

லெட்சுமி டிரான்சிஸ்டரை நிறுத்தினாள்.

அந்த ஓசை நின்றதும், மன்னன் விழித்துக் கொண்டாள்.



அவன் கண்களில் முதலில் கயல்விழி பட்டாள். "ஏய் என்னை ஏன் எழுப்பி விட்டாய்!" என்று பாய்ந்து அவள் காதைப் பிடித்தான்.

"பொறுங்கள்! உங்களை எழுப்பியது அந்த சிஸ்டர் அல்ல; இந்த சிஸ்டர்!" என்று சிரித்துக் கொண்டே லெட்சுமி டிரான்சிஸ்டரை காட்டினாள்.

"ஓ! அண்ணியா!" என்று மன்னன் நாணிக் கோணினான்.

"ஆமாம். ஏழுமணிவரை இப்படியா தூங்குவது?" அவள் கேட்டாள்.

"எனக்கு என்ன அண்ணி? நான் என்ன பெண் பிள்ளையா? பெண் என்றால்தான் பிறந்த வீட்டிலும் சீக்கிரம் எழ வேண்டும். புகுந்த வீட்டிலும் சீக்கிரம் விழிக்க வேண்டும்" என்றான். மன்னன்.

"அது சரிதான். நீங்கள் ராஜா! நாங்கள் எல்லாம் கூஜா!" என்று லெட்சுமி புன்னகைத்தாள்!

"எத்தனையோ ராஜாக்கள் கூஜா தூக்குகிறார்கள் அண்ணி" என்ற மன்னன், "அண்ணன் எப்படி?" என்று இரகசியமாகக் கேட்டான்.

"உங்கள் அண்ணனைப் பற்றி உங்களுக்குத்தானே தெரியும்" லெட்சுமி பட்டும் படாமல் சொன்னாள்.

"உங்களுக்கு ஒன்று தெரியுமா, அண்ணி?"

"என்ன?"

"ஊரில் ஒரு பழமொழி சொல்லுவார்கள்."

"என்ன பழமொழி?"

"கொண்டவனோடு சண்டை போட்டுக்கொண்டு ஒருத்தி கொழுந்தனை அடித்தாளாம்!"

"நீங்கள் பயப்படாதீர்கள். நான் உங்கள் அண்ணனோடு சண்டையும் போட மாட்டேன்! உங்களை அடிக்கவும் மாட்டேன்." —

"நல்ல அண்ணி! நல்ல அண்ணி!" என்று லெட்சுமியை கட்டிப் பிடித்துக்கொண்டு கயல்விழி குதித்தாள்.

அப்பொழுது ஒரு கர்ச்சனை கேட்டது!

"அங்கே என்னடி கும்மாளம்?"

"பல் துலக்குங்கள். காப்பி கொண்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு, லெட்சுமி சிட்டுப் போல பறந்தாள்!

## 10

மதுரைவீரன், காத்தவராயன் போல கம்பீரமாக அங்கமுத்து நின்று கொண்டு இருந்தாள்!

லெட்சுமி அவளைப் பாராதவள் போல அடுப்படிக்குள் ஓடிவிடப் பார்த்தாள்-திருட்டுப் பூனைபோல!

"நில்லுடி!"

இடியோசை கேட்ட நாகம் போல, லெட்சுமி நடுநடுங்கி நின்றாள்.

"காலங்காத்தாலே அங்கே என்னடி கூத்தும் குழப்பமும்?"

அங்கமுத்து கர்ச்சித்தாள்.

"ஒன்றுமில்லை, அத்தை. அவர்களையெல்லாம் எழுப்பி விட்டேன்."

லெட்சுமி சொல்லிவிட்டு ஓடப் பார்த்தாள்.

"நில்லடி!"

மீண்டும் இடிமுழக்கம்!

கொக்கி போட்டு இழுக்கப்பட்டது போல லெட்சுமி நின்றாள்.



"இதோ பாரடி! அவர்கள் எப்பொழுது வேண்டுமானாலும் படுப்பார்கள்! எத்தனை மணிக்கு வேண்டுமானாலும் எழுவார்கள்! அவர்களை எழுப்ப நீ யார்?"

அங்கமுத்துவின் அதிகாரம் கொடிகட்டிப் பறந்தது!

லெட்சுமி நினைத்திருந்தால் எதிர்த்துப் பேச முடியும். 'அதிகாலையில் எழவேண்டும் என்று நீங்கள்தானே அத்தை சொன்னீர்கள்?' என்று வாதாட முடியும். ஆனால், அந்த அளவுக்கு அவளுக்குத் துணிச்சல் இல்லை. ஆகவே, "காப்பி ஆறிவிடுமே என்றுதான்..." என்று மென்று விழுங்கினாள்.

"காப்பி ஆறினால் சுட வைத்துக் கொள்ளலாம். தெரிகிறதா? போ."

அங்கமுத்து மன்னித்தாள்.

தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று லெட்சுமி ஓடினாள்.

"நில்! இங்கே வா!"

காந்தம் கவர்ந்து இழுத்தது போல, போன வேகத்தில் லெட்சுமி பின்னே திரும்பி வந்தாள்.

"ஆமாம், சின்னவன் அறைக்குள் உனக்கு என்ன வேலை?"

கேள்விக்கணை பாய்ந்தது.

"நான் இல்லை, அத்தை. கயல்விழிதான்..." லெட்சுமி பதட்டத்துடன் பதில் சொன்னாள்.

"இனிமேல் அவன் அறைக்குள், போகாதே போ."

"சரி, அத்தை."

கன்னத்தில் போட்டுக் கொண்டு லெட்சுமி ஓடினாள்.

ஐந்தாறு தம்ளர் காப்பியை ஒரு தட்டில் எடுத்துக் கொண்டு லெட்சுமி திரும்பி வந்தாள்.

செய்து வைத்த சிலைபோல அங்கமுத்து இன்னும் அங்கே தான் நின்று கொண்டு இருந்தாள்.

லெட்சுமி அவளைத் தாண்டி நடந்தாள்.

"மலைபோல நான் ஒருத்தி இங்கே நிற்பது உன் கண்ணுக்குத் தெரியவில்லையா?"

மலைப்பாம்பு மூச்சு விட்டது போல அங்கமுத்து பேசினாள்.

"இ..." என்று பல்லைக் காட்டிய லெட்சுமி ஒரு தம்ளர் காப்பியை எடுத்து, அவளிடம் நீட்டினாள்.

அங்கமுத்து சுவைத்துப் பருகினாள்.

லெட்சுமி மாடிக்குச் சென்றாள்.

முதலில் சுப்பிரமணியத்தின் அறைக்குள் நுழைந்தாள்.

அவர் நெற்றி நிறைய திருநீறுடன் பத்திரிகை படித்துக் கொண்டு இருந்தார்.

"காப்பி சாப்பிடுங்கள், மாமா" லெட்சுமி அவரிடம் ஒரு தம்ளரை எடுத்து நீட்டினாள்.

சுப்பிரமணியம் அதை வாங்கிக் கையில் வைத்துக் கொண்டார்.

"லெட்சுமி..." மருமகளை அழைத்தார்.

"என்ன, மாமா?" லெட்சுமி அன்புடன் கேட்டாள்.

"இங்கே உனக்கு வசதிகள் எப்படியிருக்கின்றன, அம்மா?"

"ஏழைப் பெண்ணுக்கு ஏழடுக்கு மாளிகை கிடைத்தது போல இருக்கிறது, மாமா."

"ஏதாவது குறையிருந்தால், சரிக்கட்டிக் கொள். குறை என்பது நமது மனத்தைப் பொறுத்ததுதான். மனம் நிறைவாக இருந்தால், எதிலுமே குறையிருக்காது."

"மனம் நிறைந்த கணவர் கிடைத்திருக்கும்பொழுது எனக்கு என்ன மாமா குறை இருக்கும்?"



"ஒரு பெண்ணுக்கு நல்ல கணவர் கிடைத்தால் மட்டும் போதாது அம்மா. நல்ல மாமியாரும் அமையவேண்டும். ஏனென்றால், புகுந்த வீட்டில் ஒரு பெண்ணுக்கு மாமியார் தான் தாய்."

"என் மாமியாருக்கு என்ன குறை, மாமா? கோபம் இருக்கும் இடத்தில்தான் குணம் இருக்கும்."

"அவள் குணம் தெரிந்துதானம்மா நான் ஆமை போக அடங்கிக் கிடக்கிறேன். குடும்பத்தில் குழப்பம்- கூச்சல் ஏற்படக் கூடாது என்றுதான் நான் ஊமையாகி விட்டேன். குருட்டுக் கணவனும் ஊமை மனைவியும் உயர்வான தம்பதிகள என்பார்கள். அவளுக்குப் பதில் நான் ஊமையாகி விட்டேன். இரண்டு கைகளில் எந்தக் கை விலகிக் கொண்டாலும் ஓசை ஏற்படாது அல்லவா? ஆனால், அவள் இல்லாவிட்டால், இன்று என் குடும்பம் இவ்வளவு முன்னுக்கு வந்திருக்க முடியாது. இவ்வளவு பெரிய குடும்பத்தைக் கட்டிக் காக்க அவளால் தான் முடியும்."

"நான் சிறு பெண், என்னிடம் நீங்கள் இவ்வளவு சொல்ல வேண்டியது இல்லை மாமா. அத்தையிடம் எனக்கு மதிப்பும் மரியாதையும் என்றைக்கும் இருக்கும்."

புன்னகையுடன் லெட்சுமி நகர்ந்தாள்.

கண்ணன் குளித்துவிட்டு வந்தான்.

லெட்சுமி அவனுக்கு தலை கோதிவிட்டாள்.

"நீ கீழே போ லெட்சுமி. அம்மாவுக்குத் தெரிந்தால், வானமே இடிந்து விழுந்துவிடும்" என்று கண்ணன் பயந்து கொண்டு சொன்னான்.

"உங்கள் அம்மா என்ன பேயா,பிசாசா,பூதமா? இப்படி நடுங்குகிறீர்கள்! நீங்கள் சும்மா இருங்கள். தலையை இப்படிக் கொண்டு வாருங்கள்" என்று அவன் முடியைப் பிடித்து லெட்சுமி இழுத்தாள்.

அப்பொழுது...

"அய்யோ...அய்யோ...அய்யோ..."

வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு அங்கமுத்து அந்த அறைக்குள் நுழைந்தாள்.

"நான் எது நடக்கக்கூடாது என்ற பயந்தேனோ அது நடந்து விட்டதே! நான் என்ன சொல்வேன்! பாவிப்பயலே!" என்று அழுது புலம்பினாள்.

அம்மாவைப் பார்த்ததுமே கண்ணன் லெட்சுமிக்குப் பின்னால் மறைந்து கொண்டான்! தலையை மட்டும் வெளியில் நீட்டி, "என்னம்மா நடந்து விட்டது?" என்று கேட்டான்.

"உன் குடுமி அவள் கையில் சிக்கிவிட்டதேடா! என்ன மாயம் பண்ணினாளோ என்ன மந்திரம் போட்டாளோ..." அங்கமுத்து புலம்பினாள்.

லெட்சுமிக்கு சிரிப்பாக வந்தது. சிரிப்பை அடக்கிக் கொண்டு, "நான் ஒன்றும் செய்யவில்லையே, அத்தை" என்றாள்.

"அவன் குடுமியை நீ பிடித்துக் கொண்டு இருப்பதை நான்தான் பார்த்தேனேடி!" என்று சீறிய அங்கமுத்து, "ஏண்டா அவள் சேலைக்குப் பின்னே மறைந்து கொண்டு இருக்கிறாய்? இப்படி வா" என்று கண்ணனை அதட்டி அழைத்தாள்.

அம்மாவிடம் போனால் அடிப்பார்களோ என்று அஞ்சி நடுங்கும் குழந்தை போல, கண்ணன் தயங்கினான்.

'அவர் குடுமியைப் பிடிக்கவில்லை, அத்தை அவருக்குத் தலை கோதிவிட்டேன்' என்று சொல்லலாமா என்று லெட்சுமி நினைத்தாள். ஆனால், அப்படிச் சொன்னால், வேறு வினையே வேண்டாம்! ஆகவே, சும்மா நின்றாள்.

அங்கமுத்து தொடர்ந்தாள். "அடுத்த ஞாயிற்றுக் கிழமை திருப்பதிக்குப் போக வேண்டும். உன் திருமணம் நல்லபடி முடிந்தால், திருப்பதியில் வந்து மொட்டை போடுவதாக வேண்டியிருந்தேன்" என்றாள்.



"திருப்பதியில் எனக்கு லட்டு வாங்கிக் கொடுப்பீர்களா, அம்மா?" கண்ணன் குழந்தை போல கேட்டான்.

அதற்கு அங்கமுத்து பதில் சொல்லுமுன், "திருப்பதியில் யாருக்கு அத்தை மொட்டை?" என்று லெட்சுமி கேட்டாள்.

"கண்ணனுக்குத்தான்!" அங்கமுத்து தயங்காமல் சொன்னாள்!

அடப் பாவமே! அவன் குடுமி லெட்சுமி கையில் சிக்காமல் இருக்க இப்படி ஒரு தந்திரமா!

லெட்சுமிக்கு வேடிக்கையாகவும் இருந்தது; வேதனையாகவும் இருந்தது.

"இங்கே ஏண்டி மரம் போல நிற்கிறாய்? எல்லோருக்கும் காலை சாப்பாடு வைக்க வேண்டாம்? கீழே போ!"

அங்கமுத்து திடீர் என்று விரட்டினாள்.

லெட்சுமி அசைந்து அசைந்து அன்னநடை போட்டு, கீழே போனாள்.

காலை சாப்பாடு முடிந்தது.

எல்லோரும் அவரவர் வேலைக்குப் போய் விட்டார்கள்.

அங்கமுத்துவின் கூத்துகளை நினைத்தபடி லெட்சுமி கூடத்தில் அமர்ந்து இருந்தாள்.

"என்ன, மகாராணி மாதிரி உட்கார்ந்து விட்டாய். வேலை செய்த களைப்போ?"

கேலி செய்து கொண்டே அங்கமுத்து வந்தாள்.

லெட்சுமி மரியாதையுடன் எழுந்து நின்றாள்.

"மதியச் சாப்பாடு செய்ய வேண்டும். ஞாபகம் இருக்கிறதா?"

கேட்டுக் கொண்டே அங்கமுத்து சோபாவில் உட்கார்ந்தாள்.

"இதோ போகிறேன், அத்தை."

லெட்சுமி நகர்ந்தாள்.

"இங்கே வாடி"

லெட்சுமி திரும்பி வந்தாள்.

"உன் பின்னேயே சுற்றிச் சுற்றி என் கால் இரண்டும் செத்து விட்டன! கால்களை கொஞ்சம் பிடித்து விடு."

லெட்சுமி அவள் காலடியில் அமர்ந்து கால்களைப் பிடித்து விட்டாள்.

"நன்றாக கால் பிடிக்கிறாயே! பழக்கம் போலிருக்கிறது!"

அங்கமுத்து நக்கலாகச் சொன்னாள்!

லெட்சுமிக்கு வந்த கோபத்தில்...!

அதரங்களை கடித்துக் கொண்டாள்.

மாலையில் கண்ணன் வந்தான்.

புதிய அலங்காரத்துடன் லெட்சுமி அவனுக்காகக் காத்துக்கொண்டு இருந்தாள்.

காப்பி கொண்டுவந்து கொடுத்துக் கொண்டே, "அத்தான், சினிமாவுக்குப் போகலாமா?" என்று குழைந்து கொண்டே கேட்டாள்.

"சினிமாவுக்கா..." கண்ணனுக்கு வாய்க்குள் போன காப்பி வெளியில் வந்தது.

"ஏன், அத்தான்!" லெட்சுமி பயந்து போனாள்.

"அம்மா என் காதைத் திருகி எடுத்து, உன் கையில் கொடுத்து விடுவார்கள்!"

"அத்தை எவ்வளவோ நல்லவர்கள். ஏன் இப்படி வீணாகப் பேசுகிறீர்கள்?"

"அப்படியா? அப்படியானால், நீயே போய் அம்மாவிடம் கேட்டுக் கொண்டு வா."

"நானா!"



லெட்சுமிக்கு தொண்டை அடைத்தது!

"ஆமாம். நீதான்" கண்ணன் அழுத்தமாகச் சொன்னான் "லெட்சுமி... லெட்சுமி... அம்மாவிடம் கேட்டுவிட்டு வாயேன்!" அவனுக்கு ஆசை வந்துவிட்டது. ஆகவே, அவளிடம் கெஞ்சினான்.

அவளுக்கும் அவனுடன் வெளியில் போக வேண்டும் என்று ஆசை. ஆனால், அங்கமுத்துவிடம் யார் அனுமதி கேட்பது? யாராவது ஒருவர் பூனைக்கு மணி கட்டித்தானே ஆக வேண்டும்! "சரி" என் று அவள் கீழே வந்தாள்.

அங்கமுத்து சிற்றுண்டி சாப்பிட்டுக் கொண்டு இருந்தாள்.

லெட்சுமி மெல்ல அவள் அருகில் போனாள். அல்வா பகோடா, காப்பி என்று நிறையப் பரிமாறினாள். இடையே "அத்தை... நானும் அவரும்... சினிமாவுக்கு..." என்று மெதுவாகச் சொன்னான்.

"சினிமாவுக்குப் போகிறீர்களா? போய் வாங்களேன்!"

அங்கமுத்து உடனே அனுமதி அளித்தாள்.

லெட்சுமியால் நம்ப முடியவில்லை!

துள்ளிக் குதித்துக் கொண்டு மாடிக்கு ஓடிவந்தாள்.

"வாருங்கள், போவோம்" என்று கண்ணனின் கையைப் பற்றி கரகர என்று கீழே இழுத்துக் கொண்டு வந்தாள்.

கீழே புது பட்டுச் சேலை கட்டிக் கொண்டு அங்கமுத்து வெளியில் செல்லத் தயாராக நின்றாள்.

அவளைப் பார்த்ததும் லெட்சுமி மலைத்து மாடிப்படியிலேயே நின்று விட்டாள்.

"ஏன் நின்று விட்டீர்கள்? சீக்கிரம் வாருங்கள்! சினிமா தொடங்கிவிடப் போகிறது!"

அவர்களுக்கு முன்னதாக அங்கமுத்து நடந்தாள்!

## 11

குழந்தைகளுக்கு பலூன் என்றால், கொள்ளை ஆசை, பெரிதாக ஊதிக் கொண்டே போவார்கள். பேராசை பெரு நட்டம் என்பது போல, "டபார்" என்று பலூன் வெடித்து விடும்! அப்பொழுது குழந்தைகளின் முகத்தைப் பார்க்க வேண்டுமே....

லெட்சுமியின் முகமும் அப்படித்தான் ஆகிவிட்டது!

ஒரு கணத்துக்குள் அந்த முகத்தில் ஆயிரம் உணர்ச்சிகள் தோன்றி மறைந்தன. ஏமாற்றம், எரிச்சல், வெறுப்பு, வேதனை என்று எத்தனையோ மாற்றங்கள் மின்னலிட்டன.

துள்ளிக் குதித்து ஓடி வந்தவள், மெல்லவும் முடியாமல் துப்பவும் முடியாமல், கற்சிலையாக நின்று விட்டாள்!

கண்ணனோ அம்மாவைப் பார்த்ததும், பூனையைக் கண்ட எலி போல, பின்னே திரும்பி, வேகமாக மாடிக்கு ஓடப் பார்த்தான்.

"எங்கேடா ஓடுகிறாய்? கீழே வா" என்று அங்கமுத்து ஆணையிட்டாள்.

"நான் இல்லை, அம்மா. அவள்...அவள்... லெட்சுமி தான்..." நடுங்கிக் கொண்டே கண்ணன் கீழே இறங்கி வந்தான்.

"நீ ஏண்டி மரம் போல நிற்கிறாய்? உனக்கு என்ன வந்தது?" லெட்சுமியின் கன்னத்தில் இடிக்காத குறையாக அங்கமுத்து கேட்டாள்.

"ஒன்றுமில்லை" என்று லெட்சுமி எச்சிலை விழுங்கினாள். "அத்தை, நாங்கள் கோவிலுக்குப் போய் வருகிறோம்" என்றாள், அவளுக்கு சினிமா ஆசையே செத்துவிட்டது.



"சினிமாவுக்கு போகப் போவதாகப் சொன்னாயே?" அங்கமுத்து அவளை ஏறிட்டுப் பார்த்தாள்.

"தெய்வம் படம் பார்க்கலாம் என்று நினைத்தோம், அத்தை. 'தெய்வம் சினிமாக் கொட்டகையிலா இருக்கும்? கோவிலில் அல்லவா இருக்கும்' என்று அவர் சொல்லுகிறார். அதனால் கோவிலுக்குப் போகப் போகிறோம்" என்றாள், லெட்சுமி.

அங்கமுத்துக்கு சினிமா என்றால், மிகவும் ஆசை. எவ்வளவு ஆசையோடு புறப்பட்டாள்! லெட்சுமி அவளை ஏமாற்றப் பார்க்கிறாளே! அங்கமுத்துக்கு ஆவேசம் பொங்கிக் கொண்டு வந்தது.

"தெய்வம் கோவிலில் மட்டும் இல்லை, தூணிலும் இருக்கும்! துரும்பிலும் இருக்கும்" என்று அவள் இரைந்தாள்.

"மிகவும் நல்லது, லெட்சுமி. நான் கோவிலுக்கப் போக வேண்டாம். வீட்டில் உட்கார்ந்து தூணையே பார்த்துக் கொண்டு இருக்கலாம்!" என்று கண்ணன் அப்பாவித்தனமாகச் சொன்னான்.

"கணவனே கண்கண்ட தெய்வம்" லெட்சுமி அமைதியாகக் கூறினாள்.

"எனக்கு அந்தப் படம் பிடிக்கும்? பார்க்கலாமா?" கண்ணன் ஆசையாகக் கேட்டான்.

"நான் சினிமாவைச் சொல்லவில்லை. பெண்ணுக்கு கணவனே கண்கண்ட தெய்வம் என்றேன். வாருங்கள் மாடிக்குப் போவோம்" என்ற லெட்சுமி, கண்ணனை கையில் பிடித்துக் கொண்டு மாடிக்குச் செல்லத் திரும்பினாள்.

"நீ ஏன்னையே பார்த்துக் கொண்டு இருக்கப் போகிறாயா?" கண்ணன் கேட்டான்.

"நில்லடி!" அங்கமுத்து கர்ச்சித்தாள். "இந்தப் பசப்பு-நாடகம் எல்லாம் என்னிடம் வைத்துக் கொள்ளாதே வெளியில் கார் தயாராக நிற்கிறது. மரியாதையாகப் போய் இருவரும் காரில் ஏறுங்கள்."

லெட்சுமிக்கு தர்ம சங்கடமாக இருந்தது. பதில் சொல்ல அவள் வாய் துடித்தது. மனம் அவளை அடக்கியது.

"லெட்சுமி, அம்மா சொன்னபடி கேள்" என்றான், கண்ணன். "மருமகளுக்கு மாமியாரே மனங்கொண்ட தெய்வம்!"

"என் பிள்ளை சொன்னதைக் கேட்டாயாடி! அவனுக்கு உள்ள புத்திகூட உனக்கு இல்லையே" அங்கமுத்து பெருமையடித்துக் கொண்டாள்.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்றான் கண்ணன்.

அங்கமுத்து ஆத்திரத்துடன் அவனை முறைத்துப் பார்த்தாள்.

"தப்பு! தப்பு!" என்று கன்னத்தில் போட்டுக் கொண்ட கண்ணன், "தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை" என்றான்.

அதைக்கேட்டு, அங்கமுத்துவின் முகம் மலர்ந்தது!

அப்பொழுது கார் டிரைவர் வந்து "அம்மா, இந்நேரம் படம் தொடங்கியிருக்கும்" என்று நினைவு படுத்தினார்.

"ஆமாம் ஆமாம் புறப்படுங்கள்" என்று அங்கமுத்து முன்னே நடந்தாள்.

"நான் யார் தெரியுமா? முன் வைத்த காலை பின்வைக்க மாட்டேன்" என்று அங்கமுத்து எச்சரிக்கை செய்தாள்.

"அம்மா, அன்று ஒரு நாள் அப்படி காலை வைத்துத் தானே வாழைப் பழத் தோலில் வழுக்கி விழுந்தீர்கள்!" என்று சொல்லிக் கொண்டே அப்பொழுது மன்னன் உள்ளே வந்தான்.

"புறப்படும் போதே பூனை குறுக்கே வந்து விட்டதே!" அங்கமுத்து தலையில் கைவைத்து கொண்டாள்.

"எங்கே அண்ணி புறப்பட்டு விட்டீர்கள்!" மன்னன் கேட்டான்.

"சினிமாவுக்குப் போகிறோம் என்றாள். 'சரி போய் வருவோம்' என்றேன். இப்பொழுது வர மாட்டேன்கிறாள்" என்று புகார் கூறுவது போல, அங்கமுத்து சொன்னாள்.



மன்னன் நிலைமையைப் புரிந்து கொண்டான்.

"அம்மா, சின்னஞ்சிறுசுகள் சினிமாவுக்குப் போகிறார்கள். நீங்கள் வீட்டில் இருங்கள்" என்று மன்னன் புத்தி சொன்னான்.

"நான் மட்டும் கிழவியா!" என்று அங்கமுத்து சண்டைக்கு வந்தாள். சின்னஞ்சிறுசுகளை தனியாக அனுப்பக் கூடாதுடா. தப்பாகப் போய்விடும்" என்று சமாதானமாகக் கூறினாள்.

"வயது வந்தவர்களுக்கான படங்களை வயது போனவர்கள் பார்க்கக் கூடாது, அம்மா" என்றான் மன்னன்.

"உன்னோடு பேசிக் கொண்டு நிற்க எனக்கு நேரமில்லை" என்ற அங்கமுத்து, "வாடா!" என்று கண்ணன் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு ஓடினாள்.

லெட்சுமிக்கு வேறு வழியில்லை. ஆட்டுக் குட்டி போல அவர்கள் பின்னே போனாள்!

படம் முடிந்து அவர்கள் வீட்டுக்குத் திரும்பியபொழுது மணி பத்து ஆகிவிட்டது.

மன்னனும் கயல்விழியும் கூடத்தில் இருந்தார்கள்.

"படம் எப்படியிருந்தது, அண்ணி?" என்று கயல்விழி கேட்டாள்.

"தஞ்சாவூர் கோவிலில் பெரிய நந்தி இருக்கிறது என்று சொல்லுவார்கள். ஒரு நாளாவது அந்த நந்தியைப் பார்க்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டு இருந்தேன். இனி அதற்கு அவசியம் இல்லை" என்றாள் லெட்சுமி.

"ஏன், அண்ணி! படத்தில் அந்த நந்தியைக் காட்டுகிறார்களா?" என்றாள், கயல்விழி.

"இல்லை" என்ற லெட்சுமி, தனது அறைக்குள் போய்க் கொண்டு இருந்த அங்கமுத்துவை திரும்பிப் பார்த்தாள்.

மன்னனும், கயல்விழியும் புரிந்து கொண்டார்கள்!

கொட்டகையில் கண்ணன்-லெட்சுமி இருவருக்கும் இடையில் அங்கமுத்து அமர்ந்து கொண்டாள்! லெட்சுமிக்குப்

படம் பார்த்தது போலவேயில்லை. அடிக்கடி உடலை நெளித்துக் கொண்டாள். "என்னடி, மூட்டைப் பூச்சி கடிக்கிறதா?" என்று அங்கமுத்து கேட்டாள். "ஆமாம்" என்றாள் லெட்சுமி. அவளை முறைத்துப் பார்த்துக் கொண்டே!

"அண்ணா, இனிமேலும் நீங்கள் அம்மா முந்தானையைப் பிடித்துக் கொண்டு இருப்பது சரியல்ல" என்றான் மன்னன்.

"உன் அண்ணி முந்தானையைப் பிடித்துக் கொள்ளச் சொல்லுகிறாயா?" என்று கண்ணன் விளக்கம் கேட்டான்.

"வேண்டாம், வேண்டாம்! பிறகு உங்கள் அம்மா என்னை சேலையே கட்டக் கூடாது என்று சொல்லிவிடுவார்கள்! கவுனோ லுங்கியோதான் அணிந்து கொள்ள வேண்டியிருக்கும்" என்றாள் லெட்சுமி.

"இங்கே என்ன மாநாடு?" என்று கேட்டுக் கொண்டே அங்கமுத்து வந்தாள். அவள் துணிமாற்றியிருந்தாள்.

"தலைவரே இப்பொழுதுதான் வந்திருக்கிறீர்கள். இனி மேல்தான் மாநாடு" என்று மன்னன் கேலியாகச் சொன்னான்.

"அம்மா, அண்ணி லுங்கி கட்டினால் எப்படியிருக்கும்?" என்று கயல்விழி கேட்டாள்.

"மங்கி போல இருக்கும்!" என்ற அங்கமுத்து "மணி என்ன ஆயிற்று? இன்னும் என்ன பேச்சு? போய் சாப்பிட்டு விட்டு படுக்கிற வேலையைப் பாருங்கள்!" என்று கர்ச்சித்தாள்.

காக்கா கூட்டத்தில் கல் விழுந்தது போல அத்தனை பேரும் பறந்தார்கள்!

சாப்பாடு முடிந்து அவரவர் அறைக்குப் போய் விட்டார்கள்.

வீட்டில் அமைதி தவழ்ந்தது.

கண்ணனுக்கு பால் எடுத்துக் கொண்டு லெட்சுமி மாடிப்படிகளை நோக்கி வந்து கொண்டு இருந்தாள்.



அப்பொழுது கண்ணன் மாடியில் நின்றபடி, "லெட்சுமி இங்கே தண்ணீர் இல்லை. தண்ணீரும் எடுத்து வந்துவிடு. உனக்கு மாத்திரை சாப்பிட தண்ணீர் வேண்டும் அல்லவா?" என்று குரல் கொடுத்தான்.

அந்த வழியே வந்து கொண்டு இருந்த அங்கமுத்துவின் காதில் அந்தக் குரல் விழுந்து விட்டது. வேகமாக வந்து லெட்சுமியை வழி மறித்தாள். "என்னடி மாத்திரை?" அதிகாரத்துடன் கேட்டாள்.

எதிர்பாராத கேள்வி. லெட்சுமியால் 'சட்'டென்று பொய் சொல்ல முடியவில்லை. மாத்திரையா...ஒன்றுமில்லையே" என்று மழுப்பினாள்.

ஆனால், அங்கமுத்து விடவில்லை. "எங்களை ஏமாற்றி, ஒரு நோயாளிப் பெண்ணை எங்கள் தலையில் கட்டி விட்டார்களே!" என்று புலம்பினாள். "உடம்புக்கு என்னடி செய்கிறது? உண்மையைச் சொல்லடி! எங்கள் செலவிலாவது வைத்தியம் செய்கிறோம்."

இந்த சிறிது நேரத்துக்குள் லெட்சுமி யோசனை பண்ணி விட்டாள். "உடம்புக்கு ஒன்றுமில்லை. அத்தை. தலைவலி" என்று பொய் சொன்னாள்.

அங்கமுத்து நம்பவில்லை. இவ்வளவு நேரமும் நன்றாக இருந்தாளே! "நான் நம்பமாட்டேன். பொய் சொல்லாதே உண்மையைச் சொல்" என்று மிரட்டினாள்.

"உண்மைதான் அத்தை. தலைவலிதான்" என்றாள் லெட்சுமி.

"இப்பொழுதே டாக்டருக்கு போன் செய்து வரச் சொல்லுகிறேன். உண்மை தெரிந்துவிடும்."

'போன்' இருந்த இடத்தை நோக்கி புயல் வேகத்தில் அங்கமுத்து போனாள்!

## 12

"உலக்கைக்கு ஒரு பக்கம் இடி! மத்தளத்துக்கு இருபக்கம் இடி" என்பார்கள். அந்த மத்தளம் படும்பாடு பட்டுக் கொண்டு இருந்தாள் லெட்சுமி!

உண்மையான காரணத்தை மாமியாரிடம் சொல்லத் தயங்கினாள்.

சொல்லாவிட்டாலோ டாக்டர் வந்து நிற்பார். அவள் கண்ணைப் பார்த்து, கையைப் பார்த்து, நாக்கைப் பார்த்து அவளுக்கு "அண்டார்டிக்கா" என்று சொல்லி, மாத்திரை மிக்சர், ஊசி, டானிக் எல்லாம் எழுதிக் கொடுத்து விட்டுப் போய் விடுவார்! பெரிய வீட்டுக்குத் தகுந்தபடி நோயின் பெயரும் பெரிதாக இருக்கும்! மருந்துப் பட்டியலும் பெரிதாக இருக்கும்!

டாக்டரிடம் உண்மையைச் சொல்லிவிட்டால்...

சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட சண்டைக்காரன் காலில் விழுவது மேல் என்று லெட்சுமி தீர்மானித்தாள்.

"சொல்லி விடுகிறேன், அத்தை" என்று கூவிக்கொண்டே அங்கமுத்துவின் பின்னே ஓடினாள்.

மாமியாரின் கையில் இருந்த போனைப் பறித்து கீழே வைத்தாள்.

பிறகு மெதுவாக, "அவர்தான் அத்தை..." என்று சொல்லிக் கொண்டே தலை நிமிர்ந்து பார்த்தாள்.

விளக்கெண்ணெய் குடித்தவன் போல, மாடி வராண்டாவில் கண்ணன் நின்று கொண்டு இருந்தான்.



அவனைப் பார்த்ததும், லெட்சுமி 'பிளேட்'டை திருப்பிப் போட்டாள்! "நாங்கள்தான் அத்தை...இல்லை...இல்லை... நான்தான்..."

"ஏண்டி ஜன்னி கண்டவள் போல பிதற்றுகிறாய்!" என்று அங்கமுத்து அதட்டினாள். "உண்மையைக் கக்கு. இல்லா விட்டால், போன் செய்வேன். டாக்டர் வருவார். ஊசி போடுவார்" சின்னக் குழந்தையை மிரட்டுவது போல விழிகளை உருட்டினாள்.

"அந்த மாத்திரை வந்து அத்தை..." லெட்சுமி தயங்கி மென்று விழுங்கினாள்.

"வைகுண்ட யாத்திரைக்கு வழி காட்டுகிற மாத்திரையோ! சொல்லித் தொலையடி!" அங்கமுத்து சீறினாள்.

"கதவை சாத்துகிற மாத்திரை, அது..." லெட்சுமி தலை குனிந்தபடி சொன்னாள்.

அங்கமுத்துக்குப் புரியவில்லை "அந்தப் பூடகப் பேச்சு எல்லாம் இங்கே வேண்டாம். புட்டுவை" என்று கட்டளை யிட்டாள்.

"திருமணம் ஆதுப்பின் பிள்ளை பெற்றால் தொல்லையாக இருக்கும் என்று... மாத்திரை சாப்பிட்டால் பிள்ளை உண்டாகாது..." லெட்சுமி நடுங்கிக் கொண்டே சொன்னாள்.

அவள் அவ்வளவு சொல்லு முன், அங்கமுத்து அணு குண்டு போல வெடித்தாள்!

"என்னடி சொன்னாய்..."

லெட்சுமியின் குடுமியைப் பிடித்து உலுக்காத குறைதான்.

"இந்த மாத்திரை சாப்பிட்டால், பிள்ளை உண்டாகாதா! ஒவ்வொருத்தி பிள்ளை வேண்டும் என்று கோவிலுக்குப் போகிறாள், குளத்துக்குப் போகிறாள்! விரதம் இருக்கிறாள், தவம் புரிகிறாள்! இவள் பிள்ளை வேண்டாம் என்று மாத்திரை சாப்பிடுகிறாளாம்!"

வில்லில் இருந்து விடுபட்ட அம்பு போல சொற்கள் பாய்ந்து வந்தன!

"நீங்கள் இரண்டு பேரும் ஜாலியாக இருக்க வேண்டும்! பிள்ளை பிறந்தால் உங்கள் ஜாலிக்கு தொல்லை! உனக்கு எவ்வளவு தன்னலமடி!"

அங்கமுத்து நையாண்டி செய்தாள்! அது நெருப்பாக லெட்சுமியை சுட்டு எரித்தது. அவள் கூனிக் குறுகி நின்றாள்.

"இதோ பாரடி..." அங்கமுத்து கையைத் தூக்கி எச்சரித்தாள். "அடுத்த பத்து மாதத்தில் இங்கே குவா குவா குரல் கேட்க வேண்டும். அதுவும் ஆண் பிள்ளை குரல்! இல்லாவிட்டால், அடுத்த நாளே உன் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளி விடுவேன்! அதற்கு அடுத்த நாள் கண்ணனுக்கு மறு கல்யாணம்! தெரிகிறதாடி!"

லட்சுமிக்கு நெஞ்சில் நெருப்புக் கட்டையைச் சொருகியது போல இருந்தது! அந்த வேதனையால் துடித்தாலும் வேகமாகத் தலையை ஆட்ட மறக்கவில்லை.

"நான் சொன்னதை நினைவில் [illegible]த்துக் கொண்டு படுக்கப் போ!"

அங்கமுத்து விலகி நின்றாள்.

நிலையில் இருந்து புறப்படும் தேர் போல, லெட்சுமி மெல்ல அசைந்தாள்!

அவள் மாடிப்படிகளை நெருங்கியதும், "நில்லடி" என்ற கர்ச்சனை கேட்டது.

யானை வரும் பின்னே! மணி ஓசை வரும் முன்னே!

லெட்சுமி நின்று திரும்பிப் பார்த்தாள். அங்கமுத்து மதயானை போல வேகமாக அவளை நோக்கி வந்து கொண்டு இருந்தாள்!

அம்மாவைப் பார்த்ததும், கண்ணன் தலைதெறிக்க ஓடினான்.



"நில்லடா!"

அங்கமுத்துவின் குரலுக்கு என்ன மாய சக்தியோ,

கண்ணன் கற்சிலை போல நின்றான்!

"அங்கே என்னவோ மாத்திரை மண்ணாங்கட்டியெல்லாம் இவள் வைத்திருக்கிறாளாமே! ஒன்று விடாமல் எல்லாவற்றையும் இங்கே எடுத்துக் கொண்டுவா."

அங்கமுத்து ஆணையிட்டாள்.

அடுத்த நிமிடம் கண்ணன் கீழே ஓடி வந்தான்.

அவன் கையில் ஒரு சிறிய கண்ணாடி பாட்டில் இருந்தது.

வந்த வேகத்தில் அதை அம்மாவிடம் கொடுத்தான்.

அங்கமுத்து அதைத் திறந்து, மாத்திரைகளை தன் கையில் கொட்டினாள்.

உள்ளங்கையை இறுக மூடிக்கொண்டு லெட்சுமியின் தலையை மும்முறை சுற்றினாள்.

பிறகு கையைத் திறந்து, "தூ...தூ...தூ..." என்று மாத்திரைகள் மீது மூன்று தடவை துப்பினாள்!

அதன்பின் லெட்சுமியைப் பார்த்து, "போடி!" என்று உத்திரவிட்டாள்.

அவள் மாடிப்படிகளில் மெதுவாக ஏறினாள்.

"அம்மா...நான்..." கண்ணன் குழைந்தான்.

"எனக்கு சீக்கிரம் ஒரு பேரனைப் பெற்றுக் கொடுடா, ராஜா!" என்று மகனை கொஞ்சிய அங்கமுத்து, "போ" என்றாள்.

கண்ணன் லெட்சுமியைத் தொடர்ந்தான்.

"இந்தச் சனியன் இனிமேல் இந்த வீட்டுக்குள்ளேயே வரக் கூடாது" என்று சொல்லிக் கொண்டே நடந்த அங்கமுத்து தானே தன் கையில் இருந்த மாத்திரைகளை வீதியில் வீசி எறிந்தாள்!

லெட்சுமி கட்டிலில் அமர்ந்து இருந்தாள்.

கண்ணன் மெல்ல அவள் அருகில் வந்து நின்றான்.

"லெட்சுமி...எல்லாம் என்னால் தானே? என்னை மன்னித்து விடு, லெட்சுமி."

அவன் குரல் கனிந்து உருகியது.

லெட்சுமி அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

அவன் 'பாவம்' போல நின்று கொண்டு இருந்தான்.

"நீங்கள் என்ன தவறு செய்தீர்கள்?" என்று பாசத்துடன் கூறிக் கொண்டே, அவன் கைகளைப் பற்றி லெட்சுமி அவனை தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

"காதலுக்கு வழி வைத்துக் கருப்பாதை சாத்த கதவு ஒன்று கண்டு அறிவோம்! இதில் என்ன குற்றம்!" என்று பாவேந்தன் பாரதிதாசன் பாடினார். கண்ணனும் லெட்சுமியும் அந்தக் 'கதவை'ப் பயன்படுத்தியதுதான் இவ்வளவு பெரிய குற்றமாக ஆகிவிட்டது.

"அத்தை சொன்னதைக் கேட்டீர்களா?"

குழந்தை போல அவனை மார்பில் சாய்த்துக்கொண்டு லெட்சுமி கேட்டாள்.

"என் அம்மா பேசினாள், தீபாவளி பட்டாசு வெடிப்பது போல இருக்குமே! எட்டுத் தெருவுக்குக் கேட்கும்; இங்கே நின்ற எனக்குக் கேட்காதா, என்ன?" என்றான், கண்ணன்.

"என்ன செய்யப் போகிறீர்கள்?"

"செய்வது என்ன? மாத்திரைகளைத்தான் அம்மா பறித்துக் கொண்டார்களே."

"வேறு மாத்திரைகள் வாங்கி வாருங்கள்."

"பழையபடியுமா? நீ பத்து மாதத்தில் பிள்ளை பெற வேண்டும் என்று அம்மா சொன்னார்களே?"

"அது மட்டுமா சொன்னார்கள்? பிறக்கப் போகும் பிள்ளை பேரனாக இருக்க வேண்டும் என்றும் சொன்னார்களே!



அதுதான், ஆண் குழந்தையாகப் பிறக்க ஏதாவது மாத்திரையிருந்தால் வாங்கி வாருங்கள் என்கிறேன்."

லெட்சுமி சிறிய நாணப் புன்னகையுடன் சொன்னாள்.

"எனக்குத் தெரிந்து அதற்கு மாத்திரையிருப்பதாகத் தெரியவில்லை."

"வேறு ஏதாவது இருக்கிறதா?"

"வேறு என்னென்னவோ வழி சொல்லுவார்கள். ஆனால், எனக்கு அந்த சர்க்கஸ் வேலையெல்லாம் தெரியாது!"

கண்ணன் கையை விரித்தான்!

"அப்படியானால், என்னதான் செய்வது?"

"நாமே முயற்சி செய்து பார்ப்போம்!"

தொட்டில் போடும் ஆசையுடன் கணவனுக்கு கட்டில் ஆனாள், லெட்சுமி!

கடற்கரை ஓரம்.

கதிரவன் மஞ்சள் குளிக்கும் நேரம்!

காற்றில் குளிர்ந்த ஈரம்!

மஞ்சத்தில் தூவப்பட்ட மல்லிகை மலர் போன்ற பூ மணல்!

அதன்மீது மன்னன் நடந்து கொண்டு இருந்தான்.

கொம்பில் படர்ந்த முல்லைக்கொடி போல, அவன் இடுப்பில் ஒரு வளைக்கரம் படர்ந்து இருந்தது!

## 13

அவள் பெயர் பொற்கொடி!

பெயருக்கு ஏற்ற உடல் அமைவது அரிது. "கயல்விழி" என்று பெயர் இருக்கும்; காக்கா கண்ணுக் காரியாக இருப்பாள்!

ஆனால், பொற்கொடி பெயருக்கு ஏற்றபடி எழிலாகத் திகழ்ந்தாள்.

அவள் உடல் தங்கக் கட்டி! தங்கம் விற்கும் விலையில் ஆளுக்குக் கொஞ்சமாக அவளை யாரும் பிய்த்துக் கொண்டு போகாததுதான் ஆச்சரியம்! பொன்னிற மேனி தகதக என்று மின்னியது.

பத்தரை மாற்றுப் பசும்பொன்னை பொடிக் கம்பியாக நீட்டியது போன்ற கொடி உடல்! அவள் நடந்தால், தென்றல் காற்றில் முல்லைக் கொடி அசைவது போல இருக்கும்! அவளுடைய இடுப்பை பூதக்கண்ணாடி கொண்டு தான் பார்க்க முடியும்! அவ்வளவு சிறிய இடையில் தன் கைபட்டால் ஒடிந்து விழுந்து விடுமோ என்று அஞ்சித்தான் அவள் இடையை மன்னன் பிடித்துக் கொள்ளவில்லை. அதற்குப் பதில் அவன் இடையில் அந்தக் கொடி படர்ந்து இருந்தது!

ஈரெட்டுப் பருவம்! எழில் மொட்டு உருவம்!!

கைதேர்ந்த சிற்பி ஒருவன் தன் காலம் முழுவதையும் செலவழித்து மிகக் கவனமாக தங்கச்சிலை ஒன்றைச் செதுக்கினால் எப்படியிருக்கும்; அப்படியிருந்தாள், அவள்! அவளுடைய ஒவ்வோர் உறுப்பும் மிகக் கவனத்துடன் செதுக்கப் பட்டது போன்று தோன்றியது.

கார்மேகக் கூந்தல். கன்னி நிலா நெற்றி. கடல் போன்ற கண்கள் கயல் போன்ற விழிகள். கரும்பு வில்லை ஒத்த புருவம். கடித்துத் தின்னத் தூண்டும் மாம்பழக் கன்னம். கத்தி மூக்கு. கடைந்தெடுத்த அதரம். கட்டாத முல்லைச்சரம் போன்ற பல் வரிசை. காபூல் மாதுளை போன்ற கன்னிப் பூக்கள். கையில் பிடிபடாத இடை. காய்த்த வெண்டை விரல்கள். கதளித்தண்டு தொண்டைகள்...

அவளை "வளைக்கரத்தாள்" என்று கூறியது, தவறு. "வாட்ச்" கரத்தாள் என்று சொல்லியிருக்க வேண்டும். அவள் கையில் கடிகாரம் கட்டியிருந்தாள். அது தவிர, காது-மூக்கு-கை



எதிலும் எந்த நகையும் இல்லை. தானே ஒரு தங்கக் கட்டியாக இருக்கும் பொழுது, வேறு தங்க நகைகள் எதற்கு என்று நினைத்தாளோ என்னவோ!

நகை போட்டுக் கொள்ள "வக்கு" இல்லாதவளும் அல்ல! தங்கத்திலே வைரம் பதித்தது போல, அவளை வைரமாக இழைத்து விட அவளுடைய தந்தையால் முடியும் அவ்வளவு பெரிய பணக்காரர், அவர் தக்காளிப் பழம் போல தளதள என்று இருக்கும் பொற்கொடியைப் பார்த்தாலே, அது தெரியும்! கல்லூரிக்கு வந்து போக அவளுக்கு என்று ஒரு கார் இருக்கிறது.

பொற்கொடி சேலை கட்டி மன்னன் பார்த்ததேயில்லை லுங்கி, பெல்பாட்டம், பைஜாமா என்று நாளொரு வேஷமும் பொழுதொரு பாஷனுமாக வருவாள்! ஆனால், அவள் எந்த உடை அணிந்து கொண்டாலும், அவளுக்குப் பொருத்தமாகத் தான் இருந்தது.

அவளை பொற்கொடி என்று மன்னன் அழைப்பது இல்லை. "மின்னல் கொடி" என்று தான் கூப்பிடுவான். அவளை மின்னல்கொடி என்று சொன்னாலும் தவறு இல்லை. வானத்தில் படரும் பொற்கொடி தானே, மின்னல்!

ஆனால், மன்னன் அந்த அருத்தத்தில் அப்படிச் சொல்வது இல்லை. அவள் ஒரு "மின்னல் மழை மோகினி"! மின்னலுக்குப் பின் நிச்சயம் இடி உண்டு! "இடி மோகினி" என்று சொன்னால் அவன் தலையிலேயே அந்த இடி விழுந்து விடக்கூடும்! அதற்கு அஞ்சி அவளை "மின்னல் மோகினி" என்று 'நாசூக்' ஆக பட்டம் சூட்டி அழைத்தான்!

பொற்கொடிக்கு மூக்கு மேலே கோபம் இருக்கும்! நல்ல துணிச்சல்காரி! பணக்காரி வேறு! கல்லூரியில் நடக்கும் அத்தனை விளையாட்டுப் போட்டிகளிலும் முதல் பரிசை தட்டிக் கொள்ளுவாள்! ஓட்டப் பந்தயமா? உயரத் தாவுதலா? குண்டு எறிவதா? நீச்சலா? எதிலும் அவளுக்கு நிகர் அவளே! ஆண்களுக்கே கூட அறைகூவல் விடுவாள்! அவளை "திமிர்

பிடித்தவள்" என்பார்கள், சிலர். "ராங்கிக்காரி" என்பார்கள் வேறு சிலர். "அவள் வம்புச் சண்டைக்குப் போக மாட்டாள்; வந்த சண்டையை விட மாட்டாள்" என்பார்கள். மற்றும் சிலர் மூன்றுபேர் சொல்லுவதுமே சரிதான் என்று ஒப்புக் கொள்ளத் தோன்றும்! ஒரு நேரம் குதிரையாகத் தோன்றுவாள்! மறுநேரம் கழுதையாக உதைப்பாள்! அவள் குணம் அப்படி!

அந்தக் குணத்துக்காகத் தான் மன்னன் அவளை விரும்பினான்!

அவளது அழகைக் கண்டு ஆயிரம் பேர் மயங்கியிருப் பார்கள். ஆனால், அவளது துணிச்சலைப் பார்த்து அவள் மீது ஆசை கொண்டவன் மன்னன் தான்!

ஒரு நாள் தெரியாத்தனமாக ஒரு பையன் அவள் கையைப் பிடித்துவிட்டான்! அடிபட்ட பாம்பாகச் சீறிய அவள், அவன் கன்னத்தில் ஒன்று கொடுத்தாள் பாருங்கள்... அதை யாராவது நேரில் பார்த்து இருந்தால், அவள்மீது கொண்ட ஆசையை அப்பொழுதே விட்டுவிட்டு ஓடியிருப்பார்கள். ஆனால், மன்னன் பார்த்தான். அவன் அப்பொழுதே "யானையை அடக்குவதற்கு ஏற்ற அங்குசம் இவள்தான்" என்று தீர்மானித்துவிட்டான்!

மன்னன் மனதில் எப்பொழுதும் ஒரு விஷயம் உறுத்திக் கொண்டே இருந்தது. அதுதான் அவனுடைய எதிர்கால மனைவியைப்பற்றிய கவலை! 'பாவம், எந்தப் பெண் வந்து, எங்கள் அம்மா கையில் என்ன பாடுபடப் போகிறாளோ' என்று அடிக்கடி நினைத்துக்கொள்ளுவான்.

ஆனால், அன்று பொற்கொடியைப் பார்த்தது முதல், அவனுக்கு அந்தக் கவலை நீங்கியது. அவள்தான் சரியான அங்குசம் என்று அப்பொழுதே உறுதி செய்து கொண்டான்.

மிகவும் பக்குவமாக அவளை நெருங்கினான். பக்குவம் தவறினால் என்ன நடக்கும் என்பதை நேரில் பார்த்தவன் ஆயிற்றே, அவன்! செண்டி மீட்டர் செண்டி மீட்டர் ஆகத்தான் முன்னேற்றம் ஏற்பட்டது. இப்பொழுது அவளே அவன்



இடுப்பில் கையை சுற்றிக்கொள்ளும் அளவுக்கு வளர்ந்து விட்டது.

"இங்கே உட்காருவோமா?" நடையை நிறுத்திக் கொண்டு பொற்கொடி கேட்டாள்.

அங்கே சுற்றிலும் ஆட்கள் இருந்தார்கள்.

"இன்னும் கொஞ்சம் அப்படிப் போய்விடலாமே" என்றான், மன்னன்.

"எவ்வளவு தூரம் நடப்பது? இங்கேதான் உட்காருங்கள்" என்ற பொற்கொடி, பூமணலில் அமர்ந்தாள். அவன் கையைப் பிடித்து இழுத்தாள்.

"இங்கே நிறைய ஆட்கள் இருக்கிறார்கள்" என்று மன்னன் சொன்னான்.

"இருந்தால் நமக்கு என்ன? உட்காருங்கள்!" என்ற அவன் கையை சுண்டி இழுத்து அமர வைத்தாள் பொற்கொடி.

"எல்லோரும் நம்மையே பார்ப்பார்கள்" பயத்துடன் மன்னன் கூறினான்.

"யார் பார்ப்பது! கண்ணைத் தோண்டிவிடுவேன்!" என்றாள், பொற்கொடி. "யாரும் பார்த்தால்தான் நமக்கு என்ன? நாம் என்ன கள்ளக் காதலர்களா? அல்லது திருட்டுத்தனமாக இங்கே எதுவும் செய்யப் போகிறோமா?"

"அதெல்லாம் இல்லை" மன்னன் கன்னத்தைத் தடவிக் கொண்டான்.

"திருட்டுத்தனமாக சந்திப்பது-இருட்டிலே சந்திப்பது இதெல்லாம் எனக்குப் பிடிக்காது. காதலிலே சில பேர் வழுக்கிவிழ அதுதான் காரணம். நேர்மையானவர்கள் என்றால் நேரான வழியில் செல்ல வேண்டியதுதானே?" என்றாள், பொற்கொடி.

"உனக்கு இருக்கும் துணிச்சல் எல்லாப் பெண்களுக்கும் இருக்குமா?" என்று மன்னன் புன்னகைத்தான்.

"துணிச்சல் இல்லாவிட்டால், எத்தனை நாய்கள் வாலாட்டும் தெரியுமா?"

"நாய் வாலாட்டுகிறது என்றால், குழைகிறது என்று தானே அர்த்தம்?"

"குழைந்து குழைந்துதான் கடைசியில் பெண்களைக் குழையடித்துவிட்டுப் போய்விடுகிறார்கள்!"

பொற்கொடிக்கு வெள்ளை உள்ளம். வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்பது போலத்தான் பேசுவாள்.

"அது சரி. ஆனால், இப்பொழுது நாம் சண்டை போட்டுக்கொள்ளவா இங்கே வந்தோம்?"

"சல்லாப சரசம் புரியவும் நாம் இங்கே வரவில்லை."

இரண்டு பேருமே சிரித்துவிட்டார்கள்!

அவர்கள் இடையே இந்த பேச்சும் சிரிப்பும்தான்! அதைத் தாண்டி மன்னன் கொஞ்சங்கூட கையை நீட்டியது இல்லை. அவளிடம் அவ்வளவு பயம்! ஆனால், அவள் பயந்ததாகத் தெரியவில்லை. மிகவும் உரிமையுடன் அவனோடு பழகினாள்.

"நமக்கு பரீட்சைக்கு தேதி சொல்லிவிட்டார்களே" என்றாள், பொற்கொடி.

"ஆமாம். இன்னும் சரியாக இருபது நாள்தான் இருக்கிறது."

"அது எனக்குத் தெரியாதா? நான் கேட்டது..."

"என்ன கேட்டாய்?"

"நீங்கள் எப்பொழுது முகூர்த்தத்துக்குத் தேதி குறிக்கப் போகிறீர்கள்?"

"ஓ! அதுவா? பரீட்சையெல்லாம் முடியட்டும்."

"அதற்குப் பிறகு நாள் பார்க்கவா? பிறகு ஒரு மாதம், இரண்டு மாதம் ஆகுமே!"

"இப்பொழுதே எப்படி அம்மாவிடம் சொல்ல முடியும்?"



"நீங்கள் சொல்ல வேண்டாம். நான்..."

"அய்யய்யோ...! நீயே வந்து என் அம்மாவிடம் சொல்லப் போகிறாயா?"

"என் அப்பாவை அனுப்பி வைக்கிறேன் என்றேன்."

"தாராளமாக."

அப்பொழுது அவர்கள் அருகே ஓர் ஐஸ்கிரீம் வண்டி வந்தது.

பொற்கொடி இரண்டு கிண்ணம் வாங்கினாள்.

மன்னனுக்கு ஒன்றைக் கொடுத்து விட்டு, தான் ஒன்றை சுவைக்கத் தொடங்கினாள்.

மன்னன் ஐஸ்கிரீமை சுவைத்துக் கொண்டே, ஓரக் கண்ணால் அவளைப் பார்த்தான்.

"என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்? அந்த ஐஸ்கிரீமைப் போல என்னையும் தின்று விடுவீர்கள் போலிருக்கிறதே!" என்று பொற்கொடி சிரித்தாள்.

"ஐஸ்கிரீம் ஜில் என்று குளிர்கிறது!"

"நான் மட்டும் நெருப்பா? உங்களுக்கு நானும் ஐஸ்கிரீம் தான்!"

"உண்மையாகவா?"

அவன் கை ஆசையுடன் அவள் தோள் மீது விழுந்தது!

"ஐஸ்கிரீமைத் தின்று விட்டு, கிண்ணத்தைத் தூக்கி எறிந்து விடுவது போல, என்னையும் நீங்கள் தூக்கி எறிந்து விட மாட்டீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது!"

அவள் அவன் கையைப் பற்றிக் கொண்டாள்.

"நீ ஐஸ்கிரீம் கிண்ணம் அல்ல, அமுதசுரபி! அலாவுதீனின் அற்புத விளக்கு!"

இருவருக்கும் இடையே இடைவெளி குறைந்தது.

மரத்தில் மறைந்தது மாமத யானை!

திருட்டுப் பூனை போல கண்ணன் வீட்டுக்குள் நுழைந்தான்.

'அம்மா கூடத்தில் இருக்கக் கூடாது' என்று வழி நெடுக் ஆயிரம் தெய்வங்களை அடுக்கடுக்காக வேண்டிக் கொண்டு வந்தான். ஆனால், ஒரு தெய்வங்கூட அவனது கோரிக்கையை நிறைவேற்றவில்லை.

அய்யனார் சிலை போல அங்கமுத்து கூடத்தில் அமர்ந்து இருந்தாள்!

அவளைப் பார்த்ததுமே கண்ணனுக்கு கால், கைகள் நடுங்கி விட்டன!

வியர்த்துக் கொட்டியது!

கையில் இருந்த அட்டைப் பெட்டியை முதுகுக்குப் பின்னே மறைத்துக் கொண்டு, ஓசைப் படாதபடி அடிமேல் அடியெடுத்து வைத்து மெல்ல நடந்தான்!

"நில்லடா!"

அம்மாவின் குரல் கேட்டதும் அவன் கையில் இருந்த அட்டைப் பெட்டி கீழே விழுந்தது!

## 14

அங்கமுத்துக்குக் கழுகு மூக்கு! உடனே வியர்த்து விடும்!

கண்ணனுந்தான் என்ன; அவ்வளவு பெரிய அட்டைப் பெட்டியை மறைக்க முடியுமா? முழுப் பூசனிக்காயை சோற்றில் மறைக்க முயற்சித்த கதைதான்!



அவசர அவசரமாகக் குனிந்து, கீழே விழுந்த அட்டைப் பெட்டியை கண்ணன் எடுத்தான். அதே வேகத்தில் மீண்டும் அதை மறைக்க முயற்சித்தான்.

அதற்குள் அங்கமுத்து, "என் கண்ணா! என்னடா அது? இங்கே கொண்டுவா, பார்ப்போம்" என்று குழைந்தாள்.

"ஒன்றும் இல்லை, அம்மா..."

பயந்து கொண்டே கண்ணன் அம்மாவுக்குப் பக்கத்தில் வந்தான்.

பெட்டியைப் பார்த்ததும், உள்ளே என்ன இருக்கிறது என்பதை அங்கமுத்து தெரிந்து கொண்டாள். "அடடே! சேலையா?" அவள் வாயெல்லாம் பல்!

"ஆமாம்...இல்லை...ஆமாம், அம்மா, சேலைதான்..." கண்ணன் அசடு வழிந்தான்.

"உங்களுக்கு வாங்கி வந்தேன். இந்தாருங்கள்."

அவனுக்குக்கூட புளுகுவதற்குத் தெரிந்து இருந்தது! பெட்டியை அம்மாவிடம் கொடுத்தான்.

இதற்குள், கணவனின் குரல் கேட்டு, லெட்சுமி மாடியில் இருந்து இறங்கி வந்தாள்.

இடுக்கியில் அகப்பட்ட எலிக் குஞ்சு போல கண்ணன் நிற்பதைப் பார்த்ததும், அவள் மாடிப்படியிலேயே நின்று விட்டாள்.

"எனக்கா வாங்கி வந்தாய்! என் ராஜா!"

அங்கமுத்து ஆசையோடு பெட்டியைத் திறந்தாள்.

பெட்டிக்குள் காஞ்சிபுரமும் இல்லை! காசியும் இல்லை! காஷ்மீரும் இல்லை!

அங்கமுத்துவின் முகம் சுருங்கி விட்டது.

கையில் எடுத்து பார்த்தாள்.

கண்ணாடி போல தெரிந்தது!

"என்னடா, இது?" அங்கமுத்து மகனைப் பார்த்தாள். "ஓ! வெங்காயச்சருகா?"

கண்ணன் தேள் கொட்டிய திருடன் போல விழித்தான்.

"ஏண்டா கண்ணா, அம்மா இந்த சேலையெல்லாம் கட்டுவேனா? கொண்டு போய்க் கொடுத்து விட்டு, நல்ல காஞ்சிபுரமாக வாங்கிக் கொண்டு வா."

அங்கமுத்து சேலையை மீண்டும் அட்டைப் பெட்டிக்குள் வைத்து, மூடி, மகனிடம் நீட்டினாள்.

அப்பொழுது தான் மாடிப்படியில் நின்ற லெட்சுமி மீது அவள் பார்வை பட்டது.

"ஓ...கோ...கோ...கோ..."

அது அங்கமுத்துவின் சிரிப்பா, அல்லது "சொக்க சீமா" பானுமதியின் பாட்டா என்று தெரியவில்லை!

அதில்தான் எவ்வளவு எக்காளம்! எத்தனை இகழ்ச்சி!

"பெண்டாட்டிக்கு சேலை வாங்கிக்கொண்டு வந்திருக்கிறாயா? அதோ அவள் ஆசையோடு காத்துக்கொண்டு நிற்கிறாள்! கொண்டுபோய்க் கொடு!"

அங்கமுத்து எகத்தாளமாகக் கூறினாள்.

"சரி, அம்மா!"

கண்ணன் அப்பாவித்தனமாக லெட்சுமியை நோக்கி நடந்தான்.

"நில்லுடா! மல்லிகைப்பூ வாங்கி வந்திருக்கிறாயா?"

கண்ணன் நின்று, அம்மாவின் பக்கம் திரும்பினான். "இல்லையே."

"அந்தத் தெருக்கோடியில் பூக்காரி இருப்பாள். போய் வாங்கிக்கொண்டு வா. அவளுக்கு பட்டு உடுத்தி, பொட்டு வைத்து, உன் கையாலேயே பூச்சூடி, அழகு பார்!"



அங்கமுத்து வெறுப்பை உமிழ்ந்தாள்.

கண்ணன் திரும்பி லெட்சுமியைப் பார்த்தான்.

அவனுக்காகக் காத்துக்கொண்டு இருந்த அவள், தலை நிறைய பூச்சூடி, நெற்றி நிறையப் பொட்டு வைத்திருந்தாள்.

கண்ணன் மீண்டும் தாயின் பக்கம் திரும்பி, "லெட்சுமி பூ வைத்திருக்கிறாள், அம்மா" என்றான்.

"பூ வைத்திருக்கிறாளா? அப்படியானால், பால்கோவா வாங்கிக் கொடு! பாதாம் அல்வா வாங்கிக் கொடு!" என்று அங்கமுத்து ஆத்திரமாகப் பொரிந்தாள்.

"வாங்கி வந்திருக்கிறேன், அம்மா."

கண்ணன் சிரித்துக்கொண்டே, "பாண்ட்" பைக்குள் இருந்து இரண்டு பொட்டலங்களை எடுத்தான்!

லெட்சுமி திடுக்கிட்டாள்!

"அடப் பாவி!" அங்கமுத்து நெஞ்சில் அடித்துக் கொண்டாள்.

"எத்தனை நாளாக இந்த வேலை?"

புலியாகப் பாய்ந்து, அவன் கையில் இருந்த பொட்டலங்களை எட்டிப் பறித்தாள்.

கண்ணன் திகைத்து பதைத்து நின்றான்.

"பெண்டாட்டி கட்டிய சேலையோடு வந்து விட்டாளே என்று வெகு அக்கறையாக சேலை வாங்கிக் கொடுக்கிறாயா? அவளைப் பெற்றவனுக்கே அக்கறையில்லை! உனக்கு ஏண்டா இந்த வம்பெல்லாம்?"

சொற்கள் நெருப்புக் கங்குகளாகத் தெறித்தன!

லெட்சுமி ஆத்திரத்தால் பொருமினாள். ஆனால், அடக்கிக் கொண்டு நின்றாள்.

"பழைய சோற்றுக்கே லாட்டரி அடித்தவள்! அவளுக்கு பாதாம் அல்லவா? ஆசையிருந்தால், அப்பனிடம் சொல்லி

வாங்கித் தின்ன வேண்டும்! அதற்கு அங்கே ஏது வக்கு! இந்த வீட்டை தின்றே தீர்த்துவிடுவாள் போலிருக்கிறதே!"

லெட்சுமி அவமானத்தால் கூனிக் குறுகினாள்! பற்களை அழுந்தக் கடித்துக் கொண்டாள்!

"பெண்டாட்டிக்குத் திருட்டுத் தனமாக அல்வா வாங்கிக் கொடுக்கிறாயே, உனக்கு வெட்கமாக இல்லை? சேலையாம் சேலை! இன்னும் இரண்டு நாள் போனால், அவளுக்கு சேலைகூட துவைத்துப் போடுவாய் போலிருக்கிறதே!"

அங்கமுத்து விடாமல் பேசினாள்.

"போதும், அத்தை!"

அணை உடைந்த உள்ளம் போல லெட்சுமி பொங்கிக் கொண்டு வந்தாள்!

"என் பிறந்த வீட்டை-என்னை பெற்றவர்களை கேவலமாகப் பேசினீர்கள்; பொறுத்துக் கொண்டேன் ஆனால், இவரைப்பற்றி எதுவும் பேச நான் அனுமதிக்க மாட்டேன்" என்று கூறிக் கொண்டே, கணவனின் கையைப் பிடித்துக் கொண்டாள்.

"இவராமே இவர்! பெரிய சுவர்!"

காணாத அதிசயத்தைக் கண்டு விட்டவள் போல அங்கமுத்து மூக்கில் விரலை வைத்தாள்!

"அவன் என் பிள்ளை! அவனை ஏசுவேன்! பேசுவேன்! அதைக் கேட்க நீ யாரடி!"

அங்கமுத்து ஆவேசமாக லெட்சுமியின் கையைத் தட்டி விட்டாள். கண்ணனை 'சட்' என்று தன் அருகில் இழுத்துக் கொண்டாள்.

"அவர் நேற்றுவரை உங்கள்பிள்ளை, இன்று என் கணவர்!"

சொல்லிக் கொண்டே, லெட்சுமி கண்ணனைப் பிடித்து இழுத்தாள்!



தாய் ஒரு பக்கம் இழுக்க, தாரம் மறுபக்கம் இழுக்க, பாவம் கண்ணன் இருதலைக் கொள்ளி எறும்பாகத்தவித்தான்!

அப்பொழுது "என்னம்மா, இது? கயிறு இழுக்கும் போட்டியா!" என்று சிரித்துக் கொண்டே கயல்விழி அங்கே வந்தாள்.

அவளைப் பார்த்ததும் லெட்சுமி கண்ணனை விட்டுவிட்டு, ஒதுங்கிக் கொண்டாள்.

"உன் அண்ணன் செய்திருக்கும் வேலையைப் பார்த்தாயாடி? அருமைப் பெண்டாட்டிக்கு பெருமையாக சேலை வாங்கி வந்திருக்கிறான்."

வக்கணையாகப் பேசிக் கொண்டே, அங்கமுத்து சேலையை எடுத்து மகளிடம் காட்டினாள்!

"ஓ! அழகாக இருக்கிறதே!" கயல்விழி கண்களை மலர்த்தினாள். "அண்ணி! இந்த சேலையை கட்டிக் கொண்டால், நீங்கள் சினிமா நட்சத்திரம் போல இருப்பீர்கள்!"

"டொங்க்."

அங்கமுத்து வேகமாக அவள் தலையில் ஒரு குட்டு வைத்தாள்.

"ஆ!" என்று கயல்விழி தலையைத் தடவிக் கொண்டாள்.

"இங்கே என்ன தேங்காய் உடைபடுகிறது" என்று சொல்லிக் கொண்டே அப்பொழுது மன்னன் உள்ளே வந்தான்.

அவனைப் பார்த்ததும் தனக்குப் பெரிய ஆதரவு கிடைத்தது போல அங்கமுத்துக்குத் தோன்றியது!

"நீ சொல்லுடா. உன் அப்பா என்றாவது எனக்கு ஒரு சேலை வாங்கிக் கொடுத்தது உண்டா?" என்று அவனிடம் அங்கமுத்து கேட்டாள்.

மன்னன் சேலையைப் பார்த்தான். அண்ணியை நோக்கினான். நிலைமையைப் புரிந்து கொண்டான்.

பிறகு சொன்னான்: "அப்பா அப்படியெல்லாம் தப்புத் தண்டா செய்ய மாட்டாரே!"

"உன் அண்ணன் பண்ணிய வேலையைப் பார்த்தாயா? அவளுக்கு சேலை வாங்கி வந்திருக்கிறான்" அங்கமுத்து சேலையைத் தூக்கிக் காட்டினாள்.

"அண்ணா! பெண்டாட்டிக்கு சேலை வாங்கிக் கொடுக்கலாமா? இந்திய குற்றச்சட்டம் 253-வது பிரிவு, 7-வது உட்பிரிவுப்படி குற்றம் ஆயிற்றே! அதற்கு என்ன தண்டனை தெரியுமா? ஆறு ஆண்டு கடுங்காவல்!"

வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல மன்னன் சொன்னான்.

"சேலைமட்டும் இல்லையாம்; இங்கே பார், அல்வா, பால்கோவா... எல்லாம் அவளுக்குத்தான்" அங்கமுத்து சுட்டிக் காட்டினாள்.

"அல்வா வேறா? அதற்கு நாலு ஆண்டு உள்ளே தள்ளலாம்! பால்கோவா... அது எவ்வளவு பெரிய குற்றம்! அதற்கு கோவாவுக்கே அனுப்பலாம்!" மன்னன்.

அவனே தொடர்ந்தான். "அண்ணா அம்மாவுக்கு அப்பா எதாவது வாங்கிக் கொடுப்பதை நீங்கள் பார்த்து இருக்கிறீர்களா? அம்மாதான் அப்பாவுக்கு கடைசியாக காவி கமண்டலம் வாங்கிக் கொடுக்கப் போகிறார்!"

மன்னன் சிரியாமல் பேசினான்!

ஆனால், கயல்விழி 'குபீர்' என்று சிரித்து விட்டாள்!

அங்கமுத்துக்கு மூக்கு அறுபட்டது போல இருந்தது! "டேய்..." என்று உடம்பை சிலிர்த்தாள்!

அடுத்தகணம் அங்கே யாரையும் காணோம்!

பூனையைக் கண்ட எலிகளைப் போல, தங்கள் தங்கள் வளைக்குள் ஓடிச் சென்று பதுங்கிக் கொண்டார்கள்!



சாமி மலை ஏறியது போல அங்கமுத்து பெருமூச்சு விட்டாள்!

சற்று நேரத்தில் அமைதி-அடைமழை ஓய்ந்தது போல,

அங்கமுத்து சோபாவில் அமர்ந்தாள்!

எதுவுமே நடக்காதவள் போல, சர்வசாதாரணமாக அல்வா பொட்டலத்தைப் பிரித்தாள்.

பிரிக்கும் பொழுதே அவள் நாவில் நீர் கொட்டியது!

## 15

கணவன் ஒரு முழக் கதம்பம் வாங்கிக் கொடுத்தாலும் பெண்களுக்குப் பெருமை பிடிபடாது... மகிழ்ந்து போவார்கள்!

கண்ணன் லெட்சுமிக்கு சேலையே வாங்கிக் கொண்டு வந்திருக்கிறான். அவள் அடைந்த பெருமகிழ்ச்சி-பெருமிதம் சொல்லத்தக்கது அல்ல. ஆனால், அத்தனையும் அனுபவிக்க முடியாமல் செய்து விட்டாள், அங்கமுத்து.

தங்கள் அறைக்கு வந்ததும் "நான் உங்களை சேலை வாங்கிக்கொண்டு வரச் சொன்னேனா?" என்று லெட்சுமி உரிமையுடன் கேட்டாள்.

"நீ சொல்லவில்லையே" கண்ணன் சாதாரணமாகப் பதில் சொன்னான்.

"பிறகு ஏன் வாங்கி வந்தீர்கள்?"

"எனக்கு என்னவோ ஆசையாக இருந்தது! வாங்கி வந்தேன்."

கண்ணன் வெட்கத்துடன் நகத்தைக் கடித்தான்!

அதைப் பார்க்க லெட்சுமிக்குப் பரிதாபமாக இருந்தது.

ஒரு குழந்தையைப் போல அவனை அணைத்துக்கொண்டு "இதெல்லாம் அத்தைக்குப் பிடிக்காதே. இனி வாங்கி வராதீர்கள்" என்று செல்லமாகச் சொன்னாள்.

"உனக்குப் பிடித்திருக்கிறதா, இல்லையா?" அவன் குழைந்தான்.

"எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது! எவ்வளவு அழகாக இருக்கிறது!"

லெட்சுமி சேலையை எடுத்து மார்போடு சேர்த்துக் கொண்டாள்.

"ஆமாம், உங்களுக்குக்கூட சேலை வாங்கத் தெரியுமா!"

'திடீர்' என்று அவனை அவள் கேலி செய்தாள்!

ஒரு சேலைக் கடையில் ஒரு பொம்மைக்கு இந்த சேலையைக் கட்டி விட்டிருந்தார்கள். நான் அலுவலகத்துக்குப் போகும் பொழுதும் வரும் பொழுதும் அதைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். உன்னைப் பார்ப்பது போலவே இருக்கும். இன்று வாங்கி வந்துவிட்டேன்" என்றான், கண்ணன்.

அவனது அன்பை நினைத்து லெட்சுமி பாகுபோல உருகி விட்டாள்.

"லெட்சுமி! இந்த சேலையை கட்டிக்கொண்டு வாயேன், பார்ப்போம்" கண்ணன் சொன்னான்.

"ஊகூம்! அத்தை பழையபடி ஆடத் தொடங்கி விடுவார்கள்!" லெட்சுமி பயந்து கொண்டு கூறினாள்.

"அம்மா என்றால் சும்மாவே நான் பயந்து கொண்டு இருக்கிறேன். நீ வேறு பூச்சி காட்டுகிறாயா!" என்ற கண்ணன், "போய் கட்டிக்கொண்டு வா, கண்ணு" என்று கெஞ்சினான்.



அதற்கு மேல் அவனது ஆசையைத் தட்ட லெட்சுமியால் முடியவில்லை.

"இருங்கள்" என்று சொல்லிவிட்டு, மறைவு இடத்துக்குச் சென்றாள்.

சேலையை மாற்றத் தொடங்கினாள்!

பட்டிக்காட்டான் மிட்டாய்க் கடை பார்ப்பது போல கண்ணன் திருட்டுத்தனமாக அவளையே பார்த்துக் கொண்டு நின்றான்!

சற்று நேரத்தில் லெட்சுமி வெளியில் வந்தாள்.

அந்த குங்கும வண்ணச் சேலை அவளுக்கு மிகவும் அழகைக் கொடுத்தது!

அவளது உடலோடு உடலாக ஒட்டிக் கொண்டு, தந்தத்தில் செதுக்கிய விந்தைச் சிலை போன்ற தோற்றத்தை அவளுக்கு அளித்தது!

அவளைக் கடித்துத் தின்று விடுகிறவன் போல கண்ணன் பார்த்தான்!

"அப்படிப் பார்க்காதீர்கள். எனக்கு வெட்கமாக இருக்கிறது" என்று லெட்சுமி நாணத்துடன் தலையைக் குனிந்து கொண்டாள்.

கண்ணன் வேகமாகப் போய் கதவைச் சாத்தித் தாழிட்டுவிட்டு வந்தான்.

"ஏன் கதவைப் பூட்டினீர்கள்?" லெட்சுமி வியப்புடன் அவனை விழித்து நோக்கினாள்.

கண்ணன் பதில் சொல்லவில்லை. கட்டிலை சுட்டிக் காட்டினாள்.

"சீ! சீ" அசிங்கம் கதவைத் திறங்கள்." என்றாள்! லெட்சுமி.

"நான் இப்பொழுது என்ன சொன்னேன்? கட்டிலில் உட்கார்ந்து பேசிக்கொண்டு இருக்கலாம் என்று தானே சொன்னேன்" என்றான்...கண்ணன்.

"அதற்கு ஏன் கதவைப் பூட்டிவிட்டு வந்தீர்கள்?"

"சிவபூஜையில் கரடி புகுந்துவிடக் கூடாது அல்லவா?"

"ஆனால், யாராவது பார்த்தால் என்ன நினைப்பார்கள் தெரியுமா?"

"என்ன நினைப்பார்கள்?"

"அப்படியென்றால்...!"

"ஒண்ணும் தெரியாதாம் பாப்பா, உள்ளே போட்டுக் கொள்ளுவாளாம் தாழ்ப்பாள்!" என்று அழகு காட்டிய லெட்சுமி, "உங்கள் அம்மா வந்தால் 'இந்நேரம் கதவைப் பூட்டிக்கொண்டு என்னடி செய்கிறீர்கள்?' என்று கதவையே உடைத்து விடுவார்கள்" என்று சொல்லிக் கதவைத் திறக்கச் சென்றாள்.

"கதவைக் கூடப் பூட்டிக் கொள்ளக்கூடாதா!" என்று கண்ணன் தலையில் கை வைத்துக் கொண்டான்.

லெட்சுமி திரும்பி வந்தாள்.

கண்ணன் அவளைப் பிடித்து இழுத்துக்கொண்டு கட்டிலுக்கு போனான்.

"என்ன இது விடுங்கள்!" என்று லெட்சுமி திமிறினாள். "கதவு திறந்து இருக்கிறது அல்லவா?"

"கதவை மூடிவிட்டும் கட்டிலில் உட்காரக் கூடாது! கதவைத் திறந்து வைத்துக் கொண்டும் கட்டிலில் உட்காரக் கூடாது! வேறு என்னதான் செய்வது?" என்று கண்ணன் அலுத்துக் கொண்டான்.

"நல்ல பிள்ளையாக நீங்கள் மட்டும் கட்டிலில் உட்கார்ந்து இருங்கள். நான் கீழே போகிறேன்" என்ற லெட்சுமி, கீழே செல்லத் திரும்பினாள்.

"லெட்சுமி! இப்பொழுது உன் கூடவே இருக்கவேண்டும் போலிருக்கிறது" என்று கண்ணன் அவள் கையைப் பிடித்தான். "சினுமாவுக்குப் போவோமா?"

"அத்தை விடமாட்டார்களே."



"எங்காவது வெளியில் போக வேண்டும்."

லெட்சுமி யோசித்தாள். பிறகு "எங்கள் வீட்டுக்குப் போய் வரலாமா?" என்று கேட்டாள்.

புக்ககம் வந்ததில் இருந்து பிறந்த வீட்டுக்கு லெட்சுமி செல்லவில்லை.

"வா, போவோம்" என்று கண்ணன் புறப்பட்டான்.

இருவரும் கீழே வந்தார்கள்.

அங்கமுத்து ஏதோ புத்தகம் படித்துக் கொண்டு இருந்தாள்...

அதன் அட்டையைப் பார்த்தாலே, பேய்க் கதை போல இருந்தது!

அப்படிப்பட்ட கதைகளை அங்கமுத்து விரும்பிப் படிப்பாள்.

அங்கமுத்து அருகில் வந்து நின்று, "அத்தை..." என்றாள் லெட்சுமி. புத்தகத்தில் இருந்து பார்வையை எடுத்து, லெட்சுமி மீது ஓட்டினாள் அங்கமுத்து.

அது, அவள் படித்துக் கொண்டு இருந்த பேய்க் கதையில் வரும் சூனியக்காரக் கிழவியின் பார்வை போல இருந்தது!

"அத்தை, எங்கள் வீட்டுவரை நாங்கள் போய் வருகிறோம்" என்று லெட்சுமி மரியாதையுடன் சொன்னாள்.

அங்கமுத்து வேகமாகப் புத்தகத்தை மூடினாள்.

லெட்சுமியை ஏற இறங்கப் பார்த்தாள்.

அந்தப் பார்வையில் தான் எத்தனை ஏளனம்!

"உங்கள் வீட்டுக்கா போகிறீர்கள்? போய் வாருங்கள்" என்றாள். அங்கமுத்து, நல்ல பெண்ணாக.

லெட்சுமி முகம் மலர்ந்தாள். "வருகிறோம், அத்தை" என்று நகர்ந்தாள்.

அதற்குள் அங்கமுத்து, "புதுச்சேலையா கட்டியிருக்கிறாய்! கொண்டு போய் உன் அப்பனிடம் காட்டு. அப்பொழுதாவது

அவனுக்கு ரோசம் வருகிறதா என்று பார்ப்போம்!" என்று நஞ்சை கக்கினாள்.

"அத்தை!" லெட்சுமியின் இதயம் வெடித்தது!

"இந்தக் கூச்சலுக்கு மட்டும் குறைச்சல் இல்லை. வெறுங் கழுதைக்கு இத்தனை ரோசம் இருக்கக் கூடாதடி அம்மா" என்ற அங்கமுத்து, அலட்சியமாகப் புத்தகத்தை விரித்துப் படிக்கத் தொடங்கினாள்.

"ஆமாம், நான் வெறுங்கழுதை தான்! வெறுங்கழுதை என்று தெரிந்ததுதானே என்னை கட்டிக் கொண்டீர்கள்" என்று லெட்சுமி பொறுமையிழந்து பொங்கி இரைந்தாள்.

"அது தான் கழுதை இப்பொழுது உதைக்கிறது!"

புத்தகத்தில் இருந்து பார்வையை எடுக்காமலே அங்கமுத்து சொன்னாள்.

"அத்தை! நான் இல்லாதவள்தான். ஆனால், எது இல்லாதவள்? பொன்னும் பொருளும் இல்லாதவள்! ஆனால், எனக்கு மான ரோசம் நிறைய இருக்கின்றன. அதைப் புரிந்து கொள்ளுங்கள்" என்று லெட்சுமி சூடாகச் சொன்னாள்.

"சீ! சீ! போடி உள்ளே! மானமாம்! ரோசமாம்!"

மிக அலட்சியமாகக் கையை ஆட்டி அங்கமுத்து சொன்னாள்.

லெட்சுமிக்கு உடலில் நெருப்பை அள்ளிக் கொட்டியது போல இருந்தது!

ஆவேசத்துடன் கணவனை திரும்பிப் பார்த்தாள்.

அவன் கல்லுப்பிள்ளையார் போல நின்று கொண்டு இருந்தான்.

"அவனை ஏண்டி பார்க்கிறாய்? கொண்டவன் துணையிருந்தால், கூரை ஏறி சண்டை போடலாம் என்று பார்க்கிறாயா? அதுதான் இங்கே நடக்காது. அவன் என் பிள்ளை!" அங்கமுத்து பெருமையாகச் சொன்னாள்.



"அவர் இப்படி ஊமைப்பிள்ளையாக இருப்பதால்தானே நீங்கள் எப்படி வேண்டுமானாலும் என்னைப் பேசுகிறீர்கள்!" என்று லெட்சுமி பொருமினாள். அவள் கண்கள் ஆறாகப் பெருகின.

அங்கமுத்து ஆவேசமாக எழுந்தாள்.

"உன்னை நான் என்னடி பேசி விட்டேன்? ஏண்டி இப்படி அழுது அட்டூழியம் பண்ணுகிறாய்? கண்ணீரைப் பாரேன்? பெரிய நீலியாக இருப்பாள் போலிருக்கிறது!"

எண்ணெய் சட்டியில் விழுந்த கடுகு போல வெடித்துக் கொண்டே லெட்சுமியை அடித்து விடுகிறவள் போல வேகமாக அவளிடம் வந்தாள்.

"அத்தை! என்னை கல்லால் வேண்டுமானாலும் அடியுங்கள். ஆனால், சொல்லாமல் மட்டும் அடிக்காதீர்கள்! கல்லடியைவிட சொல்லடி கொடுமையானது" என்று லெட்சுமி விம்மினாள்.

"உன்னை அடிக்கிறோம் பிடிக்கிறோம் என்ற ஊரெல்லாம் போய் சொல்லுவாய் போலிருக்கிறதே! அடிக் கள்ளி!" என்று அங்கமுத்து அவள் குமட்டில் குத்தினாள்.

"அட அட அடா மகாபாரதச் சண்டை ஓய்ந்தாலும் இந்த மாமியார்-மருமகள் சண்டை ஓயாது போலிருக்கிறதே!" என்று சொல்லிக் கொண்டே மன்னன் வந்தான். அவன் கையில் ஒரு புத்தகம் இருந்தது.

"வாடாப்பா கிருஷ்ண பரமாத்மா!" என்று அங்கமுத்து வக்கனையாக அவனை வரவேற்றாள்.

"அம்மா நான் பரீட்சைக்குப் படிக்க வேண்டும் உங்கள் சண்டைகளை பிறகு வைத்துக் கொள்ளுங்கள்" என்று மன்னன் கடுமையாக சொன்னான்.

"நானாடா அவளோடு சண்டைக்குப் போகிறேன்" என்று அங்கமுத்து அவனுடன் போருக்கு வரிந்து கட்டினாள்.

"நான்தான் பார்த்தேனே" என்றான், மன்னன். "இங்கே இஸ்ரேல்-எகிப்து போர் நடந்ததே."

"அதை சமாதானம் செய்து வைக்க அமெரிக்காவில் இருந்து இந்த கிசிங்கர் வந்திருக்கிறாராக்கும்!" என்று அங்கமுத்து கேலி செய்தாள்.

"அம்மா! அண்ணி நம் குடும்ப விளக்கு. இந்த வீட்டில் விளக்கேற்றி வைக்க வந்த லெட்சுமி. இந்த வீட்டில் மருமகள். அவர்கள் மீது கைபடலாமா?" மன்னன் உருக்கமாகக் கேட்டான்.

அங்கமுத்துக்குத் தலை தொங்கி விட்டது.

"அண்ணி, நீங்கள் வருத்தப்படாதீர்கள். அம்மாவின் குணம் அப்படி. அம்மா என்ன புத்தகம் படிக்கிறார்கள் என்று பார்த்தீர்களா?" என்று மன்னன் அமைதியாகச் சொன்னான்.

"பேய்க்கதை!"

கண்ணன் வாய் திறந்தான்.

மன்னன் சொன்னான்.

"அது அம்மாவின் சொந்தக் கதை!"

## 16

புயல் அடித்து ஓய்ந்தது போல வீடு அமைதியாக இருந்தது!

கல்லூரிக்குப் போகிறவர்கள் சென்று விட்டார்கள்; அலுவலகம் போகிறவர்கள் கிளம்பி விட்டார்கள்.

லெட்சுமி அடுப்படியில் வேலை பார்த்துக் கொண்டு இருந்தாள்.



அங்கமுத்து கூடத்தில் சோபாவில் அமர்ந்து படித்துக் கொண்டு இருந்தாள்.

'திடீர்' என்று "லெட்சுமி...லெட்சுமி...ஓடி வாயேன்!" என்று அங்கமுத்து அலறினாள்!

என்னவோ, ஏதோ என்று லெட்சுமி அலறிப் புடைத்து ஓடிவந்தாள்.

அங்கமுத்து பாய்ந்து ஓடி அவளை கட்டிப் பிடித்துக் கொண்டாள்.

உடனே லெட்சுமி பயந்துபோய் "ஆ!" என்று அலறினாள்!

"நீ ஏண்டி இப்படி அலறுகிறாய், பேயைக் கண்டவள் போல!" என்று அங்கமுத்து அவளை விட்டாள்.

லெட்சுமி விழித்தாள்! "நீங்கள் ஏன் அத்தை அப்படி அலறினீர்கள்?"

"இது பேய்க்கதை! அந்தப் பேய் வந்து ஒரு பெண்ணின் நெஞ்சைப் பிளந்து இரத்தத்தைக் குடிக்கிறது! அதைப் படித்ததும் நான் பயந்து விட்டேன்" என்று அங்கமுத்து கையில் இருந்த புத்தகத்தை மருமகளிடம் காட்டினாள்.

"தனியாகப் படிக்கப் பயமாக இருக்கிறது. நீ என் பக்கத்தில் உட்கார்ந்து கொள்" என்ற அங்கமுத்து, மீண்டும் சோபாவில் அமர்ந்து, புத்தகத்தைப் பிரித்தாள்.

"உங்களுக்கே பயமாக இருக்கிறது என்றால், நான்..." லெட்சுமி நடுங்கினாள்.

அதைக் கவனித்த அங்கமுத்து "ஏண்டி பேயைக் கண்டவள் போல நடுங்குகிறாய்?" என்று கண்டித்தாள்.

"நான் பேயைக் கண்டேனா, பிசாசைக் கண்டேனா? உங்களைத்தான் கண்டேன்" என்றாள், லெட்சுமி.

"ஓகோ! மாமியாரே கண்கண்ட பேய் என்று சொல்லுகிறாயா!" என்று அங்கமுத்து சீறினாள்!

"நான் அப்படிச் சொல்லுவேனா, அத்தை? மருமகளுக்கு மாமியார் கண்கண்ட தெய்வம் ஆயிற்றே!" என்று லெட்சுமி குழைந்தாள்.

"சரிதான், போய் ஒரு காப்பி கொண்டு வா" என்று கட்டளையிட்டுவிட்டு, அங்கமுத்து மீண்டும் புத்தகத்தில் மூழ்கினாள்.

லெட்சுமி போய் காபி கொண்டு வந்தாள்.

அங்கமுத்து பருகினாள்.

"அத்தை, பயமாக இருக்கிறது என்றால், ஏன் இந்தப் புத்தகத்தைப் படிக்கிறீர்கள்? ராமாயணம், பாரதம் படிக்கக்கூடாதோ?" என்று லெட்சுமி நயமாகச் சொன்னாள்.

"எனக்கு இன்னும் அந்த வயது ஆகிவிடவில்லை. போய், உன் வேலையைப் பார்."

அவள் முகத்தில் அடித்தது போல அங்கமுத்து சொன்னாள்.

நமக்கு ஏன் இந்த வம்பு என்று, காலி தம்ளரை வாங்கிக் கொண்டு லெட்சுமி மீண்டும் அடுப்படிக்குப் போனாள்.

அங்கமுத்து மீண்டும் புத்தகத்தில் ஆழ்ந்தாள்.

மயிர்க்கூச்செறியச் செய்யும் மர்மக்கதை, இது!

பாய்ந்து வரும் பேய், பறந்துவரும் பிசாசு, முட்டித் தள்ளும் குட்டிச்சாத்தான், "லொக்...லொக்..." கிழவி "ஓம் காளி... நீலி" என்று ஓங்காரக் குரலிடும் மலையாள மந்திரவாதி எல்லோரும் இருந்தார்கள். இத்தனை பேருக்கும் இடையில் ஒரு கன்னிப் பெண் சிக்கிக் கொண்டாள்.

அங்கமுத்துக்கு மிகவும் பிடித்து இருந்தது. தேனில் விழுந்த ஈபோல, புத்தகத்தில் மூழ்கினாள்.

அப்பொழுது ஒருவர் உள்ளே வந்தார்.



ஆள் எளிமையாக இருந்தாலும், பெரிய மனிதருக்கு உரிய மிடுக்கு இருந்தது.

அவரை வரவேற்க நாதி இல்லை!

அங்கமுத்துவின் அருகில் வந்து அவர் நின்றார்.

அப்பொழுதும் அங்கமுத்து அவரைக் கவனிக்கவில்லை.

அவர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "சுப்பிரமணியம் இருக்கிறாரா?" என்று கேட்டார்.

"அந்தக் குரல் கேட்டு, அங்கமுத்து நிமிர்ந்து பார்த்தாள். "நீங்கள் யார்?" கேட்டுவிட்டு, பார்வையை புத்தகத்தில் பதித்தாள்.

"நான் அவரைப் பார்க்க வேண்டும்" வந்தவர் சொன்னார்.

"என்ன விஷயம்? சொல்லுங்க" பார்வையை உயர்த்தாமலே அங்கமுத்து கூறினாள்.

"அடடே! நீங்கள்தான் சுப்பிரமணியமா? எப்பொழுது பெண்ணாக மாறினீர்கள்? இப்பொழுது உங்கள் பெயர் சுப்பிரமணியமா? சுப்பம்மாளா?"

உற்சாகமாகக் கேட்டுக் கொண்டே, வந்தவர் சோபாவில் அமர்ந்தார்.

அதன் பின்தான் அங்கமுத்து புத்தகத்தை மூடி வைத்து விட்டு, அவரை ஏறிட்டுப் பார்த்தாள். "கதவு திறந்து இருந்தால், உள்ளே நுழைந்து விட வேண்டியதுதானா! பேய் தான் அப்படி நுழையும்!" என்று கனல் கக்கினாள்.

"இது பேய் வீடா?" வந்தவர் அமைதியாகக் கேட்டார்.

"என் வீட்டுக்குள் வந்து இருந்து கொண்டு என் வீட்டையே பேய்வீடு என்று சொல்லுகிறீர்களா? எழுந்திருங்கள்! வெளியே போங்கள்!" என்று அங்கமுத்து கூச்சல் போட்டாள்.

"அடடே! நான் உங்கள் வீட்டையா சொன்னேன்? நீங்கள் படித்துக் கொண்டு இருப்பது 'பேய் வீடு' என்ற கதையா என்று கேட்டேன்" என்று வந்தவர் சிரித்தார்.

அதைக் கேட்டு அங்கமுத்து பூரித்துப் போனாள்! "ஆமாம், பேய் வீடுதான்! உங்களுக்கு எப்படித் தெரியும்?" அவள் வாய் எல்லாம் பல்!

"இனம் இனத்தோடு என்பார்கள்! நீங்கள் வேறு என்ன புத்தகம் படிப்பீர்கள்? பேய் பிசாசு என்றால் தான் பிடிக்கும் என்றார், வந்தவர். "ஆமாமாம், அவர் இல்லையா?"

அங்கமுத்துக்கு முகம் சுண்டி விட்டது. 'உம்' என்று வைத்துக் கொண்டாள். "யார்?"

"வீட்டுக்காரர்."

"நான்தான் இந்த வீட்டுக்கு அதிகாரி."

"நீங்கள் வேறு சொல்ல வேண்டுமா?"

"நீங்கள் யார்? வந்த விஷயம்...?"

"உங்கள் வீட்டில் ஒரு பையன் இருப்பதாகக் கேள்விப் பட்டேன்.."

"வீடு என்றால், பிள்ளைகள் இருக்கத்தான் செய்வார்கள்! எனக்கு இரண்டு பையன், ஒரு மகள் இருக்கிறார்கள்."

"நான் மக்கள் தொகை கணக்கு எடுக்க வரவில்லை."

"பிறகு எதற்கு வந்தீர்கள்?"

"எனக்கு ஒரு மகள் இருக்கிறாள்..."

"அவளுக்கு என்ன? காணாமல் போய் விட்டாளா? போலீசில் போய் புகார் கொடுங்கள்! பத்திரிகைகளில் விளம்பரம் செய்யுங்கள். இங்கே எதற்காக வந்தீர்கள்?"

வந்தவர் அமைதியாகப் பேசினார்.

அங்கமுத்து எடுத்து எறிந்து பேசினாள்.

"உங்கள் வீட்டில் பையன் இருக்கிறான். என் வீட்டில் மகள் இருக்கிறாள். எதற்காக உங்கள் வீட்டைத் தேடி நான் வருவேன்?"



"இப்படி சுற்றி வளைப்பது எல்லாம் எனக்குப் பிடிக்காது. சுருக்கமாகச் சொல்லுங்கள்."

"உங்கள் பிள்ளையை என் மாப்பிள்ளை ஆக்கிக் கொள்ள விரும்புகிறேன்."

வந்தவர் சொல்லிவிட்டுச் சிரித்தார்.

அங்கமுத்துக்கோ முகத்தில் சூடு ஏறியது. "எழுந்திருங்கள்" என்று கட்டளையிட்டாள்.

வந்தவர் விழித்தார்.

"உங்களுக்குக் கொஞ்சமாவது மரியாதை தெரிகிறதா? மாப்பிள்ளை கேட்டு வரும் அழகு இதுதானா? அதற்கு ஒரு முறை இல்லை?" என்று இரைந்தாள்.

"நீங்கள் யாரு? என் பிள்ளையை உங்கள் மாப்பிள்ளை ஆக்கிக் கொள்ள என்ன தகுதியிருக்கிறது? வீட்டில் வயது வந்த பையன் இருந்தால் போதும்; உள்ளே நுழைந்துவிட வேண்டியது தானா?" என்று கூச்சல் போட்டாள்.

வந்தவர் அமைதியாக இருந்தார். அங்கமுத்து ஓய்ந்ததும் "நான் யார் தெரியுமா?"

"யாரையா நீர்!" அங்கமுத்து அலட்சியமாகக் கேட்டாள்.

"வைர வியாபாரி வைரவனைத் தெரியுமா?" வந்தவர் கம்பீரமாகக் கேட்டார்.

"அவரே ஒரு வைரம் ஆயிற்றே!" அங்கமுத்து உருகினாள். "அவர் கடை கணக்குப்பிள்ளையா, நீங்கள்?" மிக அலட்சியமாகக் கேட்டாள்.

"அந்த வைரவனே நான்தான்."

வந்தவர் மீசையை முறுக்கினார்!

அவர் கையில் இருந்த வைர மோதிரம், நட்சத்திரம் போல மின்னியது!

அதைப் பார்த்ததும், அங்கமுத்து சர்க்கரைப் பாகு போல ஆகிவிட்டாள். "நீங்களா...? வாருங்கள்!" என்று வரவேற்றாள். அவர் காலில் விழாத குறைதான்!

"இப்பொழுது என்ன சொல்லுகிறீர்கள்?"

வைரவன் கம்பீரமாகக் கேட்டார்.

அங்கமுத்து சொன்னாள்!

"நீங்கள் இங்கேயே இருங்கள். மாலையில் என் மகன் வருவான். அவனை கையோடு உங்கள் வீட்டுக்குப் பிடித்துக் கொண்டு போய் விடுங்கள்!"

## 17

"லெட்சுமி...லெட்சுமி..."

தீப்பொறி பறக்கும் அங்கமுத்துவின் குரலில் தேன் ஒழுகியது!

அடுப்படியில் இருந்த லெட்சுமி, 'யாரைக் கூப்பிடுகிறார்கள்?,' என்று ஒரு கணம் வியப்புடன் நோக்கினாள்.

"லெட்சுமி...லெட்சுமி..."

மீண்டும் அதே குரல்!

தன்னைத் தான் கூப்பிடுகிறார் என்பதை உணர்ந்த லெட்சுமி, "வருகிறேன் அத்தை" என்று குரல் கொடுத்துக் கொண்டே, வேகமாகக் கூடத்துக்கு வந்தாள்.

"காப்பி கொண்டு வாம்மா" என்றாள், அங்கமுத்து.

"சரி அத்தை" என்று லெட்சுமி பின்னே திரும்பினாள்.



அதற்குள் அங்கமுத்து, "காப்பி வேண்டாம், ஆர்லிக்ஸ் கொண்டு வா" என்றாள்.

"சரி அத்தை" என்று லெட்சுமி மீண்டும் நடந்தாள்.

"நில்...நில்..." என்று கூவினாள், அங்கமுத்து. "தோட்டக் காரனிடம் சொல்லி இளநீர் வெட்டிக் கொண்டு வரச்சொல்."

"சரி அத்தை" என்ற லெட்சுமி, மீண்டும் ஏதாவது திருத்தம் இருக்குமோ என்று நின்றாள்.

"நீங்கள் என்ன சாப்பிடுகிறீர்கள்?" என்று வைரவனிடம் அங்கமுத்து கேட்டாள்.

"மோர் போதும்" என்றார், அவர்.

"மோரா!" அங்கமுத்து ஆச்சரியத்துடன் அவரை நோக்கினாள். "நீங்கள் எவ்வளவு பெரிய மனிதர்!"

"பெரிய மனிதர் என்றால் பீர் தான் குடிக்க வேண்டுமா!" என்று வைரவன் சிரித்தார். "மோரும் கூழும் ஏழைகளுக்கு மட்டும் சொந்தம் அல்ல. எல்லோரும் சாப்பிடலாம். நான் சொல்லுவது சரி தானே?"

"ஆமாம்! ஆமாம்!" அங்கமுத்து பலமாகத் தலையை ஆட்டி ஒத்து ஊதினாள்.

அதைப் பார்க்க, லெட்சுமிக்கு வியப்பாக இருந்தது.

"மோரே கொண்டு வா" என்று அவளிடம் அங்கமுத்து சொன்னாள்.

லெட்சுமி உள்ளே சென்று; கண்ணாடித் தம்ளரில் மோர் கொண்டு வந்தாள்.

அதை வாங்கி வைரவனிடம் கொடுத்த பொழுது தான், அங்கமுத்து "இவள் தான் என் மூத்த மருமகள்" என்று வெகு பவிசுடன் லெட்சுமியை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தாள்.

"மகாலெட்சுமி மாதிரி இருக்கிறாள்!" என்று வைரவன் கைகூப்பினார்.

லெட்சுமியும் மரியாதை கலந்த நாணத்தோடு வணக்கம் தெரிவித்தாள்.

அவரை யார் என்று அங்கமுத்து அறிமுகப்படுத்தாததால், தானே அறிமுகம் செய்து கொண்டார். "என் பெயர் வைரவன். என் மகளை உங்கள் வீட்டுக்கு இரண்டாவது மருமகளாக அனுப்பி வைப்பது பற்றிப் பேச வந்திருக்கிறேன்."

"மிக்க மகிழ்ச்சி" என்று லெட்சுமி முகம் மலர்ந்தாள்.

"அவர் பெரிய வைர வியாபாரி. அவரே அவர் மகளை நம் மன்னனுக்குக் கொடுக்க நம் வீடு தேடி வந்திருக்கிறார்" என்று அங்கமுத்து பெருமையாகச் சொன்னாள். அவள் வாயெல்லாம் பல்!

மாமியாரிடம் இத்தனை குழைவு-வளைவு எல்லாம் ஏன் என்பது இப்பொழுதுதான் லெட்சுமிக்குப் புரிந்தது!

அந்த அம்மா மருமகளை சொந்த மகள் போல நடத்துகிறாள் என்று வந்தவர் நினைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் இந்த நாடகம் என்பதையும் தெரிந்து கொண்டாள்!

"எப்பொழுது பெண் பார்க்க வருகிறீர்கள்?"

மோரைக் குடித்து முடித்து விட்டு வைரவன் கேட்டார்.

"உங்கள் பெண்ணைப் பார்க்க வேண்டுமா, என்ன?" அங்கமுத்து புன்னகைத்தாள். "வைரமா இழைத்து வைத்திருப்பார்களே! பார்ப்பதற்கு இரண்டு கண் போதாது."

வைரவன் சிரித்துக் கொண்டார்.

"மிகவும் மகிழ்ச்சி. நான் புறப்படுகிறேன். மற்றதெல்லாம் ஒரு நல்ல நாளாகப் பார்த்து, பேசி முடித்துக் கொள்ளலாம்" என்று கூறிக் கொண்டே அவர் எழுந்தார்.

"அவரிடம் எதுவும் பேச வேண்டுமா? அல்லது..." கேலியுடன் அங்கமுத்துவை நோக்கினார்.



"நீங்கள் ஏன் வீணாக அலைகிறீர்கள்? நானே அவரிடம் எல்லா விவரமும் சொல்லி விடுகிறேன்" என்றாள் அங்கமுத்து.

"அய்யா... அம்மா கைக்குள் அடக்கம் போலிருக்கிறது" வைரவன் கிண்டல் பண்ணினார்.

அங்கமுத்துக்கு அசடு வழிந்தது!

லெட்சுமி சிரித்துக் கொண்டே தலையைக் குனிந்து கொண்டாள்.

வைரவன் போகிற போக்கில் அங்கமுத்துவின் இடுப்பில் தொங்கிய சாவிக் கொத்தைக் கவனித்தார்.

அதைப் பார்த்து விட்ட அங்கமுத்து, "இ...இ...சாவிக் கொத்து...உங்கள் மகள் வந்ததும் அவள் கையில் கொடுத்து விடுவேன்" என்று பல்லைக் காட்டினாள்.

"அது சாவிக் கொத்தா? அல்லது உங்கள் வீட்டுக்காரர் குடுமியா என்று பார்த்தேன்! வேறொன்றுமில்லை!"

வைரவன் சிரித்துக் கொண்டே சென்று விட்டார்.

லெட்சுமிக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை. 'குபீர்' என்று சிரித்து விட்டாள்.

"என்னடி சிரிப்பு?" அங்கமுத்து புலியானாள்!

"ஒன்றும் இல்லை அத்தை" லெட்சுமி ஆட்டுக்குட்டி போல அடக்கமாக வாயைப் பொத்திக் கொண்டாள்.

"அவர் பெரிய வைர வியாபாரி மகளுக்கு வைரமா பூட்டப் போகிறார்! பொன்னும் பொருளுமா லெட்சுமியே என் வீட்டுக்கு வரப் போகிறாள்!"

அங்கமுத்து பூரித்துப் போய்ச் சொன்னாள்.

அவள் தன்னை குத்திக் காட்டுகிறாள் என்பதை லெட்சுமி கண்டு கொள்ளாமல் இல்லை.

"நீ பேருக்குத்தான் லெட்சுமி அஷ்ட லெட்சுமி! நீ அடுப்படி லெட்சுமி..."

அங்கமுத்து அப்பொழுதே கரித்துக் கொட்டத் தொடங்கி விட்டாள்.

"அஷ்டலட்சுமி என்றால், எல்லோருக்கும் இஷ்ட லட்சுமி தான்."

லெட்சுமி வேதனையுடன் பொருமிக் கொண்டு உள்ளே சென்றாள்.

சோபாவில் அமர்ந்த அங்கமுத்து, பேய்க்கதையைப் படிக்கவில்லை. வரப்போகிற மருமகள் வைரமா வருவாள்- லாரி லாரியாக சீர்வரும் என்று அந்தக் கனவில் ஆழ்ந்தாள்!

**மா**லைக் காற்று சோலைத் தென்றலாகக் குளிர்ந்து கொண்டு இருந்தது.

மன்னனும் பொற்கொடியும் கடல் மணலில் உலாவிக் கொண்டு இருந்தார்கள்.

இரு கைகளிலும் ஐஸ்கிரீம் கிண்ணங்கள்.

அதைக் காலிபண்ணிய பிறகுதான். "இப்படி உட்காருவோம்" என்று பொற்கொடி சொன்னாள்.

இருவரும் அமர்ந்தார்கள்.

"உங்கள் வீட்டில் எப்பொழுது என்னைப் பற்றிச் சொல்லப் போகிறீர்கள்?"

பொற்கொடி, நேரடியாகக் கேட்டாள்.

"பொற்கொடி, அதற்கு முன் உன்னிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும்" என்றான் மன்னன்.

"சொல்லுங்கள்" என்றாள் பொற்கொடி.

"உன்னை பார்க்க எனக்குப் பரிதாபமாக இருக்கிறது" என்றான் மன்னன் முகத்தை பாவம் போல வைத்துக் கொண்டு.

"ஏன், உங்கள் வீட்டில் சம்மதிக்க மாட்டார்கள் என்று நினைக்கிறீர்களா?"



நிச்சயம் சம்மதிப்பார்கள்! நீ பெரிய வைர வியாபாரியின் மகள் ஆயிற்றே. உன்னை மணந்து கொள்ள நான் மறுத்தாலும், உன்னை எப்படியும் மருமகள் ஆக்கிக் கொள்வதற்காக என் அம்மா இன்னொரு பிள்ளை பெறுவார்கள்!"

"பிறகு ஏன் என்னைப் பார்த்து பரிதாபப்படுகிறீர்கள்?"

"வந்து..."

"வந்து போய் என்று சந்து பொந்துகளில் நுழையாமல், நேரடியாக விஷயத்துக்கு வாருங்கள்."

பொற்கொடி கண்டிப்பாகப் பேசினாள்.

"என் அம்மா ஒரு மாதிரி..."

மன்னன் மழுப்பினான்.

"அப்படியென்றால்..."

"பெற்ற தாயை பேய்-பிசாசு என்று சொல்ல என்வாய் கூசுகிறது!"

"அடடே! உங்கள் அம்மா கொடுமைக்கார மாமியாரா?"

"என் அண்ணி என் அம்மாவிடம் மாட்டிக் கொண்டு படுகிறபாடு மத்தளம் படாது! நீயும் வந்து சிக்கிக் கொண்டு சித்திரவதைப் பட வேண்டுமா என்றுதான் யோசிக்கிறேன்."

"கவலையை விடுங்கள்."

பொற்கொடி கவலையற்று கலகல என்று சிரித்தாள்.

"ஏன்? என் அம்மாவை நினைத்தால் உனக்குப் பயமாக இல்லையா?" மன்னன் வியப்புடன் அவளை நோக்கினான்.

"நான் யார் தெரியும் அல்லவா?" அவள் கம்பீரமாகக் கேட்டாள்.

"யார்? பேய்-பிசாசுகளை அடக்கும் பூசாரிக் கிழவியா!"

"வைர வியாபாரி வைரவனின் ஒதே மகள்! பெரிய வீட்டுப் பெண்ணிடம் எந்த மாமியாரும் வாலாட்ட மாட்டா."

"ஏன்?"

"வாலை ஆட்டினால் ஒட்ட நறுக்கி விடுவாள் என்பது மாமியாருக்குத் தெரியும்! பேச்சுக்குப் பேச்சு! சொல் வீச்சுக்கு வீச்சு!"

"கத்திக்குக் கத்தி! இரத்தத்துக்கு இரத்தம்!"

"ஆமாம்! அதுமட்டும் அல்ல. பெரிய வீட்டுப் பெண்ணை ஏதாவது சொன்னால், பிறந்த வீட்டுக்குப் போய் விடுவாள் என்பது மாமியாருக்குத் தெரியும்."

"சரிதான் போடி என்பார்கள் என் அம்மா."

"நான் சும்மா போய்விட மாட்டேன் உங்களையும் 'இஸ்து'க் கொண்டு போய் விடுவேன்!"

"இஸ்துக் கொண்டு..."

"ஆமாம்."

"எங்கள் அம்மாவுக்கு சரியான வஸ்தாத் மருமகள் வர வேண்டும் என்று நினைத்தேன். அது நீ தான்! இன்னைக்கே அம்மாவிடம் பேசி விடுகிறேன்."

மன்னன் உற்சாகமாக உரைத்தான்.

"நீங்கள் ஒன்றும் பேச வேண்டாம். இன்று காலையில் என் அப்பாவே உங்கள் அம்மாவைப் பார்த்து எல்லாம் பேசி முடிந்துவிட்டார்!"

பொற்கொடி அலட்சியமாகச் சொன்னாள்.

"உண்மையாகவா?" நீர் யானை போல அவன் வாயைப் பிளந்தான்.

"ஆமாம்" அவள் அவன் வாயை மூடினாள்.

"என் அம்மா என்ன சொன்னார்களாம்?"

"பெண்கூடப் பார்க்க வேண்டியது இல்லை என்று சொல்லிவிட்டார்களாம்."

"தங்கக்கட்டியை சுமந்து கொண்டு வரும் கழுதைக்கு எந்தப் பட்டணத்து வாசலும் தானாகத் திறந்து கொள்ளுமாம்!"



"அப்படியானால் நான் கழுதையா!"

பொற்கொடி ஆவேசமாக அவனை மணலில் பிடித்துத் தள்ளி கையினால் அவன் மார்பில் குத்தினாள்!

அவள் கைகளைப் பிடித்து நிறுத்த மன்னன் முயற்சித்தான். அது முடியாமல் போகவே, அவளையே தன் மார்பில் தள்ளி அப்படியே கட்டி அணைத்துக் கொண்டான்.

ஆர்ப்பரித்துக் கொண்டு இருந்த அலைகடல், ஒரு கணம் ஓவியம் போல, அப்படியே நிலைத்து நின்றது!

## 18

காலை சிற்றுண்டி நேரம்.

மேசையைச் சுற்றி அனைவரும் அமர்ந்து இருந்தார்கள்.

லெட்சுமி பரிமாறிக் கொண்டு இருந்தாள்.

திடீர் என்று கயல்விழி, "எல்லோரும் ஒருமுறை ஜோராகக் கை தட்டுங்கள்" என்று அறிவித்தாள்.

"ஏன்? நீ வித்தை காட்டப் போகிறாயா!" என்று மன்னன் கேட்டான்.

"முதலில் கைதட்டுங்கள்" என்றாள் கயல்விழி.

"உய்..." என்ற விசில் அடித்துக் கொண்டு மன்னன் கை தட்டினான்.

அவனைத் தொடர்ந்து அங்கமுத்து, சுப்பிரமணியம், கண்ணன் ஆகியவர்களும் மெல்லக் கைதட்டினார்கள்.

கைதட்டல் ஓய்ந்ததும், கயல்விழி பேசினாள்.

"இதனால் சகலமான பேர்களுக்கும் அறிவிக்கப்படுவது என்னவென்றால்...டும்...டும்...டும்...இப்பொழுது மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு முக்கிய விஷயம் அறிவிக்கப் போகிறார்கள்...டும்...டும்...டும்..." என்று அவள் முரசு அறைந்தாள்!

எல்லோர் கழுத்தும் அங்கமுத்துவின் பக்கம் திரும்பியது.

அவள் பெருமிதத்துடன் புன்னகைத்துக் கொண்டே "நமது வீட்டுக்கு இரண்டாவது மருமகள் வரப் போகிறாள்" என்று கூறினாள்.

'த்சொ...த்சொ...!' பாவம், என்று அனுதாபப்பட்ட மன்னன், "அந்த அபாக்கியசாலி யார், அம்மா?" என்று விசாரித்தான்.

"அவள்பாக்கியசாலி. வைர வியாபாரி வைரவனின் மகள்" என்று அங்கமுத்து கம்பீரமாகச் சொன்னாள்.

இந்தப் பேச்சை காதில் வாங்கிக் கொள்ளாதவள் போல, லெட்சுமி பரிமாறும் வேலையில் ஈடுபட்டு இருந்தாள்.

'நமக்குத் தொடர்பு இல்லாத விஷயம்' என்பது போல சுப்பிரமணியமும், கண்ணனும் சாப்பிடத் தொடங்கி விட்டார்கள்.

"நாம் எப்பொழுது, அம்மா, பெண் பார்க்கப் போக வேண்டும்?" என்று கயல்விழி ஆசையாகக் கேட்டாள்.

அங்கமுத்து புருவங்களை நெறித்துக் கொண்டு அவளை நோக்கினாள். "நீ வைரம் பார்த்திருக்கிறாயா?"

"ஆமாம்" என்றாள் கயல்விழி.

"பிறகு ஏன் பார்க்க வேண்டும்?" அங்கமுத்து விறைத்துக் கொண்டு கேட்டாள்.

"அம்மா, சின்ன அண்ணாவுக்கு வைர மூக்குத்தியா வாங்கப் போகிறோம்!"

கயல்விழி அப்பாவித்தனமாகக் கேட்டாள்.

அதைக் கேட்டு, லெட்சுமிக்கு சிரிப்பு வந்தது. வாயை அடக்கிக் கொண்டாள்.



"மூக்குத்தி அல்ல; மூக்குக் கயிறு!" என்றான் மன்னன். "எனக்கு மூக்கணாங்கயிறு மாட்டப் போகிறார்கள்."

"அண்ணா! நீங்கள் பெண்ணைப் பார்க்க வேண்டாமா?"

உடன் பிறந்தோனை நோக்கி கயல்விழி கேட்டாள்.

"நான் ஏன் பார்க்க வேண்டும்? அம்மா பார்த்து செய்தால் சரிதான்!" என்றான் அந்தக் கள்ளன்!

அங்கமுத்து பூரித்துப் போனாள்! "அவன் என் மகன்!" என்று மகிழ்ந்தாள்.

"அம்மா, பெரிய அண்ணாவுக்கு மட்டும் ஆறு மாதமாக ஆயிரம் பெண் பார்த்தீர்களே?" என்றாள் கயல்விழி.

அங்கமுத்து அலட்சியமாக "ஊர்-பேர் தெரியாதவள் என்றால் போய்ப் பார்க்கத்தான் வேண்டும்" என்றாள்.

லெட்சுமி தலையை நிமிர்த்தி மாமியாரைப் பார்த்தாள்!

"அந்தப் பெண்ணின் பெயர் என்னம்மா?" என்று கயல்விழி வினவினாள்.

"பெயர்..." என்று அங்கமுத்து தடுமாறினாள்.

மன்னன் அவளுக்கு உதவிக்கு வந்தான். கோகினூர்... கோகினூர் வைரம்!"

"பெயரில் என்ன இருக்கிறது. கழுதைக்குக் கூடத்தான் முத்துமாலை என்று பெயர் வைக்கிறார்கள்" என்று அங்கமுத்து மழுப்பினாள். வைரவனிடம் பெண்ணின் பெயரைக் கேட்கக் கூட அவள் மறந்து விட்டாள்.

"ஆனால், அம்மா பெயர் முத்துமாலை அல்ல! வெறும் முத்துதான்!" என்றான் மன்னன்.

கயல்விழி "கொல்" என்று சிரித்து விட்டாள்!

"என்னடி சிரிப்பு வேண்டியிருக்கிறது?" அங்கமுத்து கர்ச்சித்தாள்!

உடனே எல்லாம் 'கப்சிப்' ஆகிவிட்டது.

"ஏண்டி நிற்கிறாய்? எனக்கு இரண்டு இட்டிலி போடு!" என்று அங்கமுத்து லெட்சுமி மீது பாய்ந்தாள்.

அவள் அவசரமாக ஐந்தாறு இட்டிலிகளை மாமியாரின் தட்டில் கொட்டினாள்.

ஓர் இட்டிலியை தொட்டுப் பார்த்த அங்கமுத்து, "நல்லவேளை தட்டில் கொட்டினாய். என் தலையில் கொட்டியிருந்தால், தலை இந்நேரம் சட்டினி ஆகியிருக்கும்! ஏண்டி இது இட்டிலியா! கருங்கல்லா?" என்று சீறினாள்.

லெட்சுமிக்கு முகம் சுண்டிவிட்டது.

"அந்தக் கல்லை ஏன் தின்னுகிறீர்கள்? இப்படிக் கொடுங்கள், அம்மா" என்று அந்தத் தட்டை மன்னன் தன் பக்கம் இழுத்தான்.

அவ்வளவு தான். அங்கமுத்து உடலை சிலிர்த்துக் கொண்டு, அந்தத் தட்டை வேகமாகத் தன் பக்கம் இழுத்துக் கொண்டாள். அவளே சாம்பாரும் ஊற்றிக் கொண்டாள். பாற்கடலில் மால் பள்ளி கொண்டது போல, சாம்பாரில் இட்டிலி மிதந்தது!

தட்டை காலி செய்த பிறகு தான், அங்கமுத்து வாயைத் திறந்தாள். "ஏண்டா மன்னா! முகூர்த்த நாள் வைத்து விடலாமா?"

"எனக்கு ஆட்சேபனை இல்லை, அம்மா. ஆனால்..." என்றான் மன்னன்.

அதற்குள் கயல்விழி குறுக்கிட்டு "அண்ணா பெண்ணைப் பார்க்க வேண்டாமா?" என்றாள்.

"வேண்டாம்" என்றான்; மன்னன்." பெரிய இடத்துப் பெண், மாப்பிள்ளையைப் பார்க்க வேண்டும் என்பாள்! என்னைப் பார்த்தால், 'போய் கடிதம் எழுதுகிறோம்' என்று சொல்லி விடுவாள்!



"உனக்கு என்னடா, சிங்கம்!" என்றாள், அங்கமுத்து.

"சிங்கனுக்கு சிங்கி தான் வர வேண்டும்!" என்ற மன்னன் எழுந்து நின்றான். அங்கமுத்துவை நோக்கிக் கையை நீட்டி, நாடகபாணியில், "அம்மா! உங்களை எச்சரிக்கிறேன்" என்றான்.

அங்கமுத்து கொஞ்சம் பயந்து தான் போனாள் "என்னடா சொல்லுகிறாய்?"

"அம்மா! அவள் பெரிய இடத்துப் பெண். பெரிய இடத்துப் பெண் என்றால், மாமியார் தலையில் மிளகாய் அரைப்பாள்! உங்களுக்கு சம்மதமா?"

மன்னன் குரலை உயர்த்திக் கொண்டு, மேடைப் பேச்சாளன் போல, மூக்கினால் பேசினான்.

"ஏழைப் பெண் என்றால், அடக்க ஒடுக்கமாக, என்கைக்கு அடங்கியிருப்பாள் என்று எல்லோரும் சொன்னீர்கள். ஆனால், என்ன ஆயிற்று? ஒரே வாய்! எதை எடுத்தாலும் எதிர்த்துப் பேசுகிறாள்!" என்று அங்கமுத்து புலம்பினாள்.

லெட்சுமி அதரங்களை கடித்துக் கொண்டாள்.

"அம்மா, இளைய மருமகள் வந்தால் தான், மூத்த மருமகளின் அருமை தெரியும்" என்றாள், கயல்விழி.

"பெரிய மனுஷி, வாயை மூடுடி!" என்று அங்கமுத்து அவளை அடக்கினாள். "வைர வியாபாரி வைரவன் மகள் தான் என் இரண்டாவது மருமகள்" என்று இறுதியாக அறிவித்தாள்.

"உங்கள் தலையெழுத்து அப்படியிருந்தால், மாற்றவா முடியும்! சரி!" என்றான், மன்னன்.

"அம்மாவை ஆதரிப்பவர்கள் எல்லோரும் கை தூக்குங்கள்" என்று சொல்லிக் கொண்டே கயல்விழி கையைத் தூக்கினாள்.

சுப்பிரமணியம், கண்ணன், மன்னன் மூவரும் கை தூக்கினார்கள்.

லெட்சுமிக்கு அந்த வீட்டில் ஓட்டு உரிமை இல்லை!

"நீங்களும் அம்மா பக்கம் சேர்ந்து விட்டீர்களா அண்ணா?" என்று மன்னனை நோக்கி கயல்விழி வியப்புடன் வினவினாள்.

"திருமணம் ஆகப் போகிறது அல்லவா? இனி நானும் வெறும் கை காட்டி மரந்தான்!" என்றான், மன்னன்.

சாப்பாட்டை முடித்துக் கொண்டு கூடத்தில் வந்து அமர்ந்தார்கள்.

"ஒரு நல்ல நாளாகப் பார்த்து, வைர வியாபாரி வைரவன் வீட்டுக்குப் போய், நிச்சயம் பண்ணிக் கொண்டு வந்து விட வேண்டும்" என்று கணவனிடம் அங்கமுத்து சொன்னாள்.

"மற்ற விஷயமெல்லாம்...?" அவர் அரைகுறையாகக் கேட்டார்.

"எல்லாம் நான் பேசி முடித்து விட்டேன்" என்றாள் அங்கமுத்து.

அப்பொழுது லெட்சுமியின் பெற்றோரான சண்முகமும் சுந்தரவடிவும் வந்தார்கள்.

அவர்களைப் பார்த்ததும், "வாருங்கள், மாமா வாருங்கள், அத்தை" என்று மன்னன் வாய் நிறைய வரவேற்றான்.

தாயைப் பார்த்த கன்று போல "அப்பா..." என்று அவர்களை நோக்கி துள்ளி ஓட லெட்சுமி முய்றசித்தாள்.

அங்கமுத்து குதிரை போல கனைத்தாள்!

போன வேகத்தில் லெட்சுமி பின் வாங்கினாள்.

அவர்கள் அருகில் வந்ததும், "உட்காருங்கள் மாமா! உட்காருங்கள், அத்தை" என்று கயல்விழி அன்பு ஒழுகக் கூறினாள்.

"லெட்சுமி எப்படியிருக்கிறாள் என்று பார்த்து விட்டுப் போக வந்தோம்" என்றாள், சுந்தரவடிவு.



அதற்குள் சண்முகம், "லெட்சுமி நன்றாக இருக்கிறாயா, அம்மா?" என்று பாசத்துடன் கேட்டார்.

"மகள் தேய்ந்து விட்டாளா என்று பார்க்க வந்தீர்களாக்கும்? பார்த்துக் கொள்ளுங்கள்!"

சிரித்துக் கொண்டே பேசுவது போல அங்கமுத்து குத்தலாகக் கூறினாள்.

"செருப்பு என்றால், இந்நேரம் தேய்ந்து போயிருக்கும்" என்றான் மன்னன்.

"மாடாக உழைத்து ஓடாகத் தேய்கிறாளாக்கும்!" என்று அங்கமுத்து இடக்காகச் சொன்னாள்.

"சம்பந்தி அம்மா அவள் ஓடாகத் தேய்ந்தாலும் நாங்கள் கவலைப் படமாட்டோம். ஏனென்றால், அவள் இப்பொழுது உங்கள் பெண்" என்றாள் சுந்தரவடிவு.

"அவள் வீட்டுப் பெண்ணா? மாட்டுப் பெண்தானே! மாடாகத் தான் உழைக்க வேண்டும்" என்றார் சண்முகம்.

"அவள் மாடாக உழைத்து, சூடாக ஆக்கிக் கொட்டு வதைத்தான் நாங்கள் கொட்டிக் கொள்ளுகிறோமாக்கும்" என்றாள் அங்கமுத்து.

"அம்மா, உங்களுக்கு காப்பியே ஒரு அண்டா வைக்க வேண்டுமே" என்றாள் கயல்விழி.

"உன் நாக்கை அறுப்பேன்!" என்று அங்கமுத்து கர்ச்சித்தாள்.

பேச்சு மிகவும் சூடாகிவிடவே, சுப்பிரமணியம் வாயைத் திறந்தார் "லெட்சுமி, அவர்களை உள்ளே அழைத்துப் போய் சாப்பிடச் சொல்லம்மா" என்றார்.

உடனே அங்கமுத்து, "அவர்கள் வீட்டில் சாப்பாடு இல்லாமலா இங்கே வந்திருக்கிறார்கள்? மகளைப் பார்க்க வந்திருக்கிறார்கள். அப்படித் தானே சம்பந்தி?" என்று அசடு வழிய பல்லைக் காட்டினாள்.

"அப்படித்தான் மகளை கண் குளிரக் கண்டு களித்து விட்டோம் அதுவே வடை பாயசத்துடன் உண்டு களித்தது போல இருக்கிறது!" என்று அழுத்தமாகச் சொன்ன சண்முகம், "ஏவ்!" என்று பலமாக ஏப்பம் விட்டார்!

"வருகிறோம்" என்று அதே மூச்சில் எழவும் செய்தார்.

பெரிய கும்பிடாகப் போட்டுவிட்டு, வெளியே நடந்தார்.

சுந்தர வடிவு மகளை ஏக்கத்துடன் ஒரு முறை பார்த்து விட்டு, கணவனை பின் தொடர்ந்தாள்.

லெட்சுமி விம்மி அழுதாள்.

சுப்பிரமணியம் மனைவியை முறைத்துப் பார்த்தார்.

அங்கமுத்து அலட்சியமாக முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

அந்த ஊமை நாடகத்தைக் கவனித்த மன்னன், "அது பனங்காட்டு நரி" என்றான்.

வெளியில், சண்முகமும், சுந்தரவடிவும் வாசலில் இருந்து இறங்கிக் கொண்டு இருந்தார்கள்.

அப்பொழுது வைரவன் காரில் வந்து இறங்கினார்!

## 19

"வாங்க...வாங்க...வாங்க...வாங்க..."

பல்லெல்லாம் தெரிய பணிவாக வரவேற்றாள், அங்கமுத்து.

"வாங்க வாங்கக் கடன்தான்" என்று சிரித்த வைரவன், "அம்மா, எனக்கு ஓர் ஆசை. உங்கள் பல்லை தட்ட வேண்டும்!" என்றார்.



"ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்?"

அங்கமுத்து பயத்துடன் வேகமாக வாயை மூடிக் கொண்டாள்.

"நீங்கள் எவ்வளவு அழகாகச் சிரிக்கிறீர்கள்! இந்தப் பல்லை தட்டிவிட்டு, தங்கப்பல் கட்டினால்...ஆகா. இன்னும் எவ்வளவு அழகாக இருக்கும்!" என்று வைரவன் புகழ்ந்தார்.

"தங்கத்தில் என்ன? வைரத்தில் வேண்டுமானாலும் கட்டிவிடலாம்!"

அங்கமுத்துக்கு மீண்டும் வாயெல்லாம் பல்!

"அதுதான் சரி" என்று வைரவன் ஆமோதித்தார். "இதுவரை முத்துப்பல் அழகி எத்தனையோ பேர் இருந்திருக்கிறார்கள். ஆனால், இந்த உலகிலேயே முதல் வைரப்பல் அழகி நீங்களாகத்தான் இருப்பீர்கள்!"

அங்கமுத்துக்கு உச்சந்தலையில் பனிக்கட்டியை வைத்தது போல இருந்தது! புழுப் போல நெளிந்தாள்.

"உட்காரலாமா?" நின்று கொண்டு இருந்த வைரவன் கேட்டார்.

"இன்னுமா நீங்கள் நிற்கிறீர்கள்? உட்காருங்கள்! உட்காருங்கள்!" என்று அங்கமுத்து அவசரமாகச் சொன்னாள். "இது உங்கள் வீடு. சுதந்திரமாக உட்காரலாம். என்ன சாப்பிடுகிறீர்கள்?"

"அடுப்படி எங்கே இருக்கிறது?" கேட்டுக் கொண்டே எழுந்து நின்று, வைரவன் சுற்றுமுற்றும் பார்த்தார், "இது என் வீடு. எனக்கு வேண்டியதை நானே சுதந்திரமாக எடுத்து சாப்பிட்டுவிட்டு வருகிறேன்."

"வேடிக்கையாகத்தான் பேசுகிறீர்கள். உட்காருங்கள்" என்று அங்கமுத்து புன்னகைத்தாள். "லெட்சுமி..." என்று அழைத்துக் கொண்டே திரும்பினாள்.

ஆனால், அவளைக் காணோம்.

தன் பெற்றோருக்குக் கிடைத்த அவமதிப்பை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது போல, அவள் அப்பொழுதே அடுப்படிக்குப் போய் விட்டாள்.

"லெட்சுமி...லெட்சுமி..."

அங்கமுத்து குரல் கொடுத்தாள்.

அடுப்படியில் இருந்த லெட்சுமியின் காதில் அது விழுந்தது. ஆனால், அவள் காதில் விழாதவள் போல வேலை பார்த்துக் கொண்டு இருந்தாள்.

"லெட்சுமி...லெட்சுமி..."

மீண்டும் குரல் கேட்டது.

அதற்கு மேல் மாமியாரை அலட்சியப்படுத்த அவளால் முடியவில்லை. சேலை முந்தானையால் முகத்தைத் துடைத்துக் கொண்டே, கூடத்துக்கு ஓடி வந்தாள்.

வந்ததும், "வணக்கம் அய்யா," என்று வைரவனை நோக்கி கைகூப்பி புன்னகைத்தாள்.

"அய்யாவுக்கு சாப்பிட ஏதாவது கொண்டு வாம்மா" அங்கமுத்து கனிவாகச் சொன்னாள்.

"ஒரு தம்ளர் மோர் போதும்" என்றார் வைரவன்.

"சரி, அய்யா" என்று சொல்லிவிட்டு லெட்சுமி உள்ளே சென்றாள்.

சுப்பிரமணியம், கண்ணன், மன்னன் கயல்விழி நால்வரும் இதுவரை நடந்த நாடகத்தை இமைக்காமல் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். வந்திருப்பவர் யார் என்று அவர்களுக்குத் தெரியாது.

வைரவன்தான். "அம்மா, இவர்களுக்கு நீங்கள் என்னை அறிமுகப்படுத்தவில்லையே" என்று நினைவுபடுத்தினார்.



அதன்பின்தான் அங்கமுத்து, "இவர்தான் வைர வியாபாரி வைரவன்" என்று அவர்களுக்கு அவரை அறிமுகப் படுத்தினாள்.

"ஓ! வைரமா! அதுதான் என் அம்மா இப்படிச் சிரிக்கிறார்கள்!" என்று மன்னன் கேலி செய்தான்.

"அய்யா, நீங்கள் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வாருங்கள் அப்பொழுதுதான் எங்கள் அம்மா சிரிப்பதை நாங்கள் பார்க்க முடியும்" என்றாள் கயல்விழி.

வைரவன் சிரித்துக் கொண்டார். "அம்மா, இவர்கள் எல்லாம் யார் என்று சொல்லவில்லையே" என்று அங்கமுத்துவின் பக்கம் திரும்பினார்.

"சொல்லவில்லையா?" என்று அங்கமுத்து கணவரை நோக்கிக் கையை நீட்டினாள். "அதுதான் அவர்."

சுப்பிரமணியம் அமர்ந்து இருந்த சோபாவுக்கு அடியில் வைரவன் எதையோ தேடினார்.

"என்ன தேடுகிறீர்கள்?" என்று மன்னன் கேட்டான்.

"அது என்று சொன்னீர்களே; நாய்க்குட்டி, பூனைக்குட்டி ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தேன்" என்றார் வைரவன்.

அங்கமுத்துக்கு வெட்கமாகப் போய்விட்டது.

அப்பொழுது லெட்சுமி மோர் கொண்டு வந்தாள். வைரவன் கையில் தந்தாள்.

அவர் குடித்து முடித்ததும், தம்ளரை வாங்கிக் கொண்டு உள்ளே போக லெட்சுமி முயற்சித்தாள். இந்தப் பேச்சில் கலந்து கொள்ளும் மன நிலையில் அவள் இல்லை.

ஆனால், அங்கமுத்து விடவில்லை "இப்படி உட்காரம்மா" என்று அவளைப் பிடித்து இழுத்து தன் பக்கத்தில் அமர்த்திக் கொண்டாள்!

"அண்ணா, அம்மாவுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா என்ன?" கயல்விழி வியப்புடன் மன்னனிடம் வினவினாள். "அண்ணியை தன் பக்கத்தில் உட்காரவைத்துக் கொண்டார்களே!"

அங்கமுத்து நெற்றிக் கண்ணை திறந்தாள்!

கயல்விழி பயந்துபோய் வாயை மூடிக் கொண்டாள்.

"என்ன முடிவு செய்தீர்கள்?"

எல்லோரையும் பார்த்து பொதுப் படையாக வைரவன் கேட்டார்.

"எங்கள் எல்லோருக்கும் சம்மதம்" என்று அங்கமுத்து சொன்னாள்.

"நாங்கள் பெண்ணைப் பார்க்க வேண்டும்" என்றாள், கயல்விழி.

"சும்மா இருடி" என்று அங்கமுத்து அவளை அடக்கினாள். "வைர வியாபாரி வைரவனின் மகள்... அவளைப் பார்க்கவும் வேண்டுமோ?"

"அம்மா, வைரத்தைக்கூட பார்த்துத்தான் வாங்குவார்கள்" என்றாள், கயல்விழி.

"நம்ம வீட்டு சாப்பாடு உனக்குக் கசந்து விட்டதா? ஊருக்குள் புகுந்து நாள்தோறும் ஒரு வீட்டில் சாப்பிட வேண்டுமா?" என்று மன்னன் குறுக்கிட்டுக் கூறினான். "நான் பொறுக்கி அல்ல! அதாவது, பொம்பளை பொறுக்கி!"

"இவரைப் போலத்தான் இவர் மகள் இருப்பாள்" என்றாள், அங்கமுத்து.

"அய்யய்யோ! அவ்வளவு அசிங்கமா?"

மன்னன் விளக்கெண்ணெய் குடித்தவன் போல ஆனான்!

"இல்லை, இல்லை, என் மகள் மிகவும் அழகு அவளுடைய அம்மாவைப் போல. 'நூலைப் போல சேலை; தாயைப் போல பிள்ளை' என்று தானே சொல்லுவார்கள்" என்றார் வைரவன்.



"அப்படியானால், நான் அசிங்கமாக இருக்கிறேனா" மன்னன் அழுது வடிந்தான்.

லெட்சுமிக்கு சிரிப்புப் பொங்கியது!

"அது போகட்டும். மாப்பிள்ளைக்கு என்ன செய்வீர்கள்?" பெரிய கிழவி போல கயல்விழி கேட்டாள்.

"பத்து லட்ச ரூபாய் ரொக்கம்...பத்து விரல்களிலும் வைர மோதிரம்... அரண்மனை போல பங்களா... அழகாக செவர்லெட்" கார்... ஐரோப்பாவில் தேனிலவு..."

வைரவன் அடுக்கிக் கொண்டே வந்தார்.

அங்கமுத்து "ஆ" என்று வாயைப் பிளந்து கொண்டே வந்தாள்!

"இதெல்லாம் என்னிடம் எதிர் பார்க்காதீர்கள்" என்று வைரவன் முடித்தார்!

அவ்வளவுதான், அங்கமுத்து பலூன் போல வெடித்துப் போனாள்!

"என் வீட்டில் இரண்டு நேரம் சோறு போட்டு, இருவரையும் விரட்டிவிட்டு விடுவேன். என் காலத்துக்குப் பிறகு எல்லாம் அவர்களுக்குத்தானே?" என்றார், வைரவன்.

"எல்லாம் எங்கே ஓடிப்போகும்" என்று அங்கமுத்து அசடு வழிந்தாள்.

"உங்களுக்கு சொத்து பத்துக்கள் எவ்வளவு இருக்கின்றன!" என்று கயல்விழி கேட்டாள்.

"நீ என்ன, வருமான வரி அதிகாரியா?" என்று மன்னன் அவளை கிண்டல் செய்தான்.

"என் சொத்துக்களுக்கு வருமான வரி இலாகா சர்டிபிகேட்டு இருக்கிறது. என் உடம்பில் பத்து இல்லை! அதற்கு வேண்டுமானால், டாக்டரிடம் சர்டிபிகேட்டு வாங்கித் தருகிறேன்" என்று வைரவன் சிரித்தார்.

"பெண்ணுக்குப் பாடத் தெரியுமா?" கயல்விழி தான் மீண்டும் கேட்டாள்.

"வாயை மூடுடி!" என்று அங்கமுத்து அவளைக் கண்டித்தாள்.

"அதனால் என்ன? தாயைப் போல பிள்ளை!" என்றார், வைரவன். "ஏதாவது பாக்கியிருந்தால், அதையும் இப்பொழுதே கேட்டுக் கொள்ளம்மா."

"இன்னும் ஒரே ஒரு கேள்வி" என்று கயல்விழி குழைந்தாள். "முகூர்த்தம் என்றைக்கு?"

"அடுத்த 16-ல் நல்ல முகூர்த்தம் இருக்கிறது" என்றார், வைரவன்.

"அதிலேயே வைத்துக் கொள்ளுங்கள்" என்றாள், அங்கமுத்து.

"மிகவும் மகிழ்ச்சி. வருகிறேன்" என்று வைரவன் எழுந்தார்.

எழுந்து நின்று கொண்டு, "ஆமாம், இன்று காலையில் உங்கள் வீட்டில் என்ன சாப்பாடு! கொழுக்கட்டையா?" என்று கேட்டார்.

"இல்லையே" என்றான், மன்னன்.

"பிறகு ஏன் அவர்கள் இருவரும் வாயையே திறக்க வில்லை!" என்று சுப்பிரமணியத்தையும், கண்ணனையும் வைரவன் சுட்டிக் காட்டினார்.

"அவர்கள் இருவரும் சாப்பிட மட்டுந்தான் வாயைத் திறப்பார்கள்" என்றாள், கயல்விழி.

"பொய் சொல்லாதேடீ கொட்டாவி விடுவதற்கும் வாயைத் திறப்பார்கள்!!" என்றான், மன்னன்.

"வாயைக் கட்டுவது எப்படி என்ற வித்தையை என் மகளுக்கும் கொஞ்சம் சொல்லிக் கொடுங்கள்!"

அங்கமுத்துவிடம் இரகசியமாகச் சொல்லிக் கொண்டே வைரவன் நடையைக் கட்டினார்!



## 20

அங்கமுத்துவின் இடுப்பில் ஒரு கயிற்றைக் கட்டி, பம்பரம் போல ஆட்டிவிட்டால் எப்படியிருக்கும்? அப்படி சுழன்று கொண்டு இருந்தாள்!

திருமண வேலை என்றால் சும்மாவா? அதுவும், வைர வியாபாரி வைரவன் வீட்டு சம்பந்தம் ஆயிற்றே! அவருக்கு ஈடு கொடுக்க வேண்டாமா?

அவரைவிட ஒரு படி சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று அங்கமுத்து ஆசைப்பட்டாள். வேலைக்காரர்களை வைரவன் வீட்டுக்கு அனுப்பி, 'ஒற்று' அறிந்துவரச் செய்தாள்! அவர் செய்ததைவிட மேலாகச் செய்தாள்.

வைரவன் வீட்டு முன்னே அலங்காரப் பந்தல் போட்டார். அங்கமுத்துவோ தெரு முழுக்க பந்தல் போட்டாள்! பந்தலை அலங்காரம் செய்வதிலும் போட்டி! அவர் வைரப் பந்தல் என்றால், அங்கமுத்து முத்துப் பந்தல் அமைத்தாள்!

முகூர்த்தத்துக்கு இன்னும் ஓர் இரவுதான் இருந்தது.

அங்கமுத்து கொக்காகப் பறந்து கொண்டு இருந்தாள்! வேட்டை நாய்போல வேலைக்காரர்களை விரட்டினாள்! அவள் எடுத்துக் கொண்ட முயற்சியைப் பார்த்தால், அவள் மாப்பிள்ளை வீட்டுக்காரியா, பெண் வீட்டுக்காரியா என்று சந்தேகப்பட வேண்டியிருந்தது!

ஓவியன் ஒருவன் தான் வரைந்த படத்தை இறுதியாகப் பார்த்து, அங்கங்கே வண்ணம் பூசி அழகு ஊட்டுவது போல, அங்கமுத்து எல்லா வேலைகளுக்கும் இறுதி வடிவம் கொடுத்துக் கொண்டு இருந்தாள்.

திருமண வேலைகளில் யாரையும் தலையிட அவள் அனுமதிக்கவில்லை. தானே எல்லா வேலைகளையும் கவனித்துக் கொண்டாள். குறிப்பாக, லெட்சுமியை ஒதுக்கியே வைத்தாள்.

அதற்காக யாரும் ஒதுங்கிப் போய்விடவில்லை. அப்படிப் போய் விட்டால், "எல்லோரும் எங்கே தொலைந்து போனீர்கள்? நான் ஒருத்திதான் நாயாக அலைய வேண்டுமா?" என்று அங்கமுத்து கூச்சல் போடுவாள் என்பது அவர்களுக்குத் தெரியும்! ஆகவே, அவள் கண்ணில் படும்படி அங்கங்கே நின்று கொண்டு இருந்தார்கள்.

லெட்சுமி அடிக்கடி காப்பி கொண்டுவந்து மாமியாருக்குக் கொடுத்தாள்.

ஒருமுறை அங்கமுத்து காப்பி பருகிக்கொண்டு இருந்த பொழுது, மணி பத்து அடித்தது.

பாதி காப்பியைக் கையில் வைத்துக் கொண்டே மன்னனை அழைத்தாள்.

"நாளை காலையில் நீ சீக்கிரம் எழ வேண்டுமே? போய், படுத்துக்கொள். நாளை மணமேடையில் தூங்கி விழாதே" என்றாள்.

"நான் உங்களைப் போல இல்லை, அம்மா" என்று மன்னன் கேலியாகச் சொன்னான்.

அங்கமுத்து திருமணம் நடந்த பொழுது, அதிகாலை ஐந்து மணிக்கு முகூர்த்தம். மணமேடையில் உட்கார்ந்தபடி தான் தூங்கிவிட்டதாக அங்கமுத்துவே சொல்லியிருக்கிறாள்!

"நாளை தூங்க முடியாது, அண்ணா. இன்று இரவே நன்றாகத் தூங்கிக் கொள்ளுங்கள்" என்று கயல்விழி அண்ணனை கிண்டல் செய்தாள்.

அவள் அருகில் நின்ற லெட்சுமி, அவளை மெல்லக் கிள்ளினாள்.



மன்னன் அதைப் பார்த்துவிட்டான். "இந்தக் காலத்தில் எல்லாம் பிஞ்சிலே பழுத்துவிடுகின்றன, அண்ணி!" என்றான்.

"எல்லோருமே போய்ப் படுங்கள். போங்கள்" என்று அங்கமுத்து விரட்டினாள்.

அத்தனை பேரும் மாடிப்படிகளை நோக்கிச் சென்றார்கள்.

லெட்சுமியின் படுக்கை அறை.

ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டு லெட்சுமி கட்டிலில் அமர்ந்தாள்.

அவள் மடியில் தலைவைத்து கண்ணன் படுத்துக் கொண்டான்.

"லெட்சுமி! நாளை நம் வீட்டுக்கு இன்னொரு மருமகள் வந்து விடுவாள்" என்றாள்.

"அதை நினைக்க நினைக்கத்தான் எனக்கு இன்றைக்கே தூக்கம் வரவில்லை" என்றாள், லெட்சுமி.

"ஏன்" கண்களை நிமிர்த்தி, கண்ணன் அவள் முகத்தைப் பார்த்தான்.

"மிகப் பெரிய இடத்தில் இருந்து மருமகள் வருகிறாள். அதற்காக நானும் பெருமைப்படத் தான் செய்கிறேன். ஆனால், அவள் வந்த பின், அவளை காட்டிக் காட்டி அத்தை என்னை சுட்டுக் கொன்று கொண்டே இருப்பார்கள்."

"நீ என்ன சொல்லுகிறாய், லெட்சுமி?"

"அவள் போட்டு இருக்கிற வைர நெக்லஸ் பார்த்தாயா? உன்னிடம் ஒரு வைர மூக்குத்தியாவது உண்டா? அடேயப்பா அவள் கொண்டு வந்திருக்கும் வெள்ளிப் பாத்திரத்தைப் பார்! ஒரு வெள்ளிக் கிண்டியாவது நீ கொண்டு வந்தாயா? இப்படி ஒவ்வொன்றுக்கும் அத்தை இடித்துக் காட்டுவார்கள்."

"அப்படியானால், உனக்கு இந்த சம்பந்தம் பிடிக்க வில்லையா?"

"சேசே! நான் இந்தக் குடும்பத்தில் ஒருத்தி. நானும் பெருமைப் படவே செய்கிறேன். உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? தம்பி இந்தப் பெண்ணை காதலிக்கிறாராம்! தம்பியே என்னிடம் தனியாகச் சொன்னார்."

"திருட்டுப் பயல்! அதுதான் பெண்ணைக் கூடப் பார்க்காமல், திருமணத்துக்கு ஒப்புக் கொண்டானா?"

அவர்கள் பேசிக் கொண்டு இருந்த பொழுதே 'திடீர்' என்று விளக்கு அணைந்தது!

மின்வெட்டு வந்ததில் இருந்தே இப்படித் தான் அடிக்கடி விளக்கு தானே அணைந்து கொள்ளுகிறது. மீண்டும் மின்சாரம் எப்பொழுது வரும் என்று சொல்ல முடியாது.

"லெட்சுமி" என்று கண்ணன் அவளை கட்டி அணைத்துப் பிடித்துக் கொண்டான்.

"என்ன இது விடுங்கள்!" என்று அவள் திமிறினாள் அவனைப் பிடித்துத் தள்ளினாள்.

அவனோ நண்டுப்பிடி போட்டு அவளைப் பிடித்தான்!

அந்த இன்பப் பிடியில் அவள் மயங்கிக் கிடந்தாள்.

"லெட்சுமி..."

"உம்..."

"அமெரிக்காவில் ஒரு நகரத்தில் இப்படித்தான் ஓர் இரவு முழுவதும் விளக்கு அணைந்துவிட்டது. அதன் விளைவு என்ன தெரியுமா?"

"என்ன?"

"அடுத்த பத்தாவது மாதம் அந்த ஊரில் உள்ள அத்தனை பெண்களும் ஒரு பிள்ளை பெற்றுவிட்டார்கள்."

லெட்சுமி வெட்கத்துடன் அவனை இறுக அணைத்துக் கொண்டாள்!

அலங்காரக் காரில் மாப்பிள்ளை வந்து இறங்கினார்.



வைரவன் மாலையிட்டு மன்னனை வரவேற்றார். அவனுக்கு வைர மோதிரம் ஒன்று அணிவித்து, உள்ளே அழைத்துப் போனார்.

திருமணப் பந்தலில் ஒரே கூட்டம். உறவினர்களும் நண்பர்களும் நிறைந்து வழிந்தார்கள்.

"ரெயில்வே வேலை நிறுத்தத்தால், இன்னும் பல பேர் வரவில்லை. அவர்களும் வந்திருந்தால் பந்தல் போதாது" என்று வைரவன் சொல்லிக் கொண்டு இருந்தார்.

அங்கமுத்து நேராக பெண் அலங்காரம் நடந்து கொண்டு இருந்த அறைக்குப் போய் விட்டாள்.

அங்கே ஒரு பெண்கள் பட்டாளமே இருந்தது! அவர்கள் அத்தனை பேரும் சேர்ந்து, பொற்கொடியை அலங்காரம் செய்து கொண்டு இருந்தார்கள்.

வானத்து நட்சத்திரங்களைப் பிடித்து வந்து உடல் முழுக்கப் பதித்தது போல பொற்கொடியின் மேனி மின்னிக் கொண்டு இருந்தது!

அத்தனையும் அசல் வைரங்கள்!

அதைப் பார்த்து அங்கமுத்து பூரித்துப் போனாள்!

"ஏ பெண்டுகளா? விலகிக் கொள்ளுங்கள்!"

அங்கமுத்து அதிகாரம் பண்ணிக்கொண்டே இரண்டு கையாலும் இரண்டு பெண்களை இடித்துத் தள்ளிக் கொண்டு, பொற்கொடியின் முன்னே போக முயற்சி செய்தாள்.

இடிபட்ட பெண்களில் ஒருத்தி, அந்த வலி தாங்காமல் "ஏ கிழவி! நீ யார்?" என்று ஆத்திரத்துடன் அவளைப் பிடித்து நிறுத்தினாள்.

அவ்வளவுதான், அங்கமுத்து அடிபட்ட புலியானாள்! "நீ யாரடி என்னை யார் என்று கேட்க?" என்று கர்ச்சித்துக் கொண்டே சேலையை வரிந்து கட்டினாள்.

இதைப் பார்த்த ஒரு கன்னி, "மாப்பிள்ளை வீட்டுக்காரி போலிருக்கிறது. அதுதான் அதிகாரம் கொடிகட்டிப் பறக்கிறது" என்றாள்.

"கல்யாணக் கும்பலில் இப்படித்தான் சில பேர் புகுந்து, பாம்புக்குத் தலையையும், மீனுக்கு வாலையும் காட்டிவிட்டு, அகப்பட்டதை சுருட்டிக் கொண்டு போய்விடுவார்கள்" என்று, இடிபட்ட பெண் கூறினாள்.

அங்கமுத்துக்கு ஆவேசம் வந்து விட்டது. "என்னடி சொன்னாய்?" என்று அவள் கூந்தலைப் பிடித்து இழுத்தாள். "நான் திருடியா? உன் நாக்கை அறுத்துவிடுவேன்!" என்று அவள் குமட்டில் ஒரு குத்துவிட்டாள்!

அவ்வளவுதான், அங்கேயிருந்த அத்தனை பெண்களும் அங்கமுத்துவை சுற்றி வளைத்துக் கொண்டார்கள். அடிதடி பலமாயிற்று! அங்கமுத்து ஒற்றை என்றாலும் சளைக்கவில்லை.

அப்பொழுது 'பெண் அலங்காரம் முடிந்து விட்டதா?' என்று பார்க்க, அங்கே வைரவன் வந்தார்.

அங்கமுத்து அடிபடுவதைப் பார்த்ததும் பதட்டத்துடன் ஓடி வந்தார். பெண்களை விலக்கி விட்டார்.

"இந்த அம்மாவை உங்களுக்குத் தெரியாதா? இவர்கள் தான் பொற்கொடியின் மாமியார்" என்று அவர் கூறினார்.

அடிதடியில் இறங்கிய பெண்கள், அஞ்சி ஒதுங்கினார்கள்.

"அதுதான் அதிகாரம் கொடி கட்டிப் பறந்து இருக்கிறது!" அடிபட்ட பெண் கூறினாள்.

இன்னொரு பெண் அவள் கிறிஸ்துவப் பெண் போலும்- மார்பில் சிலுவை இட்டுக் கொண்டு, பரமண்டலத்தில் இருக்கும் எங்கள் பரம பிதாவே..." என்று பொற்கொடிக்காக ஜெபித்தாள்!

"முகூர்த்தத்துக்கு நேரமாகி விட்டது. பெண்ணை அழைத்துக் கொண்டு வாருங்கள்" என்ற வைரவன் அங்க முத்துவை கூட்டிக் கொண்டு, முன்னே நடந்தார்.



## 21

அங்கமுத்து சூடுபட்ட பூனை ஆகிவிட்டாள். ஆகவே, திருமணம் அமைதியாக முடிந்தது.

பொற்கொடி வைரமாக மின்னினாள். உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை வைரம், செருப்பு முதல் சேலை வரை எல்லாவற்றிலும் வைரம் பின்னப்பட்டு இருந்தது. அதைப் பார்த்ததும் அங்கமுத்து வாயடைத்துப் போனாள்.

ஆனால், ஒரு வைரக் குவியல் போல மணமேடைக்கு பொற்கொடி நடந்து வந்ததைப் பார்த்ததும், மன்னன் வாயைப் பிளந்தான். அவன் அருகில் வந்து அமர்ந்த பொற்கொடி, "வாயை மூடுங்கள், ஈ நுழையப் போகிறது" என்று கேலி செய்தாள்!

"கோகினூர் வைரம் போல இருக்கிறாய்!" என்று மன்னன் மகிழ்ச்சியுடன் அவள் தொடையை இரகசியமாகக் கிள்ளினான். "இந்த வைரம் உங்களுக்குத்தான்" என்று பொற்கொடியும் அவனைக் கிள்ளத் தவறவில்லை.

பொற்கொடியின் அருகில் மன்னன் கூழாங்கல் போல ஆகிவிட்டான்! திருமணத்துக்கு வந்த அத்தனை பேரும், பொற்கொடியைத்தான் வைத்த கண் வாங்காமல் பார்த்தார்கள்.

"சுற்றிப் போட வேண்டும்" என்று அங்கமுத்து சொல்லிக் கொண்டாள்.

லெட்சுமி பெருமூச்சு விட்டாள். அவளது எதிர்காலம் இருண்டு காணப்பட்டது.

முகூர்த்தம் முடிந்ததும், விருந்து தொடங்கியது.

அங்கமுத்து முதல் பந்தியில் அமர்ந்தாள்.

வைரவன் அவள் அருகிலேயே இருந்து, அவளை சிறப்பாகக் கவனித்தார்.

இனிப்பே நாலைந்து வகை. அல்வா, லட்டு, மைசூர்பாகு, பாதுசா என்று வரிசை வரிசையாக வந்தன.

அங்கமுத்து ஆசையோடு, அல்வாவை எடுத்து வாயில் போட்டாள்.

ஒரே உப்பு!

"தூ" என்று துப்பினாள்!

"என்ன... என்னம்மா...?" என்று வைரவன் கேட்டார்.

"அல்வாவுக்கு சர்க்கரை போட்டார்களா? உப்புப் போட்டார்களா?"

அவள் முகம் விளக்கெண்ணெய் குடித்தது போல ஆகி விட்டது!

"டேய்" என்று வைரவன் வேலைக்காரனை அதிகாரத் தோடு அழைத்தார். "அல்வாவில் உப்புப் போட்டது யாருடா?"

"நான் உங்கள் உப்பை தின்பவன், சாமி. நான் அப்படிச் செய்வேனா?" என்று வேலைக்காரன் மிரண்டான்.

"ஓகோ! உப்பைத் தின்பவன், அதனால் உப்பைப் போட்டாயா! போடா, கழுதை" என்று வைரவன் அவனை விரட்டினார்.

பிறகு, "நீங்கள் லட்டு சாப்பிடுங்கள், அம்மா" என்று அங்கமுத்துவிடம் பரிவுடன் கூறினார்.

அங்கமுத்து லட்டை புட்டாள். ஆனால், அது உடைய வில்லை. கல்லுப் போல இருந்தது!

"இருங்கள், அம்மா. சுத்தியல் எடுத்துக் கொண்டு வருகிறேன்!" என்று வைரவன் போனார்.



அவர் அப்பால் போனதும், ஆளை விட்டால் போதும் என்று அங்கமுத்து எழ முயற்சி செய்தாள்.

அப்பொழுது, "என்ன, அத்தை, அதற்குள் எழுந்து விட்டீர்கள்?" என்று கேட்டுக் கொண்டே பொற்கொடி வந்தாள். "உட்கார்ந்து நன்றாக சாப்பிடுங்கள்."

"நீ சொன்னதே எனக்கு வயிறு நிறைந்துவிட்டது, தங்கமே" என்று சொல்லிக் கொண்டே அங்கமுத்து எழுந்தாள்.

"கொஞ்சம் மோர் விட்டாவது சாப்பிடுங்கள், அத்தை" என்று பொற்கொடி அவளைப் பிடித்து அமரச் செய்தாள்.

"சோறு கொண்டா, மோரு கொண்டா" என்று பொற்கொடி ஆட்களை ஏவினாள்.

தலைவிதியை நொந்து கொண்ட அங்கமுத்து மோர்ச் சோறு சாப்பிட்டாள்!

அப்பொழுது சுத்தியலும் உளியுமாக வைரவன் வந்தார்.

"இதெல்லாம் எதற்கப்பா?" பொற்கொடி வியப்புடன் வினவினாள்.

"யாருக்காவது விக்கல் எடுத்தால் குத்திவிட!" என்ற வைரவன், அங்கமுத்துவின் இலையைப் பார்த்தார்.

"என்னம்மா, அதற்குள் மோர்விட்டு சாப்பிடுகிறீர்கள்? இன்னும் சாம்பாரே சாப்பிடவில்லை" என்றார். "சாம்பார் கொண்டுவா" சாதம் கொண்டுவா" என்று குரல் கொடுத்தார்.

அங்கமுத்து "வேண்டாம்! வேண்டாம்" என்று சொல்ல, அவள் இலையில் சோற்றையும் சாம்பாரையும் கொட்டினார்கள்! வயலில் நீர் தேக்கியது போல இருந்தது.

'என்ன சாம்பார்?' என்று அங்கமுத்து பார்த்தாள். ஆனால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. வைரவனிடம் கேட்டாள்.

"உங்களுக்கு என்ன சாம்பார் வேண்டும்? வெங்காய சாம்பார் வேண்டுமா? வெண்டைக்காய் சாம்பார் வேண்டுமா?

முருங்கைக்காய் சாம்பார் வேண்டுமா? காரட்-பீட்ரூட்-காலிபிளவர். கதம்ப சாம்பார் வேண்டுமா?" என்ற வைரவன் அடுக்கினார்.

"அடேயப்பா! இத்தனை சாம்பாரா வைத்திருக்கிறார்கள்!" என்று அங்கமுத்து வாயைப் பிளந்தாள். "எனக்கு ஊற்றியிருப்பது என்ன சாம்பார்?"

"இது மனோரஞ்சித சாம்பார்! நீங்கள் மனதில் எப்படி நினைக்கிறீர்களோ, அப்படி" என்றார், வைரவன்.

அங்கமுத்துக்குப் புரியவில்லை.

வைரவன் விளக்கினார். "நீங்கள் வெண்டைக்காய் சாம்பார் என்று நினைத்தால், வெண்டைக்காய் சாம்பார்! வெங்காய சாம்பார் என்று நினைத்தால் வெங்காய சாம்பார்!"

"அது எப்படி?" அங்கமுத்து கேட்டாள்.

"சாம்பாரில் எந்தக் காயுமே போடவில்லை!" என்றார், வைரவன்!

"காரட் சாம்பார் கேட்டாலும் இதேதான். காலிபிளவர் சாம்பார் கேட்டாலும் இதேதான். 'காய் எங்கே?' என்றால், 'தீர்ந்துவிட்டது' என்று ஒரே சொல்லில் பதில்" என்று அவர் புன்னகைத்தார்.

"சமையல்காரர் யார் தெரியுமா? உடுப்பி ஓட்டல் சரக்கு மாஸ்டர்!" என்று பெருமை அடித்துக் கொண்டார்.

அங்கமுத்துக்கு சுவரில் முட்டிக் கொள்ளலாம் போல இருந்தது!

"பருப்பு ரசம் சாப்பிட்டுப் பார்க்கிறீர்களா? பிரமாதமாக இருக்கும்" என்று வைரவனே, சாம்பார் வாளிக்குள் கிடந்த கரண்டியைக் கையில் எடுத்தார்.

அதைப் பார்த்த அங்கமுத்து "இது சாம்பார் அல்லவா?" என்றாள்.



"சாம்பாரும் இதுதான்! பருப்பு ரசமும் இதுதான் பருப்புப் பாயசமும் இதுதான்!"

வைரவன் சிரிக்காமல் சொன்னார்!

"சாப்பாட்டில் மிகவும் சிக்கனம் பிடித்துவிட்டீர்கள்" என்று அங்கமுத்து வருத்தப்பட்டாள்.

"வாயை, வயிற்றைக் கட்டாமல் வைரம் வாங்க முடியுமா?" என்றார், வைரவன்.

அன்று மாலையே பொற்கொடி புக்ககம் வந்துவிட்டாள்.

அவளுடன் இரண்டு லாரிகள் வந்தன.

ஒரு லாரி முழுவதும் கட்டில், மெத்தை, சோபா முதலியவை.

மற்றொரு லாரி நிறைய வெள்ளிச் சாமான்கள். அண்டா குண்டா அடுக்குப் பானை முதல், தீயிடுக்கிவரை அத்தனையும் வெள்ளியில்!

அங்கமுத்து எல்லாவற்றையும் கூடத்தில் வரிசையாக இறக்கி வைக்கச் சொன்னாள்.

பார்க்கப் பார்க்க வெள்ளிப் பாத்திரக் கடைக்குள் நிற்பது போல இருந்தது.

"அடி லெட்சுமி...லெட்சுமி...அடி...வாடி..."

அங்கமுத்து அதிகாரக் குரல் கொடுத்தாள்.

லெட்சுமி பூனைக்குட்டி போல நடுங்கிக்கொண்டு வந்தாள்.

"பார்த்தாயாடி! எல்லாம் என் இரண்டாவது மருமகள் கொண்டு வந்த சீதனம்!"

லெட்சுமியின் குமட்டில் குத்தாத குறைதான்!

"நாங்கள் ஏழைகள், அத்தை!"

லெட்சுமிக்கு துக்கம் தொண்டையை அடைத்தது.

"ஏழை என்றால், எள்ளுருண்டைதான் தின்ன வேண்டும். அதிரசத்துக்கு ஆசைப்படக்கூடாது."

அங்கமுத்து குத்தலாகக் கூறினாள்.

"கொம்புத் தேனுக்கு நாங்கள் ஆசைப்படவில்லை, அத்தை."

"இந்த வாய்க்கு மட்டும் குறைச்சல் இல்லை. ஒரு வெள்ளி தம்ளர் வாங்கக்கூட வக்கு இருக்கிறதா?"

"என்னம்மா, அர்ச்சனை தொடங்கிவிட்டதா?"

கேட்டுக்கொண்டே மன்னன் வந்தான்.

"உன் பெண்டாட்டி கொண்டு வந்த சீதனத்தைப் பார்த்தாயாடா?" என்று வெள்ளிப் பாத்திரங்களை சுட்டிக் காட்டிய அங்கமுத்து "இவளும் கொண்டு வந்தாளே! எல்லாவற்றையும் அள்ளி பேரிச்சம்பழக்காரனுக்குப் போடப் போகிறேன்" என்று லெட்சுமியின் பக்கம் திரும்பினாள்.

லெட்சுமிக்கு இதயத்தில் ஊசியால் குத்தியது போல இருந்தது. கண்கள் கலங்கின.

"அம்மா, இந்த வெள்ளிப் பாத்திரங்களையெல்லாம் என்ன செய்யப் போகிறீர்கள்?"

மன்னன் கேட்டான்.

"கண்ணாடி பீரோவில் அலங்காரமாக அடுக்கி வைப்பேன்!"

அங்கமுத்து பெருமையாகச் சொன்னாள்.

"அண்ணி கொண்டு வந்த பித்தளைப் பாத்திரங்கள் எல்லாம் எங்கே அம்மா?"

"அது கிடக்கு, அடுப்படியிலே!"

"பணக்கார மருமகள் இருக்கிறாளே, அவள் இந்த வெள்ளிப் பாத்திரங்களைப் போல-கண்ணாடி பீரோவில் அடுக்கி வைத்து, அழகு பார்க்கத்தான் முடியும். ஆனால், ஏழை வீட்டு மருமகள் எந்நேரமும் அடுப்படியில் கிடப்பாள்-அவள் கொண்டு வரும் பித்தளைப் பாத்திரங்களைப் போல! இந்த உண்மை தெரியாமல், அண்ணியை வீணாகப் பழிக்காதீர்கள்."

மன்னன் கண்டிப்புடன் சொன்னான்!



லெட்சுமி மன ஆறுதலுடன் அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள்.

அன்றே முதல் இரவு!

அது புதிய உறவு! புத்தின்பத்தின் வரவு!

மணமக்களின் அறை தாழிடப்பட்டது.

அதன்பின் தான் லெட்சுமி தங்கள் அறைக்குள் நுழைந்தாள்.

பகல் முழுவதும் அவளுக்கு சரியான வேலை நல்ல களைப்பு. படுக்கையில் விழ வந்தாள்.

ஆனால், கண்ணன் அவளுக்காகக் காத்துக்கொண்டு இருந்தான்.

அவள் வந்ததும், அவன் அரவணைத்துக் கொண்டான்.

அது அவளுக்கு ஒத்தடம் கொடுத்தது போல இதமாக இருந்தது.

"அம்மா இன்றே தொடங்கிவிட்டார்கள் போலிருக்கிறதே" என்றான், கண்ணன்.

"எதிர்பார்த்ததுதானே?" என்றாள், லெட்சுமி.

"ஆனாலும், அம்மா சுத்த மோசம்."

"அப்படிச் சொல்லாதீர்கள், இனிமேல் தான் எனக்குப் பொறுப்புகள் அதிகம்."

"ஏன்?"

"போகப் போக நீங்களே பார்ப்பீர்கள். இப்பொழுது படுப்போம். எனக்கு அசதியாக இருக்கிறது."

லெட்சுமி படுக்க முயற்சித்தாள்.

"அதற்குள் என்ன அவசரம்?"

கண்ணன் அவள் மாம்பழக் கன்னத்தைக் கிள்ளினான்.

"அய்யய்யோ! இது என்ன? இன்று உங்கள் தம்பிக்குத்தான் முதல் இரவு" என்று லெட்சுமி சிரித்தாள்.

"பழைய ஞாபகம்!" கண்ணன் அசடு வழிந்தான்.

"நல்லா இருக்கிறதே! 'ஏன் பாட்டி மஞ்சள் குளிக்கிறாய்?' என்று கேட்டானாம். 'பழைய ஞாபகமடா பேராண்டி' என்றாளாம்" என்று லெட்சுமி கேலி செய்தாள்.

"அப்படித்தான்!" என்ற கண்ணன், அணைத்தான், விளக்கை.

விளக்கை மட்டுந்தானா!

## 22

மணி ஒன்பது.

சாப்பாட்டு அறையில் "பூஜை" நடந்து கொண்டு இருந்தது!

தலை கோதிக் கொண்டு இருந்த மன்னன், "எனக்கும் எடுத்து வையுங்கள், அண்ணி. பசி வயிற்றைக் கிள்ளுகிறது!" என்று சொல்லிக் கொண்டே, ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு அமர்ந்தான்.

அவன் லுங்கியும் பனியனும் அணிந்து இருந்தான்.

தோளில் ஒரு துண்டு. கையில் சீப்பு.

லெட்சுமி அவனுக்கு ஒரு தட்டு எடுத்து வைத்தாள்.

அதற்குள் கயல்விழி, "சின்ன அண்ணாவுக்கு வைக்காதீர்கள், அண்ணி" என்று தடுத்தாள். "சின்ன அண்ணாவுக்குத் தான் ஓர் ஆள் வந்து விட்டதே!"

"அவள் எழுந்து வருமுன் என் சிறு குடலை பெருங்குடல் தின்று விடும்!" என்ற மன்னன், தானே நாலைந்து இட்டிலியை எடுத்து தட்டில் போட்டுக் கொண்டான்.



லெட்சுமி அவனுக்கு சாம்பார் ஊற்றினாள்.

"குடும்பப் பெண் என்றால் அதிகாலையிலேயே விழிக்க வேண்டும். இல்லாவிட்டால், இந்த வீட்டில் மூதேவி குடியேறிவிடுவாள்" என்ற கயல்விழி, "அப்படித்தானே, அம்மா?" என்று தாயை நோக்கினாள்.

"அவள் எழுந்து என்ன செய்யப் போகிறாள்? குழந்தை!" என்றாள், அங்கமுத்து.

"அண்ணி ஐந்து மணிக்கே எழுந்து அடுப்புப் பற்ற வைக்கிறார்களே; அவள் எழுந்து, வாசல் பெருக்கி, கோலம் போடட்டுமே" என்றான், மன்னன்.

கண்ணனும், சுப்பிரமணியமும் இந்தப் பேச்சுக்களை காதில் வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை. இட்டிலியை அசை போட்டுக் கொண்டு இருந்தார்கள்.

"அவள் ஏண்டா வீடு பெருக்க வேண்டும்? அவள் யார்? வைரவியாபாரி வைரவனின் மகள்" என்று அங்கமுத்து பெரிதாகச் சொன்னாள்.

"பெரிய அண்ணி மட்டும் கீரைக்காரி மகளா?" என்று கயல்விழி கேட்டாள்.

"கீரைக்காரியோ...வேலைக் காரியோ...யாருக்குத் தெரியும்!" அங்கமுத்து வக்கனை பேசினாள்.

"அம்மா, நம் பாட்டிகூட பால் காரிதானே?" கயல்விழி சாது போல கேட்டாள். "நான் மதிச்சியத்தில் குடியிருப்பது; மதுரையில் பால் விற்பது, தயிரு விற்பது என்று ஒரு பாட்டு பாடுவீர்களே; அதைப் பாடுங்கள் அம்மா."

"சீ! வாயை மூடுடி!" என்று அங்கமுத்து சீறினாள்.

சிரிப்பை அடக்கிக் கொண்ட லெட்சுமி, பேசாமல் சாப்பிடு என்று பொற்கொடியின் தலையில் செல்லமாகத் தட்டினாள்.

தற்காலிகமாக பசியை தணித்துக் கொண்ட மன்னன், "நான் போய் பொற்கொடியை எழுப்பிக் கொண்டு வருகிறேன்" என்று கையைக் கழுவிக் கொண்டே எழுந்தான்.

"தூங்குகிற குழந்தையை எழுப்பாதேடா! ஆயுள் குறைந்து விடும்" என்று அங்கமுத்து தடுத்தாள்!

"அடடா! மருமகள் மீது என்ன கரிசனம்!" என்று மன்னன் கேலி செய்தாள்.

"சின்ன அண்ணி பத்து மணிக்குத் தான் எழுந்திருப் பார்களோ, அண்ணா?" என்று கயல்விழி கேட்டாள்.

"பத்து மணிக்கே கல்லூரிக்குப் போக வேண்டுமே! ஆகவே, ஒன்பது மணிக்கே எழுந்து விடுவாள்" என்றான், மன்னன்.

"இப்பொழுது காலேஜுக்கா போகப் போகிறாள்? தூங்கும்வரை தூங்கட்டும்! எழும்போது எழட்டும், குழந்தை" என்றாள், அங்கமுத்து.

"குழந்தையை மடியில் தூக்கிப் போட்டுக் கொள்ளுங்கள், அம்மா" என்ற கயல்விழி, "அத்தை மடி மெத்தையடி..." என்று பாடினாள்.

"இன்னுங் கொஞ்சம் சத்தமாகப் பாடு, எழுந்து விடுவாள்" என்றான், மன்னன்.

"நான் ஏன் பாடுகிறேன். நீங்கள் போய் சுப்ரபாதம் பாடுங்கள்! திருப்பள்ளி எழுச்சி பாடுங்கள்" என்று கயல்விழி நீட்டி முழக்கினாள்.

"தூங்காதே..தம்பி தூங்காதே.." என்று பாடிக் கொண்டே மன்னன் சென்றான்.

கதவு சாத்தியிருந்தது.

பொற்கொடி தூங்கிக் கொண்டு இருந்ததால், மன்னன் தான் சாத்திவிட்டு வந்திருந்தான்.

"தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய, தூபம் கமழத் துயிலணை மேல் கண்வளரும் மாமன் மகளே! மணிக் கதவம் தாள் திறவாய்!" என்று பாடிக் கொண்டே, கதவின் மீது கையை வைத்தான்.



கதவு திறந்து கொண்டது.

உள்ளே சென்றான்.

பொற்கொடி பஞ்சணையில் படுத்திருந்தாள்.

இன்பக் கதை இன்னும் கலையவில்லை போலிருக்கிறது. தூக்கத்திலேயே புன்னகைத்தாள்!

"எல்லே! இளங்கிளியே! இன்னம் உறங்குதியோ!" என்று மன்னன் அவள் கண்ணாடி கன்னத்தைத் தடவினான்.

அவள் தூக்கத்திலேயே கண்விழித்துப் பார்த்தாள்.

மன்னனைக் கண்டதும், அவன் கையைப் பிடித்து இழுத்து, தன்னோடு படுக்க வைத்துக் கொண்டு, போர்வையை இழுத்து மூடிக் கொண்டாள்!

"பத்து மணி ஆகப்போகிறது. இன்னும் என்ன தூக்கம்?" என்று மன்னன் போர்வைக்குள் இருந்து திமிறிக் கொண்டு எழுந்தான்.

"பொற்கொடி, எழுந்திரு" என்று அவளை எழுப்பினான்.

"தொல்லை பண்ணாதீர்கள்..." முணங்கிக் கொண்டே, அவள் மீண்டும் அவனைப் பிடித்து இழுத்தாள்.

"எழுந்திரு" என்று அவன், அவள் புட்டத்தில் ஓர் அடி வைத்தான்!

"ஆ!" என்று அவள் துள்ளிக் குதித்து எழுந்தாள்.

"தூக்கத்தில் கும்பகர்ணனாக இருப்பாய் போலிருக்கிறதே!" என்று கேலி செய்து கொண்டே மன்னன் அவள் பக்கத்தில் அமர்ந்தான்.

"இரவில் தூங்க விட்டீர்களாக்கும்!" என்று அவள் அவன் மீது பழி போட்டாள்.

"நான் சொல்ல வேண்டியதை நீ சொல்லுகிறாய்!" என்று அவன் அவளை மடக்கினான். "எழுந்து, பல் துலக்கி, குளி, நாங்கள் எல்லாம் சாப்பிட்டு முடித்துவிட்டோம்."

"காப்பி..." என்று அவள் கையை நீட்டினாள்.

"ஓகோ! காப்பியில்தான் பல் துலக்குவாயா?" என்றான் அவன். அப்பொழுது லெட்சுமி வெளியில் நின்றபடி "உள்ளே வரலாமா?" என்று குரல் கொடுத்தாள்.

மன்னன் வேகமாக எழுந்து நின்று "வாருங்கள், அண்ணி" என்றான்.

காப்பியும் கையுமாக லெட்சுமி அறைக்குள் வந்தாள்.

பொற்கொடியிடம் காப்பியை நீட்டினாள்.

"நன்றி, அக்கா" என்று அவள் வாங்கிக் கொண்டாள்.

ஒரு மடக்கு பருகியவள், "நீங்கள் ஏன் அக்கா அலைகிறீர்கள்! வேலைக்காரியிடம் கொடுத்து அனுப்பியிருக் கலாமே" என்று லெட்சுமியைப் பார்த்தாள்.

"இந்த வீட்டில் வேலைக்காரி அண்ணிதான்" என்றான் மன்னன்.

"வேலைக்காரி கிடையாதா!" பொற்கொடி வியப்புடன் விழிகளை மலர்த்தினாள்.

"இருந்தாள்" என்றான் மன்னன் "அண்ணி வந்த பின்பு, 'ஒரு வீட்டுக்கு இரண்டு வேலைக்காரி வேண்டாம்' என்று அம்மா வேலைக்காரியை நிறுத்தி விட்டார்கள்.

"உண்மையாகவா!" பொற்கொடிக்கு ஒரே ஆச்சரியம்! "மருமகளை வேலைக்காரி என்று நினைத்தார்களா, உங்கள் அம்மா?"

"இது நம் வீடு. நமது வீட்டு வேலைகளை நாமே செய்வதில் என்ன தவறு? அதனால் நாம் வேலைக்காரி ஆகிவிடுவோமா?" என்று லெட்சுமி அமைதியாகச் சொன்னாள்.

"இதை இப்படியே விடக்கூடாது அக்கா" என்று பொற்கொடி உரக்கச் சொன்னாள். "நாளை, ஒரு வீட்டுக்கு இரண்டு மருமகள் எதற்கு? என்று உங்களை கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளினால், என்ன செய்வது?"



"மிகவும் நல்லது" என்றான், மன்னன். "அண்ணி நிம்மதியாக இருப்பார்கள்."

"ஏன், தம்பி, நான் இங்கே இருப்பது உங்களுக்கு இடையூறாக இருக்கிறதா?" என்று லெட்சுமி சிரித்தாள்.

"அக்கா கவலைப்படாதீர்கள். நாம் இருவரும் சேர்ந்து, இந்த மாமியாரை அடக்குவோம்" என்றாள், பொற்கொடி.

"அப்படியெல்லாம் சொல்லாதே, பொற்கொடி. என்ன இருந்தாலும், அவர்கள் பெரியவர்கள். நமக்கு மாமியார்" என்ற லெட்சுமி, பேச்சை வளர்க்க விரும்பாமல், "சீக்கிரம் குளித்து விட்டு சாப்பிட வாம்மா" என்று கூறிவிட்டு, வெளியில் சென்றாள்.

பொற்கொடி குளித்து, உடை மாற்றிக் கொண்டு கீழே வந்தாள்.

அவளது வருகைக்காக அங்கமுத்து தயாராகக் காத்துக் கொண்டு இருந்தாள்.

அவளைப் பார்த்ததும் எழுந்து "வா, தங்கம் வா" என்று வரவேற்றாள்.

"குழந்தை தூங்கட்டும்; எழுப்பாதேடா என்று சொன்னேன். எழுப்பிவிட்டு விட்டான் போலிருக்கிறது" என்று அன்பைப் பொழிந்தாள்.

"நேரமாகிவிட்டது அல்லவா, அத்தை?" என்றாள், பொற்கொடி.

"சாப்பிட்டுவிட்டு, மீண்டும் போய் படுத்துக் கொள்ளம்மா" என்ற அங்கமுத்து "லெட்சுமி..." என்று அதிகாரக் குரல் கொடுத்தாள். "என் தங்கம் வந்து விட்டது. சாப்பாடு எடுத்துவை."

அதே மூச்சில் "வா, தங்கம் சாப்பிடப் போவோம்" என்று பொற்கொடியின் கையைப் பற்றி அழைத்தாள்.

"தங்கம் இல்லை, அம்மா, வைரம்" என்று திருத்திக் கொண்டே கயல்விழி அங்கே வந்தாள்.

"நான்தான் தப்பாகச் சொல்லி விட்டேன்" என்ற அங்கமுத்து, "வா! என் வைரமே! வா" என்று பொற்கொடியை சாப்பிட அழைத்துப் போனாள்.

கயல்விழியைப் பார்த்து கண்ணை சிமிட்டிக் கொண்டே பொற்கொடி மாமியாரைப் பின் தொடர்ந்தாள்.

## 23

மருமகளுக்கு "சர்வர்" வேலை பார்க்கத் தொடங்கி விட்டாள், அங்கமுத்து!

"உட்காரம்மா" என்று நாற்காலியை முன்னே இழுத்து விட்டாள்.

மாமியாரை ஒய்யாரமாகப் பார்த்துக்கொண்டே, ஒரு புன்னகையுடன் பொற்கொடி, அமர்ந்தாள்.

தனது பட்டுச் சேலையினால் மேசையை அங்கமுத்து துடைத்தாள்.

வெள்ளித் தட்டும், தம்ளரும் எடுத்து வைத்தாள். பொற்கொடி சீதனமாகக் கொண்டு வந்தவை.

தம்ளரில் தானே தண்ணீர் ஊற்றினாள்.

'வேண்டாம், அத்தை, நான் எடுத்துக் கொள்கிறேன்' என்று பொற்கொடி உபசாரத்துக்குக் கூடக் கூறவில்லை. தான் மாமியாரை பம்பரமாக ஆட்டி வைப்பதை நினைத்து பெருமிதத்துடன் சிரித்துக் கொண்டாள்.

"அடியே லெட்சுமி! அங்கே என்னடி செய்கிறாய்? குழந்தைக்கு பசியால் காது அடைத்துவிடப் போகிறது! கொண்டுவா" என்று, அடுப்படியை நோக்கி அங்கமுத்து அதிகாரமாகக் குரல் கொடுத்தாள்.



"வருகிறேன், அத்தை" என்று லெட்சுமி பதில் குரல் தந்தாள்.

"நிற்கிறீர்களே, நீங்கள் உட்காருங்கள், அத்தை" என்று பொற்கொடி உபசாரம் செய்தாள்.

"அங்கமுத்து மகிழ்ந்து போனாள். "இல்லை, குழந்தை, நான் நிற்கிறேன்" என்று பல்லைக்காட்டினாள். நான் உட்கார்ந்தால், இந்த வீட்டில் என்ன வேலை நடக்கும்?"

"பரவாயில்லை, உட்காருங்கள், அத்தை" என்று பொற்கொடி ஒரு நாற்காலியை முன்னே இழுத்தாள்.

"உம்...நான் நின்றால், உன் கால் வலிக்கும்" என்று கூறிக் கொண்டே அங்கமுத்து நாற்காலியில் உட்காரப் போனாள்.

அப்பொழுது, ஓசையில்லாமல் பொற்கொடி நாற்காலியைப் பின்னே நகர்த்தினாள்.

அங்கமுத்து பூசணிக்காய் போல பொத்தென்று கீழே விழுந்தாள்!

அப்பொழுதுதான் சாப்பாட்டு அறைக்குள் நுழைந்து லெட்சுமி, அதைப் பார்த்துப் பதறிவிட்டாள்.

ஓடி வந்து, கையில் இருந்த சாமான்களை மேசைமீது வைத்துவிட்டு, மாமியாரைத் தூக்கிவிட்டாள்!

அங்கமுத்து இடுப்பைப் பிடித்துக் கொண்டே எழுந்தாள்.

லெட்சுமி பொற்கொடியை முறைத்துப் பார்த்தாள்!

'இதெல்லாம் என்ன விளையாட்டு?' என்று அந்தப் பார்வை கேட்டது.

'நீ கண்டு கொள்ளாதே!' என்பது போல, பொற்கொடி கண்ணைச் சிமிட்டினாள்!

லெட்சுமிக்கு அது பிடிக்கவில்லை. பெண்பிள்ளை கண்ணை சிமிட்டலாமா? அருவெறுப்பாகத் தோன்றியது. முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

பிறகு அவள் "நீங்கள் உட்காருங்கள் அத்தை" என்று நாற்காலியை சரியாக இழுத்துப் போட்டாள்.

"எத்தனை எலும்பு முறிந்ததோ! டாக்டரிடம் போய் 'எக்ஸ்ரே' எடுத்துப் பார்க்க வேண்டும்" என்று முணங்கிக் கொண்டே அங்கமுத்து நாற்காலியில் அமர்ந்தாள்.

"யானைக்கும் அடி சறுக்கும். அப்படித்தானே, அத்தை?" பொற்கொடி அப்பாவி போல கேட்டாள்.

"ஆமாம், குழந்தை" அங்கமுத்து அசடு வழிந்தாள்.

"எங்கள் குடும்ப டாக்டர் இருக்கிறார். அவர் முறிந்த எலும்பை எடுத்துவிட்டு, புது எலும்பு வைப்பார். தங்கத்தில் பல் கட்டுவது போல, தங்கத்திலேயே உங்களுக்கு எலும்பு செய்து வைத்து விடலாம்" என்றாள், பொற்கொடி.

"உன் அப்பாவிடம் சொல்லி, தங்கத்தில் வைரமும் பதிக்கச் சொல், குழந்தை" என்று அங்கமுத்து குழைந்தாள்.

இந்தக் கொஞ்சலும் குழைவும் லெட்சுமிக்குப் பிடிக்கவில்லை. அவள் வெறுப்புடன் அவர்கள் இருவரையும் பார்த்துக் கொண்டு நின்றாள்.

"ஏண்டி மரம்போல் நிற்கிறாய்? எடுத்துவை" என்று அங்கமுத்து அதட்டினாள்.

பொற்கொடியின் தட்டில் லெட்சுமி இட்டிலி எடுத்து வைத்தாள்.

"அத்தை, எனக்கு வெறும் அரிசி இட்டிலிதானா?" பொற்கொடி கிளிப் பிள்ளையாகக் கொஞ்சினாள்.

லெட்சுமிக்கு ஒரே எரிச்சல். "ஏன், உங்கள் வீட்டில் வைரத்தில் இட்டிலியும், தங்கத்தில் சட்டினியும் செய்து சாப்பிடுவீர்களோ?" என்று கேட்டாள்.

"ஆமாடி. அப்படித்தான்!" மருமகளுக்குப் பரிந்து கொண்டு அங்கமுத்து வந்தாள். "இவள் உன்னைப் போல கேப்பைக்கூழ் சாப்பிடுகிறவள் அல்ல! வைர வியாபாரி வைரவன் மகள்."



"வைர வியாபாரி என்ன; வைடூரிய வியாபாரி மகளாக இருந்தாலும், அரிசியில்தான் சோறு பொங்கிச் சாப்பிட வேண்டும்" என்றாள் லெட்சுமி, சூடாக.

"இதைத்தான், 'கேப்பையில் நெய் ஒழுகுகிறது என்றால், கேட்பவர்களுக்கு மதி எங்கே போச்சு?' என்பது!" என்றாள் பொற்கொடி.

"இந்த வாய்க்கும் மட்டும் குறைச்சல் இல்லை" என்று லெட்சுமியைக் கடிந்த அங்கமுத்து, "நீ சாப்பிடு குழந்தை" என்று பொற்கொடியிடம் கூறினாள்.

"எனக்கு இந்த இட்டிலி வேண்டாம்" என்று பொற்கொடி சிணுங்கினாள்.

"வேறு இட்டிலி கொண்டு வருகிறேன்" என்ற லெட்சுமி உள்ளே போனாள்.

கடைசியாக சட்டியை வழித்து ஊற்றிய இட்டிலி இருந்தது. அதை எடுத்து வந்து, பொற்கொடிமுன் தட்டில் வைத்தாள்.

பொற்கொடி அதை பிய்த்துப் பார்த்தாள். கல்லுப் போல இருந்தது! "இது என்ன இது!"

"கல்லில் செய்த இட்டிலி" என்றாள் லெட்சுமி.

"ஆட்டுக்கல்லா? அம்மிக் கல்லா?"

பொற்கொடியின் முகம் விளக்கெண்ணெய் குடித்தது போல ஆயிற்று!

"வைக்கல்" என்றாள், லெட்சுமி. "அம்மா பொற்கொடி, இட்டிலி என்றால், கல்லுப் போல இருக்கக்கூடாது. மல்லிகைப்பூ போல இருக்க வேண்டும்."

அவளுக்கே புத்தி சொல்லுகிறாளா? பொற்கொடி முறைத்துப் பார்த்தாள்.

லெட்சுமி அந்த இட்டிலியை எடுத்துவிட்டு, பழைய இட்டிலிகளை வைத்தாள். பொற்கொடி சுவைத்து சாப்பிட்டாள்.

ஆனால், பொற்கொடி விடவில்லை, "இதோ பாருங்கள், அக்கா, உங்களை பேயாக ஆட்டிப் படைக்கிற மாமியார் கண்களில் நான் விரலை விட்டு ஆட்டப் போகிறேன். அதற்கு உங்கள் ஒத்துழைப்பும் வேண்டும். ஒத்துழைக்க முடியாவிட்டால், கண்டும் காணாமல் இருங்கள். நான் கவனித்துக் கொள்ளுகிறேன்" என்றாள்.

"இதெல்லாம் தவறு பொற்கொடி" என்றாள், லெட்சுமி. "நாற்காலியை பின்னே தள்ளி, அத்தையைக் கீழே தள்ளினாயே; படாத இடத்தில் அடிபட்டால், என்ன ஆகும்?"

"பூம்..ம்..ம்..ம்..என்று சங்கு ஊத வேண்டியதுதான் உன்னைப் பிடித்த சனியன் ஒழியும்!" பொற்கொடி அலட்சியமாகச் சொன்னாள்.

"பொற்கொடி!" லெட்சுமி அதட்டினாள். "என்ன பேசுகிறாய்?"

"எல்லாம் உங்கள் நன்மைக்காகத்தான் செய்கிறேன். அக்கா சும்மா முறைக்காதே" பொற்கொடியிடம் அதே அலட்சியம்.

"பொற்கொடி...குழந்தை."

அங்கமுத்துவின் அன்புக் குரல் கேட்டது.

"சரி சரி முதலில் காப்பியைக் கொண்டு போய்க்கொடு" என்று லெட்சுமி துரிதப்படுத்தினாள்.

"காப்பியா...கொடுக்கிறேன்" என்று அழுத்தமாகச் சொன்ன பொற்கொடி, தம்ளரைத் தேடினாள்.

அவள் காப்பி தயாரிக்கட்டும் என்று விட்டுவிட்டு, லெட்சுமி தனது வேலையைப் பார்க்கத் தொடங்கினாள்.

அரிசியை கழுநீர் பிசைந்து அடுப்பில் போட்டாள்.

காய்கறி வெட்டச் சென்றாள்.

அவள் அப்பால் போனதும், பொற்கொடி பூனை போல வந்தாள்.

கழுநீர் பிசைந்த தண்ணீர் இருந்தது.



அதில் ஒரு தம்ளர் ஊற்றிக் கொண்டாள்!

ஒரு கரண்டி உப்பு அள்ளிப் போட்டு நன்றாகக் கலக்கினாள்.

அப்பொழுது லெட்சுமி வந்தாள். "காப்பி தயாரா, பொற்கொடி?"

"ஓ..." என்று கூறிக் கொண்டே பொற்கொடி வேகமாக நகர்ந்தாள்!

## 24

பொற்கொடி அடுப்படிக்கு வெளியில் போய்விட்டாள்.

அதன்பின்தான் லெட்சுமிக்கு சந்தேகம் ஏற்பட்டது!

"பொற்கொடி" என்று கூவினாள்.

பொற்கொடி திடுக்கிட்டு நின்றாள். பதில் குரல் எதுவும் கொடுக்கவில்லை.

மீண்டும் "பொற்கொடி" என்று குரல் கொடுத்துக் கொண்டே லெட்சுமி வெளியில் வந்தாள்.

அவளைப் பார்த்ததும் பொற்கொடி ஓடப் பார்த்தாள்.

ஆனால், லெட்சுமி பிடித்துக் கொண்டாள்.

"பொற்கொடி! காப்பி சுவையாகத் தயாரித்தாயா? இல்லாவிட்டால், அத்தைக்குப் பிடிக்காது" என்று கூறிக் கொண்டே அருகில் வந்தாள்.

"ஓ! நான் நன்றாகக் காப்பி போடுவேன். அப்பாவுக்குக் கூட நான்தான் நாள்தோறும் காப்பி போட்டுக் கொடுப்பேன்" என்று பொற்கொடி முத்துப் பற்களைக் காட்டினாள்!

அவள் கையில் இருந்த காப்பியை லெட்சுமி பார்த்தாள். "அத்தைக்குக் காப்பியில் ஆவி பறக்க வேண்டும் இல்லா விட்டால், நமது ஆவியைப் பறக்க வைத்து விடுவார்கள்."

"ஆவி பறக்கும் பொழுதே அத்தைக்குக் கொடுத்து விடுகிறேன்" என்று பொற்கொடி நகர்ந்தாள்.

ஏனோதானோ என்று காப்பி போட்டு, பொற்கொடி எக்கச்சக்கமாக மாமியாரிடம் சிக்கிக் கொள்ளக் கூடாதே என்று லெட்சுமிக்குக் கவலை எனவே, "எங்கே, காப்பியைப் பார்ப்போம்" என்று அவள் கையில் இருந்தது காப்பி தம்ளரை வாங்கி, வாயில் படாமல் ஒரு மடக்கு வாய்க்குள் ஊற்றினாள்.

ஊற்றிய வேகத்திலேயே "தூ!" என்று துப்பினாள்.

தேள் கொட்டிய திருடன் போல பொற்கொடி நின்றாள்!

"பொற்கொடி! இது காப்பிதானா?" லெட்சுமி விளக் கெண்ணெய் குடித்தவள் போல காணப்பட்டாள்.

பொற்கொடி அமைதியாகத் தலையை அசைத்தாள்.

"கழுநீர் தண்ணீர் போல இருக்கிறதே! உப்பு வேறு" என்று சொல்லிக்கொண்டே பொற்கொடியின் முகத்தை லெட்சுமி நோக்கினாள்.

"அதேதான், அக்கா" என்று பொற்கொடி இரகசியமாகச் சொல்லிக் கொண்டு இருக்கும்பொழுதே, "குழந்தை...கண்ணு... வைரம்..." என்று அங்கமுத்து அழைக்கும் குரல் கேட்டது.

"இதோ வருகிறேன், அத்தை" என்று பதில் குரல் கொடுத்த பொற்கொடி, லெட்சுமியின் கையில் இருந்த காப்பியை பறித்துக் கொண்டு, வேகமாக நடந்தாள்.

"பொற்கொடி! இது சரியல்ல மாட்டுக்கு ஊற்றுகிற கழுநீர் தண்ணீரை மாமியாருக்குக் கொடுக்கிறாயே!" என்று பதைத்துக்கொண்டே லெட்சுமி அவள் பின்னால் வந்தாள்.

"நம்மையெல்லாம் மாடு என்றுதானே நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள்... மாட்டுப் பெண் என்று தானே, சொல்லுகிறார்கள்..."



கறுவிக் கொண்டே பொற்கொடி வேகமாக நடந்தாள்.

அவள் கூடத்துக்குள் நுழைந்ததும், லெட்சுமி அச்சத்துடன் எட்டி நின்று கொண்டாள்.

தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும் என்பது பொற்கொடியைப் பொறுத்தவரை சரியாக இருந்தது!

மாமியாரின் முன்னே வந்து நின்றதும் அவள் தைரியம் தளர்ந்து விட்டது. உடல் நடுங்கியது. முகத்தில் முத்து முத்தாக வியர்த்தது.

"கொண்டா, கண்ணு" என்று அங்கமுத்துவே அவள் கையில் இருந்து காப்பியை வாங்கிக் கொண்டாள்.

அப்பொழுதுதான், பொற்கொடிக்கு வியர்த்து இருப்பதைப் பார்த்தாள்.

"ஏன் கண்ணு... அடுப்படியில் எவ்வளவு நேரம் நின்று இருக்கிறது! வியர்வை மழையாகக் கொட்டுகிறதே!" என்று மிகவும் கரிசனத்துடன் தனது சேலை தலைப்பால் அவள் முகத்தைத் துடைத்து விட்டாள்.

"குழந்தை! நீ வைரம்! அடுப்படிக்குப் போகக் கூடாது போனால் கறுத்துவிடுவாய். அதற்குத்தான் ஒரு கரிக்கட்டை இருக்கிறதே" என்று வெகு நயமாகச் சொன்னாள்.

"சரி, அத்தை" என்று பொற்கொடி நல்ல பெண்ணாகத் தலையை ஆட்டினாள்.

அங்கமுத்து காப்பியைப் பருகினாள்.

எரிமலை வெடிக்கப் போகிறது-நிலம் பிளக்கப் போகிறது-நீலவானம் இடிந்து விழப் போகிறது என்றெல்லாம் லெட்சுமி நடுங்கினாள்.

ஆனால், அங்கமுத்துவோ ஒரே மூச்சில் அந்தக் காப்பியைக் குடித்து முடித்தாள்.

முடித்ததும், "இது காப்பியா?" என்று பொற்கொடியை நோக்கினாள்.

"இது...காப்பி...இல்லை... அவள் அஞ்சி நடுங்கினாள்.

"தேவாமிர்தம் போல இருக்கிறது!" அங்கமுத்து முகம் மலர்ந்தாள்.

அதைக் கேட்டு, பொற்கொடிக்கு சிரிப்பு வந்தது!

"நானும் எத்தனையோ இடங்களில் காப்பி குடித்திருக்கிறேன். எத்தனையோ கைகள் எனக்குக் காப்பி கொடுத்திருக்கின்றன. ஆனால், இவ்வளவு குணம்-இத்தனை மணம்-இத்தனை சுவையாக நான் இதுவரை காப்பி குடித்ததே இல்லை" என்று புகழ்ந்து தள்ளினாள்.

பொற்கொடி புன்னகைத்தாள்!

லெட்சுமி விழிகள் மலர்ந்தன! வியப்பினால் மலைத்தாள்!!

"அத்தை! இனி நான்தான் உங்களுக்கு தினசரி காப்பி கொடுப்பேன்" என்றாள் பொற்கொடி.

"உன் கையாலே காப்பி குடிக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். பழனி பஞ்சாமிர்தம் சாப்பிட்டது போல இருக்கிறது" என்றாள் அங்கமுத்து.

அப்பொழுது "பொற்கொடி" என்று அழைத்துக் கொண்டே மன்னன் அங்கே வந்தான்.

"பொற்கொடி! அப்பா என்னை அலுவலகத்துக்கு வரச் சொல்லியிருக்கிறார். நான் புறப்பட்டு விட்டேன்" என்று மனைவியிடம் சொன்னாள்.

பொற்கொடி அவன் தோளில் தொத்திக் கொண்டாள். "போகும் வழியில் என்னை எங்கள் வீட்டில் விட்டு விடுகிறீர்களா?" என்று கிளி போல கொஞ்சினாள்.

"சரி" என்ற மன்னன் "எனக்கு நேரமாகிவிட்டது. உடனே புறப்படு" என்று அவளை விரைவுபடுத்தினான்.

"சேலை மட்டும் மாற்றிக் கொண்டு வந்து விடுகிறேன்" என்றாள் பொற்கொடி.

"சரி, அதற்குள் நான் சந்திர மண்டலத்துக்குப் போய் வந்துவிடுகிறேன்!" என்று கேலி செய்தான் மன்னன்.



"நீங்கள் சந்திரமண்டலத்துக்கே போனாலும், இங்கே தான் திரும்பி வந்தாக வேண்டும். ஏனென்றால், அங்கே பெண்களே கிடையாது!" என்று பொற்கொடி அவன் மூக்கை உடைத்தாள்!

"அதற்குத்தான் இரண்டு பெண்களை சந்திரமண்டலத்துக்கு அனுப்பலாம் என்று பார்த்தால், அவர்கள் சீவி சிங்காரித்து புறப்படுமுன் அமாவாசை வந்து விடுகிறது" என்று மன்னன் பதில் சூடு கொடுத்தான்.

அப்பொழுது "தம்பி, உங்களுக்கு தேவாமிர்தம் வேண்டுமா? பழனி பஞ்சாமிர்தம் வேண்டுமா?" என்று கேட்டுக் கொண்டே லெட்சுமி அங்கே வந்தாள்.

மன்னனுக்குப் புரியவில்லை. "என்ன சொல்லுகிறீர்கள், அண்ணி?"

"ஒன்றுமில்லை, நான் சொல்லுகிறேன் வாருங்கள்!"

மன்னனைப் பிடித்து அவசரமாக இழுத்துக் கொண்டு பொற்கொடி மாடிக்கு ஓடினாள்!

சிறிது நேரத்தில் உடை மாற்றிக் கொண்டு பொற்கொடி கீழே வந்தாள். அவளுடன் மன்னனும் வந்தான்.

அங்கமுத்து கீழே அமர்ந்து இருந்தாள். பொற்கொடி தன்னிடம் சொல்லிவிட்டுப் போவாள் என்று எதிர் பார்த்தாள்.

ஆனால், பொற்கொடியும் அவளிடம் சொல்லவில்லை; மன்னனும் சொல்லவில்லை இருவரும் ஏதோ சிரித்துப் பேசிக் கொண்டே வெளியில் சென்றார்கள்.

அங்கமுத்துக்கு இது கொஞ்சம் ஏமாற்றந்தான்.

ஆனாலும், "குழந்தைகள் தானே?" என்று தனக்குத் தானே சமாதானப்படுத்திக் கொண்டாள்.

காரில் செல்லும் பொழுதுதான் காப்பி கதையை கணவனிடம் பொற்கொடி சொன்னாள்.

அதைக் கேட்டு, மன்னன் விழுந்து விழுந்து சிரித்தான். "அண்ணி சொன்ன பழனி பஞ்சாமிர்தம் அதுதானா? இந்தக்

கதை. பழனி பஞ்சாமிர்த வியாபாரிகளுக்குத் தெரிந்தால், உன் மீது மான நட்ட வழக்குத் தொடராமல் விடமாட்டார்கள்!" என்று சிரித்தான்.

பொற்கொடியை அவளது வீட்டில் இறக்கி விட்டுவிட்டு, மன்னன் அலுவலகம் போனான்.

மாலையில் அவளது வீட்டுக்குத் தான் திரும்பி வந்தான்.

அவள் தயாராக இருந்தாள்.

இருவரும் இந்திப் படம் பார்க்கப் போனார்கள்.

இரவு உல்லாச ஓட்டலில் சாப்பிட்டார்கள். அங்கே குடியும் உண்டு கூத்தும் உண்டு.

எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு, அவர்கள் மன்னனின் வீட்டுக்குத் திரும்பியபொழுது நள்ளிரவுக்கு மேல் ஆகிவிட்டது.

கோழி கூவியதும் லெட்சுமி கண் மலர்ந்தாள்.

குளித்து முடித்து, அடுப்படிக்குள் நுழைந்தாள்.

காப்பி கலந்ததும் முதலில் அங்கமுத்துக்குத்தான் கொண்டு வந்தாள். "அத்தை, காப்பி..." காப்பியாடி, இது கழுநீர் தண்ணீர் போல இருக்கிறது! கொண்டு போய் மாட்டுக்கு ஊற்று!"

அங்கமுத்து சிங்கம் போல சீறினாள்.

லெட்சுமிக்கு அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை. அவள் மார்பகம் விம்மித் தணிந்தது.

"என் கண்ணு கையாலேதான் நான் காப்பி குடிப்பேன். போ! எனக்கு இனி நீ காப்பி கொண்டு வராதே!" என்று அங்கமுத்து ஆணையிட்டாள்.

லெட்சுமி "அத்தை" என்று ஏதோ சொல்ல வந்தாள்.

அதற்குள் அங்கமுத்து "போடி, போ" என்று கர்ச்சித்தாள்! "உன் காப்பியைக் குடிப்பதற்குப் பதில் கடும் நஞ்சைக் குடிக்கலாம்!"



'இத்தனை நாளாக என் காப்பியைத்தானே குடித்தீர்கள், அத்தை' என்று லெட்சுமி கேட்க நினைத்தாள். ஆனால், துக்கம் அவள் தொண்டையை அடைத்தது. பேசாமல் நகர்ந்தாள்.

மணி எட்டு.

லெட்சுமி அடுப்படியில் சிற்றுண்டி தயார் செய்து கொண்டு இருந்தாள்.

"அக்கா" என்று கொட்டாவி விட்டுக்கொண்டே பொற்கொடி உள்ளே வந்தாள்.

"வாம்மா... இரவில் மிகவும் நேரம் கழித்து வந்தீர்களா? அதனால் தான் நான் எழுப்பவில்லை" என்ற லெட்சுமி, "காப்பி சாப்பிடு" என்று ஒரு தம்ளர் காப்பி ஊற்றிக் கொடுத்தாள்.

பாதி காப்பி உள்ளே போன பின்புதான், பொற்கொடிக்கு மாமியாரின் நினைவு வந்தது. "அத்தை, அந்த எம்.ஜி.எம். காப்பி குடித்து விட்டதா?" என்று கேட்டாள்.

லெட்சுமிக்குப் புரியவில்லை.

"எம். ஜி. எம். என்பது ஓர் அமெரிக்க சினிமாக் கம்பெனி. உர்...உர்... என்ற உறுமுகின்ற சிங்கந்தான் அந்தக் கம்பெனியின் சின்னம்" என்ற விளக்கிய பொற்பொடி, "நம் வீட்டு சிங்கம் காப்பி குடித்ததா?" என்று கேட்டாள்.

"நீ கொடுத்தால்தான் அந்த சிங்கம் காப்பி குடிக்குமாம்!" என்று லெட்சுமி வக்கனையாகச் சொன்னாள்.

"அசிங்கந்தான்!" என்ற பொற்கொடி, அப்போதே காப்பி தயாரிக்கத் தொடங்கினாள்!

கழுநீர் தண்ணீரில் உப்பைப் போட்டுக் கலக்கினாள்.

"பொற்கொடி! இது அநியாயம்! நான் அனுமதிக்கவே மாட்டேன்."

லெட்சுமி ஆவேசத்துடன் தடுத்தாள்!

பொற்கொடி அவளை ஏறிட்டுப் பார்த்தாள்!

இருவரும் சண்டைக் கோழிகள் போல தலையை சிலிர்த்துக் கொண்டார்கள்!

## 25

'இவளுக்காகத்தானே மாமியாரை மட்டந்தட்டுகிறோம்! இவளே நம்மை எதிர்க்கிறாளே' என்று ஆத்திரம், பொற்கொடிக்கு.

மாமியார் எவ்வளவுதான் கெடுபிடியாக இருந்தாலும் மாமியாருக்கு உரிய மரியாதையைக் கொடுக்க வேண்டும் என்பதில் லெட்சுமி கண்டிப்பாக இருந்தாள்.

"அக்கா! அவர்களுக்கு மாமியார் என்ற மமதை. அதனால்தான் உங்களை ஆட்டிப் படைக்கிறார்கள். அவர்களை அடக்க வேண்டாமா?" என்று பொற்கொடி கோபத்தை கட்டுப்படுத்திக் கொண்டு கேட்டாள்.

"அத்தை நல்லவர்கள்தான். ஆனால், அவர்கள் தலையில் மாமியார் என்ற மகுடம் சூட்டப்பட்டு விட்டது. அதன் மகத்துவத்தால் கொஞ்சம் அளவுக்கு மீறி நடந்து கொள்ளுகிறார்கள்" என்றாள், லெட்சுமி.

அவளே தொடர்ந்து, "ஆனால், அவர்களைத் திருத்தவோ, அதற்காக அவர்களை வருத்தவோ நாம் யார்? நாம் சிறு பெண்கள். பெரியவர்களை அனுசரித்துப் போக வேண்டியது தான்" என்று கூறினாள்.

"அக்கா! நீங்கள் அநியாயத்துக்கு நல்லவர்களாக இருக்கிறீர்கள். அதனால் தான் அத்தை உங்கள் தலையில் மிளகாய் அரைக்கிறார்கள்" என்று பொற்கொடி கேலியாகச் சொன்னாள்.

சொல்லிக் கொண்டே, நைசாக நகர்ந்தாள்!



"எங்கே போகிறாய்? அதை இப்படிக் கொடு!" என்று லெட்சுமி பிடித்துக் கொண்டாள்.

"அக்கா, அத்தைக்கு இந்தக் காப்பிதான் பிடிக்கும்" என்றாள், பொற்கொடி.

"நான் காப்பி போட்டு தருகிறேன். கொண்டு போய்க் கொடு" என்றாள், லெட்சுமி.

"நீங்களே கொண்டு போங்கள்" என்று பொற்கொடி விறைத்துக் கொண்டாள்.

"என்னைத்தான் அத்தைக்குப் பிடிக்கவில்லையே" என்று வருத்தத்துடன் சொல்லிக் கொண்டே, லெட்சுமி காப்பி கலந்தாள்.

ஒரு தம்ளரில் ஊற்றி, "கொண்டுபோய், அத்தைக்குக் கொடு" என்ற பொற்கொடியின் கையில் தந்தாள்.

அவள் ஒரே பிடிவாதமாக அந்தக் காப்பியை வாங்கிக் கொள்ள மறுத்தாள். தான் தயாரித்த காப்பியைத்தான் கொண்டு போவேன் என்று நின்றாள்.

"பொற்கொடி! இது என்ன சிறுபிள்ளைத்தனம்" என்று லெட்சுமி கடிந்து கொண்டாள்.

அதைக் கேட்டதும், பொற்கொடிக்குக் கோபம் பொங்கியது.

"முள்ளை முள்ளால் எடுக்க வேண்டும்! வைரத்தை வைரத்தால் அறுக்க வேண்டும்! இதுதான் என் கொள்கை" என்று பல்லைக் கடித்துக் கொண்டு சொன்னாள்.

"கற்புக்கரசி-உத்தம பத்தினி என்றால், கணவனுக்குத்தான் உண்மையாக இருக்க வேண்டும். கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்" என்று மதிக்க வேண்டும். 'பேயானாலும் மாமியார்!' நாயானாலும் சாமியார் என்று யாரும் சொல்லவில்லை" என்று முழக்கினாள்.

அப்பொழுது கயல்விழி அடுப்படிக்குள் நுழைந்தாள்.

"என்ன, இரண்டு பேரும் இங்கே சண்டை போட்டுக் கொண்டு இருக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"நீங்கள் இரண்டு பேரும் இந்த வீட்டு மருமகள்கள். நீங்கள் இருவரும் ஒற்றுமையாக இருந்தால்தானே, மாமியாரின் குடுமியைப் பிடித்து ஆட்ட முடியும்?" என்று அவர்களுக்குப் புத்தி சொன்னாள்.

"அதைத்தான் நானும் கூறுகிறேன்" என்றாள், பொற்கொடி.

"அம்மா பாட்டி! நீ போய் உன் பாடத்தை படி" என்றாள், லெட்சுமி.

"சிறியோர் சிந்திய பொரிகடலை 'யெல்லாம் பெரியோராயின் பொறுக்கித் தின்பது கடன்!" என்று கயல்விழி பாடம் படித்தாள்.

"காதைப் பிடித்துத் திருகி கனிவாகக் கன்னத்தில் ஒன்று கொடு!" என்று புதிய குறள் கூறிய லெட்சுமி, செல்லமாகத் திருகி, "போ, வெளியே" என்றாள்.

"நீ போகாதே, கயல்விழி" என்று பொற்கொடி தடுத்தாள்.

"நான் அம்மாவுக்குக் காப்பி கொண்டு போகிறேன். இவர்கள் தடுக்கிறார்கள்" என்று தன் கையில் இருந்த காப்பியைக் காட்டினாள்.

"அது காப்பி அல்ல. கழுநீர் தண்ணீர்" என்றாள், லெட்சுமி.

"அம்மாவுக்கா? அசல் காப்பி! கொண்டு போய்க் கொடுங்கள்!"

கயல்விழி உற்சாகத்துடன் துள்ளிக் குதித்தாள்,

உடனே, பொற்கொடி நடக்கத் தொடங்கினாள்.

லெட்சுமி தடுத்தும் அவள் நிற்கவில்லை.

அங்கமுத்து ஏதோ ஒரு பேய்க் கதை படித்துக் கொண்டு இருந்தாள்.



பொற்கொடி அன்னநடை நடந்து வந்து, "காப்பி குடியுங்கள், அத்தை" என்று, வெகு பவ்வியமாகக் கொடுத்தாள்.

"வாடி என் ராசாத்தி! உன் கையால்தான் காப்பி குடிக்கக் காத்துக் கொண்டு இருந்தேன்" என்று குழைந்த அங்கமுத்து, காப்பியை வாங்கிப் பருகினாள்.

"அடடா! தேவாமிர்தம் போல இருக்கிறதே!"

"அதே பல்லவி!"

அவள் கையில் இருப்பது என்ன புத்தகம் என்று பொற்கொடி பார்த்தாள்.

"காரிருளில் வந்த காட்டேரி."

இதுதான் புத்தகத்தின் பெயர்!

"உங்கள் சுய சரிதத்தை நீங்களே படிக்கிறீர்களா, அத்தை?"

பொற்கொடி அப்பாவி போல கேட்டாள்!

"இல்லேடா கண்ணு. இது கதை புத்தகம்" என்று கொஞ்சிய அங்கமுத்து புத்தகத்தைக் காட்டினாள்.

"பேய்க்கதை போல இருக்கிறதே. இதெல்லாம் ஏன் அத்தை படிக்கிறீர்கள்?" பொற்கொடி கேட்டாள்.

"ஏன், கண்ணு? உனக்குப் பயமாக இருக்கிறதா? அப்படியானால் புத்தகத்தைத் தூக்கி எறிந்து விடுகிறேன்" என்றாள் அங்கமுத்து.

"நீங்கள் என் பக்கத்தில் இருக்கும்பொழுது, பேயே நேரில் வந்தாலும் எனக்கு என்ன அத்தை பயம்?" என்றாள் பொற்கொடி.

"இந்த வயதில் இராமாயணம் பாரதம் படிப்பார்கள். நீங்கள் பேய், பிசாசு கதை படிக்கிறீர்களே என்று கேட்டேன்" என்று முடித்தாள்.

"ஒன்றுக்கு இரண்டு மருமகள்கள் வந்தாயிற்று. இருவரையும் எப்படி சமாளிப்பது என்பதை அம்மா படித்துத்

தெரிந்து கொள்ளுகிறார்கள்" என்று கூறிக்கொண்டே கயல்விழி வந்தாள்.

"அம்மா, காப்பி குடித்துவிட்டீர்களா?" என்று நயமாக கேட்டாள்.

"காப்பியா, அது? பஞ்சாமிர்தம் போல இருக்கிறது! உன் சின்ன அண்ணி கையால் நீயும் ஒரு தம்ளர் வாங்கி பருகிப்பார்" என்றாள் அங்கமுத்து.

"அந்தப் பஞ்சாமிர்தம் எனக்கு வேண்டாம், அம்மா" என்றாள், கயல்விழி. "அம்மா, உங்களுக்கு ஒரு கதை தெரியுமா?"

"பேய்க்கதையா? சொல்லடி!" அங்கமுத்து ஆவலாகத் கேட்டாள்.

"இது ஒரு பேயன் கதை" என்ற கயல்விழி கதையைச் சொன்னாள்.

"ஓர் ஊரில் ஒரு பேயன் இருந்தான். அவனுக்கு இரு பெண்டாட்டிகள். இளையவள் மீதுதான் அவனுக்கு கொள்ளை ஆசை. ஒருநாள் மூத்தவள் வீட்டில் இருப்பான். மறுநாள் இளையவள் வீட்டில் இருப்பான். ஒருநாள் அவன் மூத்தவள் வீட்டில் இருக்க வேண்டிய நாள். அவனுக்காக அவள் கோழிக் குழம்பு, அவனுக்குப் பிடித்தமான தக்காளி ரசம் எல்லாம் வைத்து இருந்தாள். அவன் வந்ததும் சாப்பாடு எடுத்து வைத்தாள். அவனுக்கோ அன்று இளையவள் வீட்டுக்குப் போக வேண்டும் என்று ஆசையாக இருந்தது. எனவே, "இது என்னடி. சோறா? புழுதி மண்! இது என்ன குழம்பா? சேறு! இது என்ன ரசமா? கழுதை நீரு" என்று எல்லாவற்றையும் எட்டி உதைத்து விட்டு, இளையவள் வீட்டுக்குப் போய் விட்டான்..."

"கயல்விழி! இங்கே வா."

லெட்சுமி குரல் கொடுத்தாள்.

ஆனால், கயல்விழி அவளை திரும்பிக்கூடப் பார்க்க வில்லை.



லெட்சுமி வேகமாகக் கூடத்துக்கு வந்தாள்.

"கதை சொல்லுகிற நேரமா, இது? எழுந்திரு" என்று அதட்டினாள்.

"அவளை ஏண்டி அதட்டுகிறாய்? உன் வேலையைப் பார், போ" என்று அங்கமுத்து அவளை அடித்து விரட்டினாள்.

கயல்விழி கதையைத் தொடர்ந்தாள்.

"இளையவள் அன்று அவனை எதிர்பார்க்கவில்லை. ஆகவே, அவனுக்காக சமையல் செய்யவும் இல்லை. அவனோ வந்ததும் வராததுமாக 'சாப்பாடு எடுத்துவை' என்றான். பக்கத்து வீட்டிலாவது ரசம் வாங்கிக் கொண்டு வரலாம் என்று ஒரு பாத்திரத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டாள். அப்பொழுது வெளியில் மழை பெய்துகொண்டு இருந்தது. அவள் வீட்டு ஓரமாக ஒரு கழுதை நின்றது. அது நீர் கழித்தது. அதைப் பார்த்ததும் இளையவள் ஓடிவந்து, நீரை பாத்திரத்தில் பிடித்துக் கொண்டாள். அதைக் கொண்டு போய் கணவனுக்குக் கொடுத்தாள். 'ஆகா! ரசமா இது? கோழி சூப் போல இருக்கிறது' என்று கூறிக்கொண்டே அவன் சாப்பிட்டான்."

கயல்விழி கதையை முடித்தாள்.

"சீசீ! இதுவும் ஒரு கதையாடி! முதலில் உன் வாயைக் கழுவு!" என்று அங்கமுத்து அவள் காதைப் பிடித்தாள்.

"முதலில் உங்கள் வாயைக் கழுவுங்கள், அம்மா" என்றாள், கயல்விழி.

"ஏண்டி?" அங்கமுத்து குழம்பினாள்.

"நீங்கள் குடித்தது காப்பி அல்ல."

"பிறகு...?"

"கழு..."

"கழுதையா?"

"இல்லை, இல்லை, கழுநீர்!"

"என்னடி சொல்லுகிறாய்?"

அங்கமுத்து திடுக்கிட்டவளாகத் திரும்பிப் பார்த்தாள்.

இன்னும் அங்கே நின்று கொண்டு இருக்க பொற்கொடிக்குப் பைத்தியமா, என்ன!

## 26

வீசி எறியப்பட்ட கல் போலே 'விர்' என்று கூடத்துக்கு வந்தாள் லெட்சுமி!

வந்த வேகத்திலேயே குழந்தைகள் நாய்க் குட்டியைத் தூக்குவது போல, கயல்விழியின் காதைப் பிடித்துத் தூக்கினாள்!

"கதையாடி சொல்லுகிறாள், கதை! கழுதை என்ன செய்யும் தெரியுமா? உதைக்கும்! உனக்கும் அதுதான் கிடைக்கும்! ஓடு" என்று காதைத் திருகிவிட்டாள்!

"ஆ!" என்று காதைப் பிடித்துக்கொண்டே கயல்விழி ஓடினாள்;

"அத்தை! நீங்கள் குடித்தது நல்ல காப்பிதான்!" என்று மாமியாரிடம் லெட்சுமி கூறினாள்.

கயல்விழி சொன்ன கதையை இவ்வளவு நேரம் அவளும் கேட்டுக் கொண்டுதான் இருந்தாள்.

"பொற்கொடி போட்டிருந்த காப்பியை நான் மாற்றி விட்டேன் அத்தை. நான் போட்டிருந்த காப்பியைத்தான் அவள் கொண்டு வந்து உங்களுக்குக் கொடுத்தாள்" என்றும் லெட்சுமி சொன்னாள்.

கதை கேட்டது முதல் அங்கமுத்துக்கு குடலைக் குமட்டிக் கொண்டு இருந்தது. இதைக் கேட்ட பின்புதான், தொண்டைக்கு வந்த காப்பி மீண்டும் உள்ளே போயிற்று!



மாடிப் படியில் நின்று இவ்வளவையும் கேட்டுக் கொண்டு இருந்த பொற்கொடி "இங்கே என்ன அத்தை, ரகளை?" என்று கேட்டுக்கொண்டே கீழே இறங்கி வந்தாள்.

"இங்கே ரகளையும் இல்லை? புரளியும் இல்லை" என்று லெட்சுமி 'வெடுக்'கென்று சொன்னாள்.

"நீ எனக்குக் கொண்டு வந்தது காப்பி இல்லையாம். கழுநீர் தண்ணீராம்" என்று அங்கமுத்து சொன்னாள்.

"அய்யோ! அய்யோ!" என்று பொற்கொடி வாயில் அடித்துக் கொண்டாள். "இவ்வளவு பெரிய புளுகு மூட்டையை யார் அத்தை அவிழ்த்து விட்டது?"

"இவள்தான்!" அங்கமுத்து கொஞ்சமும் கூசாமல் லெட்சுமியைக் காட்டினாள். "அந்தக் காப்பியை மாற்றி விட்டு, இவள் போட்ட காப்பியை உன்னிடம் கொடுத்து விட்டாளாம்."

"ஆகா! இப்பொழுதுதான் எனக்கு விஷயம் புரிகிறது!" என்ற பொற்கொடி கொலைக் குற்றவாளியைப் பார்ப்பது போல லெட்சுமியை நோக்கினாள்.

லெட்சுமியோ அலட்சியமாக நின்றாள்.

"அத்தை! நான் உங்களுக்கு கழுநீர் தண்ணீரைக் கொண்டு வந்து கொடுப்பேனா?" பொற்கொடி உருகினாள்.

"நீ கொடுப்பது பஞ்சாமிர்தம் ஆயிற்றே!" அங்கமுத்து பனிக்கட்டியாகக் கரைந்தாள்.

"உங்களுக்கும் எனக்கு என்ன அத்தை சண்டை? நான் ஏன் உங்களுக்குக் கழுநீர் தண்ணீர் கொடுக்கப் போகிறேன்."

பொற்கொடிக்குக் கண்களில் நீர் துளிர்த்து விடும்போல் இருந்தது.

அவளது நடிப்பைப் பார்த்து லெட்சுமி ஆச்சரியப்பட்டாள்;

"நீ வைரம் ஆயிற்றே! எனக்கு வைரமா அல்லவா கொடுப்பாய்!" என்று அங்கமுத்து குழைந்தாள்.

"இந்நேரம் மன்னன் இல்லையே என்று லெட்சுமி நினைத்தாள். மன்னன் இருந்திருந்தால், 'வைரத்தைக் குடித்தால், வைகுண்ட யாத்திரை புறப்பட வேண்டியதுதான்!' என்று ஒரு பொன்மொழியை உதிர்த்து இருப்பானே!"

"அத்தை! இந்த லெட்சுமி அக்காதான் இத்தனை நாளும் காப்பி என்று சொல்லி உங்களுக்குக் கழுநீர் தண்ணீரைக் கொடுத்திருக்க வேண்டும்."

அழுகுரலில் பொற்கொடி சொன்னாள்.

அதைக் கேட்டு லெட்சுமி திடுக்கிட்டாள்.

"இருக்கும். இருக்கும்! அவள் கொடுக்கிற காப்பியெல்லாம் கழுநீர் தண்ணீர் போலத்தான் இருக்கும்."

அங்கமுத்து ஒத்து ஊதினாள்!

"பொற்கொடி! விளையாடுகிறாயா? இல்லை. உன்குணமே இதுதானா?"

லெட்சுமி ஆத்திரத்துடன் கேட்டாள்.

"அந்தப் பெண்ணை ஏதாவது சொன்னால், உன் பல்லை உடைப்பேன்!"

அங்கமுத்து சீறினாள்.

"அவள் வைரம் அவளைப்பற்றிப் பேச உனக்கு என்னடி யோக்கியதை இருக்கிறது? போடி அடுப்படிக்கு?" என்று கர்ச்சித்தாள்.

லெட்சுமிக்கு விழிகள் கலங்கின. விம்மிக் கொண்டே அடுப்படிக்கு நகர்ந்தாள்!

பொற்கொடியும் அவள் பின்னேயே வந்தாள்.

அப்பொழுது அவளைப் பார்க்க,'இந்தப் பூனையும் பால் குடிக்குமா?' என்பது போல இருந்தது.

"அக்கா..."

நீட்டி முழக்கி லெட்சுமியை அழைத்தாள்.



அது, 'தட்டை எப்படித் திருப்பிவிட்டேன் பார்த்தீர்களா?' என்று சொல்லாமல் சொல்வதுபோல இருந்தது.

லெட்சுமி 'ஏன்?' என்று கேட்கவில்லை. முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"அக்கா! நல்லதுக்குக் காலம் இல்லை. இப்பொழுதாவது தெரிந்து கொள்ளுங்கள்" என்றாள் பொற்கொடி.

"சிலரை சில காலம் ஏமாற்றலாம். ஆனால் பலரை பல காலம் ஏமாற்ற முடியாது" என்றாள் லெட்சுமி துக்கத்துடன்.

"ஏமாறுகிறவர்கள் இருக்கும் வரை ஏமாற்றுகிறவர்கள் இருக்கத்தான் செய்வார்கள்!"

அலட்சியமாகச் சொல்லிக் கொண்டே பொற்கொடி வெளியில் சென்றாள்.

மன்னன் அலுவலகத்துக்குப் புறப்பட்டான்.

பொற்கொடியும் அவனுடன் காரில் ஏறிக் கொண்டாள்.

"கார் வீட்டைத் தாண்டி வெளியில் வந்ததுமே, "உங்கள் அண்ணி சுத்த மோசம்" என்று பொற்கொடி முகத்தைச் சுழித்தாள்.

"ஏன், என்ன நடந்தது?" என்று மன்னன் கேட்டான்.

"அவர்களுக்கு உதவி செய்யலாம் என்று நான் நினைக்கிறேன். அவர்களோ என்னை மாட்டி வைக்கப் பார்க்கிறார்கள்" என்று பொற்கொடி பெரிதாகச் சொன்னாள். காலையில் நடந்த நிகழ்ச்சியையும் தெரிவித்தாள்.

நீங்கள் இரண்டு பேருமே சண்டை போட்டுக் கொண்டால், அம்மா பாடு கொண்டாட்டந்தான்."

"இது உங்கள் அண்ணிக்குத் தெரியவில்லை."

"அவர்கள் பண்பாட்டில் வளர்ந்தவர்கள்!"

"நான் மட்டும் மண்மேட்டில் வளர்ந்தவளா?"

"அண்ணியை அனுசரித்துத்தான் நீ நடக்க வேண்டும். அவர்களோடு சண்டை போட்டுக் கொள்ளக் கூடாது."

"இந்தப் புத்திமதியை உங்கள் அண்ணியிடம் சொல்லுங்கள்."

"எனக்கு அண்ணியிடம் உயர்ந்த மதிப்பு உண்டு. அவர்கள் குடும்ப விளக்கு."

"இந்த அண்ணி துதியெல்லாம் எனக்கும் பிடிக்காது!"

"அடுத்த பெண்ணைப் புகழ்ந்தால், எந்தப் பெண்ணுக்குத் தான் பிடிக்கும்? அவளையேதான் புகழ்ந்து கொண்டு இருக்க வேண்டும்!"

"நீங்கள் ஒன்றும் என்னைப் புகழ வேண்டாம்."

"கோபமா, டார்லிங்..."

பொற்கொடி ஊடிக் கொண்டாள்.

"ஓ! என் சுவீட்டிக்கு அதற்குள் கன்னம் ஆப்பிள் போல சிவந்து விட்டதே!"

மன்னன் செல்லமாக அவள் கன்னத்தைத் தட்டினான்.

"சோப்புப் போடாதீர்கள்!" என்று பொற்கொடி அவன் கையைத் தட்டிவிட்டாள்.

"சோப்பு விற்கிற விலை உனக்குத் தெரியாது போலிருக்கிறது!" என்று கூறிவிட்டு, மன்னன் பார்வையை சாலையில் பதித்தான்.

**மா**லை நேரம்.

மன்னன்-பொற்கொடி தம்பதிகள் தவிர மற்ற எல்லோரும் வீட்டுக்குத் திரும்பி விட்டார்கள்.

லெட்சுமி அவர்களுக்குக் காப்பி கொண்டு வந்தாள்.

கண்ணன், கயல்விழி, சுப்பிரமணியம், அங்கமுத்து அனைவரும் ஆளுக்கு ஒரு தம்ளர் எடுத்துக் கொண்டார்கள்.



அவர்கள் பருகப் போன பொழுது "யாரும் காப்பியைக் குடிக்காதீர்கள்!" என்று அங்கமுத்து கர்ச்சித்தாள்.

"ஏனம்மா? காப்பியில் பல்லி விழுந்து விட்டதா?" கண்ணன் கேட்டான்.

"இல்லையடா! உன் பெண்டாட்டி எப்படிக் காப்பி போடுகிறாள் என்று தெரியுமா? கழுநீர் தண்ணீரில் உப்புக்கலந்து கொண்டு வருகிறாள்" என்று அங்கமுத்து நீட்டி முழக்கினாள்.

சுப்பிரமணியம் கண்களை விரித்து அங்கமுத்துவை நோக்கினார்.

அது நெற்றிக் கண்பார்வை ஆனால், நெருப்பு வரவில்லை.

கண்ணன், லெட்சுமியைப் பார்த்தான்.

'இல்லைங்க' என்பது போல அவள் பார்வை கெஞ்சியது.

"அம்மா! அப்படிக் காப்பி போடுவது இந்த அண்ணி அல்ல. சின்ன அண்ணிதான்!" என்று கயல்விழி குரல் கொடுத்தாள்.

"வாயை மூடுடி!" அங்கமுத்து அவளை அடக்கினாள்.

பிறகு அங்கமுத்து தொடர்ந்து பேசினாள். "இந்தக் கள்ளிக்கு இப்பொழுதுதான் சரியான தண்டனை கொடுக்கப் போகிறேன்" என்றவள், மறைத்து வைத்திருந்த ஒரு மண்சட்டியை எடுத்தாள்.

"இந்த சட்டி நிறைய கழுநீர் தண்ணீர் இருக்கிறது. அதை இந்த மாடு குடிக்க வேண்டும்!" என்று தீர்ப்புக் கூறினாள்.

அங்கமுத்துவின் தீர்ப்புக்கு அங்கே 'அப்பீல்' கிடையாது.

சுப்பிரமணியத்துக்குத் தலை தொங்கியது.

கண்ணனும் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டான்.

துரியோதனன் சபையில் நிறுத்தப்பட்ட பாஞ்சாலி போல லெட்சுமி நின்றாள்.

"அம்மா! இது அநியாயம்!"

கயல்விழி மட்டும் குரல் கொடுத்தாள்.

ஆனால் கட்சி பெரும்பான்மையில், எதிர்க்கட்சிக் காரர்கள் கூச்சல் போடுவது போல, அந்தக் குரல் காற்றோடு கலந்து போயிற்று.

"ஏண்டி மரம் போல நிற்கிறாய்? எடுத்துக் குடி!"

அங்கமுத்து அலறினாள்.

லெட்சுமி மறு பேச்சு பேசவில்லை. சட்டியைக் கையில் எடுத்துப் பருகினாள்.

## 27

கூண்டுக்குள் அடைபட்ட எலிபோல, கண்ணன் அறைக்குள் முன்னும் பின்னும் நடந்து கொண்டு இருந்தான்! அவன் உள்ளம் அழுது கொண்டு இருந்தது.

அவன் மனம் ஆழ்கடலாக ஆர்ப்பரித்தது!

அவன் இதயம் எரிமலையாகக் குமுறியது!

ஆனால், எல்லாம் ஊமையன் கண்ட கனவு போலத்தான்!

கண்ணாடி வீட்டுக்குள் இருந்து பேசினால், ஓசை வெளியில், கேட்குமா?

உள்ளத்து உணர்ச்சிகளை வெளிக் காட்டும் ஆற்றல் அவனுக்கு இல்லை.

அவன் ஊமை அல்ல; ஆமை! அடங்கிப் போன கோழை.

மனைவிக்கு ஏற்பட்ட அவமானத்தால் அவன் குமுறினான். கொந்தளித்தான். கூனிக் குறுகினான். ஆனால், அந்த



ஆத்திரத்தை-ஆவேசத்தை -எழுச்சியை வெளிக்காட்ட அவனால் முடியவில்லை. அத்தனை உணர்ச்சிகளும் உயிரற்ற நிழல் போல ஆயின!

படுக்கை விரித்து இருந்தது.

ஆனால், அவனுக்கு படுக்க மனம் இல்லை.

அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டு இருந்தான்.

மனைவியின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்தான்.

வீட்டு வேலைகள் அனைத்தையும் முடித்துக் கொண்டு லெட்சுமி வந்தாள்!

அறைக்குள் நுழைந்ததும், அணைகடந்த வெள்ளம் ஆனாள்!

"ஓ" என்று அழுது கொண்டே, ஓடிச் சென்று படுக்கையில் விழுந்தாள்!

வாய்விட்டு அழுதாள்.

விம்மினாள்! வெதும்பினாள்!

கண்களை கயல்கள் என்பார்கள். அவள் கண்களோ கயல்கள் நீந்தும் காவிரி ஆயின!

அவள் கன்னங்களில் மட்டும் மின் உற்பத்தி நிலையங்களை அமைக்க முடியுமானால், அவளது கண்ணீரைக் கொண்டே தமிழ் நாட்டில் மின்சார வெட்டு முழுவதையும் நீக்கிவிட முடியும்!

அப்படி அழுதாள்! கண்ணீர் பெருக்கினாள்!

அவளுக்கு ஏற்பட்டது சாதாரண அவமானமா?

அதுவும் அவள் செய்யாத குற்றத்துக்கு!

அதைவிட தூக்குத்தண்டனை கொடுத்திருந்தால் கூட மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டு இருப்பாளே!

அவ்வளவு அவமானப்பட்டுங்கூட அவள் பொறுமையாக இருந்தாள். ஆனால், தனது அறைக்கு வந்ததும்-தனிமை

கிடைத்ததும் பொறுமை இழந்தாள். பொங்குமாங் கடல் ஆனாள்! பொதிகை அருவியானாள்!

கற்சிலையாக நின்ற கண்ணன், கண் இமைக்காமல் அவளையே பார்த்துக்கொண்டு இருந்தான்.

ஒரு சிறு குழந்தை அழுவதுபோல அவனுக்குத் தோன்றியது.

அவன் உள்ளம் உருகியது.

அவளை சமாதானப்படுத்தத் துடித்தான்.

ஆனால், அவளுக்கு ஆறுதல் கூறுவது-எந்த வகையில் தேறுதல் சொல்லுவது என்று அவனுக்குத் தெரியவில்லை.

மெல்ல அவள் அருகில் சென்றான்.

கட்டிலில் அமர்ந்தான்.

அப்பொழுதும் அவளது அழுகை ஓயவில்லை.

சற்று கழித்து, அவள் தோளில் தன் கையை பாசத்துடன் வைத்தான்.

அவள் விசும்பினாள்.

இன்னும் சற்று கழித்து...

"லெட்சுமி..."

அவன்தான் அழைத்தான்.

அவளோ விம்மினாள்.

"லெட்சுமி."

மீண்டும் அழைத்துக் கொண்டே, அவள் தோள்களைப் பற்றித் தூக்கினான்.

அவன் முகத்தைப் பார்த்தும், அவளது அழுகை ஊற்றெடுத்தது! கண்ணீரில் புதுவெள்ளம் பொங்கியது.

'அழாதே, லெட்சுமி!' என்று சொல்ல அவனுக்குத் தெரியவில்லை.



ஆனால், அவன் கைகள் அவளது கண்ணீரைத் துடைத்தன.

அவன் கைபட்டதும், அவள் கன்னத்தில் பனிக்கட்டியை வைத்தது போல இருந்தது.

வியப்புடன் அவனை நோக்கினாள்.

அவள் முகம் மலர்ந்தது.

அந்த ஒரு சுகத்துக்காக இன்னும் ஆயிரம் அவமானப் படவும் அவள் தயாராக இருந்தாள்!

அவன் கையை முத்தமிட்டு, மார்போடு இறுக சேர்த்து வைத்துக்கொண்டாள்.

அவன் கண்கள் கலங்கின. முத்துக்கள் முதிர்ந்தன.

அதைப் பார்க்க அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது!

"சே சே! நீங்கள் ஆண்பிள்ளை! அழக்கூடாது" என்று தன் கையால் அவன் கண்ணீரைத் துடைத்தாள்.

"லெட்சுமி! அம்மா உன்னை இப்படி அவமானப் படுத்தியதை என்னாலேயே தாங்கிக் கொள்ள முடிய வில்லையே! நீ எப்படி தாங்கிக் கொண்டாய்?"

அவன் விம்மினான்.

"அத்தையா... என்னை அவமானப்படுத்தி விட்டார்களா..."

அவள் கலகல என்று சிரித்தாள்!

இத்தனை அவமானத்துக்குப் பின்னும் எப்படித்தான் அவளால் இப்படி சிரிக்க முடிகிறதோ!

அவனோ அந்த சிரிப்பை சுவைக்கும் நிலையில் இல்லை.

"யார்? அத்தைதானே! அதற்கா இப்படி கவலைப் படுகிறீர்கள்?"

இப்பொழுது அவள் அவனை சமாதானப்படுத்த வேண்டியிருந்தது.

"எல்லாம் அந்த பொற்கொடியால் வந்த வினை!" அவன் கறுவினான்.

"சிறு பெண்தானே? அவள் எனக்கு உதவி செய்வதாக நினைக்கிறாள். ஆனால், அது உபத்திரவமாக முடிகிறது" என்று லெட்சுமி சாதாரணமாகச் சொன்னாள்.

"லெட்சுமி..." அவன் திடீர் என்று அழைத்தான்.

"என்னங்க?"

"நாம் இருவரும் எங்காவது ஓடிவிடலாமா?"

"என்ன சொல்கிறீர்கள்?"

அவள் மீண்டும் சிரித்தாள்!

"நாம் இருவரும் எங்காவது ஓடவா நாம் என்ன கள்ளக் காதலர்களா?"

வெள்ளிக்காசுகளை அள்ளி வீசியது போல அவளது சிரிப்புத் தொடர்ந்தது.

"அது இல்லை லெட்சுமி! நான் சொல்ல வந்தது..."

அவனுக்கு சொல்லத் தெரியவில்லை.

"புரிகிறது, புரிகிறது. நாம் தனிக்குடித்தனம் போகலாமா என்று கேட்கிறீர்களா?"

அவன் சொல்ல வந்ததை, அவள் முடித்தாள்.

"ஆமாம் அம்மாவிடம் நீ கொடுமைப்படுவதை என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை" என்று கண்ணன் கொஞ்சம் உரக்கக் கூறினான்.

இப்பொழுது அவன் ஓர் ஆண் பிள்ளையாக லெட்சுமியின் கண்களுக்குத் தெரிந்தான். திடீர் என்று அவனுக்கு எப்படி இவ்வளவு வீரம் வந்தது? மனைவி மீது உள்ள மோகமோ!

ஆனால், இந்த சிந்தனைக்கே லெட்சுமி இடம் கொடுக்க வில்லை. "சிறு பிள்ளைபோல பேசாதீர்கள்" என்று அவனை அடக்கினாள்.

"குடும்பம் என்றால், நாலுந்தான் இருக்கும். எல்லா வற்றையும் சகித்துக் கொண்டுதான் போக வேண்டும்" என்றாள்.



"ஆனாலும் கொடுமைக்கும் ஓர் அளவு இல்லையா?" கண்ணன் குமுறினான்.

"இது எல்லா மாமியார்களுக்கும் இருக்கிற குணந்தான். மாமியார் என்ற பதவி கிடைத்ததும், தலையில் இரண்டு கொம்பு முளைத்து விடும். மருமகளை முட்டிக் கொண்டே இருப்பார்கள். இதையெல்லாம் பெரிதாக எடுத்துக் கொண்டால், எந்தப் பெண்ணுமே புக்ககம் போக முடியாது" என்றாள், லெட்சுமி.

"லெட்சுமி! உனக்கு எவ்வளவு தங்கமான மனம்!"

கண்ணன் அன்புடன் அவளை அரவணைத்துக் கொண்டான்.

"இப்பொழுது எவ்வளவு சுகமாக இருக்கிறது தெரியுமா!"

லெட்சுமி மெய் மறந்தாள்!

அவனது பிடி இன்னும் இறுகியது.

"இந்த சுகத்துக்காக எந்தக் கொடுமையையும் அனுபவிக்கலாம்!"

அவள் அவனோடு ஒட்டிக் கொண்டாள்!

ஒருடல் ஒருயிர் ஆனார்கள்!

காலையில்தான் ஈருடல் ஈருயிர் ஆனார்கள்.

லெட்சுமி வழக்கம் போல குளித்து முடித்துவிட்டு, அடுப்படியை நோக்கிச் சென்றாள்.

அடுப்படி வாசலில் சேலையை வரிந்து கட்டிக் கொண்டு அங்கமுத்து நின்று கொண்டு இருந்தாள்!

அவள் கையில் அடுப்படி செங்கோல்!

ஓர் அடுக்குச்சட்டியை எடுத்து அவள் தலையில் கவிழ்த்து விட்டால், அசல் முடிசூடிய மகாராணி போல இருப்பாள்!

"எங்கேடி போகிறாய்?"

லெட்சுமியைப் பார்த்ததும் அங்கமுத்து அதட்டலாகக் கேட்டாள்.

லெட்சுமி திகைத்தாள்!

அந்தக் கேள்வி அவளுக்குப் புதிதாக இருந்தது.

தூங்குகிறவனை எழுப்பி 'தூங்குகிறாயா?' என்று கேட்பது போலவும் இருந்தது.

ஆனாலும், "அடுப்படிக்கு" என்று லெட்சுமி அமைதியாகப் பதில் சொன்னாள்.

"இன்று முதல் நீ அடுப்படிக்குள் நுழையக் கூடாது. நுழைந்தால், கையை முறித்து விடுவேன்!"

கரண்டியை ஆட்டிக் கொண்டே அங்கமுத்து கட்டளையிட்டாள்.

"இன்று முதல் பொற்கொடி தான் அடுப்படி வேலை செய்வாள்" என்றும் சொன்னாள்.

"அத்தை! அவள் வைரம்!"

லெட்சுமி பதட்டத்துடன் கூறினாள்.

"வைரம் இருக்கிற இடத்தில் கூழாங்கல் இருக்கக் கூடாது. நீ போ" என்றாள், அங்கமுத்து.

"அத்தை! அவள் சிறு பெண். அடுப்படி என்றாலே என்ன என்று அறியாதவள்..." என்று லெட்சுமி சொல்லிக் கொண்டு இருந்தாள்.

அதற்குள் அங்கமுத்து குறுக்கிட்டாள். "எல்லாம் எனக்குத் தெரியும். உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ!"

லெட்சுமிக்கு முகம் செத்துவிட்டது!

'என் வேலை அடுப்படியில்தான், அத்தை' என்று சொல்லலாம் என்று நினைத்தாள்.

ஆனால், வேலியில் ஓடும் ஓணானைப் பிடித்து காதுக்குள் விட்டுக் கொள்ள அவள் விரும்பவில்லை!

தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு, பின்னே திரும்பி நடந்தாள்!



லெட்சுமி போனதும் அங்கமுத்து ஒரு புன்னகையை உதிர்த்தாள்.

பெருமிதத்துடன் மாடிப் படியை நோக்கி நடந்து சென்றாள்.

பொற்கொடியின் அறைக்குச் சென்றாள்.

அந்த அறையின் கதவு பூட்டியிருந்தது.

அறைக்குள் இருந்து அருமையான சங்கீதம் கேட்டது!

"கொர்...ர்...ர்...கொர்...ர்...ர்...கொர்...ர்...ர்...!"

## 28

மழை காலத்துத் தவளை கத்துவது போல, "கொர்.... கொர்..." குறட்டை ஒலி தொடர்ந்து கேட்டுக்கொண்டு இருந்தது!

அந்த சங்கீதம் பிடிக்காமல் அங்கமுத்து சற்று நேரம் காதைப் பொத்திக் கொண்டாள்.

பிறகு, "கண்ணு... அம்மா வைரம்.." என்று குரல் கொடுத்துக் கொண்டே கதவைத் தட்டினாள்.

அந்த ஓசை கேட்டு மன்னன் விழித்துக் கொண்டான்.

பொற்கொடி சுகமாகக் குறட்டை விட்டுக்கொண்டு இருந்தாள்.

பொற்கொடி..... எழுந்திரு... எழுந்திரு..." என்று மன்னன் அவளை எழுப்பினான்.

தண்ணீரில் மூழ்குகிறவள் காப்பாற்ற வருகிறவரையும் சேர்த்து இழுப்பது போல, "அதற்குள் என்னங்க அவசரம்... இப்பொழுதுதான் நன்றாகத் தூக்கம் வருகிறது" என்று சிணுங்கிக் கொண்டே பொற்கொடி அவனைப் பிடித்து, இழுத்து, அணைத்து படுக்க வைத்துக்கொண்டாள்.

"அம்மா கூப்பிடுகிறார்கள், எழுந்திரு" என்று அவன் திமிறிக் கொண்டு எழுந்தான்.

"சும்மா தொல்லை பண்ணாதீர்கள்," என்று அவள் மீண்டும் சிணுங்கினாள்.

"அம்மா கூப்பிடுகிறார்கள்."

"போங்களேன், அதற்கு என்னிடம் ஏன் அனுமதி கேட்கிறீர்கள்?"

"அம்மா உன்னைத்தான் கூப்பிடுகிறார்கள்?"

"என்னை ஏன் கூப்பிடுகிறார்கள்?"

"முதலில் எழுந்திரு."

மன்னன் அவள் முட்டியில் ஓங்கி ஒன்று வைத்தான்!

"ஆ" என்று அலறிக் கொண்டே அவள் எழுந்தாள்.

"விடிந்து எவ்வளவு நேரமாகி விட்டது? இன்னும் என்ன தூக்கம்?" என்றான் அவன்.

"இரவெல்லாம் தூங்கவிட்டீர்களாக்கும்!" என்று அவள் குழைந்தாள் "நான் சொல்ல வேண்டியதை நீ சொல்லுகிறாயா!" என்றான் அவன்.

அதற்குள் அங்கமுத்து மீண்டும் அழைக்கும் குரல் கேட்டது.

"நீங்கள் போய்க் கதவைத் திறங்கள்" என்று கூறிவிட்டு பொற்கொடி எழுந்து குளியலறைக்குள் சென்றாள்.

மன்னன் வந்து கதவைத் திறந்தான்.

திறந்ததும், "ஏண்டா இப்படியா குறட்டை விடுவது? எலி கத்துவது போல இருக்கிறது! என் கண்ணு எப்படித் தூங்குகிறதோ!" என்று அங்கமுத்து அவனை கடிந்து கொண்டாள்.

"அம்மா குறட்டை விடுவது நான் அல்ல, உன் கண்ணு தான்!" என்று சொல்லிக்கொண்டே, காதுக்குள் அடைத்து



வைத்திருந்த பஞ்சை மன்னன் வெளியில் எடுத்துப் போட்டான்.

"அதுதானே! எம். எஸ். சுப்புலட்சுமி பாடுவது போல இருக்கிறதே என்று நினைத்தேன்!" என்று அங்கமுத்து பல்லைக் காட்டினாள்.

அப்பொழுது ஆடையை சரி செய்து கொண்டே பொற்கொடி அங்கே வந்தாள்.

"கண்ணு! இன்று முதல் லெட்சுமியை அடுப்படிக்குள் போகக்கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டேன்" என்று அவளிடம் அங்கமுத்து தெரிவித்தாள்.

"அதுதான் சரி அத்தை" என்றாள் பொற்கொடி.

"அப்படியானால், வீட்டில் எல்லோரும் பட்டினிதானோ?" என்று மன்னன் துயரத்துடன் கேட்டான்.

"ஏன் பட்டினி? என் வைரம் சமையல் செய்வாள்" என்று அங்கமுத்து பெருமிதத்துடன் சொன்னாள்.

"நானா!" என்று பொற்கொடி அதிர்ச்சி அடைந்தாள்.

"அதைவிட பட்டினி கிடப்பதே நல்லது" என்றான் மன்னன்.

அதைக் கேட்டதும், பொற்கொடிக்கு ரோஷம் வந்து விட்டது!

"எனக்கு சமையல் தெரியாது என்று நினைத்தீர்களா? இன்று நானே சமைக்கிறேன், பாருங்கள்" என்று அவள் அறைகூவல் விடுத்தாள்.

அதே வேகத்துடன் "வாருங்கள், அத்தை" என்று அங்கமுத்துவைப் பிடித்து இழுத்துக் கொண்டு புறப்பட்டாள்.

இருவரும் அடுப்படிக்கு வந்தார்கள்.

அங்கே வந்ததும் அங்கமுத்து கொஞ்சம் தயங்கினாள்.

"நீ இன்னும் குளிக்கவில்லை போலிருக்கிறதே" என்று பொற்கொடியைப் பார்த்தாள்.

"அதனால் என்ன, தலையில் நாலு சொட்டு தண்ணீர் தெளித்துக் கொண்டால் போதும். எல்லாம் சாஸ்திரத்துக்கு தானே" என்று அவளே சமாதானம் சொல்லிக் கொண்டாள்.

அங்கமுத்தே போய் ஒரு தம்ளர் தண்ணீர் கொண்டு வந்து பொற்கொடி தலையில் நாலு சொட்டு தெளித்தாள்.

"உள்ளே போம்மா போய், முதலில் காப்பி போடு" என்றாள், அங்கமுத்து.

"காப்பியா.. அது மட்டுந்தான் எனக்குத் தெரியாது அத்தை" என்று பொற்கொடி தலையைச் சொரிந்தாள்.

"அது ஒரு பெரிய வித்தையா? பத்து தம்ளர் தண்ணீரைக் கொதிக்கவை. கொதித்ததும், அதில் பத்துகரண்டி காப்பித் தூளைப்போடு. பாலை ஊற்று. சீனி போடு. ஒரு கலக்கு கலக்கு..."

"போதும், அத்தை" அவள் சொல்லி முடிக்கும்முன் பொற்கொடி குறுக்கிட்டாள்.

"ஒரு தட்டில் நெய் தடவி அதில் கொட்டி பரப்பி, கத்தியால் சிறு சிறு வில்லைகளாக நறுக்க வேண்டும். அவ்வளவு தானே?" என்றாள்.

அங்கமுத்து சிரித்துவிட்டாள், "அது அல்வா கண்ணு காப்பியை அப்படியே தம்ளரில் ஊற்றி, எல்லோருக்கும் கொடுக்க வேண்டியதுதான்."

"ஆமாம், வெறும் காப்பிதானே! நான் காப்பி பர்பி என்று நினைத்துவிட்டேன்" என்று அரைகுறையாகப் படித்த சமையல் புத்தகத்தை பொற்கொடி நினைவு படுத்திக் கொண்டாள்.

"நீங்கள் போய் உட்காருங்கள் அத்தை. நான் பல்லை விளக்கிவிட்டு ஒரு நொடியில் காப்பி கொண்டு வருகிறேன்" என்று மாமியாரை அனுப்பி வைத்தாள்.

பொற்கொடி பல்லை துலக்கிக் கொண்டே தோட்டத்துப் பக்கம் வந்தாள்.



அங்கே தோட்டக்காரன் பருத்திவிதை ஆட்டிக் கொண்டு இருந்தான்.

அதைப் பார்த்த பொற்கொடி அருகில் வந்து, "என்ன ஆட்டுகிறாய்? " என்ற கேட்டாள்.

"பருத்திக் கொட்டை, அம்மா" என்று அவன் பணிவாகத் தெரிவித்தான்!

"வடை சுடவா? அதுதான் இன்று காலை டிபனா?" என்று பொற்கொடி வினவினாள்!

பருத்திக் கொட்டையையும்; புண்ணாக்கையும் அவள் என்றைக்குப் பார்த்தாள்!

தோட்டக்காரனுக்கு சிரிப்புப் பொங்கியது. அதை அடக்கிக் கொண்டு "இது மாட்டுக்கு அம்மா" என்று சொன்னான்.

"மாட்டுக்கா? மாட்டுக்கு போடவா இவ்வளவு சிரமப்பட்டு ஆட்டுகிறாய்?" பொற்கொடி பரிதாபப் பட்டாள்.

"பருத்திக்கொட்டை போட்டால் மாடு நிறையப் பால் கறக்கும் அம்மா."

"அது எப்படி?"

அது தோட்டக்காரனுக்குத் தெரியாது. ஆனால் தெரிந்தவன் போல, "பருத்திக் கொட்டையில் பால் இருக்கிறது. அதைத் தின்ற மாடு நிறையப் பால்கொடுக்கிறது" என்று விளக்கம் தந்தான்.

அதைக் கேட்டதும் பொற்கொடிக்கு 'சட்'டென்று ஒரு யோசனை தோன்றியது.

பருத்திக்கொட்டையில் பால் இருக்கிறது..

அதைத் தின்றால், மாடு நிறைய பால் கொடுக்கிறது...

காப்பிக் கொட்டையைத் தின்றால்...

காப்பி கொடுக்கும்!

பொற்கொடி இப்படியாக மனக்கணக்கு போட்டாள்!

'மட மட' என்று வீட்டுக்குள் போனாள்.

அடுப்படியில் நுழைந்தாள்.

அங்கேயிருந்த டப்பாக்களை திறந்து பார்த்தாள்

ஒரு டப்பா நிறைய காப்பிக் கொட்டை இருந்தது.

அதை அப்படியே தூக்கிக் கொண்டு தோட்டத்துக்குத் திரும்பினாள்!

அதற்குள் தோட்டக்காரன் பருத்திக் கொட்டையை ஆட்டி முடித்து அள்ளிக் கொண்டு இருந்தான்.

"இதைப் போட்டு ஆட்டு."

டப்பாவை பார்த்த அவன் திகைத்தான். "அம்மா இது காப்பிக் கொட்டை!"

"எல்லாம் எனக்குத் தெரியும். எனக்கு கண் பார்வை குறைந்துவிடவில்லை" என்று கோபமாகக்கூறிய பொற்கொடி "இதைப் போட்டு ஆட்டு" என்று கட்டளையிட்டாள்.

அவளது கோபத்தைக் கண்டு தோட்டக்காரன் பயந்து விட்டான். அவள் சொன்னபடியே காப்பிக் கொட்டையை உரலில் போட்டு ஆட்டினான்.

ஆட்டி முடிந்ததும் அதைக் கொண்டுபோய் மாட்டுக்கு வைக்கும்படி பொற்கொடி ஏவினாள்.

தோட்டக்காரன் அப்படியே செய்தான்; தண்ணீரில் கரைத்து மாட்டுக்கு வைத்தான்.

மாடு பருகியது.

பொற்கொடி முகம் மலர்ந்தாள்.

மாடு குடித்து முடித்ததும். "சீக்கிரம் பாலை கற" என்று பொற்கொடி ஏவினாள்;

தோட்டக்காரன் பேசாமல் பாலை கறந்தான்.

ஒரு குவளை நிறைய பால் இருந்தது.

அதை பொற்கொடியின் கையில் கொடுத்தான்.

காப்பிபோடும் வேலை எளிதாக முடிந்தது என்று நினைத்த பொற்கொடி. புன்னகையுடன் அதை வாங்கிக் கொண்டாள்.



பாலைப் பார்த்தாள்.

அது வெள்ளை வெளேர் என்று இருந்தது.

"என்ன வெள்ளையாக இருக்கிறது" என்று கேட்டாள்.

"பால் வெள்ளையாகத்தானே இருக்கும். அம்மா" என்றான். தோட்டக்காரன்.

"மாடு காப்பிக் கொட்டை தின்றதே" என்ற பொற்கொடி. கொஞ்சம் பாலை குடித்துப் பார்த்தாள்.

"அய்யய்யோ... இது வெறும் பால்தான்!" அவள் முகம் எட்டுக்கோணம் ஆயிற்று.

"மாடு பால்தானே அம்மா கறக்கும்" என்று தோட்டக்காரன் அடக்கமாகச் சொன்னான்.

"காப்பிக் கொட்டை தின்றதே!" பொற்கொடி விழிகளை அகல விரித்தாள்.

"அம்மா. நேற்று நான் குளித்து விட்டு என் வேட்டியை இங்கே உலரப்போட்டேன். இந்த மாடு எப்படியோ அந்த வேட்டியைத் தின்று விட்டது. அதற்காக மாடு வேட்டி கறக்குமா?" என்று தோட் டக்காரன் வினயத்துடன் சொன்னான்.

அப்பொழுதுதான் பொற்கொடிக்கு தனது முட்டாள்தனம் உறைத்தது.

"சரி சரி! எனக்குத் தெரியாதோ! சொல்ல வந்து விட்டான்" என்று கோபித்துக் கொண்டு திரும்பினாள்.

"போக்கிரி மாடு !" என்று செல்லமாக மாட்டைத் தட்டினாள்.

அது கொம்பை சிலுப்பியது.

பெ. ற்கொடி பயந்துபோய் துள்ளிக் குதித்தாள்!

அவள் கையில் இருந்த குவளை கீழே விழுந்தது. பால் பெருக்கெடுத்து ஓடியது!

"இப்பொழுது காப்பி போட நான் என்ன செய்வது?" பொற்கொடி கையைப் பிசைந்தாள்.

அப்பொழுது தோட்டக்காரன் ஆட்டி வைத்திருந்த பருத்திக்கொட்டை அவள் கண்களில் பட்டது!

"ஏ கிழவா! அந்தப் பாலை எடுத்து இந்தக் குவளையில் ஊற்று!" என்று அதிகாரத்துடன் சொன்னாள்.

"அம்மா.. அது பருத்திப்பால்... மாட்டுக்கு..." தோட்டக்காரன் நடுங்கினான்.

"நான் சொல்லுகிறேன். அந்தப் பாலை இந்தக் குவளையில் ஊற்று!"

பொற்கொடி கட்டளையிட்டாள்.

தோட்டக்காரன் பதில் பேசவில்லை பருத்திப்பாலை கையினால் வடிகட்டி, குவளையில் ஊற்றினான்.

அதை வாங்கிக் கொண்டு பொற்கொடி வேகமாக உள்ளே சென்றாள்

அவளைப் பார்த்த அங்கமுத்து, "என் வைரம்! என்னம்மா செய்கிறாய்? காப்பி ஆயிற்றோ?" என்று கொஞ்சலாகக் கேட்டாள்.

"இப்பொழுதுதான் பால் வந்தது. அத்தை இதோ காப்பி கொண்டு வருகிறேன். நீங்கள் உட்காருங்கள்" என்று சொல்லிக்கொண்டே, பொற்கொடி அடுப்படிக்குள் சென்றாள்.

## 29

காக்கா உட்கார பனம்பழம் விழுந்தது போல பொற்கொடி ஏதோ செய்ய "குப்" என்று அடுப்பு பற்றிக் கொண்டது!

அதைப் பார்த்து அச்சத்துடன் அவள் ஓர் அடி பின் வாங்கினாலும் அடுப்புப் பற்றவைத்து விட்ட பெருமை அவள் முகத்தில் மின்னலிட்டது!



பக்கத்தில் இருந்த எவர்சில்வர் பானையை அடுப்பில் தூக்கி வைத்தாள்.

பத்து தம்ளர் தண்ணீர் மொண்டு ஊற்றினாள்.

சற்று நேரத்தில் தண்ணீர் கொதித்து, "தளதள" என்று தாளமிட்டது !

இனி காப்பித் தூள் போட வேண்டும் அல்லவா?

எங்கேயிருக்கிறது என்று பொற்கொடிதேடினாள்.

ஒரு டப்பாவை திறந்தாள்

அது மிளகாய்ப் பொடி!

அதைத் திறந்ததும், "ஆச்" என்று பொற்கொடி ஒரு தும்மல் போட்டாள்!

இல்லாவிட்டால் மிளகாய்ப் பொடியைக் கொண்டே காப்பி போட்டு இருப்பாள்!

இன்னொரு பெரிய டப்பாவை எடுத்துத் திறந்தாள்.

அதில் இருந்து காப்பித்தூள் கமகமத்தது.

அங்கமுத்து எப்பொழுதும் கிலோ கணக்கில் தான் காப்பிக் கொட்டை அரைத்து வைப்பாள்.

எவ்வளவு காப்பித் தூள் போடுவது?

பத்துக் கரண்டி காப்பித்தூள் போட வேண்டும் என்று அங்கமுத்து சொன்னது இன்னும் பொற்கொடியின் காதுகளில் ஒலித்துக் கொண்டு இருந்தது.

நல்லவேளை, சாம்பிராணிப் புகை போடும் பெரிய இரும்புக் கரண்டி அங்கேயில்லை. சிறிய குழம்புக் கரண்டி தான் இருந்தது.

பொற்கொடி அந்தக் கரண்டியை எடுத்தாள்!

அதைக் கொண்டு, ஒன்று, இரண்டு, மூன்று, என்று எண்ணி சரியாக பத்தே பத்து கரண்டி காப்பித்தூள் எடுத்து, கொதிக்கும் தண்ணீரில் போட்டாள்!

உடனே, கோபங் கொண்ட எரிமலை போல, "சலசல" என்று தண்ணீர் கொதித்தது!

பொற்கொடி பயந்து போய் அடுப்பில் இருந்த பாத்திரத்தை கீழே இறக்கினாள்!

அடுப்புத் துணி அருகிலேயே இருந்ததால், அவள் கைகள் பிழைத்தன!

பருத்திக் கொட்டை பாலைக் காப்பியுடன் கலந்தாள்!

ஆகா! காப்பிக்கு சீனி வேண்டுமோ?

பொற்கொடி அடுப்படியை நோட்டமிட்டாள்!

ஒரு பாட்டிலில் உப்புத்தூள் இருந்தது!

பாவம், வெளுத்ததெல்லாம் பால் என்று நினைக்கும் பச்சை மண்! அவள் உப்பைக் கண்டாளா? சீனியைக்கண்டாளா?

அந்த பாட்டிலை எடுத்தாள்!

அப்படியே காப்பியில் கொட்டினாள்!

கரண்டியினால் நன்றாகக் கலக்கினாள்.

சுவை பார்ப்பதற்காக, ஒரு கரண்டி காப்பியை அள்ளினாள்.

ஆனால், அவளுக்கே அச்சமாக இருந்தது! அள்ளிய காப்பியை பாத்திரத்திலேயே கொட்டி விட்டாள்.

அதன்பின் ஐந்தாறு தம்ளர்களை எடுத்து காப்பியை ஊற்றினாள்.

பொற்கொடி காப்பி போட்டு முடிக்குமுன், வீட்டில் அனைவரும் எழுந்து, குளித்து முடித்து, சாப்பாட்டு மேசைக்கு வந்து விட்டார்கள்.

இன்று காப்பி ஏன் இவ்வளவு தாமதம் என்பது எல்லோருக்கும் தெரியும், சுப்பிரமணியத்துக்குத் தவிர, லெட்சுமிக்கு உடல் நலம் இல்லையோ என்று மிகவும் கவலைப் பட்டார். சாப்பாட்டு அறைக்கு வந்து லெட்சுமியைப் பார்த்த பிறகு தான், அவருக்கு ஆறுதலாக இருந்தது.



ஒரு தட்டில் தம்ளர்களை வரிசையாக அடுக்கிக் கொண்டு பொற்கொடி வந்தாள்.

தம்ளர்கள் நடனம் ஆடின!

லெட்சுமி ஓடிச் சென்று, தட்டைக் கையில் வாங்கி, மேசைமீது வைத்தாள்.

காப்பி எப்படியிருக்கிறது என்பதைப் பார்க்க அவளுக்கு ஆசை ஆகவே, அவளே முதல் தம்ளரை எடுத்துக் கொண்டாள்.

கழுநீர் காப்பி குடித்ததில் இருந்து அங்கமுத்துக்கு கொஞ்சம் பயந்தான், மற்றவர்கள் குடித்தப்பின் தான் குடிக்கலாம் என்று இருந்தாள்.

பொற்கொடி போட்ட காப்பி என்றதும்; மற்றவர்கள் அன்றைய காப்பியை தியாகம் செய்ய முன்வந்தார்கள்!

லெட்சுமி யாரைப் பற்றியும் கவலைப்படவில்லை. காப்பியைப் பருகினாள்!

அடடா! அவளால் எப்படித்தான் சகித்துக் கொள்ள முடிந்ததோ! "நஞ்சுண்டு அமைவர் நனி நாகரீகம் வேண்டுபவர்" என்ற திருக்குறளை படித்திருப்பாள் போலிருக்கிறது! என்ன சிரிப்பு! அவள் முகத்தில் என்ன விரிப்பு!

"ஆகா! பிரமாதம்! பழனி பஞ்சாமிர்தம் சாப்பிட்டது போல இருந்தது!" என்று சொல்லிக் கொண்டே, தம்ளர் முழுவதையும் லெட்சுமி காலி பண்ணினாள்!

பொற்கொடிக்கு ஒரே உதைப்பு! லெட்சுமி பாராட்டிய பிறகுதான் அவள் முகத்தில் முறுவல் பூத்தது!

ஆனால் லெட்சுமி "பழனி பஞ்சாமிர்தம் போல இருக்கிறது" என்ற சொன்னதும், அங்கமுத்து விளக்கெண்ணெய் குடித்தவள் போல ஆகிவிட்டாள்!

அதற்குள் பொற்கொடி, "காப்பி சாப்பிடுங்கள் அத்தை" என்று ஒரு தம்ளரை எடுத்து அவள் கையில் கொடுத்தாள்.

"மாமியாருக்கோ தொண்டையிலே புண், டாக்டரோ மருமகள்" என்பார்களே! அதைப்போல இருந்தது. அங்கமுத்துக்கு! மெல்லவும் முடியவில்லை; துப்பவும் முடியவில்லை.

ஆனால், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், மற்றவர்களை அதிகாரம் செய்தாள். "ஏன் பார்த்துக் கொண்டு இருக்கிறீர்கள்? என் வைரம் காப்பி போட்டு வந்திருக்கிறது. எடுத்துக் குடியுங்கள்" என்று கட்டளையிட்டாள்.

அவள் அப்படிச் சொல்லி வாயை மூடுமுன், கண்ணன், மன்னன், சுப்பிரமணியம், கயல்விழி நால்வரும் வேகமாக ஆளுக்கு, ஒரு தம்ளரை கையில் எடுத்துக் கொண்டார்கள்!

அப்பொழுதே அவர்களுக்கு வயிறு கலங்கியது; ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தார்கள்!

அதற்குமேல் பொற்கொடி அங்கே நிற்கவில்லை. அடுப்படிக்கு நழுவி விட்டாள்.

"அண்ணி! காப்பி குடிக்கலாமா?"

"ஆகா! குடிக்கலாம்! நான் குடிக்கவில்லையா? அமிர்தம்! திருப்பாற்கடலில் கடைந்து எடுத்த தேவாமிர்தம்!"

லெட்சுமி வசனம் பேசினாள்.

"யான் பெற்ற துன்பம் பெறுக இவ்வையகம் என்கிறீர்களா அண்ணி? என்னே, உங்கள் பெருந்தன்மை" என்றாள், கயல்விழி.

இதற்குள் அங்கமுத்து "என்னடி பேச்சு வேண்டியிருக்கிறது! எல்லோரும் பேசாமல் குடியுங்கள்!" என்று அதட்டினாள். ஆனால், அவள் குடிக்கவில்லை.

"நான் குடிக்கிறேன்" என்று மன்னன் தைரியமாக முன் வந்தான்.



உடனே லெட்சுமி "மனைவி ஆலகாலம் கொடுத்தாலும் கணவனுக்கு அமுதமாக இருக்குமாம்" என்றாள்.

மன்னன் ஒரு மடக்குக் குடித்தான்.

அவன் முகம் எட்டுக் கோணல் ஆயிற்று!

"எப்படியிருக்கிறது, அண்ணா?" என்று கயல்விழி கேட்டாள்.

"ஆகா! என் வாழ்நாளில் நான் இப்படிப்பட்ட காப்பி குடித்ததே இல்லை" என்றான், மன்னன்.

லெட்சுமி அப்படிச் சொன்ன பிறகு வேறு எப்படிச் சொல்லுவது!

அதைக் கேட்டதும், அப்பாவிக் கண்ணனுக்கு கொஞ்சம் நம்பிக்கை பிறந்தது.

அவனும் ஒரு மடக்குக் குடித்தான்.

அவன் முகத்தில் ஓர் உணர்ச்சியும் இல்லை.

ஆனால், அடுத்த மடக்குக் குடிக்கவில்லை.

"கண்ணா! காப்பி எப்படிடா இருக்கிறது?"

அங்கமுத்து ஆசையாகக் கேட்டாள்.

"நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால், உப்புக் கொஞ்சம் அதிகம்" என்றான், கண்ணன்.

"உப்பா...!" என்று கயல்விழி வாயைப் பிளந்தாள்.

"கடலில் கடைந்து எடுத்த அமிர்தம் அல்லவா? அதனால் கொஞ்சம் உப்புக்கரிக்கத்தான் செய்யும்!" என்றாள், லெட்சுமி.

"நீங்கள் ஏன் வைத்துக்கொண்டு இருக்கிறீர்கள்? குடியுங்கள்!"

கணவனை விரட்டினாள், அங்கமுத்து.

சுப்பிரமணியத்துக்கு வேறு வழியில்லை, விளக்கெண்ணெய் குடிக்கும் குழந்தை போல, காப்பியை ஒரு மடக்குப் பருகினார்.

"எப்படியிருக்கிறது?" அங்கமுத்து நம்பிக்கையோடு கேட்டாள்.

"பாலாடையா நூலாடையா என்று தெரியவில்லை!"

சுப்பிரமணியம் காப்பிக்குள் இருந்து திரிதிரியாக எடுத்துக் காட்டினார்.

"திருப்பாற்கடலில் எடுத்த அமுதம் ஆயிற்றே! பால் கொஞ்சம் திரிதிரியாகத்தான் இருக்கும்!" என்றாள் லெட்சுமி.

"அப்பா நூலாக இருக்கிறது என்கிறார்... அண்ணன் உப்பாக இருக்கிறது என்கிறார்...இது காப்பிதானா?" கயல்விழி குழம்பினாள்.

"காப்பியில்லாமல் கழுநீர் தண்ணீரா? குடிடீ!" என்று அங்கமுத்து எரிந்து விழுந்தாள்.

"முதலில் நீங்கள் குடியுங்கள், அம்மா" கயல்விழி கொஞ்சினாள்.

அங்கமுத்துக்கு பயம். ஆனால், பொற்கொடி கோபித்துக் கொள்ளக் கூடாதே! ஆகவே, "என் வைரம் போட்ட காப்பி! கசக்கவா செய்யும்? என்று வக்கனை பேசிக் கொண்டே, குடிக்க முயற்சித்தாள். ஆனால், காப்பி தம்ளரை பிடித்திருந்த கை, அவளையும் மீறி வாய்க்கு உயர மறுத்தது!

அப்பொழுது "அம்மா!" என்று அழைத்துக் கொண்டு தோட்டக்காரன் அங்கே வந்தான்.

"அம்மா! காலையில் இருந்து மாடு பட்டினி! பருத்திக் கொட்டை வாங்க வேண்டும். பணம் கொடுங்கள்" என்று கேட்டான்.

"பருத்திக் கொட்டைக்கு இப்பொழுது என்ன அவசரம்? இங்கே வந்து பணம் கேட்க வேண்டுமா?" என்று அங்கமுத்து கூச்சல் போட்டாள்!

"மதியச் சாப்பாட்டுக்கு வேண்டும் போலிருக்கிறது!"



வாழைப்பழத்தில் ஊசி குத்தியது போல லெட்சுமி கூறினாள்!

"அம்மா! பருத்திக் கொட்டை வைக்கவில்லை" என்றான், தோட்டக்காரன்.

"காலையில் ஆட்டிக் கொண்டு இருந்தாயே?"

அவன் பருத்திக் கொட்டை ஆட்டியதை தற்செயலாகப் பார்த்த அங்கமுத்து கேட்டாள்.

"பருத்திக் கொட்டை பாலை சின்னம்மா வாங்கிக் கொண்டார்கள், அம்மா" என்ற தோட்டக்காரன், பசும் பால் கொட்டிய எல்லா விவரத்தையும் தெரிவித்தான்.

அதைக் கேட்டதும், அங்கமுத்து முகத்தில் ஈயாடவில்லை!

"அதனால்தான் பால் திரிதிரியாக இருக்கிறதா!" என்றாள், கயல்விழி.

"பசும்பால் கொட்டிவிட்டது; உங்கள் எல்லோருக்கும் காப்பி கொட்ட வேண்டுமே. என்ன செய்ய முடியும்? என் வைரத்துக்கே உள்ள சமயோசித புத்தி யாருக்கு வரும்!"

குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பது போல அங்கமுத்து பேசினாள்!

"போடா!" என்று தோட்டக்காரனை அடித்து விரட்டினாள்.

தோட்டக்காரன் ஓட்டம் பிடித்தான்.

உட்கார்ந்திருந்த ஆண்கள் எல்லோரும் எழுந்தார்கள்.

"எங்கே புறப்பட்டு விட்டீர்கள்? சாப்பிட வேண்டும்!" என்றாள், அங்கமுத்து.

"சாப்பாடா..."

எல்லோருமாகப் பெரிது கூப்பாடு போட்டார்கள்!

"பயப்படாதீர்கள்! உட்காருங்கள்!"

அபயம் அளித்துக் கொண்டே, லெட்சுமி அடுப்படியை நோக்கி நடந்தாள்!

அங்கமுத்து அவமானத்தால் பல்லைக் கடித்தாள்!

# 30

"அம்மா...அம்மா..."

கண்ணன் வீட்டுக்குள் நுழையும் பொழுதே நாய்க்குட்டி போல குழைந்து கொண்டு வந்தான்.

சோபாவில் உட்கார்ந்து படித்துக் கொண்டு இருந்த அங்கமுத்து "என்னடா, கண்ணா?" என்று தலை நிமிர்ந்தாள்.

"இருந்தாருங்கள், அம்மா துப்பறியும் கதை, புதிதாக வந்திருக்கிறது" என்று கண்ணன் அம்மாவிடம் ஒரு புத்தகத்தைக் கொடுத்தான்.

துப்பறியும் கதைப் புத்தகம் என்றதும், அங்கமுத்து உலகத்தையே மறந்து விட்டாள்!

"இது நன்றாகவே இல்லை. முப்பது பக்கம் படித்து விட்டேன்; மூன்று கொலைதான் நடந்திருக்கிறது!" என்று கூறிக்கொண்டே கையில் இருந்த புத்தகத்தை சோபாவில் போட்டுவிட்டு, புதுப் புத்தகத்தை படிக்கத் தொடங்கினாள்.

கண்ணன் பூனை போல மாடிப்படிகளை நோக்கிப் போனான்.

அப்பொழுது அடுப்படியில் இருந்து காப்பியும் கையுமாக வெளியில் வந்த லெட்சுமியைப் பார்த்தாள். அவளும் அவனைப் பார்த்தாள்.

இருவரும் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

மாடிப்படிகளில் இறங்கி வந்து கொண்டு இருந்த கயல்விழி, அந்த கம்ப இராமாயணக் காட்சியை கண் எதிரில் கண்டாள்!



"அண்ணலும் நோக்கினார். அவளும் நோக்கினாள்" என்று பாடினாள்!

கண்ணன் பார்வையைத் திருப்பினான்.

"எல்லோரும் சோப்புத்தான் போடுவார்கள். நீங்கள் அம்மாவுக்குப் புத்தகம் போடுகிறீர்கள். அண்ணா?" என்று கயல்விழி கேலியாகச் சொன்னாள்.

"எதற்கு அண்ணா இந்தப் புத்தகம்? அண்ணிக்கு அல்வா வாங்கி வந்திருக்கிறீர்களா?" என்று கிண்டலாகக் கேட்டாள்.

இதற்குள் லெட்சுமி, மாமியாருக்குக் காப்பி கொடுத்து விட்டு திரும்பி வந்தாள்.

"மாடிக்கு வா!" என்று அவளுக்கு கைஜாடை காட்டி விட்டு, கண்ணன் ஓடினான்.

கயல்விழி பலமாகத் தலையை ஆட்டிக் கொண்டு, மாடிப்படிகளில் உட்கார்ந்து கொண்டாள்.

சிறிது நேரத்தில் காப்பியுடன் லெட்சுமி வந்தாள்.

மாடிப்படிகளில் உட்கார்ந்து இருந்த "நந்தி"யைப் பார்த்ததும் மலைத்துப் போனாள்!

"ஏ வாலு! அடுப்பில் சோறு இருக்கிறது. கொதித்ததும் பார்த்து இறக்கு. போ, அடுப்படிக்கு" என்று லெட்சுமி விரட்டினாள்.

"அதாவது என்னை மாடிக்கு வரக்கூடாது என்று சொல்லுகிறீர்களா?" என்று, ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டே கயல்விழி குறும்பாகக் கேட்டாள்.

"நீ குறும்பு என்றால், நான் எறும்பு! தெரியும் அல்லவா?" என்று லெட்சுமி மிரட்டினாள்.

"மாடியில் ஏதோ சதி நடக்கப் போகிறது! இங்கே சதி! மாடியில் பதி! இரண்டும் சேர்ந்தால் சதிபதி!" என்று சொல்லிக் கொண்டே 'நந்தி' நகர்ந்தது!

"முளைத்து மூன்று இலை விடுமுன் என்ன பேச்சு பேசுகின்றன!" என்று முணங்கிக் கொண்டே லெட்சுமி மாடிக்குச் சென்றாள்.

கண்ணன் தயாராகக் கட்டிலில் அமர்ந்து இருந்தான்.

லெட்சுமி அவனை நோக்கிக் கையை நீட்டினாள்.

அவன் அவள் கையைப் பிடித்தான்!

"காப்பியைப் பிடியுங்கள்" என்றாள், அவள்.

"சொன்னால் தானே எனக்குத் தெரியும்?" என்று கூறிக் கொண்டே, அவள் கையில் இருந்த காப்பியை வாங்கி, கண்ணன் பருகினான்.

பருகி முடித்ததும், "லெட்சுமி, இப்படி உட்காரேன்" என்று குழைந்தான்.

"எனக்குக் கீழே வேலை இருக்கிறது அல்லவா?" என்று சொல்லிக் கொண்டே, அவன் அருகில் லெட்சுமி அமர்ந்தாள்.

"இங்கே பார்த்தாயா?" என்று அவன் மல்லிகைச் சரத்தை எடுத்துக் காட்டினான்.

அதைப் பார்த்ததும், அவள் முல்லையாக முறுவலித்தாள்.

அவனே அவள் தலையில் மல்லிகையைச் சூடிவிட்டான்.

"இன்றைக்கு என்ன?"

அவன் தோள்களில் கையைக் கோத்துக் கொண்டு அவள் கேட்டாள்.

"நம் அலுவலகத்தில் கோபு என்று ஒருவன். அவனுக்குத் திருமணமாம். அதற்கு முப்பது நாள் விடுமுறை வேண்டுமாம். லெட்சுமி, நீயே சொல். திருமணத்துக்கு எதுக்கு முப்பது நாள் விடுமுறை? என்ன செய்யப் போகிறான்?" என்று கண்ணன் திடீர் என்று கேட்டான்.

"உங்களுக்குத் திருமணம் ஆகிவிட்டது அல்லவா? உங்களுக்குத் தெரியாதா?" என்று லெட்சுமி புன்னகைத்தாள்.



திருமணம் என்றால் என்ன? தாலி கட்ட வேண்டும்! அதற்கு அரைநாள் போதாதா! வேண்டுமானால், மூன்று நாள் விடுமுறை எடுத்துக் கொள்ளட்டுமே!"

"எல்லோரும் உங்களைப் போல இருப்பார்களா!"

"முப்பது நாள் வேண்டுமாம், ஏனடா என்றால்! தேனிலவுக்குப் போகிறேன் என்கிறான். லெட்சுமி, நாமும் தேனிலவுக்குப் போவோமா?"

கண்ணன் ஆசையோடு அவளை அரவணைத்தான்.

"அழகாயிருக்கிறதே! ஆளை விடுங்கள்!" என்று அவள் நழுவினாள்.

"ஏன் பாட்டி மஞ்சள் குளிக்கிறாய் என்று ஒருவன் கேட்டானாம். பழைய நினைவுடா பேராண்டி என்று பாட்டி சொன்னாளாம். உங்கள் தம்பிக்கே திருமணம் ஆகிவிட்டது; இனிமேல் நீங்கள் தேனிலவுக்குப் போகிறீர்களா? எனக்குக் கீழே வேலையிருக்கிறது" என்று லெட்சுமி எழுந்தாள்.

ஆனால், கண்ணன் விடவில்லை. பிடித்து உட்கார வைத்துக் கொண்டான்.

"லெட்சுமி! பெண்டாட்டி என்று ஒருத்தி இல்லாதவன் கூட, எவளையாவது இழுத்துக் கொண்டு ஜாலியாக எங்காவது போகிறான். நீயும் நானும் நாளை மகாபலிபுரத்துக்காவது போய் வருவோமா? நாளை ஞாயிற்றுக்கிழமைதான்" என்று கொஞ்சமாகக் கேட்டான்.

"மெய்யாகவா சொல்லுகிறீர்கள்!"

லெட்சுமிக்கு குதூகலம் குமிழிட்டது.

"ஆமாம். நாளை காலை நாம் இருவரும் மகாபலிபுரம் போகிறோம். நான் முடிவு செய்துவிட்டேன்."

"உங்கள் அம்மா..."

"அம்மாவையும் அழைத்துக் கொண்டு போவோம்."

"புளியோதரை மூட்டைக்குள் பெருச்சாளியை வைத்துக் கட்டிய கதைதான்!"

"அம்மாவையும் அழைத்துப் போய், மகாபலிபுரம் கடலில் தள்ளி விட்டு, நாம் இருவர் மட்டும் இங்கே ஓடி வந்து விடுவோம்!"

"புத்திசாலித்தனமாகப் பேசுவதாக நினைப்போ!"

"சும்மா வேடிக்கைக்குச் சொன்னேன்" என்று கண்ணன் அவள் கன்னத்தை தடவினான்.

லெட்சுமிக்குக் கோபம் 'சுர்ர்' என்று வந்தது.

"இனிமேல் வேடிக்கைக்குக்கூட அப்படிச் சொல்லாதீர்கள். அம்மா நம் வீட்டுத் தெய்வம்" என்று லெட்சுமி உணர்ச்சிப் பெருக்குடன் உரைத்தாள்.

"சரி, சரி" என்று கண்ணன் கன்னத்தில் போட்டுக் கொண்டான்.

"லெட்சுமி! நாளை கிருஷ்ணவேணி தியேட்டரில் காலை காட்சியாக 'சைகோ' படம் காட்டுகிறார்கள். அம்மாவுக்கு 'சைக்கோ' என்றால் ஒரே பைத்தியம். அம்மாவுக்கு ஒரு டிக்கெட்டு எடுத்துக் கொடுத்து விட்டு, நாம் மகாபலிபுரத்துக்கு ஓடி விடலாம்!" என்றான்.

"இது நல்ல யோசனை" என்று சொல்லிக் கொண்டே, அவன் கன்னத்தில் செல்லமாகத் தட்டிவிட்டு லெட்சுமி எழுந்தாள்.

"மகாபலிபுரத்தில் நாம் இருவரும் குளிக்க வேண்டும்."

சொல்லிக் கொண்டே கண்ணன் கட்டிலில் படுத்துக் கொண்டு நீச்சல் அடித்தான்!

மறுநாள் காலையில் எழுந்தது முதலே லெட்சுமி பம்பரமாகச் சுழன்றாள். வீட்டு வேலைகளை விறுவிறுப்பாகச் செய்தாள்.

அவள் மனம் முழுவதும் மகாபலிபுரத்தில்!



இதற்குள் ஆயிரம் முறை அங்கே போய் வந்திருப்பாள்.

கடலில் குளிப்பதும்...

கண்ணனுடன் கை கோத்துக் கொண்டு கடற்கரையில் நடப்பதும்...

ஆசைக் கனவுகள் அலை மோதின.

ஒன்பது மணிக்குத் தயாராகும் காலை சிற்றுண்டிகள், எட்டு மணிக்கே தயார். அந்த வேலை முடிந்ததும், மதியச் சாப்பாடும் செய்து வைத்து விட்டு, அவள் மகாபலிபுரத்துக்குக் கிளம்ப வேண்டும்.

சாப்பாட்டு மேசையில் படபட என்று தட்டுகளை பரப்பினாள்.

எல்லோரையும் சாப்பிடக் கூப்பிடலாம் என்று திரும்பினாள்.

அப்பொழுது "அக்கா" என்று அழைத்துக் கொண்டே பொற்கொடி வந்தாள்.

"அக்கா! இன்று நானும் அவரும் மகாபலிபுரத்துக்குப் போகிறோம். இதோ புறப்பட்டு விட்டோம். சாப்பாடு வைக்கிறீர்களா?" என்று கேட்டாள்.

பாவம், லெட்சுமி காற்றுப் பலூன் போல ஆகிவிட்டாள்!

பொற்கொடி அவளை கவனிக்கவில்லை. மேசையைப் பார்த்தாள்.

"அடடே! சாப்பாடு எடுத்து வைக்கத் தொடங்கிவிட்டீர்களா? நாங்கள் மகாபலிபுரம் போவது உங்களுக்கு எப்படித் தெரியும்? இதோ, அவரை சாப்பிட அழைத்து வருகிறேன்!" என்று மகிழ்ச்சியுடன் கூறிய பொற்கொடி, "ஓ! மை டார்லிங்!" என்று மன்னனுக்குக் குரல் கொடுத்துக் கொண்டே அவனை அழைக்கச் சென்றாள்.

லெட்சுமி சிரித்துக் கொண்டாள்!

அந்த ஒரே சிரிப்பில் எவ்வளவு பெரிய ஏமாற்றத்தையும் செரித்து விடுகிறாள்!

முறுவல் தவழ மாடிக்குப் போனாள்.

"என்னங்க. உங்கள் மகாபலிபுரம் திட்டம் ஓ... கேயா?" என்று கண்ணனிடம் சொன்னாள்.

"ஏன்? அம்மாவுக்குத் தெரிந்து விட்டதா?" என்று அவன் திடுக்கிட்டான்.

"உங்கள் தம்பியும் பொற்கொடியும் மகாபலிபுரத்துக்குப் போகிறார்கள். இதோ கிளம்பி விட்டார்கள்" என்று லெட்சுமி தெரிவித்தாள்!

"மகாபலிபுரம் போய், கடலில் குளிக்க வேண்டும் என்று நினைத்தேனே!" என்று கண்ணன் தலையில் கை வைத்துக் கொண்டான்.

"மாட்டுக்கு தண்ணீர் காட்டும் தொட்டி, பெரிதாக இருக்கிறது. அதில் நாலு வாளி ஊற்றிக் கொண்டு, நீச்சல் அடியுங்கள்!" என்று லெட்சுமி கேலி செய்தாள்.

மன்னனும் பொற்கொடியும் சாப்பிட வந்து அமர்ந்தார்கள்.

கயல்விழியும் கலந்து கொண்டாள்.

"அத்தை நீங்களும் சாப்பிடுகிறீர்களா?" என்று அங்க முத்துவிடம் கேட்டாள்.

அங்கமுத்துவும் வந்து அமர்ந்தாள். அவளுக்கு சாப்பிடுவதற்கு நேரங்கிடையாது!

லெட்சுமி அடுப்படிக்குப் போய் ஓர் எவர் சில்வர் பாத்திரத்தில் இட்டிலிகளை எடுத்துக் கொண்டு வந்தாள்.

திடீர் என்று அவள் தலை சுற்றியது.

நிற்க முடியவில்லை. தள்ளாடினாள்.

கையில் இருந்த பாத்திரம் கீழே விழுந்தது.

"டொய்ங்...!"

"என்னத்தடி போட்டு உடைத்தாய்!"

அங்கமுத்து அலறிக் கொண்டே, அடிப்பட்ட புலி போல அடுப்படிக்குப் பாய்ந்து வந்தாள்!



## 31

கையில் இருந்த பாத்திரம் கீழே விழுந்ததால், லெட்சுமி பதைத்துப் போனாள்.

சும்மாவே வயிற்றோட்டம் போய்க்கொண்டு இருப்பவனுக்கு பேதிக்குக் கொடுத்தது போல அங்கமுத்து வேறு வந்து கூச்சல் போட்டாள்!

"அய்யய்யோ... என் பாத்திரத்தை உடைத்து விட்டாயே!" என்று அலறினாள்.

பாத்திரத்தைக் கையில் எடுத்துப் பார்த்தாள்.

அது சற்றே நெளிந்து இருந்தது.

"அடிப் பாவி! அழகான பாத்திரம் எப்படியாகிவிட்டது! உன் முகத்தைப் போல இருக்கிறது!" என்று கூக்குரல் இட்டாள்.

"ஒரு மண் பானைக்கூட கொண்டுவர வக்கு இல்லை! என் பாத்திரங்களைப் போட்டு உடைக்கிறாள்! உடைப்பதையும் உடைத்துவிட்டு, மரம்போல நிற்பதைப் பார்!" என்று லெட்சுமியின் குமட்டில் குத்தினாள்.

தள்ளாடிய லெட்சுமி சுவரைப் பிடித்துக்கொண்டாள். அவளுக்குக் கண்ணீர் பெருகியது.

கீழே சிதறிக் கிடந்த இட்டிலிகளை அங்கமுத்து பார்த்தாள்!

"இன்று எல்லோர் வயிற்றிலும் மண்தானா!" என்று தன் வயிற்றில் அடித்துக் கொண்டாள்!

இதற்குள் பொற்கொடியும், கயல்விழியும் அடுப்படிக்கு வந்து விட்டார்கள்.

"கடவுளே மண்ணைத் தின்று இருக்கிறார், அம்மா" என்றாள் கயல்விழி!

"உங்கள் அப்பா கூடத்தான் மண்ணைத் தின்று இருக்கிறார் தவழ்ந்து விளையாடும்போது!" என்று அங்கமுத்து சீறினாள்.

"என்ன நடந்தது, அத்தை?" என்று கொற்கொடி கேட்டாள்.

"இதைப் பாரம்மா" என்று அங்கமுத்து பாத்திரத்தைக் காட்டினாள்.

"வக்கற்ற கழுதை! இருப்பதையும் உடைத்து ஒட்டை ஆக்குகிறது" என்று லெட்சுமியை ஏசினாள், அங்கமுத்து.

"பாத்திரத்தின் அருமை பெருமை தெரிந்தால்தானே? இவள் வைரம்! வெள்ளிப் பாத்திரமாகக் கொண்டு வந்தாள். நீ... அலுமினியப் பாத்திரங்கூடக் கொண்டு வரவில்லையே" என்று வக்கனை பேசினாள்.

"வெள்ளி பாத்திரத்தை நீ கண்ணால் பார்க்கவாவது செய்திருக்கிறாயா? வா, காட்டுகிறேன்" என்று லெட்சுமியை கையைப் பிடித்து தர தர என்று இழுத்துப் போனாள்.

பொற்கொடி கொண்டு வந்த வெள்ளிப் பாத்திரங்கள் அடுக்கி வைக்கப்பட்டு இருந்தன.

லெட்சுமிக்கு வெட்கத்தால் கண்கள் கூசின.

"நல்லா கண்ணைத் திறந்து பாரடி, இதுதான் வெள்ளிப் பாத்திரம்" என்று அவள் தலையில் அங்கமுத்து ஒரு குட்டு வைத்தாள் .

"இதெல்லாம் உங்கள் அப்பா வாங்கிக் கொடுத்தாரா, அம்மா?" என்று கேட்டுக்கொண்டே அங்கே மன்னன் வந்தான்.

"என் மருமகள் கொண்டு வந்ததுடா!" என்று அங்கமுத்து நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு சொன்னாள்.

"ஓ! காணாதது கண்டது! அதுதான் இத்தனை கூச்சல்!" என்றான் மன்னன். "ஆண்டிக்கு ஒரு காலணா கிடைத்தால் அவிழ்க்கவும் முடியவுமாக இருப்பானாம்!"



"யாருடா ஆண்டி? இவள்தான் ஆண்டி! இவள் அப்பன் தான் ஆண்டிப் பண்டாரம்!" என்று அங்கமுத்து கொதித்தாள்.

லெட்சுமி விம்மினாள்.

"அம்மா! அண்ணியின் அப்பாவை யெல்லாம் வம்புக்கு இழுக்காதீர்கள். பிறகு நமது பரம்பரையைப் பற்றிப் பேசத் தொடங்கினால் அசிங்கமாக இருக்கும்" என்றான் மன்னன்.

"நீங்கள் போங்கள். இதற்கு நான் ஒரு வழி செய்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே பொற்கொடி வந்தாள். "அத்தை! நீங்கள் சாப்பிட வாருங்கள்."

"இட்டிலியைத்தான் மண்ணாக்கிவிட்டாளே" என்று அங்கமுத்து கூச்சல் போட்டாள்.

"நான் செய்து தருகிறேன்" என்று பொற்கொடி, அங்க முத்துவை இழுத்துச் சென்றாள்.

பொற்கொடி அடுப்படிக்குப் போக, அங்கமுத்து கூடத்தில் அமர்ந்தாள்.

லெட்சுமி மாடிப்படிகளை நோக்கி நகர்ந்தாள்.

"எங்கடி போகிறாய்? வாடி இங்கே!" என்று அங்கமுத்து கூவினாள்.

லெட்சுமி திரும்பி வந்தாள்.

"கால்களைப் பிடித்துவிடு!"

அங்கமுத்து இரண்டு கால்களையும் நீட்டினாள்.

லெட்சுமி அந்தக் காலடியில் அமர்ந்து பிடித்து விடத் தொடங்கினாள்.

அதைப் பார்த்ததும், மன்னன் ஆவேசமாக வந்தான்.

"அம்மா! 'நடந்த கால் சீதேவி; இருந்த கால் மூதேவி' என்பார்கள். எந்நேரமும் செத்த பிணத்தை சாய்த்து வைத்தது போல, உட்கார்ந்தே இருப்பதால்தான் கால் வலிக்கிறது எழுந்து நடங்கள்" என்று கத்தினான்.

"அண்ணி என்றாவது எதையாவது கைதவறிப் போட்டு இருக்கிறார்களா? இன்று அண்ணி உடம்புக்கு என்னவோ? அவர்களுக்கு அல்லவா நீங்கள் கால்-கை பிடித்துவிட வேண்டும்" என்று தொடர்ந்து சொன்னான்.

"எனக்கு ஒன்றும் இல்லை, தம்பி. நீங்கள் சாப்பிடப் போங்கள்" என்றாள், லெட்சுமி.

"வேண்டாம்டி. அம்மா, வேண்டாம். பிறகு உன்கொழுந்தன் என் கால்களை வெட்டினாலும் வெட்டிவிடுவான். நீ மாடிக்குப் போய் படுத்துக்கொள்."

அங்கமுத்து ஏளனமாகச் சொல்லிக்கொண்டே கால்களை இழுத்துக் கொண்டாள்.

"நீங்கள் போய் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள், அண்ணி."

மன்னன் கட்டளையிட்டான்.

லெட்சுமி எழுந்து தலை குனிந்தபடி நடந்தாள்.

மன்னன் சாப்பாட்டு அறையை நோக்கிச் சென்றான்.

"என்ன வசியம் வைத்திருக்கிறாளோ! எல்லோரையும் கைக்குள் போட்டுக் கொண்டாளே!"

லெட்சுமியை நோக்கி அங்கமுத்து கைகளை நெரித்தாள்.

அடுப்பில் எண்ணெய் சட்டி காய்ந்தது.

அருகில் பொற்கொடி நின்றுகொண்டு இருந்தாள்.

"என்ன, அண்ணி, இன்னும் இட்டிலி ஆகவில்லையா? வயிற்றைக் கிள்ளுகிறது" என்று கூறிக்கொண்டே கயல்விழி வந்தாள்.

"எண்ணெய் காய்கிறது" என்றாள், பொற்கொடி.

"எண்ணெய் எதற்கு?"

அடுப்பில் இருந்த சட்டியைப் பார்த்துக்கொண்டே கயல்விழி கேட்டாள்.



"இட்டிலி சுட!"

கயல்விழி வாயைப் பிளந்தாள்.

"ஆமாம்! இட்டிலி சுடத்தானே செய்வார்கள்!" என்றாள், பொற்கொடி.

கயல்விழி 'கலீர்' என்று சிரித்துவிட்டாள்.

பொற்கொடிக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது. "ஏண்டி சிரிக்கிறாய்?"

"இட்லி சுடமாட்டார்கள் அண்ணி! இட்டிலியை அவிக்க வேண்டும்."

"எப்படி?"

"வந்து... நான் பார்த்தது இல்லை... ஆ...எனக்குத் தெரியும். இட்டிலிப் பானையில் தண்ணீர் ஊற்றி... பிறகு மாவு ஊற்றி அவிக்க வேண்டும்."

"அடி போடி! எனக்குத் தெரியாதா, அது? இட்டிலிக்கு சட்டினி வேண்டாம்? அதற்குத்தான் எண்ணெய் காய்கிறது."

"என் வயிறு காய்கிறது! அதை முதலில் கவனியுங்கள்."

"போ! ஒரு நொடியில் இட்டிலியை அவித்துக்கொண்டு வருகிறேன்."

கயல்விழி போனாள்.

பொற்கொடி இட்டிலிப் பானையைத் தேடினாள்.

கிடைத்தது.

எடுத்து, அடுப்பில் வைத்தாள்.

உத்தேசமாக அரைப் பானை தண்ணீர் ஊற்றினாள்.

தீயை "மடமட" என்று எரிய விட்டாள்.

தண்ணீர் கொதித்தது.

பொற்கொடி முகம் மலர்ந்தாள்.

இட்டிலி மாவை எடுத்து, தண்ணீரில் கொட்டினாள்.

"தளதள" என்று கொதித்தது!

பொற்கொடிக்கு ஒரே மகிழ்ச்சி!

ஆனால், நேரம் செல்லச் செல்ல அந்த மகிழ்ச்சி குறைந்தது.

மாவு கஞ்சியாக ஆயிற்றே தவிர, இட்டிலியைக் காணோம்.

இதற்குள் மன்னன் இரண்டு, மூன்றுமுறை குரல் கொடுத்துவிட்டான்.

'என்ன செய்வது?' என்று பொற்கொடி மண்டையை உடைத்துக் கொண்டாள்.

அப்பொழுது, அவள் கண்களில் நேற்று வடித்து வைத்த வடிகஞ்சி பட்டது!

அது கெட்டியாக இறுகிப் போயிருந்தது!

அதைத் தூக்கி ஒரு தட்டில் கொட்டினாள்!

அவளுடைய படித்த மூளை அருமையாக வேலை செய்தது!

ஒரு கத்தியை எடுத்து, இட்டிலி கனத்துக்கு வட்ட வட்டமாக வெட்டினாள்.

மன்னனின் குரல் மீண்டும் கேட்டது.

"இட்டிலி தயார்! இதோ வருகிறேன்" என்று பொற்கொடி பதில் கொடுத்தாள்.

'இட்டிலி'களை ஒரு பாத்திரத்தில் அள்ளிப் போட்டுக் கொண்டு, சாப்பாட்டு அறைக்கு ஓடி வந்தாள்.

அங்கே அங்கமுத்து, கயல்விழி, கண்ணன், மன்னன், சுப்பிரமணியம் அனைவரும் வரிசையாக அமர்ந்து இருந்தார்கள்.

பொற்கொடிக்கு உள்ளுக்குள் உதைப்பு. ஆனால், வெளியில் எதையும் காட்டிக் கொள்ளவில்லை. 'இட்டிலி'களை எடுத்து வைத்தாள்.



"அடடா! இட்டிலியா, இது? மல்லிகைப்பூ போல இருக்கிறது!"

அங்கமுத்து புகழ்மாலை சூட்டினாள்.

கயல்விழி நெஞ்சில் சிலுவை இட்டுக் கொண்டாள்!

அதைப் பார்த்துவிட அங்கமுத்து, "என்னடி செய்கிறாய்?" என்று கேட்டாள்.

"பரமண்டலத்தில் இருக்கும் எங்கள் பரம பிதாவே! அன்றன்று அப்பத்தை எங்களுக்கு அன்றன்று தாருங்கள் என்று வேண்டினேன்" என்றாள், கயல்விழி.

"இது அப்பம் அல்ல, இட்டிலி" என்று அங்கமுத்து திருத்தினாள்.

"பிதா இங்கே இருக்கிறார்!" என்று, தந்தையை சுட்டிக் காட்டினான், மன்னன். "ஏன், அப்பா, நீங்கள் ரேசன் கடையா வைத்திருக்கிறீர்கள்? ஒரு வார ரேசனையாவது சேர்த்துக் கொடுக்கக்கூடாது? ஏன் அன்றன்று கொடுக்கிறீர்கள்."

"பிதாவே! அவர்கள் அறியாமல் பிழை செய்கிறார்கள். அவர்களை மன்னியுங்கள்!" என்று கயல்விழி மீண்டும் சிலுவையிட்டுக் கொண்டாள்.

"பேசாமல் சாப்பிடுங்கள்" என்று அங்கமுத்து, சட்டினியை ஊற்றி, அதில் இட்டிலியைப் பிசைந்து, விழுங்கினாள்.

விழுங்கியதும் அவள் முகம் விளக்கெண்ணெய் குடித்தது போல ஆயிற்று!

பொற்கொடியை ஏறிட்டுப் பார்த்தாள்.

அவள் அப்பாவி போல முகட்டை நோக்கினாள்.

"போகிற வழியில் ஏதாவது சாப்பிட்டுக் கொள்வோம்" என்று மன்னன் அவசரமாகக் கிளம்பினான்.

"பொறுங்கள், இன்று மகாபலிபுரம் இல்லை. வேறு வேலை இருக்கிறது." என்று பொற்கொடி, வெள்ளிப் பாத்திரங்களை நோக்கி வீறு நடை போட்டாள்!

# 32

மகாபலிபுரத்துக்குப் போக திட்டமிட்டவளே பொற்கொடி தான். அவளே இப்பொழுது "வேறு வேலை இருக்கிறது" என்று சொன்னது. மன்னனுக்குப் பெரிய ஆச்சரியத்தைக் கொடுத்தது!

பொற்கொடிக்கு மகாபலிபுரம் என்பது காதல் சொர்க்கம். அந்தக் கடற்கரை என்ன-கடல் குளிப்பு என்ன.... "இன்பம் கொள்ளை கொள்ளை" என்பார்கள். அதைவிட அவளுக்கு முக்கியவேலை என்ன வந்துவிட்டது?

அவளிடமே மன்னன் கேட்டான்.

"என் அப்பாவுக்குப் 'போன்' செய்திருக்கிறேன்" என்றாள், பொற்கொடி.

"எதற்கு?"

"ஜீப் அனுப்பச் சொன்னேன்."

"கார் இருக்கும் பொழுது ஜீப் எதற்கு? உடல் எல்லாம் வலிக்குமே!"

"ஜீப் நமக்கு அல்ல."

"நான் கொண்டுவந்த வெள்ளிச் சாமான்கள் எல்லாம் மீண்டும் எங்கள் வீட்டுக்கே திரும்பிப் போகப் போகின்றன."

மன்னனுக்கு ஒரேவியப்பு "ஏன்?"

"இந்த வெள்ளிப் பாத்திரங்கள் இருப்பதால்தானே உங்கள் அம்மா இடித்து இடித்து காட்டுகிறார்கள்? தேளாகக் கொட்டுகிறார்கள்? இந்தப் பாத்திரங்கள் இல்லாவிட்டால் வாயை மூடிக்கொண்டு இருப்பார்கள் அல்லவா?"



பொற்கொடி ஆத்திரத்துடன் கூறினாள்.

"பலே! பலே!" என்று மன்னன் அவளை பாராட்டினான். "என் அம்மாவுக்கு சரியான பாடம்."

"காலையில் இட்டிலி சாப்பிட்டீர்களே...?" அவன் காதில் இரகசியமாக பொற்கொடி கேட்டாள்.

"உன் கைவண்ணம் என்றதும் சாப்பிடவில்லை" என்று மன்னனும் இரகசியமாகக் கூறினான்.

"அது இட்டிலி இல்லை வடிகஞ்சி! இட்டிலிபோல வெட்டி எடுத்து வந்தேன்" என்றாள் பொற்கொடி.

மன்னன் குபீர் என்று சிரித்துவிட்டான். "அதுதான் அம்மா இரண்டு இட்டிலியுடன் எழுந்துவிட்டார்களா?"

"உங்கள் அம்மா செய்த கொடுமைக்கெல்லாம் என்னிடம் நன்றாக அனுபவிக்கப் போகிறார்கள்."

"கொன்ற பாவமெல்லாம் தின்றுதானே தீரவேண்டும்!"

அவர்கள் பேசிக்கொண்டு இருந்த பொழுதே "ஜீப்" கார் வந்து நின்றது.

டிரைவர் வீட்டுக்குள் வந்து பொற்கொடிக்கு வணக்கம் செலுத்தினார்.

அப்பொழுது அங்கமுத்து வந்தாள்.

அவளுக்கு அந்த டிரைவரை தெரியும். "முதலாளியா வந்திருக்கிறார்?" என்று ஆவலாகக் கேட்டாள்.

"டேய் முனியா! அடியே லெட்சுமி! எல்லோரும் ஓடி வாருங்கள். அய்யா வந்திருக்கிறார். காரில் இருக்கிற சாமான்களை எல்லாம் இறக்கி வாருங்கள்" என்று கூவினாள்.

லெட்சுமி ஓடிவந்தாள்.

பின்னேயே வேலைக்காரனும் வந்து நின்றான்.

"ஏண்டா நிற்கிறாய்? போய் சாமான்களை எடுத்துவா" என்று அங்கமுத்து வேலைக்காரனை விரட்டினாள்.

"நீ ஏண்டி மரம்போல நிற்கிறாய்?" என்று லெட்சுமியின் பக்கம் திரும்பினாள். "போய், அய்யாவுக்கு ஏதாவது சாப்பிட கொண்டுவா?" என்று அதட்டினாள்.

"பொற்கொடி அவித்த இட்டிலி இருக்கிறது. எடுத்து வரட்டுமா? மகள் செய்ததை அப்பா சாப்பிட்டுப் பார்க்கட்டுமே" என்று லெட்சுமி அமைதியாகக் கேட்டாள்.

"அய்யய்யோ! அது வேண்டாம் அக்கா" என்று பொற்கொடி துள்ளிக் குதித்தாள்.

"சூடாக் காப்பி கொண்டு வா...வேண்டாம்...பால் அதுவும் வேண்டாம்...மோர்...அய்யாவுக்கு இளநீர்தான் பிடிக்கும். மடமட என்று தென்னைமரத்தில் ஏறி, அய்யாவுக்கு நாலு இளநீர் வெட்டிக் கொண்டுவா" என்றாள் அங்கமுத்து.

"சரி அத்தை" என்று சொல்லிவிட்டு லெட்சுமி நடந்தாள்.

"நில்லுங்கள், அக்கா" என்று பொற்கொடி தடுத்தாள், "நீங்கள் மாமியார் கிழித்த கோட்டை தாண்டாத மருமகள்! தென்னைமரத்தில் ஏறினாலும் ஏறுவீர்கள்! ஆனால், அதற்கு அவசியம் இல்லை. என் அப்பா வரவில்லை."

"கார் வந்திருக்கிறதே?" அங்கமுத்து வியப்புடன் வினவினாள்.

"கார் அல்ல, ஜீப் வந்திருக்கிறது" என்றாள் பொற்கொடி.

"ஓகோ! சாமான்கள் மட்டும் அனுப்பி வைத்திருக்கிறாரா?" அங்கமுத்து வாயைப் பிளந்தாள்.

"ஜீப் நிறைய உங்களுக்கு அல்வா வாங்கி அனுப்பியிருக்கிறார்!" என்றான் மன்னன்.

"அனுப்புவாருடா! அவர் வைரம்" என்று சொன்னாள்.

"அப்பா ஒன்றும் அனுப்பவில்லை. இங்கே இருப்பதை எடுத்துப் போகத்தான் ஜீப் வந்திருந்திருக்கிறது" என்றாள், பொற்கொடி.

"எடுத்துப் போகவா? இங்கே என்ன இருக்கிறது!"



அங்கமுத்துவின் குரல் உள்ளே போய்விட்டது!

அப்பொழுது பொற்கொடி, "மணி, இங்கே வா" என்று டிரைவரை அழைத்தாள்.

டிரைவர் அவள் பின்னே சென்றார்.

அடுக்கி வைக்கப்பட்டு இருந்த வெள்ளிச் சாமான்களின் அருகில் போனதும், "எல்லா சாமான்களையும் எடுத்து, ஜீப்பில் ஏற்று, நம் வீட்டில் கொண்டு போய் வை" என்றாள்.

"சரி, அம்மா" என்ற டிரைவர் வெள்ளிப் பாத்திரங்களை கைகளில் அள்ளினார்.

"அய்யோ... அய்யோ..."

வீடே கொள்ளை போவது போல வயிற்றில் அடித்துக் கொண்டு அங்கமுத்து ஓடி வந்தாள்.

"என் கண்ணு... என் வைரம்... என்னம்மா அநியாயம், இது?" என்று பொற்கொடியிடம் கேட்டாள்.

அவள் பதில் ஏதும் சொல்லாமல், தளுக்கிக் குலுக்கி நடந்தாள்.

"அடி... என்னடி ராக்கம்மா பல்லாக்கு நெளிப்பு என் நெஞ்சு குலுங்குதடி!" என்று அவளை நோக்கி மன்னன் எகத்தாளமாகப் பாடினான்.

லெட்சுமி ஓடி வந்தாள். "பொற்கொடி? இதெல்லாம் என்னம்மா?"

"அக்கா! இதெல்லாம் வெள்ளிப் பாத்திரம் அல்ல, வெள்ளிவாய் பிசாசு! உன்னை அள்ளிப் போட்டுக் கொள்ளத் துடிக்கிறது" என்று பொற்கொடி பொருமினாள்.

லெட்சுமிக்குப் புரியவில்லை. "என்னம்மா செல்லுகிறாய்?"

"இந்த வெள்ளிப் பாத்திரங்களை காட்டிக் காட்டித்தானே, அத்தை உங்களை இடித்து இடித்து வதைக்கிறார். அதனால் எல்லாப் பாத்திரங்களையும் எங்கள் வீட்டுக்கே அனுப்பி விட்டேன்."

"அது சரியல்ல; பொற்கொடி. எந்த மாமியாரும் மருமகள் கொண்டு வந்த சீதனத்தை மற்றவர்களிடம் காட்டி பெருமைப் படத்தான் செய்வார்கள்."

"ஆனால், என் மாமியார் பெருமைப்படவில்லையே! எருமைப்பட அல்லவா செய்கிறார்! எருமை போல உங்களை காலடியில் போட்டு மிதிக்கிறார்களே!"

"இளைய மருமகள் நகை நட்டோ, சீர்செட்டோ அதிகம் கொண்டு வந்தால், அதைக் காட்டி, மூத்த மருமகளை மாமியார் இடித்துக் காட்டுவதும் நமது நாட்டு வழக்கந்தான் பொற்கொடி!"

"அந்த வழக்கத்தைத்தான் நான் குழிதோண்டிப் புதைக்கிறேன்."

"வேண்டாம், பொற்கொடி, அத்தை மனது மிகவும் புண்படும்"

"பண்படாத மனம் புண்பட வேண்டியதுதான்!"

இதற்குள் டிரைவர் எல்லா சாமான்களையும் ஜீப்பில் ஏற்றிவிட்டு, பொற்கொடியிடம் சொல்லிக் கொள்ள வந்தார்.

பொற்கொடி விடை கொடுத்து அனுப்பினாள்.

அங்கமுத்து கப்பல் கவிழ்ந்து விட்டது போல கன்னத்தில் கை வைத்தபடி கூடத்தில் அமர்ந்து விட்டாள்.

கற்சிலை என்றால் அசல் கற்சிலைதான். அப்படியே அங்கமுத்து இருந்தாள்.

"அம்மா...அம்மா...அம்...மா...!"

குரல் கேட்டு பார்வையைத் திருப்பினாள்.

அதே டிரைவர்.

"அம்மா! அய்யா சாமான்கள் அனுப்பிருக்கிறார்" என்று தெரிவித்தார்.

அதைக் கேட்டதும், அங்கமுத்து அடைந்த ஆனந்தத்துக்கு அளவேயில்லை!



"எனக்குத் தெரியும்! இவள் சிறு பெண், அய்யா வைரம்! கொண்டுவா, கொண்டு வா! சீக்கிரம் இறக்கிவை" என்று குதூகலத்துடன் கூவினாள்.

டிரைவர் போய் சாமான்களை எடுத்து வந்து, வரிசையாக அடுக்கினார்.

டால்டா டப்பா ஏழெட்டு!

ஆர்லிக்ஸ், விவா, ப்ரூ, ரிக்கரி பாட்டில்கள் பத்து, இருபது!

அங்கமுத்து விழி பிதுங்கியது!

"ஏனப்பா, அய்யாதான் அனுப்பினாரா?"

அழமாட்டாக் குறையாக அங்கமுத்து கேட்டாள்.

"ஆமாம்" என்றார், டிரைவர்.

"எல்லாம் கண்ணாடி பாட்டிலா இருக்கிறதே!"

"வைர பாட்டில் இன்னும் வர வில்லையே, அம்மா."

டிரைவர் போய்விட்டார்.

அங்கமுத்துக்கு தலையை சுற்றியது!

மறுநாள் இரவு.

சாப்பாடு முடிந்தது.

லெட்சுமி அடுப்படியில் பாத்திரங்களை கழுவிக்கொண்டு இருந்தாள்.

அவர்கள் மாடிக்குப் போய்விட்டார்கள்.

அங்கமுத்து பேய்க்கதை படித்துக் கொண்டு இருந்தாள்.

கயல்விழி படக்கதை படித்துக் கொண்டு இருந்தாள்.

பொற்கொடி மாடிக்குக் கிளம்பிக்கொண்டு இருந்தாள்.

அப்பொழுது அடுப்படியில் இருந்து வாந்தி எடுக்கும் குரல் கேட்டது!

அங்கமுத்து அடுப்படியை விழித்து நோக்கினாள்.

கயல்விழி கண்களை நிமிர்த்தினாள்.

மாடிப்படிகளை நோக்கி சென்று கொண்டு இருந்த பொற்கொடி நின்றாள்.

அந்தக் குரல் தொடர்ந்து கேட்டது.

பொற்கொடி அடுப்படியை நோக்கித் திரும்பினாள்.

'என் வைரம்! இங்கே வாயேன்.'

அங்கமுத்து அழைத்தாள்.

பொற்கொடி அருகில் சென்றாள்.

"நம் முன்னே பசியில்லை அது இது என்று பாவனை பண்ணினாளே...அடுப்படிக்குப் போய் திருட்டுப் பூனை போல பானைகளை உருட்டியிருக்கிறாள். கண்டதையும் தின்றுவிட்டு, கக்கிக்கொண்டு இருக்கிறாள்" என்று அங்கமுத்து வக்கனை பேசினாள்.

"இப்படி திருடித்திருடி தின்றுதான் குண்டாகிவிட்டாள்" என்று கறுவினாள்.

"நீங்களும் திருடித்தான் தின்பீர்களோ?"

பொற்கொடி நறுக் என்று கேட்டாள்.

"ஏன்?" அங்கமுத்துக்கு 'சுருக்' என்று தைத்தது!

"யானைக்குட்டி போல இருக்கிறீர்களே! அதுதான் கேட்டேன்" என்று சொல்லிக்கொண்டே, பொற்கொடி அடுப்படிக்குப் போனாள்.

கயல்விழியும் அவள் பின்னே ஓடினாள்.

அடுப்படியில் லெட்சுமி "குபுக் குபுக்" என்று வாந்தி பண்ணிக்கொண்டு இருந்தாள்.

அவள் எவ்வளவோ அடக்கிப் பார்த்தாள். ஆனால், குடலே வெளியே வந்துவிடும் போல இருந்தது. வயிற்றை சுருட்டி சுருட்டி இழுத்துக் கொண்டு வந்தது.

"உடம்புக்கு என்னக்கா?"



பொற்கொடி அவள் தோளை அன்புடன் பற்றிக்கொண்டு கேட்டாள்.

"ஒன்றும் இல்லை."

இதைச் சொல்லக்கூட லெட்சுமியால் முடியவில்லை.

"நான் டாக்டருக்கு போன் செய்கிறேன்" என்று கயல்விழி ஓடினாள்.

## 33

"வேண்டாம்...வேண்டாம்...! என்று லெட்சுமி தடுத்தாலும், டாக்டரம்மா வந்துவிட்டார்!"

நோயாளியைப் போல லெட்சுமி கட்டிலில் படுத்திருந்தாள்-படுக்கவைக்கப்பட்டு இருந்தாள். பொற்கொடி அவளை வலுக்கட்டாயமாகப் பிடித்து இழுத்து வந்து படுக்க வைத்துவிட்டாள்.

குடும்பத்தவர் அத்தனை பேரும் கூடியிருந்தார்கள். கண்ணனுக்குக் கலக்கம். மன்னனுக்குக் கவலை. சுப்பிரமணியம் வழக்கம்போல கல். அங்கமுத்து கூட கவலையுடன் லெட்சுமியையே பார்த்துக்கொண்டு நின்றாள் என்றால், வேறு யாரைப் பற்றிச் சொல்ல வேண்டும்.

டாக்டரம்மா அதிகமாக சோதிக்கவில்லை. சோதிக்க வேண்டிய அவசியமும் ஏற்படவில்லை. லெட்சுமியின் கையைப் பிடித்துப் பார்த்ததுமே ஊகித்துக் கொண்டு விட்டார்.

"ஏனம்மா இதை நீயே சொல்லியிருக்கக்கூடாதா? எல்லோரையும் கூட்டி ரகளை பண்ணிவிட்டாயே!" என்று டாக்டரம்மா சிரித்துக் கொண்டே சொன்னார்.

லெட்சுமி பதில் சொல்லாமல், நாணத்துடன் தலை குனிந்து கொண்டாள்.

"அண்ணிக்கு என்ன, டாக்டர்?" மன்னன் கவலையுடன் கேட்டான்.

"நல்ல செய்திதான்" என்ற டாக்டரம்மா, அங்கமுத்துவின் பக்கம் திரும்பினார், "அம்மா நீங்கள் சீக்கிரம் பாட்டியாகப் போகிறீர்கள்!" என்று உற்சாகத்துடன் உரைத்தார்.

அதைக் கேட்டபொழுது, அங்கமுத்துவின் முகம் மலர்ந்தது! பேரன் பிறக்கப் போகிறான் என்றால், யாருக்குத்தான் மகிழ்ச்சி பீறிடாது?

எப்பொழுதும் கல்லாக முகத்தை வைத்துக்கொண்டு இருக்கும் சுப்பிரமணியம் கூட புன்னகைத்தார்.

கண்ணனுக்கு ஒரே களிப்பு! மன்னன் துள்ளிக்குதித்தான்.

"அக்கா, உங்களை என்னவோ என்று நினைத்தேன். பெரிய ஆள்தான்! இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்று நினைக்கப்போய், இந்தப் பூனை குடம் குடமாகப் பாலை குடித்து இருக்கிறதே!" என்று பொற்கொடி கேலி செய்தாள்!

கயல்விழியோ, "எனக்கொரு மகன் பிறப்பான்! அவன் என்னைப் போலவே இருப்பான்!" என்று தன்னை மறந்து ஆடிப்பாடினாள்!

"மகன் அல்ல; மருமகன்" என்று பொற்கொடி பாட்டை திருத்தினாள்.

கயல்விழி அது புரியாமல் விழித்தாள்.

"அக்கா இனி நீங்கள் படுத்தே இருக்கவேண்டும். வீட்டு வேலைகளை யெல்லாம் நானே பார்த்துக் கொள்ளுகிறேன்" என்று லெட்சுமியிடம் பொற்கொடி சொன்னாள்.

"எங்கள் எல்லோரையும் படுக்க வைக்கப் போகிறாயா!" என்று மன்னன் சிரித்தான்.

"அண்ணி சமையல் செய்தால், இனி புண்ணாக்கும் புளியங்கொட்டையுந்தான் கிடைக்கும்" என்றாள் கயல்விழி.



அதைக் கேட்டதும் அங்கமுத்துக்கு அடிவயிற்றைக் கலக்கியது.

அதற்குள் லெட்சுமி, "எனக்கு என்ன வந்தது? நானே எல்லா வேலைகளையும் செய்வேன்" என்று கூறிக்கொண்டே எழுந்தாள்.

"எழுந்திருக்காதீர்கள், அக்கா படுத்துக்கொள்ளுங்கள்" என்று பொற்கொடி அவளை தடுத்து படுக்க வைத்தாள்.

"நான் என்ன நோயாளியா-படுத்திருக்க" என்று கூறிக்கொண்டே லெட்சுமி மீண்டும் எழுந்தாள்.

"கர்ப்பமும் ஒரு பிணிதான்; அதனால்தான் 'கர்ப்பிணி' என்கிறார்கள்" என்றான் மன்னன்.

"அம்மா பொற்கொடி! நாலு பாத்திரமும் ஓர் உருண்டை புளியும் கொண்டுவந்து உன் வீட்டுக்காரர் கையில் கொடு! நன்றாக விளக்குகிறார்!" என்று லெட்சுமி கேலி செய்தாள்.

"கர்ப்பிணிப் பெண்கள் படுத்தே கிடப்பது தவறு. வழக்கம் போல வீட்டுவேலைகள் செய்யவேண்டும். அப்பொழுதுதான் பேறுகாலம் எளிதாக இருக்கும்" என்று டாக்டரம்மா தீர்ப்புக் கூறினார்.

"என் கட்சிதான் வென்றது" என்பதுபோல லெட்சுமி எல்லோரையும் பெருமிதத்துடன் பார்த்தாள்.

ஆனால் மசக்கை காலத்தில் கொஞ்சம் ஓய்வு தேவைப்படும் என்று கூறிவிட்டு டாக்டரம்மா விடைபெற்றுக் கொண்டார்.

"கண்ணா, லெட்சுமியை அழைத்துக்கொண்டு போ" என்று மகனிடம் சுப்பிரமணியம் சொன்னார்.

அப்பா வாய்திறந்தது கயல்விழிக்கு அதிசயமாக இருந்தது!

"அழைத்துப் போவதா? தலையில் தூக்கிக்கொண்டு போங்கள்!" என்றான் மன்னன்.

"நீங்கள் அப்படித்தான் செய்வீர்கள் போலிருக்கிறதா" என்று லெட்சுமி அவனை மடக்கினாள்.

"அந்த ஆண்டவனே தலையில் ஒரு பெண்ணை வைத்துக் கொண்டு இருக்கும்பொழுது, நான் என்ன சாமான்யன்!," என்றான், மன்னன்.

"தலையில் பெண்ணை வைத்துக் கொள்ள முடியா விட்டாலும், பேனையாவது வைத்துக்கொள்ளுங்கள்!" என்றாள், கயல்விழி.

லெட்சுமியை அழைத்துக் கொண்டு கண்ணன் மாடிக்கு புறப்பட்டான்.

"ஏ மச்சான்!" என்று பொற்கொடி அவனை வம்புக்கு இழுத்தாள்.

"அக்கா ஆசைப் படுவதையெல்லாம் வாங்கிக் கொடுங்கள். இல்லாவிட்டால், உங்கள் மகனுக்கு ஒட்டைக்காது ஆகிவிடும்!" என்று கூறினாள்.

"காதில் ஒட்டை விழுந்தால், ஒரு சோடி வைரத் தோடு, வாங்கிப் போடு!" என்று பொற்கொடியிடம் கூறிய மன்னன் அவளை இழுத்துக் கொண்டு போனான்.

லெட்சுமியின் அறை.

அறைக்குள் வந்ததும், "மெல்ல-மெல்ல-மெல்ல நட!" என்று கண்ணன் அவளை தாங்கிப் பிடித்தான்.

அவள் வெட்கத்தால் முகம் சிவந்தாள்.

இருவரும் கட்டிலில் அமர்ந்தார்கள்.

கண்ணன் அவளை அருகில் இழுத்துக்கொண்டான்.

"லெட்சுமி! இதை ஏன் என்னிடம் முன்பே சொல்ல வில்லை?" என்று கேட்டான். அவன் கை அவள் கன்னத்தைக் கிள்ளியது.

"எனக்கே இப்பொழுதுதானே தெரியும்" என்றாள், லெட்சுமி.

"சும்மா சொல்லாதே. 'வாய் அறியாத பொய் இல்லை; தாய் அறியாத சூல் இல்லை; என்பார்கள்'" என்றான், அவன்.



அதன்பின் லெட்சுமி உண்மையை ஒப்புக்கொண்டாள். "உறுதியான பின்பு சொல்லலாம் என்று இருந்தேன். உங்களையும் மற்றவர்களையும் ஏமாற்றிவிடக் கூடாது அல்லவா?"

"அதுசரி. பொற்கொடி என்னவோ சொன்னாளே; அது உண்மையா?"

"பெரியவர்கள் அப்படித்தான் சொல்லுவார்கள். கர்ப்பிணிகள் ஆசைப்படுவதை வாங்கிக்கொடுக்க வேண்டுமாம். இல்லாவிட்டால், பிறந்த குழந்தைக்குக் காதில் சீழ்வடியுமாம்."

"நீ ஆசைப்படுவதையெல்லாம் நான் வாங்கித் தருகிறேன். என்ன வேண்டும், சொல்."

"உங்கள் அன்புதான் வேண்டும்."

"அதுதான் வண்டி வண்டியாக இருக்கிறதே! வேறு என்ன வேண்டும்."

"இந்த அன்பு என்றைக்கும் மாறாமல் இருக்க வேண்டும்."

"அதுதான் உன் ஆசையா?"

கண்ணன் ஊடிக்கொண்டான்.

'கோடிச் சேலை ஒரு வெள்ளைக்கு; குமரிப் பெண் ஒரு பிள்ளைக்கு,' என்பது உங்களுக்குத் தெரியாதா பிள்ளை பிறந்ததும், சில ஆண்களுக்கு பெண்டாட்டி மீது ஆசை குறைந்து விடுமாம். அதனால்தான் உங்கள் அன்பு என்றைக்கும் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன்."

"நீ கதையையே மாற்றுகிறாயே! பிள்ளை பிறந்த பிறகு பெண்டாட்டிக்குத்தான் கணவன் மீது ஆசை குறையும் என்பார்கள். பிள்ளை மீது ஆசை பெருகிவிடுமாம். கணவனுக்குக் கன்னத்தில் கொடுப்பது கூடக் குறைந்து விடுமாம்."

"அப்படிப் பார்த்தால், எனக்கு நீங்கள்தானே முதல் குழந்தை."

"என்னைத் தூக்கி தொட்டிலில் போட்டு தாலாட்டு."

"கட்டிலில் போட்டு தாலாட்டுகிறேனே. போதாது."

"போதும். போதும்; உன் ஆசை என்ன என்று சொல் என்றால், என்னவோ கதை பேசுகிறாயே."

"என் ஆசையைத்தான் சொல்லி விட்டேனே."

"நீ என்ன சொல்வது; எனக்குத் தெரியாதா? உனக்கு மாங்காய் வேண்டும்."

"அது நம் தோட்டத்திலேயே இருக்கிறது."

"உனக்கு வேறு என்ன பிடிக்கும்?"

கண்ணன் மூளையைக் குழப்பினான். தலையைச் சொரிந்தான்.

அந்த நிலையில் அவனைப் பார்க்க லெட்சுமிக்கு பரிதாபமாக இருந்தது.

சில கணங்கள் கழிந்தன.

"என்னங்க..." லெட்சுமி அழைத்தாள்.

"உம்..."

"எனக்கு ஒரு சிறு ஆசை."

"சொல் சொல். உடனே நிறைவேற்றி வைக்கிறேன்."

"அது அவ்வளவு எளிது அல்ல."

"வானத்தை துளைக்க வேண்டுமா?"

"உங்களால் கூரை ஏறி கோழி பிடிக்கக்கூட முடியாது என்பது எனக்குத் தெரியாதா?"

"ஏய் ஏய்! அப்படி மட்டும் சொல்லாதே. நான் நினைத்தால் உனக்கு புலிப்பாலே கொண்டு வருவேன்."

"உங்களை நான் காட்டுக்கும் போகச் சொல்லவில்லை. என்னை வீட்டுக்கு அனுப்புங்கள் என்கிறேன்."

"என்ன சொல்லுகிறாய், லெட்சுமி?"

அவள் அவன் மார்பில் அன்புடன் சரிந்து கொண்டாள்.



"எனக்கு சொல்லவே தயக்கமாக இருக்கிறது."

"சும்மா சொல்."

"குழந்தை உண்டான ஒவ்வொரு பெண்ணும்..."

"ஏன் நிறுத்திவிட்டாய், லெட்சுமி? சொல்"

"தாய் வீட்டுக்குப் போகவேண்டும் என்று ஆசைப்படுவாளாம். என்னையும் ஓர் இரண்டு நாளாவது என் அம்மா வீட்டுக்கு அனுப்பி வைப்பீர்களா?"

லெட்சுமிக்கு நா தளதளத்தது. கண்கள் கசிந்தன.

கண்ணன் பேசாமடந்தையானான்.

"இதனால்தான் நான் சொல்லத் தயங்கினேன்."

"இல்லை, லெட்சுமி. நான் எப்படியாவது உன்னை உன் அம்மா வீட்டுக்கு அனுப்பி வைக்கிறேன்" என்று கண்ணன் அவள் கைகளை பற்றிக் கொண்டான்.

"அத்தை சம்மதிப்பார்களா?" லெட்சுமி அவநம்பிக் கையுடன் கேட்டாள்.

"அதுதான் யோசிக்கிறேன்" என்றான், கண்ணன்.

"வேண்டாங்க. எனக்கு அந்த வீண் ஆசையெல்லாம் கூடாது" என்று லெட்சுமி பெருமூச்சு விட்டாள்.

அவளது ஆசையை எப்படியாவது நிறைவேற்ற வேண்டும் என்ற சிந்தனையில் கண்ணன் ஆழ்ந்தான்.

## 34

குழந்தை உண்டானது முதல் லெட்சுமியின் வாழ்க்கையில் நல்ல மாறுதல் ஏற்பட்டது.

அவள் அந்த வீட்டின் செல்லப் பிள்ளையானாள்!

புதுமையாகச் சொல்ல வேண்டுமானால், அவள் ஓர் எம். எல். ஏ. ஆகிவிட்டாள்!

அவளுக்கு வீட்டில் தனி மதிப்பு, மரியாதை, செல்வாக்கு, சுதந்திரம், உபசாரம், உரிமை.

கண்ணன் அவளை தலையில் தூக்கி வைத்துக் கொள்ளாத குறைதான். தரையில் கால் படக்கூடாது என்றான். அவள் வாய்க்குச் சுவையாக என்னவோ வாங்கி வந்து கொடுத்தான். கொஞ்சல் குலாவலுக்கு அளவேயில்லை.

இதையெல்லாம் அங்கமுத்து கண்டும் காணாதது போல இருந்ததுதான் எல்லாவற்றையும் விட ஆச்சரியம்! அவளுக்கே கூட லெட்சுமி மீது ஓர் அன்பு பிறந்தது. இப்பொழுதெல்லாம் லெட்சுமியை ஒன்றும் சொல்வது இல்லை. "உடம்பைப் பார்த்துக் கொள்ளம்மா" என்று உபசாரம் கூடச் செய்தாள்.

சுப்பிரமணியம் நாள்தோறும் இரண்டு முறையாவது லெட்சுமியைப் பார்த்து "உடம்பு எப்படியம்மா இருக்கிறது?" என்று கேட்கத் தவறுவது இல்லை.

மன்னனும் பொற்கொடியும் லெட்சுமிக்கு அரண்களாக விளங்கினார்கள். அவளுக்கு என்ன வேண்டும் ஏது வேண்டும் என்று பார்த்துப் பார்த்து செய்தார்கள்.

கயல்விழிக்கு கல்லூரி விட்டால் போதும், லெட்சுமியிடம் வந்து உட்கார்ந்து கொள்ளுவாள். "குழந்தை எப்பொழுது பிறக்கும்? எப்படிப் பிறக்கும்? என்ன குழந்தை பிறக்கும்?" என்று தொண தொணத்துக் கொண்டே இருப்பாள்.

இப்படி எல்லோரும் அன்பைப் பொழிவதைப் பார்க்க, லெட்சுமிக்குப் பெருமையாக இருந்தது. ஆனால், அவள் உள்ளத்தில் ஒரு வெறுமை-ஒரு கறுமை இருக்கத்தான் செய்தது. தாய்ப் பாலுக்கு ஏங்கும் குழந்தை போல, தாய் வீட்டையே நினைத்துக் கொண்டு இருந்தாள்.

பொற்கொடி தடுத்தும்கூட லெட்சுமி வீட்டு வேலைகளை செய்து கொண்டுதான் இருந்தாள். அது அவள் உள்ளத்துக்கு



ஆறுதலாக இருந்தது. அவளது அறைக்கு வந்து விட்டால், தாயின் நினைவு வந்து விடும். எத்தனையோ நாள் அந்த நினைவில் அழுதுகூட இருக்கிறாள். 'தாய் வீட்டுக்குப் போகவே மாட்டோமா?' என்று எண்ணும்பொழுது அவள் இதயமே வெடித்து விடும் போல இருக்கும்.

அவளை ஒரு முறையாவது தாய் வீட்டுக்கு அழைத்துப் போக வேண்டும் என்று கண்ணன் உறுதியாக எண்ணினான். ஆனால், அவனால் அதை செயல்படுத்த முடியவில்லை. அம்மாவை நினைத்தாலே, அச்சம் பிறந்தது. அம்மாவைப் பார்த்தால், பூனையைப் பார்த்த எலி போல ஆகிவிடுவாள்.

ஓரிருமுறை தலையைச் சொறிந்து கொண்டே அம்மாவிடம் போனான். ஆனால், "என்னடா?" என்று அங்கமுத்து கேட்குமுன், "ஒன்றும் இல்லை அம்மா" என்று ஓடி வந்து விட்டான்.

நேற்று மாலையும் இப்படித்தான் நடந்தது. உடனே லெட்சுமி, இந்தப் பிறவியில் இனி நான் என் அம்மா வீட்டுக்குப் போகப் போவது இல்லை" என்று அழுது விட்டாள். அதைப் பார்த்த கண்ணன் கண் கலங்கினான். "லெட்சுமி! நாளை எப்படியும் அம்மாவிடம் கேட்டு விடுகிறேன்" என்று உறுதியாக உரைத்தான்.

**மா**லை நேரம்.

கண்ணன் அலுவலகத்தில் இருந்து திரும்பிக் கொண்டு இருந்தான்.

புத்தகக் கடை அருகே காரை நிறுத்தி, உள்ளே சென்றான்.

புத்தகங்களை ஒரு நோட்டமிட்டான்.

ஒரு புத்தகத்தின் தலைப்பு அவனைக் கவர்ந்தது.

அந்தத் தலைப்பு!

"பேயைத் தின்ற பேய்!"

அந்தப் புத்தகத்தை வாங்கிக் கொண்டு வெளியில் வந்தான்.

அடுத்து திருநெல்வேலி அல்வாக் கடை முன்னே காரை நிறுத்தினான்.

அங்கே ஒரு கிலோ அல்வா வாங்கிக் கொண்டு, நேரே வீட்டுக்கு வந்தான்.

"அம்மா...அம்மா..."

பாசக் குரல் கொடுத்துக் கொண்டே வீட்டுக்குள் நுழைந்தான்.

"என்னடா, கண்ணா?"

கூடத்தில் அமர்ந்து இருந்த அங்கமுத்து அன்புடன் கேட்டாள்.

"புது புத்தகம் ஒன்று வந்திருந்தது அம்மா வாங்கி வந்தேன்."

கண்ணன் புத்தகத்தை அம்மாவிடம் கொடுத்தான்.

புத்தகத்தின் தலைப்பைப் பார்த்ததும் அங்கமுத்துக்கு இரட்டை மகிழ்ச்சி.

அப்பொழுதே புத்தகத்தைப் பிரித்தவள் "நீ போய் காப்பி குடி கண்ணா" என்று அவனை நோக்கினாள்.

அப்பொழுது அவன் கையில் இருந்த பொட்டலத்தைப் பார்த்தாள்.

"அல்வா, அம்மா! உங்களுக்குத்தான் வாங்கி வந்தேன்."

உற்சாகமாக உரைத்த கண்ணன் வேகமாக அல்வா பொட்டலத்தை அம்மாவிடம் நீட்டினான்.

ஆனால் அங்கமுத்து அதை வாங்கிக் கொள்ளவில்லை. அதற்குப் பதில் அவள் புன்னகைத்தாள்.

"ஏண்டா கண்ணா பொய் சொல்லுகிறாய்? எனக்குத் தெரியாதா? லெட்சுமிக்குத்தானே வாங்கி வந்தாய்? கொண்டு போய் கொடு?" என்றாள்.

அதைக் கேட்டதும், கண்ணனின் உற்சாகம் செத்து விட்டது.

"இல்லை, அம்மா. உங்களுக்குத்தான் வாங்கி வந்தேன்" என்று தாழ்ந்த குரலில் சொன்னான்.



"கர்ப்பிணிகள் ஆசைப்பட்டு கேட்டதை வாங்கிக் கொடுக்க வேண்டும். அது தப்பு இல்லை. கொண்டுபோய் லெட்சுமிக்குக் கொடு" என்று சொல்லிவிட்டு, அங்கமுத்து புத்தகத்தைப் படிக்கத் தொடங்கினாள்.

கண்ணன் பரிதாபமாக எழுந்து நின்றான்.

அம்மாவுக்கு சோப்புப் போட்டு, எப்படியாவது வேலையை முடித்துக் கொள்ளலாம் என்று நினைத்தான். ஆனால், மீன் நழுவி விட்டது!

எப்படியும் இன்று அம்மாவிடம் கேட்டு விடுவதாக லெட்சுமியிடம் சொல்லியிருக்கிறானே, கேட்காவிட்டால், அவள் "கோ" என்று கதறி அழுவாளே. அதைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் அவனுக்கு இல்லை.

தயக்கத்துடன், "அம்மா" என்று அழைத்தான்.

"என்னடா, கண்ணா?"

புத்தகத்தில் இருந்து பார்வையை எடுக்காமலே அங்கமுத்து கேட்டாள்.

"ஒன்றும் இல்லை, அம்மா லெட்சுமி."

"சினிமாவுக்குப் போக வேண்டும் என்றாளா? கர்ப்பிணிப் பெண் விளக்கு வைத்த பின்பு வீட்டைவிட்டு வெளியில் எங்கேயும் போகக்கூடாது. போய், உங்கள் அறையில் உட்கார்ந்து பேசிக் கொண்டு இருங்கள்."

அங்கமுத்து தலை நிமிராமல் பேசினாள்.

கண்ணன் குனிந்த தலையுடன் அந்த இடத்தை விட்டு நகர்ந்தான்.

இவ்வளவையும் பார்த்துக்கொண்டு, பொற்கொடி மாடிப் படிகளில் நின்று கொண்டு இருந்தாள்.

கண்ணன் அங்கே வந்ததும், "என்ன விஷயம், கொக்கு தலையில் வெண்ணெய் வைக்கிறீர்கள்?" என்று குறும்பாகக் கேட்டாள்.

"வெண்ணெய் அல்ல. அல்வா" என்று கையில் இருந்த பொட்டலத்தை கண்ணன் காட்டினான். அப்பொழுது அவனைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

"அந்த அல்வாக் கடைக்காரனை உங்களுக்குத் தெரியுமா?" பொற்கொடி கேட்டாள்.

"தெரியுமே. உனக்கு அல்வா வேண்டுமா?"

"ஆமாம். கோந்து அல்வா வேண்டும். அதைத் தின்றதும், வாயை திறக்கக்கூடாது. அப்படியே ஒட்டிக் கொள்ள வேண்டும்."

"யாருக்கு வேண்டும், இந்த அல்வா?"

"அதோ அந்த நீர்யானைக்குத்தான்!"

பொற்கொடி அங்கமுத்துவை சுட்டிக் காட்டினாள்.

அப்பொழுது கண்ணனுக்கு சட்டென்று ஒரு யோசனை தோன்றியது. பொற்கொடியைப் பிடித்தால், வேலை முடியும் என்று நினைத்தான்.

"பொற்கொடி, லெட்சுமி ஆசைப்பட்டதைச் செய்யாவிட்டால், அவளுக்குப் பிறக்கும் குழந்தைக்குக் காதில் சீழ் வடியும் என்று சொன்னாய் அல்லவா?"

"ஆமாம். லெட்சுமி அக்காவுக்கு என்ன ஆசை?"

"அதை நிறைவேற்ற உன்னால்தான் முடியும்."

"சொல்லுங்கள், செய்கிறேன்."

"ஒரே ஒரு முறை அவள் அம்மா வீட்டுக்குப் போய் வர வேண்டுமாம்."

"பூ! இவ்வளவுதானா! அம்மா வீடு என்ன அமெரிக்காவிலா இருக்கிறது? உள்ளூரிலேயே! இப்பொழுதே போய் வர வேண்டியதுதானே?"

"நீ எளிதாகச் சொல்லி விட்டாய். என் அம்மா சம்மதிக்க வேண்டுமே?"



"எங்கள் அம்மா வீட்டுக்குப் போக உங்கள் அம்மா என்ன சம்மதிப்பது?"

"லெட்சுமியை அம்மா அனுமதிக்கவே மாட்டார்கள்."

"பார்ப்போமா? நான் அழைத்துப் போகிறேன். யார் தடுக்கிறார்கள் என்று பார்ப்போமா?"

"அம்மாவின் அனுமதி இல்லாமல் லெட்சுமி வரவே மாட்டாள்."

"அக்கா ஒரு...இது!"

"நீ தான் எப்படியாவது அம்மாவிடம் சொல்ல வேண்டும், பொற்கொடி."

கண்ணன் கெஞ்சலாகச் சொன்னான்.

பொற்கொடி ஒருகணம் சிந்தித்தாள்.

"கவலையை விடுங்கள். நான் கவனித்துக் கொள்ளுகிறேன்" என்றவள், அவனை மாடிக்கு அனுப்பிவிட்டு, அவள் அடுப்படியை நோக்கிச் சென்றாள்.

"அத்தை!"

அடுத்த பத்து நிமிடத்தில் அங்கமுத்துவின் முன்னே வந்து தேன் சொட்டச் சொட்ட நின்றாள் பொற்கொடி.

அவள் குரல் கேட்டதும், அங்கமுத்து புத்தகத்தை மூடி விட்டு வேகமாகத் தலை நிமிர்ந்தாள். "என்ன, கண்ணு?"

"காப்பி சாப்பிடுங்கள், அத்தை." கையில் இருந்த தம்ளரை பொற்கொடி முன்னே நீட்டினாள்.

அங்கமுத்துக்குக் குடலை புரட்டியது. "காப்பி... இந்நேரம் எதற்கம்மா?"

"பயப்படாதீர்கள், அத்தை. நல்ல சுத்தமான காப்பி தான்" என்ற பொற்கொடி, தானே இரண்டு மடக்குக் குடித்துவிட்டு, மீதியை நீட்டினாள்.

அங்கமுத்துக்கு நம்பிக்கை பிறந்தது. காப்பியை வாங்கிக் குடித்தாள். பரவாயில்லை. பொற்கொடியும் காப்பி கலக்கப் பழகிவிட்டாள்!

"இந்த அநியாயத்தைக் கேட்டீர்களா, அத்தை?"

பெரிய அம்மாமிப் பாட்டி போல நீட்டி முழக்கிக் கொண்டு பொற்கொடி, அங்கமுத்துவின் அருகில் அமர்ந்தாள்.

"லெட்சுமி அக்காவின் அப்பா நேற்று எங்கள் கடைக்கு வந்தாராம்!"

"அந்த மனுசன் ஏன் அங்கே வந்தார்?"

அங்கமுத்து கையை கன்னத்தில் வைத்துக் கொண்டாள்.

"விலை கேட்டு வந்தாராம்."

"வேலையா? ஏன், இருந்த வேலை என்ன ஆயிற்று? அரோகரா ஆகிவிட்டதா!"

"வேலையில்லை, அத்தை, விலை, வைரத் தோடு என்ன விலை ஆகும் என்று கேட்டாராம்."

"என்ன...என்ன...வைரமா?"

"ஆமாம், அத்தை, அப்பா சொன்ன பொழுது என்னால் கூட நம்ப முடியவில்லை. ஆனால் அவர் வைரத் தோடு வாங்கிக்கொண்டு போனாராம்."

"உண்மையாகவா?"

"ஆமாம், அத்தை, அப்பாவே சொன்னார்."

"வைரத் தோடு வாங்குகிற அளவுக்கு வளர்ந்து விட்டாரா?"

"இப்பொழுதுதான் யாருக்கு வேண்டுமானாலும் லாட்டரி அடிக்கிறதே!"

"இருக்கும், இருக்கும், அவருக்கு லாட்டரிதான் அடித்திருக்கும்!"

சொல்லிக் கொண்டே அங்கமுத்து எழுந்துவிட்டாள்.

"எங்கே அத்தை எழுந்து விட்டீர்கள்?"

பொற்கொடி கேட்டாள்.



"லெட்சுமி வாயும் வயிறுமாக இருக்கிறாள், அவளை அழைத்துப்போய், சீரு சிறப்பு செய்யும்படி அவள் அம்மாவிடம் சொல்ல வேண்டாமா?"

பேசிக் கொண்டே அங்கமுத்து நடந்தாள்.

பொற்கொடி சிரித்துக்கொண்டே மாடிப் படிகளை நோக்கினாள்.

அங்கே கண்ணன் தலைமறைவாக நின்று கொண்டு இருந்தான்.

பொற்கொடி அவனை நோக்கி, வெற்றிக்கு அடையாளமாக இரண்டு விரல்களை விரித்துக் காட்டினாள்!

## 35

பரபர என்ற பட்டுச் சேலை ஒன்றை கட்டிக்கொண்ட அங்கமுத்து பம்பரம் போல சுழன்று வாசலுக்கு வந்தாள்.

வெளியில் கார் தயாராக காத்துக் கொண்டு நின்றது.

யாரிடமும் எதுவும் சொல்லிக்கொள்ளாமல், காரில் ஏறிக் கொண்டாள்.

"சம்பந்தி வீட்டுக்குப் போ" என்று டிரைவருக்குக் கட்டளை யிட்டவள், "லெட்சுமி அம்மா வீட்டுக்குப் போ" என்று திருத்தினாள்.

டிரைவர் தன் காதுகளை நம்ப முடியாதவராக பின்னே திரும்பி அங்கமுத்துவை நோக்கினார்.

"என்ன, பார்க்கிறாய்? என் மருமகள் லெட்சுமி அம்மா வீட்டுக்குத்தான், போ" என்று அங்கமுத்து அவசரப் படுத்தினாள்.

லெட்சுமி வீட்டுக்கு திருமணத்தின் பொழுது போனது தான். இப்பொழுது வீடு அடையாளம் தெரியுமோ; தெரியாதோ. அங்கே போய்ப் பார்த்துக் கொள்ளலாம் என்று டிரைவர் காரை நகர்த்தினார்.

கார் அப்பால் சென்றதும், பொற்கொடியும் கண்ணனும் மாடிக்கு ஓடி வந்தார்கள்.

"வெற்றி! வெற்றி!" என்று இரட்டை நயனம் வாசித்துக் கொண்டே இருவரும் லெட்சுமியின் அறைக்குள் நுழைந்தார்கள்.

அயர்ந்து படுத்திருந்த அவள், ஒன்றும் புரியாமல் எழுந்து அமர்ந்தாள். "என்ன வெற்றி!" யாருக்கு வெற்றி!"

"லெட்சுமி! நீ உன் அம்மா வீட்டுக்கு போகப் போகிறாய்" என்றான் கண்ணன்.

"அத்தையே உன்னை அனுப்பி வைக்கப் போகிறார்கள்" என்றாள் பொற்கொடி.

லெட்சுமிக்கு காதுகளில் தேன் வந்து பாய்ந்ததுபோல இருந்தது! அவள் முகத்தில் ஆயிரம் நிலவுகள்!

ஆனால், சட்டென்று அந்த நிலவுகளை மேகம் மறைத்தது.

கேப்பையில் நெய் ஒழுகுகிறது என்றால், கேட்பவருக்கு மதி வேண்டாமா?

"இரண்டுபேரும் சேர்ந்து கொண்டு என்னை முட்டாள் ஆக்குகிறீர்களா?" என்று, அவர்கள் பேச்சில் நம்பிக்கை இல்லாதவளாகச் சொன்னாள்.

"நாங்கள் சொல்வது உண்மைதான் லெட்சுமி."

குழந்தைபோல குதித்த கண்ணன், பொற்கொடி நிற்பதையும் மறந்து, லெட்சுமியை கட்டிப் பிடித்தான்.

"அய்யோ... விடுங்கள்" என்று வெட்கத்துடன் லெட்சுமி விலகினாள்.



"நான் வேண்டுமானால் கண்ணை மூடிக்கொள்ளுகிறேன்" என்று பொற்கொடி குறும்பாகக் கூறினாள்.

"நீ நிற்பதை மறந்துவிட்டேன்" என்று கண்ணன் ஒதுங்கினான்.

"அதனால் என்ன? வீட்டுக்கு வீடு வாசல்படிதான்" என்றாள். பொற்கொடி.

பிறகு வைரத்தோடு விஷயத்தை லெட்சுமியிடம் பொற்கொடி சுருக்கமாகச் சொன்னாள்.

"ஒரு நல்ல நாளாகப் பார்த்து உன்னை உங்கள் வீட்டுக்கு அழைத்துச் செல்லும்படி உன் அம்மாவிடம் சொல்ல என் அம்மாவே போயிருக்கிறார்கள்."

கண்ணன் பெருமிதத்துடன் தெரிவித்தான்.

"அச்சச்சோ?"

லெட்சுமி கன்னத்தில் கைவைத்துக் கொண்டாள்!

"எந்தக் கப்பல் மூழ்கிவிட்டது?" என்று பொற்கொடி விசாரித்தாள்.

"என் கப்பல்தான்! தேன் குடித்த குரங்கை தேளும் கொட்டியதுபோல, அத்தை இப்பொழுது திரும்பிவரப் போகிறார்கள்" என்று லெட்சுமி பயத்துடன் சொன்னாள்.

"வரட்டுமே!" பொற்கொடி அலட்சியமாகக் கூறினாள்.

"வந்து 'வைரத்தோடு எங்கே?' என்று கேட்டால் நான் என்ன சொல்லுவேன்?"

"வீணாக ஏன் அக்கா பயப்படுகிறீர்கள்? நான் இல்லையா? நான் தருகிறேன் ஒரு வைரத்தோடு."

"பொற்கொடி! நல்ல உள்ளத்தை தங்க மனம் என்பார்கள். உனக்கோ வைர மனம். அதற்காக நான் ஆயிரம் முறை நன்றி சொல்லுகிறேன். ஆனால், என் மனம் அவ்வளவு தாழ்ந்துவிடக்கூடாது அல்லவா?"

"ஓகோ! ஏற்பது இகழ்ச்சி என்று எண்ணுகிறீர்களா?"

லெட்சுமி தலை குனிந்தாள்.

"அக்கா! உங்கள் மகிழ்ச்சிக்காக நான் செய்யும் சிறு உதவி இது. இதனாலேயே நான் பெரியவர் ஆகிவிட மாட்டேன். ஏனென்றால், நான் உங்களுக்கு இடவில்லை, உதவி செய்கிறேன். உதவியை ஏற்றுக் கொள்வது இகழ்ச்சி ஆகாது."

"பொற்கொடி, நீ படித்தவள். உன்னோடு பேச என்னால் ஆகாது. ஆனால், என் மனம் என்னவோ உன் உதவியை ஏற்க ஒப்புக்கொள்ள மறுக்கிறது."

"அக்கா! வெள்ளம் தலைக்குமேல் போய்விட்டது. இனி பேசாமல் இருங்கள்."

"லெட்சுமி! வைரத் தோட்டை நாம் வைத்துக் கொள்ளவா போகிறோம்? பொற்கொடியிடம் திருப்பிக் கொடுத்து விட வேண்டியதுதானே" என்றான், கண்ணன்.

"அம்மா கேட்டால் என்ன செய்வது?" என்றாள் லெட்சுமி.

"அதற்குள் அம்மாவுக்குத் தெரியாமல் நானே உனக்கு ஒரு வைரத்தோடு வாங்கிக் கொடுத்து விடுகிறேன்!" என்றான் கண்ணன்.

இது லெட்சுமி ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

**கா**ர் நின்றது.

டிரைவர் வந்து கதவைத் திறந்து விடும்வரை அங்கமுத்து காத்திருக்கவில்லை. தானே கதவைத் திறந்து கொண்டு கீழே இறங்கினாள். மதயானை போல வீட்டுக்குள் நுழைந்தாள்.

அப்பொழுதுதான் வீடு திரும்பியிருந்த சண்முகம், காப்பி குடித்துக் கொண்டிருந்தார். சுந்தரவடிவு அருகில் நின்று கொண்டு இருந்தார்.

அங்கமுத்து வந்த வேகத்தைப் பார்த்ததும் இருவரும் பேய் அடித்தது போல ஆகிவிட்டார்கள்!



சண்முகத்தின் கையில் இருந்த தம்ளர் "டங்" என்று கீழே விழுந்தது!

தலையில் இருந்த பானை கீழே தவறி விழுந்து தண்ணீர் சிதறுவதுபோல, காப்பி சிதறி அங்கமுத்துவின் சேலையை நனைத்தது!

அதைப் பார்த்த சண்முகம், சும்மா ஆடும் பேய்க்கு வேப்பிலை அடித்ததுபோல ஆயிற்றே என்று அஞ்சி நடுங்கினார்.

ஆனால், அங்கமுத்துவோ, "பரவாயில்லை" என்று சேலையை உதறிக் கொண்டே சிரித்தாள்!

சுந்தரவடிவுக்கு அந்தச் சிரிப்பு கொள்ளிவாய்ப் பிசாசு வாயைப் பிளந்தது போல இருந்தது!

"ஒரு நல்ல செய்தியை உங்களிடம் சொல்லிவிட்டுப் போக வந்தேன்" என்று அங்கமுத்து பரபரப்புடன் சொன்னாள்.

'நல்ல செய்தி' என்றதைக் கேட்ட பின்புதான், சண்முகத்துக்கு நடுக்கம் நின்றது.

ஓடிப்போய் ஒரு நாற்காலியைத் தூக்கி வந்தார். "உட்காருங்கள், அம்மா."

"பரவாயில்லை" என்று சொல்லிக்கொண்டே, அங்கமுத்து அதில் அமர்ந்தாள்.

"சுந்தரவடிவு, ஏன் நிற்கிறாய்? ஓடிப்போய் சம்பந்தி அம்மாவுக்குக் காப்பி கொண்டுவா" என்று சண்முகம் மனைவியை ஏவினார்.

அதற்கும் "பரவாயில்லை" என்றாள் அங்கமுத்து.

'என்ன இன்று ஒரே 'பரவாயில்லை'யாக இருக்கிறது' என்று சண்முகம் அங்கமுத்துவை கூர்ந்து நோக்கினார்.

காப்பி தயாராகக் கலந்து இருந்தது. சுந்தரவடிவு ஓடிச்சென்று ஒரு தம்ளர் காப்பி கொண்டுவந்து கொடுத்தாள்.

அதை ஒரே மடக்கில் குடித்து முடித்த அங்கமுத்து, "பரவாயில்லை. காப்பி நன்றாக இருக்கிறது" என்றாள்.

"மழை வருகிறதா!" என்ற சுந்தரவடிவு வெளியில் எட்டிப் பார்த்தாள்.

அதைப் புரிந்து கொள்ளாத அங்கமுத்து "லெட்சுமி வரவில்லை. நான்தான் வந்திருக்கிறேன். நீங்கள் வந்துதான் லெட்சுமியை அழைத்து வரவேண்டும்" என்றாள்.

ஒன்றும் புரியாமல் சண்முகமும், சுந்தரவடிவும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

அதைக் கவனித்த அங்க்முத்து சிரித்துக் கொண்டாள். "லெட்சுமி முழுகாமல் இருக்கிறாள்" என்று புன்னகைத்தாள்.

சண்முகம் "முருகா" என்று பரவசத்துடன் கைகூப்பினார்.

"குழந்தை உங்கள் வீட்டுக்கு வர ஆசைப்படுகிறாள்" என்றாள் அங்கமுத்து.

அவள் சொல்லி முடிக்குமுன் "யார்? என் பேரக் குழந்தையா!" என்று சண்முகம் ஆசையுடன் வாயைப் பிளந்தார்.

"அசையைப் பார்! நான் குழந்தை லெட்சுமியைச் சொல்கிறேன். வாயும் வயிறுமாக இருக்கும் நேரத்தில், குழந்தைக்கு அம்மா வீட்டுக்கு வரவேண்டும் என்று ஆசையாக இருக்காதா?" என்றாள். அங்கமுத்து.

சம்பந்தி அம்மாவின் சர்க்கரைப் பேச்சைக் கேட்டு, சுந்தரவடிவு வாய் அடைத்து நின்றாள்.

"ஒரு நல்ல நாளாகப் பார்த்து, எங்கள் வீட்டுக்கு வந்து குழந்தையை உங்கள் வீட்டுக்கு அழைத்து வாருங்கள். அதை சொல்லிப்போகத்தான் வந்தேன்" என்று அங்கமுத்து எழுந்தாள்.

சண்முகம் அப்பொழுதே நாள் பார்த்தார். வருகிற "வெள்ளிக்கிழமை நல்ல நாள்தான்."



"வெள்ளிக்கிழமையும் அதுவுமா வீட்டு லெட்சுமியை நான் வெளியில் அனுப்பமாட்டேன்" என்று அங்கமுத்து பிகு பண்ணினாள்.

"ஞாயிற்றுக்கிழமைகூட நல்ல நாள்தான்" என்றார் சண்முகம்!

"உங்கள் வசதிபோல செய்யுங்கள்" என்று சொல்லி விட்டு அங்கமுத்து கிளம்பினாள்.

சண்முகமும் சுந்தரவடிவும் அவளை வழி அனுப்பிவைக்க வாசல்வரை வந்தார்கள்.

காரில் அமர்ந்து கொண்ட, அங்கமுத்து, "குழந்தை வாயும் வயிறுமாக இருக்கிறாள். அவள் வாய்க்கு சுவையாக செய்து கொடுங்கள். ஆசைப்பட்டதை வாங்கித் தாருங்கள். உங்கள் குழந்தைக்கு நீங்கள் செய்யப் போகிறீர்கள். இதெல்லாம் நான் சொல்ல வேண்டுமா என்ன?" என்று சொல்லிக்கொண்டே டிரைவரை நோக்கினாள்.

கார் நகர்ந்தது.

"இந்த அம்மாவுக்கு திடீர் என்ற பைத்தியம் பிடித்து விட்டதா?" என்று சண்முகம் மனைவியை நோக்கினார்.

"பேரன் பிறக்கப் போகிறான் என்ற மகிழ்ச்சி. அதை நினைத்தால், எனக்கேகூட பைத்தியம் பிடித்துவிடும் போல இருக்கிறது!" என்று சுந்தரவடிவு பரவசத்தில் ஆழ்ந்தாள்.

வீடு திரும்பிய அங்கமுத்து, முதல் வேலையாக லெட்சுமியின் அறைக்குள் வந்தாள். அவளது வீட்டுக்குப்போய் வந்த விவரத்தைச் சொன்னாள்.

லெட்சுமி தேள் கொட்டிய திருடன் போல இருந்தாள்!

"அத்தை! லெட்சுமி அக்கா சினிமாப் பார்க்க வேண்டுமாம்."

அங்கேயிருந்த பொற்கொடி, வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல மெல்லச் சொன்னாள்.

"சினிமாவுக்கா? போகலாமே!" என்றாள் அங்கமுத்து. "நாளை போகலாம். இன்று இருட்டிவிட்டது. வாயும் வயிறுமாக இருக்கும் பெண் இருட்டிய பிறகு வெளியில் போகக் கூடாது. காற்று கறுப்பு அடித்துவிடும்."

"இந்தக் காலத்தில் காற்றும் கறுப்பும் ஏது, அத்தை? ஒவ்வொருத்தி சினிமாக் கொட்டகையிலேயே போய் பிள்ளை பெறுகிறாள்" என்றாள். பொற்கொடி.

"அவள் இந்தக் காலத்துப் பெண். ஆனால், நான் அந்தக் காலத்து மனுசி" என்று சொல்லிக் கொண்டே, அங்கமுத்து மடமட என்று கீழே பார்த்தாள்.

"அத்தை எப்பொழுது மனுசி ஆனார்கள்!"

பொற்கொடி வியப்புடன் லெட்சுமியை நோக்கினாள்.

சற்று நேரத்தில் மன்னன் வந்தான்.

பொற்கொடியை அழைத்துக்கொண்டு வெளியில் புறப்பட்டான்.

வைரத்தோடு கதையை வழிநெடுக பொற்கொடி சொல்லிக் கொண்டே வந்தாள்.

அப்பொழுது தற்செயலாக ஒரு சுவரில் எழுதப்பட்டு இருந்த விளம்பரத்தில் அவள் கண்கள் பதிந்தன.

அந்த விளம்பரத்தில் "சுகபேதி அல்வா" என்ற எழுத்துக்கள் சிவப்பு வண்ணத்தில் பெரிதாக எழுதப்பட்டு இருந்தன.

பொற்கொடி எத்தனையோ அல்வாக்களை கேள்விப்பட்டு இருக்கிறாள். ஆனால், இது தெரியாது. "இது என்ன அல்வாங்க?" என்று மன்னனிடம் கேட்டாள்.

அவன் சொன்னான்.

"அப்படியா சங்கதி! அல்வா என்றால் உங்கள் அம்மாவுக்கு கொள்ளை ஆசை ஆயிற்றே! இந்த அல்வா விற்கும் கடைக்கு காரைத் திருப்புங்கள்" என்றாள் பொற்கொடி.



## 36

"டொய்ங்..."

"டொய்ங்..."

"டொய்ங்..."

"டொய்ங்..."

கூம்பிய தாமரை போல கூர் விழிகளை மூடிக்கொண்டு, கட்டிலில் படுத்திருந்த பொற்கொடி, "ஒன்று...இரண்டு..." என்று உள்ளத்துக்குள் எண்ணிக் கொண்டே வந்தாள்.

சுவர்க் கடிகாரம் நாலு முறை அடித்து ஓய்ந்ததும், அவள் கண்களை திறந்தாள்.

அவள் வழக்கமாக மதியச் சாப்பாட்டுக்குப் பின் தூங்குவது வழக்கம். ஆனால், இன்று வலுக்கட்டாயமாகத் தூக்கத்தை விரட்டினாள். முத்துச் சிப்பி போல கண்மூடிக் கிடந்தாள்.

நாலு மணி நல்ல நேரமாக அவளுக்குத் தோன்றியது. எழுந்தாள். முகத்தைக் கழுவி, சிறிது ஒப்பனை செய்து கொண்டாள்.

பிறகு, திருட்டுப் பூனைபோல தனது அறைக்கு வெளியில் எட்டிப் போர்த்துக் கொண்டே வெளியில் வந்தாள்.

அவள் கையில் அல்வாப் பொட்டலம் இருந்தது!

எதிர்த்த அறைக்குள் எட்டிப் பார்த்தாள்.

கொடி ஒன்று தரையில் படர்ந்தது போல லெட்சுமி கட்டிலில் படுத்திருந்தாள். கர்ப்பிணியான அவள் களைப்புடன் உறங்குவது போலக் காணப்பட்டது.

பொற்கொடி ஓசைப்படாமல் கீழே இறங்கி வந்தாள்.

அப்பொழுதுதான் தூங்கி விழித்தது அங்கமுத்து. நீர்யானை போல "ஆ" என்று வாயைப் பிளந்து கொட்டாவி விட்டுக் கொண்டே வந்தாள்.

அவளைப் பார்த்ததும், பொற்கொடி அல்வாப் பொட்டலத்தை மறைத்துக் கொண்டாள்.

மருமகளைப் பார்த்ததும் "பால் கறந்தாயிற்றா?" என்று அங்கமுத்து கேட்டாள்.

"நீங்கள் உட்காருங்கள், அத்தை. இதோ காப்பி கலந்து கொண்டு வருகிறேன்" என்று கூறிவிட்டு, பொற்கொடி அடுப்படிக்கு ஓடினாள்.

அங்கே போனதும் கதவை முக்கால்வாசி சாத்திக் கொண்டாள்.

அல்வாப் பொட்டலத்தைப் பிரித்தாள்.

அந்தப் பெரிய பொட்டலத்துக்குள், பத்து இருபது சிறிய பொட்டலங்கள் இருந்தன!

"இந்த அம்மா ஏன் இத்தனை வாங்குகிறார்கள்?" என்று கடைக்காரனே யோசித்தான்.

ஒவ்வொரு பொட்டலமும் தாளில் சுற்றப்பட்டு இருந்தது.

தாளின் மீது "சுக பேதி அல்வா" என்று அச்சிடப்பட்டு இருந்தது!

பொற்கொடி தாளைப் பிரித்தாள்.

அந்தத் தாள்களை எங்கே போடுவது என்று சுற்று முற்றும் பார்த்தாள்.

அடுப்படியில் ஒரு குப்பைக் கூடை இருந்தது.

அதற்குள் தாள்களைப் போட்டு, கூடையையும் கொஞ்சம் மறைவாக உள்ளே தள்ளி வைத்தாள்.



அல்வாத் துண்டுகளை ஒரு தட்டில் அடுக்கினாள்.

அதைக் கையில் எடுத்துக்கொண்டு, கூடத்துக்கு வந்தாள்.

அவள் கை படபட என்று நடுங்கியது.

மிகவும் சிரமப்பட்டு கைகளை விறைப்பாக வைத்துக் கொண்டாள்.

கூடத்து சோபாவில் அங்கமுத்து அமர்ந்து இருந்தாள்.

"அத்தை அல்வா சாப்பிடுங்கள்."

தட்டை மாமியாரின் முன்னே பொற்கொடி வைத்தாள். அப்பொழுது அவள் முகத்தில் ஓர் அசட்டுச் சிரிப்பு!

"அல்வா" என்றதுமே அங்கமுத்துவின் வாயில் நீர் சொட்டியது!

ஆசையுடன் தட்டைப் பார்த்தாள். "நீ செய்தாயா, கண்ணு?"

"இல்லை, அத்தை, உங்களுக்கு அல்வா என்றால் பிடிக்குமே? அதுதான் கடையில் வாங்கி வந்தேன்."

பொற்கொடிக்கு தொண்டையில் என்னவோ அடைத்தது. செருமிக் கொண்டாள்.

"கடைக்காரனே துண்டு போட்டுக் கொடுத்து விட்டானா?" என்று சொல்லிக்கொண்டே, அங்கமுத்து ஒரு துண்டு அல்வாவை எடுத்து வாயில் போட்டுக் கொண்டாள்.

"அடடா! எவ்வளவு இனிப்பாக இருக்கிறது!"

அங்கமுத்து மென்று கொண்டே மருமகளைப் பார்த்தாள்.

அவளுக்கு வயிற்றைக் கலக்கியது!

"சாப்பிடுங்கள், அத்தை. நான் போய் காப்பி கொண்டு வருகிறேன்" என்று சொல்லிக் கொண்டே மீண்டும் அடுப்படிக்கு ஓடினாள்.

அடுப்படி வாசலில் நின்றபடி திரும்பிப் பார்த்தாள்.

அங்கமுத்து அசை போட்டுக்கொண்டு இருப்பது தெரிந்தது.

பொற்கொடி வெற்றிப் பெருமிதத்துடன் புன்னகைத்தாள்!

ஐந்து ஐந்தரை இருக்கும்.

கயல்விழி கல்லூரியில் இருந்து திரும்பினாள்.

"அண்ணி, காப்பி கொடுங்கள்" என்று அதிகாரம் பண்ணிக் கொண்டே லெட்சுமியிடம் வந்தாள்.

"அடுப்படியில் கலந்து வைத்திருக்கிறேன். போய் ஊற்றிக் குடி" என்றாள், லெட்சுமி.

"நீங்கள்தான் ஊற்றிக் கொடுக்க வேண்டும்" என்று கயல்விழி சிணுங்கினாள்.

"மரியாதையாகப் போய் ஊற்றிக்குடி. இல்லாவிட்டால், நாளையில் இருந்து உனக்கு நீயேதான் காப்பி போட்டுக் கொள்ள வேண்டும்" என்று லெட்சுமி எச்சரித்தாள்.

"அந்தத் தண்டனை மட்டும் வேண்டாம். அண்ணி" என்று சொல்லிக் கொண்டே, கயல்விழி அடுப்படிக்கு துள்ளிக் குதித்து ஓடினாள்.

"மூக்கணாங்கயிறு போடும் வரைதான் இந்தத் துள்ளல் எல்லாம்!" என்று லெட்சுமி சிரித்துக் கொண்டாள்.

கயல்விழி அடுப்படிக்குள் வந்தாள்.

அது அவளுக்கு அறிமுகமான இடமாக இருந்தது. லெட்சுமி கொஞ்சம் கொஞ்சமாக அவளுக்கு அடுப்படியை அறிமுகப்படுத்தி வந்தாள்.

அங்கே ஒரு பானையில் காப்பி இருந்தது.

கயல்விழி ஒரு தம்ளர் எடுத்தாள்.

தம்ளரில் காப்பியை ஊற்றினாள்.

தம்ளரில் பாதியும், தரையில் பாதியுமாகப் காப்பி கொட்டியது.



தரையில் கொட்டிய காப்பி, அவள் தாவணியையும் நனைத்தது.

அடுப்படியில் கிடந்த கை துடைக்கும் துணியை எடுத்து, காப்பியைத் துடைத்தாள்.

அந்தத் துணியைப் போட குப்பைக் கூடையைத் தேடினாள்.

குப்பைக் கூடைக்குள் துணியைப் போடப் போன பொழுது, அதற்குள் கிடந்த தாள்களைப் பார்த்தாள்.

மிட்டாய் சுற்றப்பட்ட தாள்கள் போல இருக்கவே 'யாரோ அடுப்படியில் திருட்டுத்தனமாக மிட்டாய் தின்னுகிறார்கள் போலிருக்கிறது' என்று நினைத்து, இரண்டு மூன்று தாள்களை கையில் எடுத்துப் பார்த்தாள்.

**சுகபேதி அல்வா**

தாளில் இவ்வாறு அச்சிடப்பட்டு இருந்தது.

கயல்விழி திரும்பத் திரும்ப படித்துப் பார்த்தாள்.

அவளுக்கு இது புதிதாகத் தெரிந்தது. முற்றிலுமாகப் புரியவில்லை.

ஆனால், அதற்காக அதிக நேரத்தை செலவிடாமல் தாள்களை மீண்டும் கூடையில் போட்டு விட்டு, காப்பியை கையில் எடுத்துக் கொண்டு வெளியில் வந்தாள்.

காகங்கள் கரைந்து கொண்டு இருந்த அதிகாலை நேரம்.

அங்கமுத்துக்கு அடிவயிற்றைப் புரட்டியது.

புரண்டு புரண்டு படுத்தாள்.

ஆனால், எழாமல் முடியவில்லை. எழுந்து கழிவறைக்கு ஓடினாள்.

அது முதல் கழிவறைக்கு ஓடுவதும், திரும்புவதுமாகத்தான் அவளது காலைப்பொழுது கழிந்தது.

முதலில் கீழே வந்த லெட்சுமி, "உடம்பு சரியில்லையா அத்தை?" என்று பரிவுடன் கேட்டாள்.

"இல்லையே நன்றாகத்தானே இருக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே, அங்கமுத்து கழிவறைக்கு ஓடினாள்.

ஆனால், வெகு நேரம் மறைக்க முடியவில்லை. லெட்சுமி போய் கண்ணனை கூட்டி வந்தாள். சுப்பிரமணியம் தானாகவே எழுந்து வந்தார். மன்னனும், பொற்கொடியும் அறைக்குள் அடைபட்டுக் கிடந்தார்கள். லெட்சுமி போய் அவர்களை இழுத்து வந்தாள்.

பொற்கொடி வந்ததும் வராததுமாக, "காலராவோ என்னவோ" என்று பேதிக்குக் கொடுத்தாள்.

"உடனே காலரா ஆஸ்பத்திரியில் கொண்டு போய் சேர்க்க வேண்டும்" என்றான், மன்னன்.

"அதெல்லாம் வேண்டாம் டாக்டருக்கு 'போன்' செய்யுங்கள்" என்றாள், லெட்சுமி.

"டாக்டர் வந்து என்ன செய்யப் போகிறார்?" என்று பொற்கொடி தடுத்தாள்.

இதற்குள் அங்கமுத்து அயர்ந்து அரை ஆளாகி சோபாவில் படுத்துவிட்டாள்.

"நீங்களாவது டாக்டருக்கு 'போன்' செய்யுங்கள்" என்று லெட்சுமி கணவனை விரட்டினாள்.

அப்பொழுது கயல்விழி "அண்ணி காப்பி" என்று கண்களை கசிக்கிக் கொண்டு படுக்கையில் இருந்து எழுந்து வந்தாள்.

"டாக்டர்" என்ற சொல் காதில் விழுந்ததும், "யாருக்கு அண்ணி உடம்பு சரியில்லை?" என்று கேட்டாள்.

"அம்மாவுக்குத்தான். காலையில் இருந்து ஒரே பேதியாக ஆகிறது" என்று லெட்சுமி தெரிவித்தாள்.



'பேதி' என்றதும், கயல்விழியின் கண்களில் ஒரு மின்வெட்டு!

"சுகபேதியா?" என்று அப்பாவியாகக் கேட்டாள்.

"என்ன சொல்லுகிறாய், கயல்விழி?" லெட்சுமி குழப்பத்துடன் கேட்டாள்.

"அண்ணி, நேற்று அம்மா நமக்கு எல்லாம் தெரியாமல் அடுப்படியில் போய் ஒளிந்து கொண்டு சுகபேதி அல்வா சாப்பிட்டு இருக்கிறார்கள்." என்று, பெரிய இரகசியத்தைப் போட்டு உடைப்பது போல, கயல்விழி சொன்னாள்.

மாமியரை திரும்பிப் பார்த்த லெட்சுமி, மீண்டும் கயல் விழியின் பக்கம் திரும்பினாள். "அது எப்படி உனக்குத் தெரியும்?"

"இருங்கள்" என்று சொல்லிவிட்டு கயல்விழி அடுப்படிக்குப் போனாள்.

"சுகபேதி அல்வா" என்ற தாள்களுடன் திரும்ப வந்தாள்.

அதைப் பார்த்ததும், லெட்சுமிக்கு ஒரே ஆச்சரியம், பரிதாபத்துடன் மாமியாரை நோக்கினாள். "அத்தை! உங்கள் அல்வா ஆசையில் எந்த அல்வாவை வாங்கித் தின்று இருக்கிறீர்கள்? அதுதான் வயிறு இப்படிப் போகிறது" என்று பரிதாபமாகச் சொன்னாள்.

அதைக் கேட்டதும், அங்கமுத்துக்கு இரத்தம் கொதித்தது. ஆனால் பேச முடியவில்லை. அவ்வளவு களைப்பு. பொற்கொடியை ஏறிட்டுப் பார்த்தாள். அது நெற்றிக் கண் பார்வையாக இருந்தது.

அதைக் கவனித்த லெட்சுமி, பொற்கொடியின் பக்கம் திரும்பினாள்.

உடனே பொற்கொடி நழுவப் பார்த்தாள்.

ஆனால், லெட்சுமி பிடித்துக் கொண்டாள்.

"பொற்கொடி, என்ன இது?" என்று அதட்டலாகக் கேட்டாள்.

பொற்கொடி பதில் சொல்லாமல், விறைத்துக்கொண்டு நின்றாள்.

"பொற்கொடி! அத்தை வயதானவர்கள். அவர்கள் இப்படி பேதிக்கு சாப்பிட்டால் உடம்பு தாங்குமா? வெயிலில் வெட்டிப்போட்ட வெற்றிலைக் கொடிபோல அவர்கள் விழுந்து கிடப்பதைப்பார்" என்று உருக்கமாக உரைத்தாள். அவள் கண்கள் கலங்கின.

இவளுக்கு என்ன? என்பதுபோல பொற்கொடி முணு முணுத்துக் கொண்டு நின்றாள்.

"பொற்கொடியின் உள்ளம் விளையாட்டுத்தனமாக ஏதோ செய்கிறாய் என்று நினைத்தேன். ஆனால், எல்லாம் வினயமாக இருக்கிறது. இனியும் இதை நான் அனுமதிக்க முடியாது." என்று லெட்சுமி கண்டித்தாள்.

"இதற்காக அத்தையிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள் இனிமேல் இப்படி செய்ய மாட்டேன் என்று கன்னத்தில் போட்டுக்கொள்."

சிறுபிள்ளையிடம் சொல்லுவதுபோல, லெட்சுமி கூறினாள்.

பொற்கொடியோ நகத்தைக் கடித்துக் கொண்டு மரம் போல நின்றாள்.

மன்னன் தலை குனிந்தபடி லெட்சுமியின் முன்னே வந்து நின்றான்.

"அண்ணி அவள் சார்பில் நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்தக் குற்றத்துக்கு நானும் உடந்தை தான். என்னையும் மன்னித்துவிடுங்கள்."

அவன் குரல் மென்மையாக ஒலித்தது!



'அவமானம்! அவமானம்!'

பொற்கொடியின் உள்ளம் கொதித்தது!

ஆவேசத்துடன் அதரங்களைக் கடித்துக் கொண்டாள்!

சுட்டு எரித்துவிடுவது போல மன்னனை நோக்கினாள்.

அந்தப் பார்வை அடுத்த புயலுக்கு அறிகுறிபோல அவ்வளவு பயங்கரமாக இருந்தது!

## 37

பம்பரமாகச் சுழன்றாள் பொற்கொடி!

பரபர என்று துணிமணிகளை அள்ளி பெட்டிக்குள் திணித்தாள்!

அடிபட்ட பாம்பு போல அவள் காணப்பட்டாள்.

மன்னன் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு மரம் போல நின்று கொண்டு இருந்தான்.

"படார்" என்று பெட்டியைப் பூட்டிய பொற்கொடி, தானே அதைக் கையில் தூக்கிக் கொண்டு, மன்னனிடம் வந்தாள்.

"என் பின்னே வாருங்கள்" என்று அவனுக்குக் கட்டளையிட்டு விட்டு, வேகமாக முன்னே நடந்தாள்.

"எங்கே?" மன்னன் அமைதியாகக் கேட்டான்.

"காட்டுக்கு அல்ல, எங்கள் வீட்டுக்கு" அவனை திரும்பிப் பார்க்காமலே பொற்கொடி சொன்னாள்.

மன்னன் சிரித்தான்.

பொற்கொடிக்கு முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. "என் உடம்பே பற்றி எரிகிறது. உங்களுக்கு சிரிப்பு வருகிறதா?"

"காலம் எவ்வளவு மாறிவிட்டது என்பதை எண்ணினேன். சிரிப்பு வந்து விட்டது" என்றான், மன்னன்.

அவனே தொடர்ந்து. "கோவலன் பின்னே கண்ணகி சென்றாள். ராமன் பின்னே சீதை போனாள். இப்பொழுது மனைவியின் பின்னே கணவன் போக வேண்டியிருக்கிறது!" என்று மீண்டும் சிரித்தான்.

"கோவலன் கொலையுண்டான். ராமன் மனைவியை இழந்தான். சீதையின் பின்னே போயிருந்தால், அழகாக மிதுலாபுரி அரண்மனையில் இருந்திருக்கலாமே" என்று பொற்கொடி வேகமாகக் கூறினாள்.

"அதாவது, இப்பொழுது உன் வீட்டுக்குப் புறப்பட்டு விட்டாய்?" மன்னன் கேட்டான்.

"ஆமாம். இனிமேலும் இந்த நரகத்தில் இருக்க என்னால் முடியாது."

"நான் இருக்கும் இடம் உனக்கு அதற்குள் நரகம் ஆகி விட்டதா?"

"இதோ பாருங்கள். பிரச்னையை மாற்றாதீர்கள்?!"

பொற்கொடி பெட்டியைக் கீழே வைத்துவிட்டு, சேலையை வரிந்து கட்டிக்கொண்டு அவனுடன் சண்டைக்கு வந்தாள்.

"நான் அவமானப்பட்டால் சகித்துக் கொள்ளேன். ஆனால், நீங்கள் அவமானப்படுவதை என்னால் தாங்கிக் கொள்ளவே முடியாது" என்று கூறினாள்.

"நான் என்ன அவமானப்பட்டேன்?" மன்னன் சாதாரணமாகச் சொன்னான்.



"ஒரு பெண் பிள்ளையிடம் மன்னிப்புக் கேட்டீர்களே; அதைவிட வேறு என்ன அவமானம் வேண்டும்?" பொற்கொடி கொதித்தாள்.

"யாரிடம் மன்னிப்புக் கேட்டேன்? அண்ணியிடம் தானே!"

"உங்களுக்கு அண்ணியாக இருக்கலாம். ஆனால், எனக்கு... அவளும் என்னைப்போல இந்த வீட்டுக்கு வந்த ஒரு மகள் தானே! அவளிடமா நீங்கள் மன்னிப்புக் கேட்பது? அப்பொழுது என் இதயமே வெடித்துவிட்டது!"

"அண்ணியை அன்னைக்கு சமமாக நினைப்பவன் நான்."

"சே! அவளா அன்னை! நன்றி கெட்டவள்! அவளுக்காக நான் என்னவெல்லாம் செய்கிறேன். கொஞ்சமாவது நன்றியிருக்கிறதா? கடைசியில் என்னையே கடித்துக் குதறுகிறாள்!"

"பொற்கொடி! ஆத்திரத்தில் சொற்களை அளந்து பேசத் தவறுகிறாய்."

"சரி, சரி. யாரோ எக்கேடோ கெட்டுப் போகட்டும். எனக்கு என்ன தலையெழுத்து."

"அம்மாவைத் திருத்துவதற்குப் பதில், அம்மாவுக்குத் தண்டனை கொடுக்கிறாய். இதுதான் அண்ணிக்குப் பிடிக்கவில்லை."

"அந்தப் பேச்சைத்தான் விடுங்கள் என்று சொல்லிவிட்டேனே வாருங்கள் போவோம்."

"எங்கே?"

"எங்கேயோ போவோம். ஆனால், இங்கே இருக்க முடியாது. இங்கே தலைநிமிர்ந்து யாரையும் பார்க்க என்னால் முடியாது."

"அண்ணனே தனிக் குடித்தனம் போகவில்லை. நாம் போக முடியுமா?"

"அவர் வெறும் களிமண். அதற்காக நாமும் இந்த நரகத்திலேயே இருக்க வேண்டுமா? நீங்கள் வேண்டுமானால் இருங்கள். நான் வருகிறேன்."

பொற்கொடி பெட்டியைத் தூக்கிக் கொண்டு கிளம்பினாள்.

மன்னன் கையை நீட்டி அவளை வழி மறித்தான்.

பொற்கொடி மிகவும் சூடாக இருந்தாள்.

தான் செய்தது தவறு என்று அவள் உணரவே இல்லை.

லெட்சுமி மீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

லெட்சுமியிடம் மன்னன் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதை பெருத்த அவமானமாகக் கருதினாள்.

தேன் குடித்த குரங்கை தேள் கொட்டியது போல ஆனாள்!

இந்த வீட்டில் இனி ஒரு கணமும் இருப்பது இல்லை என்று அப்பொழுது அவள் தீர்மானித்து விட்டாள்.

"பொற்கொடி! பெட்டியை இப்படிக் கொடு."

அவள் கையில் இருந்த பெட்டியை மன்னன் பறித்தான்.

"எதற்கு?" அவள் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

"கொடுக்கிறாயா, இல்லையா?"

அவன் முடிவாகக் கேட்டான்.

"முடியாது."

அவள் பிடிவாதமாகச் சொன்னாள்.

அவ்வளவுதான். மன்னன் 'குபீர்' என்று அவளை "அலேக்" செய்தான்!

அப்படியே தூக்கிச் சென்று கட்டிலில் "தொப்" என்று அவளைப் போட்டான்.



அவள் பக்கத்தில் தானும் படுத்துக் கொண்டான்.

"என்ன இதெல்லாம்?"

அவள் முறைத்தாள்.

"அன்பே!"

அவன் அவள் கன்னத்தைத் தடவினான்.

"ஐஸ் வைக்கிறீர்களா!"

அவன் கையை அவள் தட்டிவிட்டாள்.

"பொற்கொடி! கோபத்தில் தான் உன் அழகு முழுமையாக இருக்கிறது!"

"இதற்கெல்லாம் நான் மயங்கி விடமாட்டேன்."

"ஒரு பாட்டில் விஸ்கி கொடுத்தால்தான் மயங்குவாயா இனி கிடைக்காதே! மதுவிலக்கு வந்து விட்டதே."

"இது விளையாடுகிற நேரம் அல்ல. நான் ஒரு முடிவோடு தான் பேசுகிறேன்."

"பொற்கொடி! உன்னை விட்டுவிட்டு ஒரு நாளாவது என்னால் இருக்க முடியுமா? தரையில் விழுந்த மீன்போல் தத்தளித்துப் போய் விடமாட்டேனா?"

"நான் மட்டும் என்னவாம்? உங்களைப் பிரிந்து இருப்பேனா? அதனால்தான் என்னுடன் வாருங்கள் என்கிறேன்."

"உனக்கு தனிக் குடித்தனம் போக வேண்டும். அவ்வளவு தானே?"

"ஆமாம்."

"உன் விருப்பப்படியே தனிக் கட்சி தொடங்குவோம்! கருத்து வேற்றுமைகள் வந்த பின்பு, ஒன்றாக இருக்க முடியாது. ஆனால், சண்டை போட்டுக் கொண்டு போனால் நன்றாக

இருக்காது. இரண்டு நாள் பொறு. அண்ணி அவர்கள் வீட்டுக்குப் போகப் போகிறார்கள். அதன்பின் நாம் தனிக் குடித்தனம் போவோம்."

"உண்மையாகவா சொல்லுகிறீர்கள்?"

பொற்கொடி அவனை கட்டிப் பிடித்துக் கொண்டாள்.

"உண்மைதான். ஒரே வீட்டுக்குள் சண்டை போட்டுக் கொண்டு இருப்பதைவிட. இரண்டு வீட்டில் சமாதானமாக வாழ்வது நல்லது."

மன்னனின் இதமான பேச்சு பொற்கொடிக்கு ஆறுதலை அளித்தது. அவளது கோபம் தணிந்தது.

"உங்களிடம் கூட அளவுக்கு மீறிப் பேசிவிட்டேன். மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று குழைவாகக் கூறினாள்.

"மன்னிப்புக் கேட்பது தவறு அல்ல. தேங்க்ஸ், ப்ளீஸ், எக்கியூஸ்மி என்ற மூன்று சொற்களையும் தாராளமாகப் பயன்படுத்த ஆங்கிலேயர் தயங்குவதே இல்லை."

"சரி. வேறு ஏதாவது பேசுங்கள். வெளியில் போவோமா?"

"எங்கே?"

"பாபி பார்த்துவிட்டு வருவோம்."

"சரி. முன்பெல்லாம் தலைவலி வந்தால் காபி. இப்பொழுது பாபி."

மன்னன் சிரித்தான்.

பொற்கொடி உல்லாசத்துடன் உடை மாற்றிக் கொள்ள எழுந்து சென்றாள்.

**ம**றுநாள் மாலை.

"அம்மா... அம்மா..." என்று கூவிக்கொண்டே அலுவலகத்தில் இருந்து மன்னன் திரும்பினான்.



அவன் கையில் அல்வா பொட்டலம்!

"அம்மா! அசல் திருநெல்வேலி அல்வா! ஒரு கிலோ வாங்கி வந்தேன்" என்று அம்மாவின் கையில் கொடுத்தான்.

அல்வா என்றதுமே அங்கமுத்துக்கு வாயில் நீர் ஊறியது!

ஆசையுடன் பொட்டலத்தைக் கையில் எடுத்தாள். சட்டென்று கீழே வைத்தாள்! சூடுபட்ட பூனை ஆயிற்றே!

"அசல் அல்வா அம்மா. பாருங்களேன்."

மன்னன் பொட்டலத்தை அவிழ்த்துக் காட்டினான்.

கோதுமை அல்வா. கமகமத்த மணம் மூக்கைத் துளைத்தது.

அங்கமுத்து அப்பொழுதும் அச்சம் தீராமல். ஒரு துண்டு பிய்த்து வாயில் போட்டு மென்றாள்.

சுவை பிரமாதமாக இருந்தது!

உடனே அல்வா முழுவதையும் வேகமாகத் தின்னத் தொடங்கினாள்.

மன்னன் சிரித்துக்கொண்டு மாடிக்குச் சென்றான்.

"கழுவாய் தேடுகிறீர்களா?" என்றபடி பொற்கொடி அவனை வரவேற்றாள்.

"அம்மா நேற்று மிகவும் ஏமாந்து விட்டார்களே" என்று கூறிக் கொண்டே மன்னன் உடை மாற்றத் தொடங்கினான்.

அங்கமுத்துக்கு நேற்று ஏற்பட்ட ஏமாற்றத்தை சரிக் கட்டத்தான் மன்னன் இன்று ஒரு கிலோ அல்வா வாங்கி வந்து கொடுத்தான்.

ஆனால். அது வேறு விதமாகி விட்டது.

அங்கமுத்து அல்வாவை சாப்பிட்டு முடித்து அரைமணி நேரம் ஆகியிருக்கும்.

திடீர் என்று தலையை சுழற்றியது மயக்கம் வந்தது.

கிணற்றுக்குள் வீழ்ந்து விட்டது போல, "அய்யய்யோ!" என்று கூச்சல் போட்டாள்.

மாடியில் இருந்த லெட்சுமி-கண்ணன், மன்னன்-பொற்கொடி, பக்கத்து அறையில் இருந்த கயல்விழி எல்லோரும் ஓடி வந்தார்கள்.

கண்கள் சொருக, கைகள் தொங்க தள்ளாடிக் கொண்டு இருந்த மாமியாரை லெட்சுமி தாங்கிப் பிடித்தாள். "அத்தை...அத்தை...உங்களுக்கு என்ன செய்கிறது?"

"தலை சுற்றுகிறது...மயக்கம் வருகிறது" என்ற அங்கமுத்து தன்முன் நின்ற மன்னனைத்தான் பார்த்தாள்.

"அடப்பாவி! நேற்று உன் பெண்டாட்டி அல்வா என்று எனக்கு பேதி மருந்தை கொடுத்தாள். இன்று நீ என்னைக் கொல்லவே மருந்து வைத்து விட்டாயா?"

புலம்பிக் கொண்டே, அங்கமுத்து கீழே சாய்ந்தாள்!

## 38

மன்னன் திடுக்கிட்டான்!

"அம்மா!" என்று கூவிக் கொண்டே அங்கமுத்துவிடம் ஓடினான்.

அதற்குள் பேச்சு இழந்தாள். மயக்கம் என்னும் ஆழ்கடலில் மூழ்கினாள்.

லெட்சுமி மன்னனை கூர்ந்து நோக்கினாள்!

மன்னனுக்கு அதன் பொருள் புரிந்தது.

"அண்ணி! நான் அப்படிச் செய்வேனா?"



பரிதாபமாகச் சொன்னான்.

"செய்ய மாட்டீர்கள் என்று நம்புகிறனே, தம்பி."

லெட்சுமி அமைதியாகச் சொன்னாள்.

பொற்கொடிக்கு ஒரே குழப்பம். மாமியார் மண்டையைப் போட்டு விட்டார்களோ என்று எண்ணினாள். "அக்கா, அத்தைக்கு என்ன செய்கிறது?" என்று லெட்சுமியிடம் அச்சத்துடன் கேட்டாள்.

சற்று முன்வரை நன்றாக இருந்த அங்கமுத்து, திடீர் என்று இப்படி மயங்கி விழுந்து விட்டதால் லெட்சுமிக்கும் ஒன்றும் புரியவில்லை. என்றாள்.

"எனக்குத் தெரியும்! எனக்குத் தெரியும்!" என்று குழந்தை போல, கயல்விழி குதித்தாள்.

எல்லோரும் வியப்புடன் அவளது பக்கம் திரும்பினார்கள்.

"கயல்விழி! அம்மாவுக்கு என்ன? சொல்லேன்!"

பொற்கொடி தயவாகக் கேட்டாள்.

கயல்விழி களிப்புடன் கூறினாள்: "அம்மாவுக்குக் குழந்தை பிறக்கப் போகிறது!"

"என்னடி உளறுகிறாய்?" லெட்சுமி சீறினாள்.

"அன்றைக்கு அண்ணிக்கு தலை சுற்றியது...மயக்கம் வந்தது. டாக்டர் வந்து பார்த்துவிட்டு, அண்ணிக்கும் குழந்தை பிறக்கப் போகிறது என்று சொன்னாரே. இன்று அம்மாவுக்கும் தலை சுற்றல்...மயக்கம்..."

கயல்விழி மிகவும் உற்சாகமாக உரைத்தாள்!

அதைக் கேட்க பொற்கொடிக்கு சுவையாக இருந்தது. கைகொட்டி, விழுந்து விழுந்து சிரித்தாள்.

லெட்சுமிக்கோ கோபம் பொங்கியது. "போடி உள்ளே! வந்து விட்டாள் பெரிய மனுசி" என்று கயல்விழியை விரட்டினாள்.

தான் என்ன தவறு செய்துவிட்டோம் என்பது கயல் விழிக்குப் புரியவில்லை. லெட்சுமியை பரிதாபமாகப் பார்த்துக் கொண்டே தனது அறைக்கு நகர்ந்தாள்.

"டாக்டருக்கு போன் பண்ணுங்கள், தம்பி" என்று லெட்சுமி அவசரப்படுத்தினாள்.

மன்னன் போனை நோக்கிச் சென்றான்.

டாக்டர் வந்து சோதித்துப் பார்த்து சொன்ன பின்புதான் அங்கமுத்து என்ன என்பது எல்லோருக்கும் தெரிந்தது.

அங்கமுத்துக்கு சர்க்கரை நோய் நீரிழிவு.

அவள் இனி இனிப்பே சாப்பிடக் கூடாது!

சாப்பாட்டில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

காலையில் இரண்டு சப்பாத்தி.

மதியம் ஒரு கவளம் சோறு. நிறைய கீரைகள் வேகவைக்கப்பட்ட-ஆனால், தாளிக்காத காய்கறிகள்.

இரவில் இரண்டு ரொட்டித் துண்டு.

இதுதான் இனி அவளது அன்றாட உணவு.

இனிப்பே கூடாது! காப்பியில்கூட சர்க்கரை போட்டுக் கொள்ளக்கூடாது.

உடம்பைக் குறைக்க வேண்டும்.

இவ்வளவையும் கேட்டபொழுது மற்றவர்களே அங்கமுத்துக்காக பரிதாபப்பட்டார்கள் என்றால், அவள் நிலை எப்படியிருக்கும்!

குடம் குடமாகக் காப்பி குடிப்பவள், அவள்!

கிலோ கிலோவாக அல்வா தின்பவள், அவள்!

வடை பாயசம் சாப்பிடுவதற்காகவே விரதம் இருப்பவள், அவள்!

இரவில் ஒரு சீப்பு மலைப்பழம், அரை டஜன் ஆரஞ்சுப் பழமும் சாப்பிடாவிட்டால், அவளுக்குத் தூக்கம் வராது!



அப்படிப்பட்டவள், பைத்தியக்காரி உப்பில்லாக் கஞ்சியும் ஊறுகாயும் சாப்பிடுவது போல காய்ந்த ரொட்டியும், கருகிய சப்பாத்தியும் சாப்பிட வேண்டுமாம்!

சிற்றானை குட்டி போன்ற அவளது எடையை, சிறு துரும்பாக இளைக்க வைக்க வேண்டுமாம்! அடுக்குமா இந்த அநியாயம்? அல்வாவும் லட்டுமாகத் தின்று வளர்ந்த உடலை அரை வேக்காட்டு காய்கள் தின்று காய்ந்த சருகாக ஆக்க வேண்டுமாமே?

திருநெல்வேலி அல்வாவை-லாலா கடை மிட்டாயை இப்பொழுது நினைத்தாலும் நாவில் நீர் சொட்டுமே! அதையெல்லாம் விட்டு விட்டு, கோதுமைக் கஞ்சியும் கொள்ளைப் புற கீரையும் சாப்பிட வேண்டும் என்றால் முடியுமா?

டாக்டர் வந்ததும் கயல்விழியும் அங்கே வந்தாள். டாக்டர் சொன்னதைக் கேட்கக் கேட்க தான் எவ்வளவு அறியாமையுடன் பேசிவிட்டோம் என்று அவள் வருந்தினாள்.

அங்கமுத்துக்கு டாக்டர் "இன்சுலின்" ஊசி போட்டார்.

அதன்பின் மயக்கம் தெளிந்து எழுந்தாள்.

அவளிடம் இந்த விவரங்களையெல்லாம் டாக்டர் சொன்னார்.

அவளுக்கு மீண்டும் மயக்கம் வரும் போல இருந்தது!

"முடியாது! முடியாது! அல்வா தின்னால் என்னால் இருக்க முடியாது!" என்று கூவிக் கொண்டு அழுதாள்.

"இனிமேல் அல்வா தின்றால், அல்லா என்று போய் விடுவீர்கள்!" என்று டாக்டர் எச்சரித்தார்.

"போகிறேன்! உண்ணாமல் தின்னாமல் ஏன் இருக்க வேண்டும்? விரும்பியதைத் தின்பேன்! விதி வந்தால் சாவேன்!" என்று அங்கமுத்து கர்ச்சித்தாள்.

"பேரனைப் பார்க்க வேண்டாமா?" என்று டாக்டர் சிரித்துக் கொண்டு கேட்டார்.

அங்கமுத்து விழித்தாள்.

அவளால் பதில் சொல்ல முடியவில்லை.

கோவென்று அழ வேண்டும் போல இருந்தது.

கண்களில் நீர் கசிந்தது.

அதைப் பார்த்த டாக்டர் "கவலைப்படாதீர்கள், அம்மா. நாள்தோறும் ஓர் இன்சுலின் ஊசி போட்டுக் கொள்ளுங்கள். கொஞ்ச நாளில் சரியாகிவிடும்" என்றார்.

அவர் "ஊசி" என்றதும், அங்கமுத்துக்கு ஈட்டியால் குத்தியது போல இருந்தது!

சின்னப் பெண்ணாக இருந்தபொழுதே அம்மைப்பால் வைக்க ஆள் வந்தால் அடுப்படியில் ஒளிபவள், அவள்!

"எனக்கு ஊசி வேண்டவே வேண்டாம், டாக்டர்! என் உடலை ஓட்டை ஆக்கிவிடாதீர்கள்" என்று கைகூப்பினாள்.

அப்பொழுது அவளைப் பார்க்க லெட்சுமிக்கு மிகவும் பரிதாபமாக இருந்தது.

"டாக்டர், வெறும் மருந்து, மாத்திரைகள் கொடுத்தால் போதாதா?" என்று அவள் கேட்டாள்.

"இப்பொழுது 'இன்சுலின்' மாத்திரையாகவும் கிடைக்கிறது" என்று டாக்டர் சொன்னார்.

அதற்குள் பொற்கொடி, "ஊசி போட்டால்தானே உடனே குணம் கிடைக்கும், டாக்டர்" என்றாள்.

"ஆமாம்" என்றார், டாக்டர். "ஆனால் மாத்திரைகளை சாப்பிட்டு, உணவிலும் கட்டுப்பாடாக இருந்தால் போதும்."

"மாத்திரைகளே கொடுங்கள், டாக்டர்" என்றாள் லெட்சுமி.

டாக்டர் மாத்திரைகளை எழுதிக் கொடுத்தார்.

அங்கமுத்துக்கு என்னென்ன உணவு-எப்படிக் கொடுக்க வேண்டும் என்ற விவரங்களை லெட்சுமியிடம் டாக்டர் சொன்னார்.



"அம்மா! உங்கள் மருமகள் கொடுப்பதைத்தான் நீங்கள் சாப்பிட வேண்டும். உங்கள் மருமகள் சொற்படிதான் நீங்கள் நடக்க வேண்டும்" என்று அங்கமுத்துவிடம் டாக்டர் சொன்னார்.

என்ன...என்ன...! மருமகள் சொற்படி நடக்க வேண்டுமா? யார், இந்த அங்கமுத்துவா?

அவள் திடுக்கிட்டாள்! சிங்கத்தைப் போல நிமிர்ந்து நோக்கினாள்.

அந்த வீட்டில் புலி போல உலாவிக் கொண்டு இருந்த அங்கமுத்து, ஒரே நாளில் எலி போல ஆகிவிட்டாள்!

அவளை நோயாளி ஆக்கி, பாயாளி ஆக்கிவிட்டார்கள்! "படுக்கையை விட்டு எழுந்திருக்கக் கூடாது" என்றார்கள்.

அங்கமுத்துவைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பை லெட்சுமியே ஏற்றுக் கொண்டாள்.

பிள்ளையுண்டானது முதல் லெட்சுமி மீது அங்கமுத்துக்கு ஓர் இரக்கம் ஏற்பட்டு இருந்தது. ஆனால் இப்பொழுது மீண்டும் எலியும் பூனையும் போல ஆகிவிட்டார்கள்!

லெட்சுமி மிகவும் கண்டிப்பாக இருந்தாள். அங்கமுத்துக்கு காப்பியில் சீனி போடுவது இல்லை. இனிப்பையே அவள் கண்களில் காட்டுவது இல்லை. சாப்பாடும் அளவோடு தான்.

ஆனால், இதெல்லாம் அங்கமுத்துக்கு பிடிக்கவில்லை. புதிதாகக் கூண்டில் அடைபட்ட புலிபோல ஆனாள். சாப்பிடுவதற்கு ஒரே ஆர்ப்பாட்டம்! ரகளை! "அதைக் கொண்டு வா! இதைக் கொண்டு வா!" என்று அதிகாரம் பண்ணினாள். "இது வேண்டாம்" என்று தரையில் கொட்டினாள்.

இந்த ஒரு விஷயத்தில் மட்டும் அவளது உறுமல்களுக்கு லெட்சுமி அஞ்சவில்லை மிகவும் பிடிவாதமாக "இதைத்தான் சாப்பிட வேண்டும்" என்று கண்டிப்புடன் சொன்னாள்.

"சரி, நான் சாப்பிடுகிறேன். நீ போ" என்பாள், அங்கமுத்து. ஆனால், லெட்சுமி போகமாட்டாள். அங்கமுத்துவே

அடுப்படிக்குப் போய், கண்டதையும் அள்ளிப் போட்டுக் கொண்டு தின்பாள் என்பது அவளுக்குத் தெரியாதா? அப்படியும் ஒரு தரம் நடந்து, அங்கமுத்துவை லெட்சுமி கையும் களவுமாகப் பிடித்து, அது ஒரு பெரிய சண்டையாகிவிட்டது. "நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக" அந்த வீட்டில் ஏதாவது சண்டை நடந்து கொண்டே இருந்தது!

சண்டை சண்டையாக இருக்க லெட்சுமி தாய் வீட்டுக்குப் போக வேண்டிய வெள்ளிக்கிழமையும் வந்து விட்டது.

"அத்தையை இந்த நிலையில் விட்டு விட்டு நான் போக மாட்டேன்" என்றாள், அவள்.

"நான் பார்த்துக் கொள்ள மாட்டேனா?" என்றாள், பொற்கொடி.

கண்ணனும் அவளை ஆதரித்தான். "நீ எவ்வளவு நாளாக ஆசைப்பட்டாய். அம்மா வீட்டுக்கு போகத்தான் வேண்டும்" என்றான்.

ஆனால், பொற்கொடிமீது லெட்சுமிக்கு நம்பிக்கையில்லை. அவளால் அங்கமுத்துவை பொறுப்பாகக் கவனித்துக்கொள்ள முடியாது என்று நினைத்தாள்.

மாலைப் பொழுது வந்தது. இன்னும் சற்று நேரத்தில் லெட்சுமியை அழைத்துச் செல்ல அவள் பெற்றோர்கள் வருவார்கள். அவள் வேண்டா வெறுப்பாக பெட்டியில் துணிகளை அடுக்கிக் கொண்டு இருந்தாள்.

திடீர் என்று நினைவு வந்தவளாக, கீழே இறங்கி வந்து, அங்கமுத்துக்குக் காப்பி கொண்டுபோய்க் கொடுத்தாள்.

"லெட்சுமி கண்ணு! ஒரே ஒரு கரண்டி சீனி" என்று அங்கமுத்துக்கு கெஞ்சலாகக் கேட்டாள்.

"அத்தைக் கண்ணு! அதுமட்டும் கிடையாது" என்று லெட்சுமி சிரித்தாள்.



சும்மாவே எரிந்து கொண்டு இருந்த அங்கமுத்து, அந்த சிரிப்பினால், எரிகிற தீயில் எண்ணெய் வார்த்தது போல ஆனாள்!

"நான் ஆசைப்பட்டதைத் தின்றுவிட்டு, நாளையே சாகிறேன்! உனக்கு என்னடி?" என்று சீறினாள்.

அதைக் கேட்டு, லெட்சுமி கோபப்படவில்லை. "நீங்கள் எங்கள் கண்கண்ட தெய்வம். பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு வாழ வேண்டும்" என்று பத்தியுடன் ஒரு கும்பிடு போட்டுவிட்டு, மீண்டும் மாடிப்படிகளை நோக்கிச் சென்றாள்.

அங்கமுத்துக்கு வந்த கோபத்தில், பல்லைக் கடித்துக் கொண்டு கல்லாக இருந்தாள்.

அப்பொழுது பொற்கொடி காப்பியை பருகிக்கொண்டே அந்த வழியாக வந்தாள்.

காப்பி தம்ளரும கையுமாக இருந்த அங்கமுத்துவைப் பார்த்ததும், "என்ன, அத்தை? காப்பி குடிக்கவில்லையா?" என்று கேட்டாள்.

"காப்பி ஒரே கசப்பு. கொஞ்சம் சீனி கொண்டு வாயேன். என் வைரம் அல்லவா?" பல்லைக் காட்டி வைரம் கலந்தாள்.

"சீனியா..." பொற்கொடி சிறிது திகைத்தாள் பிறகு. "இதோ கொண்டு வருகிறேன், அத்தை" என்று அடுப்படிக்குப் போனாள்.

அங்கேயிருந்து சீனி பாட்டிலுடன் திரும்பி வந்தாள்.

அங்கமுத்துவின் தம்ளரில் நாலு கரண்டி சீனி போட்டு, "போதுமா, அத்தை?" என்ற கேட்டாள்.

"இன்னும் கொஞ்சம்... என் கண்ணு...என் வைரம்..." என்று அங்கமுத்து பல்லைக் காட்டி கெஞ்சினாள்.

கொஞ்சம் கொஞ்சம் என்று பாட்டில் முழுவதையுமே தம்ளரில் கொட்டிவிட்டாள்!

மாடிப்படிகளைப் பார்த்துக்கொண்டே, "அந்தப் பேய் வந்துவிடும். போ போ!" என்ற பொற்கொடியை விரட்டிய அங்கமுத்து, "கடகட" என்று காப்பியைக் குடித்தாள்!

அவள் முகம் எங்கும் ஒரே மகிழ்ச்சி!

கயல்விழி கல்லூரியில் இருந்து திரும்பினாள்!

வீட்டுக்குள் நுழைந்ததும், செத்த பிணம் போல காலை கையை பரப்பிக்கொண்டு கிடந்த அம்மாவைத்தான் பார்த்தாள்!

பார்த்ததும், "அண்ணீ!" என்று அலறினாள்!

## 39

கயல்விழி போட்ட கூச்சலில் வீடே கிடுகிடுத்தது!

மாடியில் இருந்து லெட்சுமி ஓடி வந்தாள்.

தனது அறையில் தலைவாரிக் கொண்டு இருந்த பொற்கொடி கூட என்னவோ ஏதோ என்று ஓடி வந்து பார்த்தாள்!

அங்கமுத்து பேச்சு மூச்சு இல்லாமல் கிடந்தாள்.

"அத்தை" என்று லெட்சுமி பதறினாள். அவளுக்குக் காலும் ஓடவில்லை. கையும் ஓடவில்லை.

"அம்மா செத்துப் போய் விட்டார்களா அண்ணி?"

கயல்விழி பயத்துடன் கேட்டாள்.

"அப்படியெல்லாம் சொல்லாதேம்மா" என்ற லெட்சுமி அங்கமுத்துக்கு மூச்சு இருக்கிறதா என்று பார்த்தாள்.

மூச்சு இருந்தது.

அதன் பின் தான் லெட்சுமியின் மூச்சு சீர்பட்டது.



"வெறும் மயக்கந்தான்" என்றவள், பொற்கொடியின் பக்கம் திரும்பினாள். "பொற்கொடி டாக்டருக்கு 'போன்' பண்ணு."

பொற்கொடி பேயடித்தவள் போல நின்றாள். தான் சர்க்கரை அள்ளிப் போட்டதில் தான் மாமியார் வாயைப் பிளந்து விட்டாரோ என்று அஞ்சினாள். தேள் கொட்டிய திருடன் போல ஆனாள். "மூச்சு இருக்கிறது" என்று லெட்சுமி சொன்ன பிறகு தான் பொற்கொடிக்கு மூச்சு திரும்பியது.

அவள் விரைந்து சென்று டாக்டருக்கு "போன்" செய்தாள்.

அதற்குள் லெட்சுமி "கயல்விழி! அப்பாவுக்கு 'போன்' செய். அண்ணனுக்கு போன் செய். எல்லோரையும் உடனே வரச்சொல்" என்று கயல்விழியை ஏவினாள்.

"சரி," என்று அவள் ஓடினாள்.

பொற்கொடி போனை வைத்ததும் கயல்விழி கையில் எடுத்தாள்.

சற்று நேரத்தில் வரிசை வரிசையாகக் கார்கள் வந்து நின்றன.

டாக்டர், சுப்பிரமணியம், கண்ணன், மன்னன் எல்லோரும் வந்தார்கள்.

அங்கமுத்துவை டாக்டர் சோதித்தார். ஊசி ஒன்று செலுத்தினார்.

"என்னம்மா நடந்தது?" என்று மகளிடம் சுப்பிரமணியம் கேட்டார்.

"அப்பா, போன ஆண்டு நம் மாடு ஒன்று திடீர் என்று செத்துப்போய் விட்டது அல்லவா? மாட்டுக் கொட்டகையிலேயே கால்களை பரப்பிக்கொண்டு கிடந்தது அல்லவா? அதேபோல அம்மா சோபாவில் விழுந்து கிடந்தார்கள். அப்பா" என்றாள் அந்த சிறு பெண். பாவம், அம்மா செத்து விட்டார்கள் என்றே கயல்விழி நினைத்தாள்.

கண்ணன் லெட்சுமியிடம் இரகசியமாகக் கேட்டான். "அத்தைக்கு 'திடீர்' மயக்கம் வந்து விட்டது" என்று அவள் சொன்னாள்.

பொற்கொடியிடம் மன்னன் கேட்டான். அவள் பதில் சொல்லவில்லை.

"பயப்படுவதற்கு ஒன்றும் இல்லை. நீரிழிவு நோயாளிகளுக்கு சில நேரம் இப்படி மயக்கம் வரும். சர்க்கரை இல்லா விட்டாலும் மயக்கம் வரும்; சர்க்கரை அதிகமானாலும் மயக்கம் வரும். ஊசி போட்டு இருக்கிறேன். சரியாகிவிடும்" என்று கூறிய டாக்டர் விடை பெற்றுச் சென்றார்.

அடுத்த பத்து நிமிடத்தில் அங்கமுத்து கண் விழித்துப் பார்த்தாள்.

தன் குடும்பமே தன்னைச் சூழ்ந்து நிற்பதைக் கண்டதும், வைகுண்ட யாத்திரைக்குத் தயாராகி விட்டோமே என்று பயந்து விட்டாள் மிரள மிரள விழித்தாள்.

"அத்தை! இப்பொழுது எப்படியிருக்கிறது?"

லெட்சுமி அவள் அருகில் அமர்ந்து அன்புடன் கேட்டாள்.

"டாக்டர் என்ன சொன்னார்?"

அங்கமுத்து எதிர்க் கேள்வி கேட்டாள்.

"பயப்படுவதற்கு ஒன்றும் இல்லை என்று டாக்டர் சொன்னார்" என்று லெட்சுமி தெரிவித்தாள்.

அதன் பின்தான் அங்கமுத்துக்குப் போன உயிர் திரும்பி வந்தது. முகம் மலர்ந்தது.

மன்னன் அருகில் வந்து "என்னம்மா நடந்தது?" என்று கேட்டான்.

"காப்பிக்கு சர்க்கரை வேண்டும் என்று கேட்டேன். லெட்சுமி கொடுக்க மாட்டேன் என்று சொல்லி விட்டாள். அவளுக்குத்தான் நான் உயிரோடு இருப்பதே பிடிக்க வில்லையே. என்னை பட்டினி போட்டு கொல்லப் பார்க்கிறாள். பொற்கொடி வந்தாள். அவளிடம் சீனி கேட்டேன். அவள் என் வைரம் ஆயிற்றே. 'மாட்டேன்' என்பாளா? சீனி கொடுத்தாள்" என்று அங்கமுத்து கதை கதையாகச் சொன்னாள்.



அதைக் கேட்டதும் லெட்சுமிக்கு ஆத்திரம் பொங்கியது!

"பொற்கொடி! அத்தை சொல்லுவது உண்மைதானா?" என்று அவள் அதட்டலாகக் கேட்டாள்.

"அத்தை ஆசையாகக் கேட்டார்கள். நான் ஒரே ஒரு கரண்டி சீனிதான் கொடுத்தேன்" என்று பொற்கொடி மழுப்பினாள்.

"அவளுக்கு நீ ஏன் பயப்படுகிறாய்? என்று அங்கமுத்து குறுக்கிட்டாள். என் வைரம் எனக்கு ஒரு பாட்டில் சீனி கொடுத்தாள்."

"அடிப் பாவி!" என்று லெட்சுமி கூவினாள்.

"அவளை ஏண்டி பாவி என்கிறாய்? நீதான் படுபாவி! என்னைப் பட்டினி போட்டு கொல்லுகிறாயேடீ. இந்தப் பாவம் உன்னை சும்மா விடுமா?" என்று அங்கமுத்து பொரிந்தாள்.

"அத்தை! உண்மை தெரியாமல் பேசாதீர்கள். சர்க்கரை தின்றால்தான் சட்டென்று போய் விடுவீர்கள். நீங்கள் ஆயிரம் ஆண்டு வாழ வேண்டும். என்பதற்காகத்தான் நான் உங்கள் வாயைக் கட்டுகிறேன்" என்று லெட்சுமி அழமாட்டக் குறையாகக் கூறினாள்.

"இப்போது என்ன நடந்தது பார்த்தீர்களா? சர்க்கரை சேர்த்துக் கொண்டதால் மயங்கி விழுந்தீர்கள்" என்று லெட்சுமி எடுத்துக் காட்டினாள்.

அதன்பின் அங்கமுத்துக்குக் கொஞ்சம் சந்தேகம் ஏற்பட்டது.

"ஏண்டா மன்னா! இவள் சொல்வது உண்மையா?" என்று மகனிடம் கேட்டாள்.

"உண்மைதான் அம்மா" என்றான். மன்னன். "நீங்கள் நினைப்பதுபோல அண்ணி பாவி அல்ல. பாபி!"

பொற்கொடியின் பக்கம் லெட்சுமி திரும்பினாள்.

"பொற்கொடி! அத்தைக்குத்தான் வாயை அடக்க முடியவில்லை. நீ ஏன் சீனி கொடுத்தாய்?" என்று கேட்டாள்.

பொற்கொடி பதில் சொல்லாமல் விறைத்துக் கொண்டு நின்றாள்.

"கொடுத்ததுதான் கொடுத்தாய். ஏன் ஒரு பாட்டில் சீனியைக் கொட்டினாய்? அது ஆபத்து என்பது உனக்குத் தெரியாதா?" லெட்சுமி தொடர்ந்து கேட்டாள்.

பொற்கொடி பொறுமையிழந்து நகத்தைக் கடித்தாள். லெட்சுமியை ஓரக்கண்ணால் பார்த்தாள்.

"அத்தை உயிரோடு இருப்பது உனக்குப் பிடிக்க வில்லையா? அவர்களை திருத்தப் போவதாகத்தான் சொன்னாய். ஆனால், தீர்த்துக் கட்டுவதாகவே முடிவு செய்து விட்டாயா?"

லெட்சுமி அழுத்தமாகக் கேட்டாள்.

"செத்துத் தொலையட்டுமே! என்ன நட்டம் வந்து விடும்!"

பொற்கொடி அப்படிச் சொல்லி வாயை மூடவில்லை அதற்குள்...

"பளார்!"

லெட்சுமியின் கை அவள் கன்னத்தில் பதிந்தது.

பொற்கொடி அடிபட்ட பாம்பாகச் சீறினாள். ஒன்றுக்குப் பத்தாக லெட்சுமியின் கன்னத்தில் திருப்பிக்கொடுத்தாள்! மன்னன் ஓடி வந்து அவளைப் பிடித்துத் தடுத்திருக்காவிட்டால், லெட்சுமியின் கன்னங்கள் பழுத்துப் போயிருக்கும்.

லெட்சுமி வேதனையால் - வெட்கத்தால் தலை குனிந்தாள்.

பொற்கொடி சண்டைக் கோழி போல தலையை சிலிர்த்துக் கொண்டு இருந்தாள்.



"பொற்கொடி! ஆத்திரத்தில் நான் நிதானம் இழந்து விட்டேன். என்னை மன்னித்துக் கொள்."

லெட்சுமி வருத்தத்துடன் மன்னிப்புக் கேட்டாள். அவள் கண்கள் முத்துக்களை உதிர்த்தன.

"நீ நன்றி கெட்ட நாய். உனக்காக நான் இந்த நரகத்தில் கிடந்தேனே. அதற்கு இதுவும் வேண்டும். இன்னமும் வேண்டும்" என்று பொற்கொடி பொருமினாள்.

"காலில் குத்திய முள்ளை எடுப்பதற்குப் பதில், காலையே வெட்டப் பார்க்கிறாயே. அதை எப்படி சகித்துக் கொள்ள முடியும்" என்றாள், லெட்சுமி.

"அண்ணி, நீங்கள் பணக்காரர் வீட்டு நாய் பார்த்திருக்கிறீர்களா?" என்று மன்னன் குறுக்கிட்டான்.

"பணக்காரர் வீட்டு நாய்களுக்கு வால் இருக்காது. ஏன்?" நாய் வாலை நிமிர்த்த முடியாது. உடனே, வாலையே வெட்டி விடுவார்கள்!" என்றான் அவன்.

பொற்கொடி அவனை முறைத்தாள். ஆனால், அவன் அதை கவனிக்கவில்லை.

மன்னன் தொடர்ந்தான். "அம்மா, இப்பொழுது புரிகிறா? சர்க்கரை ஆளைக் கொல்லும்! கசப்பு உடம்பை தேற்றும்" என்று தாயிடம் சொன்னான்.

"நான்... வைரம் என்று வாய் நிறைய அழைத்தேன். கடைசியில், அந்த வைரமே என் வாழ்க்கைக்கு எமனாக வந்து விட்டதா?" என்று அங்கமுத்து புலம்பினாள்.

"வைரத்தில் குணமே அதுதான் அம்மா? உயிரைக் குடிக்க வாழ்க்கையை முடிக்க ஒரு சிறு துண்டு வைரம் போதும். ஆனால், வேம்பு அப்படி அல்ல வாயில் கசந்தாலும், வயிற்றுக்குள் சென்று நல்ல வேலை செய்யும்" என்றான் மன்னன்.

"எல்லோரும் நல்லவர்கள் ஆகிவிட்டார்கள். நான் ஒருத்தி மட்டும் பொல்லாதவள் ஆகிவிட்டேன். " என்று பொற்கொடி கூச்சல் போட்டாள்.

"இனிமேல் கண் இமைக்கும் நேரங்கூட என்னால் இங்கே இருக்க முடியாது. இப்பொழுதே எங்கள் வீட்டுக்குப் போகிறேன்" என்று மாடிப் படிகளை நோக்கி விரைந்தாள்.

அங்கமுத்து ஒன்றும் சொல்லவில்லை.

ஆனால், லெட்சுமி அவளை தடுத்தாள்.

"பொற்கொடி! அத்தை இப்படி இருக்கும் நிலையில் நீ வெளியேறுவது சரியல்ல" என்றாள்.

"அத்தையாவது சொத்தையாவது! நீயே அவளை கட்டிக் கொண்டு அழு!" என்று பொற்கொடி வெறுப்பை உமிழ்ந்து விட்டுச் சென்றாள்.

"தம்பி! நீங்களாவது பொற்கொடியிடம் சொல்லுங்கள்" மன்னனிடம் லெட்சுமி கெஞ்சினாள்.

"வேண்டாம். அண்ணி அவள் போகட்டும் அவள் இனி இங்கே இருப்பது அவ்வளவு நல்லது அல்ல. ஏனென்றால் அவள் மீது இப்பொழுது அம்மாவுக்கு அவ்வளவு நல்ல எண்ணம் இல்லை. அவள் 'அத்தே.... அத்தே...' என்று அழைக்கும் பொழுதெல்லாம் 'நீ செத்தே! செத்தே!' என்று தான் அம்மா காதில் விழும்!" என்றான் மன்னன்.

லெட்சுமி மாமனாரிடம் வந்தாள். "மாமா! நீங்களாவது பொற்கொடியைப் போக வேண்டாம் என்று சொல்லுங்கள்."

அவர்தான் வாயில்லாப் பூச்சி ஆயிற்றே! வாயைத் திறக்கவில்லை.

"அத்தை! நீங்கள் சொன்னால்தான் பொற்கொடி நிற்பாள்" என்று சொல்லிக் கொண்டே மாமியாரிடம் வந்தாள் லெட்சுமி.

அங்கமுத்து தலையைக் குனிந்து கொண்டாள்.

"அண்ணி! எங்கள் திருமணம் நடந்தபொழுதே நாங்கள் தனியாகப் போயிருந்தால், இந்த ரசாபாசம் வந்திருக்காது" என்றான் மன்னன்.



"ஆனால், இப்பொழுது சண்டை போட்டுக் கொண்டு போவது நல்லதா? நாலு பேர் நமது குடும்பத்தைப் பற்றி என்ன நினைப்பார்கள்" என்றாள் லெட்சுமி.

"நாங்கள் இப்பொழுதாவது வெளியேறா விட்டால் நடுத்தெருவில் குடுமியைப் பிடித்துக் கொண்டு நிற்போம். அப்பொழுது அந்த நாலு பேர் என்ன சொல்லுவார்கள்?" என்றான் மன்னன்.

இதற்குள் பொற்கொடி பெட்டியுடன் கீழே இறங்கி வந்தாள்.

"அம்மா! அப்பா, அண்ணா! அண்ணி, கயல்விழி, எல்லோரும் இருங்கள். நாங்கள் போய் வருகிறோம்."

மன்னன் கை கூப்பினான்.

"தம்பி! நீயுமா போகிறாய்?" கண்ணன் திடுக்கிட்டான்.

"ஆமாம், அண்ணா" மன்னன் அமைதியாகச் சொன்னான் "இராமர் பின்னே சீதை சென்றது அந்தக் காலம். சீதை பின்னே இராமர் செல்வது இந்தக் காலம்."

"டேய் மன்னா! எங்களையெல்லாம் விட்டு விட்டா போகிறாய்?" அங்கமுத்து நெஞ்சம் நெகிழ்ந்தாள்.

"பிரிந்து இருந்தால்தான், அம்மா, பிரியம் இருக்கும்" என்றான் மன்னன்.

"அண்ணா" என்று கயல்விழி விம்மிக் கொண்டே மன்னனின் கையைப் பற்றினாள்.

"தங்கைக்குச் செய்ய வேண்டிய கடமைகளில் இருந்து உன் அண்ணன் தவறமாட்டான். உரிய நேரத்தில் வருவான்" என்று மன்னன் அவளுக்கு ஆறுதல் கூறினான்.

"ஆண்பிள்ளை என்று இந்த வீட்டில் நீங்கள் ஒருவர்தான் இருந்தீர்கள். நீங்களும் போகிறீர்களே" என்று கயல்விழி கண்கலங்கினாள்.

"போக்கிரி" என்று மன்னன் செல்லமாக அவள் கன்னத்தைத் தட்டிவிட்டு நடந்தான்.

லெட்சுமியிடம் வந்து, "அண்ணி, நாங்கள் வருகிறோம்" என்று விடை பெற்றான்.

"எனக்கு அந்த நம்பிக்கை நிறைய இருக்கிறது. நீங்கள் நிச்சயம் திரும்பி வருவீர்கள்" என்றாள் லெட்சுமி.

அவன் லெட்சுமியிடம் போனதுமே, பொற்கொடி தலையை சிலுப்பிக் கொண்டு முன்னே நடந்தாள். மன்னன் ஓடிச் சென்று அவளுடன் சேர்ந்து கொண்டான்.

பொற்கொடி நின்று ஒரு முறை எல்லோரையும் திரும்பிப் பார்த்தாள்.

அவள் பார்வையில் தான் எவ்வளவு கர்வம்!

மன்னனும் அவள் பின்னேயே வருவதால் அவளுக்கு ஏற்பட்ட கர்வம் அது!

மன்னன் அவள் கையில் இருந்த பெட்டியை வாங்கிக் கொண்டே முன்னே நடந்தான். பொற்கொடி அவனைத் தொடர்ந்தாள்.

வெளியில் நின்ற மன்னனின் காரில் இருவரும் ஏறிக் கொண்டார்கள்.

மன்னன் காரை ஓட்டிச் செல்ல, விடுதலை அடைந்த கைதி போல, பொற்கொடி புன்னகை தவழ அவன் அருகில் அமர்ந்து இருந்தாள்.

கார் வெளிக் கதவை தாண்டிச் சென்றது.

உடனே வாடகைக் கார் ஒன்று உள்ளே நுழைந்தது.

அதில் லெட்சுமியின் தாயும் தந்தையும் அமர்ந்து இருந்தார்கள்!



## 40

லெட்சுமியை அழைத்துச் செல்ல அவளுடைய பெற்றோர்கள் வந்திருந்தார்கள்.

தாயைப் பார்த்ததும் லெட்சுமி தன்னை மறந்தாள். கன்றுக் குட்டி போல துள்ளிக் குதித்து ஓடி, "அம்மா" என்று தாயை கட்டி அணைத்துக் கொண்டாள்.

எவ்வளவு காலத்துக்குப் பின் தாயைப் பார்த்திருக்கிறாள்!

பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமா!

களிப்புப் பெருக்கினால் இருவருமே கண்ணீர் வடித்தார்கள்.

"லெட்சுமி சிறுபிள்ளை போல அம்மா...அம்மா..." என்று விம்மினாள்.

"நீ இப்பொழுது குழந்தை இல்லை, அம்மா. ஒரு குழந்தைக்குத் தாய்!" என்று சுந்தரவடிவு மகளின் கண்ணீரை தன் கையினால் துடைத்தாள். அப்பொழுது அந்த அம்மாவின் முகம் பெருமிதத்தால் மலர்ந்தது.

"நாட்டுக்கு மன்னன் என்றாலும், அம்மாவுக்குப் பிள்ளை தானே, அம்மா" என்று லெட்சுமி புன்னகைத்தாள்.

"லெட்சுமி, நன்றாக இருக்கிறாயா, அம்மா?" உணர்ச்சிப் பெருக்கினால் நா தழுதழுக்க சண்முகம் கேட்டார்.

"நன்றாக இருக்கிறேன், அப்பா" என்று இன்முகம் காட்டிய லெட்சுமி, "உட்காருங்கள், அப்பா" என்றாள்.

"நாங்கள் உன் வீட்டுக்கு விருந்துக்கு வரவில்லை. உன்னை அழைத்துப் போக வந்தோம்" என்றார், சண்முகம்.

அப்பொழுதுதான் அவர்கள் வந்திருக்கும் நோக்கத்தை தான் மறந்து விட்டதை லெட்சுமி உணர்ந்தாள்.

இதற்குள் சுந்தரவடிவு சம்பந்தி அம்மாவை நெருங்கினாள்.

"அம்மா, நாங்கள் லெட்சுமியை அழைத்துக்கொண்டு புறப்படுகிறோம்" என்றாள்.

பொற்கொடி ஒரு புயலை கிளப்பி விட்டுப் போனாள். ஆனால், லெட்சுமியின் பெற்றோர்கள் வந்ததும், சூழ்நிலை 'சட்'டென்று மாறியது. அங்கமுத்து கூட மாறிவிட்டாள்.

"உங்கள் மகள், தாராளமாக அழைத்துப் போங்கள்" என்றாள், அங்கமுத்து.

"மிகவும் நன்றி அம்மா" என்று சுந்தரவடிவு கைகூப்பினாள்.

"இதற்கு எதற்கம்மா நன்றி? இந்த நேரத்தில் பெண்கள் தாயின் அருகில் இருக்க விரும்புவார்கள், என்பது எனக்குத் தெரியாதா? நானும் மூன்று பிள்ளைக்குத் தாயானவள்தான்" என்று அங்கமுத்து பெருந்தன்மையாகப் பேசினாள்.

அங்கமுத்துவா அப்படிப் பேசுகிறாள், என்று அத்தனை பேரும் ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்தார்கள்.

"எல்லோரிடமும் சொல்லிக்கொண்டு புறப்படு அம்மா." மகளிடம் சுந்தரவடிவு சொன்னாள்.

"என்னை மன்னித்துக் கொள்ளுங்கள், அம்மா" லெட்சுமியின் குரல் சன்னமாக ஒலித்தது. "இன்னொரு நாள் நான் வருகிறேன்."

"ஏனம்மா?" சுந்தரவடிவு வியப்புடன் மகளை நோக்கினாள்.

காரணத்தைச் சொல்ல லெட்சுமி தயங்கினாள். தனது வீட்டு விவகாரம் வெளியில் தெரிய வேண்டாம் என்று நினைத்தாள்.

"இப்பொழுது வசதியில்லை, அம்மா" என்று லெட்சுமி சுருக்கமாகச் சொன்னாள்.

"வசதியில்லை" என்றாள்...சுந்தரவடிவுக்குப் புரியவில்லை.



அங்கமுத்து எதுவும் சொல்லி இருப்பாளோ? தொடையைக் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டியிருப்பாளோ! சந்தேகத்துடன் சம்பந்தி அம்மாளின் பக்கம் திரும்பினாள்.

"லெட்சுமி என்ன சொல்லுகிறாள்?" அங்கமுத்து கேட்டாள்.

"இப்பொழுது வரவில்லை; இன்னொரு நாள் வருகிறேன் என்கிறாள்" என்றாள் சுந்தரவடிவு.

"ஏனம்மா? ஏன் எத்தனை நாளைக்குப் பிறகு உன்னை அழைக்க வந்திருக்கிறோம்..." சண்முகம் வேகமாக எழுந்து வந்தார்.

"இப்பொழுது நான் வரமுடியாது அப்பா மேற் கொண்டு என்னை ஒன்றும் கேட்காதீர்கள். நீங்கள் புறப்படுங்கள்" என்றாள் லெட்சுமி.

அங்கமுத்து, சுப்பிரமணியம், கண்ணன் எல்லோருமே குழம்பினார்கள்.

பெட்டியில் துணிமணியெல்லாம் எடுத்து வைத்த லெட்சுமி ஏன் இப்படிச் சொல்லுகிறாள் என்று கண்ணனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

சண்முகத்துக்கோ கோபம் வந்தது. "லெட்சுமி! எங்களுடன் போகக் கூடாது என்று உன்னை யாராவது தடுத்தார்களா?" என்று ஆத்திரத்துடன் கேட்டார்.

"என்னை அழைத்துப் போகும்படி உங்களிடம் வந்து சொன்னதே அத்தைதானே அப்பா" என்று லெட்சுமி புன்னகைத்தாள்.

"பிறகு ஏன் இப்பொழுது வரமாட்டேன்கிறாய்?"

"என் வீட்டைப் போட்டு விட்டு வந்து எப்படியப்பா இருக்க முடியும்?" லெட்சுமி பொறுப்பாகப் பேசினாள்.

"வீட்டை நான் பார்த்துக் கொள்ள மாட்டேனா? நீ போய் வா லெட்சுமி" என்றாள் அங்கமுத்து. அவளுக்கு வைரத்தோடு மீதுதான் குறி!

"அத்தை உங்களைப் பார்த்துக் கொள்ள-உங்களுக்கு பத்தியமாக சாப்பாடு செய்து கொடுக்க ஓர் ஆள் வேண்டும். நான் இல்லாவிட்டால் அதெல்லாம் யார் செய்வார்கள்?" என்றாள் லெட்சுமி.

"அத்தைக்கு உடம்புக்கு என்னம்மா?" என்று சுந்தரவடிவு கேட்டாள்.

"கொஞ்சம் உடல் நலம் இல்லை" என்று லெட்சுமி மட்டும் படாமல் சொன்னாள்.

"அம்மாவை நான் பார்த்துக் கொள்ளுகிறேன். அண்ணி நீங்கள் போய் வாருங்கள்" என்றாள் கயல்விழி.

"நீ கல்லூரிக்குப் போக வேண்டாமா?" என்றாள் லெட்சுமி. "பொற்கொடியும் இல்லை."

"அவள் எங்கே போய் விட்டாள்?" சுந்தரவடிவு கேட்டாள்.

"கொஞ்சம் முன்பு நீங்கள் வரவில்லையே! பெரிய..." என்று கயல்விழி கதை சொல்லத் தொடங்கினாள்.

அதற்குள் லெட்சுமி குறுக்கிட்டாள். "பொற்கொடி பிறந்த வீட்டுக்குப் போயிருக்கிறாள்."

கயல்விழி வாயை முடிக் கொண்டாள்.

"எப்பொழுது வருவாள்?"

"சீக்கிரம் வந்து விடுவாள்!"

"உன்னை அழைத்துப் போகத்தான் நாங்கள் இன்று வருவோம் என்று அவளுக்குத் தெரியுமே."

"அவளுக்கு மட்டும் அப்பாவைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை இருக்காதா?"

"லெட்சுமி! என்னைப் பற்றி என்னம்மா? நீ புறப்படு. அவர்கள் எவ்வளவு ஆசையாக உன்னை அழைக்க வந்திருக்கிறார்கள்" என்றாள் அங்கமுத்து.

அதே மூச்சில் மகனின் பக்கம் திரும்பி "கண்ணா! அவள் பெட்டியை எடுத்துக் கொண்டு வா. நீயும் அவளோடு போய்



அவளை விட்டு விட்டு வா. நம் காரை எடுத்துக் கொண்டு போங்கள்" என்றாள்.

"அத்தை! நான் போகப் போவது இல்லை" லெட்சுமி பிடிவாதமாகச் சொன்னாள்.

"வாயும் வயிறுமாக இருக்கும் பெண்கள் தாய் வீட்டில் தான் இருக்க வேண்டும்" என்றாள் அங்கமுத்து.

"மணமான எனக்கு நீங்கள்தான் தாய்" என்றாள் லெட்சுமி.

"நான் சொல்லுவதைக் கேளு, கண்ணு."

"உங்களை இந்த நிலையில் விட்டு விட்டு நான் போக மாட்டேன்."

"நீ போகத்தான் வேண்டும்."

"அத்தை! உங்களைவிட வைரம் பெரிதாகப் போய் விட்டதா?"

"லெட்சுமி! நீ என்ன சொல்லுகிறாய்?"

"அத்தை, வைரத்தோடு என்பது பொற்கொடி கட்டி விட்ட கற்பனைக் கதை. நீங்கள் என்னை என் பிறந்த வீட்டுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்பதற்காக அந்தக் கதையை கட்டி விட்டாள்."

"அப்படியானால், உன் வீட்டில் உண்மையிலேயே வைரத்தோடு இல்லையா?"

"எங்கள் வீட்டில் தோடு ஏது? ஓடுதான் உண்டு!"

மாமியாரும் மருமகளும் பேசிக் கொண்டது. மற்றவர்களுக்கு புரியவில்லை-கண்ணனைத் தவிர. அவனோ தேள் கொட்டிய திருடன் போல நின்று கொண்டு இருந்தான்.

லெட்சுமி பெற்றோரிடம் வந்தாள்.

"அம்மா! அத்தைக்கு உடல் நலம் இல்லை. அவர்கள் பத்தியமாக சாப்பிட வேண்டும். நான் இங்கே இருந்தால் தான் அது முடியும். எனவே, இப்பொழுது நான் வர இயலாது.

இன்னொரு முறை வருகிறேன். நீங்கள் புறப்படுங்கள்" என்றாள்.

அவள் சொல்வதிலும் நியாயம் இருப்பதாக சுந்தர வடிவுக்குத் தோன்றியது.

"நாம் போகலாமா!" கணவனை நோக்கினாள்.

"லெட்சுமி, அது என்ன வைரத்தோடு...?" என்று மகளிடம் சண்முகம் இரகசியமாக கேட்டார்.

"அதெல்லாம் பிறகு வந்து சொல்லுகிறேன், அப்பா" என்றாள், லெட்சுமி.

சண்முகமும் சுந்தரவடிவும் எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டு சென்றார்கள்.

**கா**ர் நின்றது!

பொற்கொடி இறங்கினாள்.

மன்னன் அவள் பின்னே பெட்டியை தூக்கிக்கொண்டு சென்றான்.

வைரவன் அப்பொழுது வீட்டில்தான் இருந்தார்.

"வாருங்கள்...வாருங்கள்..." என்று அவர்களை வரவேற்றார் "என்ன பெட்டி படுக்கையுடன்? எந்த ஊரில் இருந்து வருகிறீர்கள்?"

"நீங்கள் என்ன என்னை சீமைக்கா அனுப்பி வைத்தீர்களா? சிறைச்சாலையில் இருந்து வருகிறேன்" என்று மனத்தாங்கலுடன் சொல்லிக்கொண்டே, தந்தைக்கு அருகில் பொற்கொடி அமர்ந்தாள்.

"சிறைச்சாலையில் இருந்தா? கள்ள நோட்டா கடத்தலா? என்ன செய்தி மாப்பிள்ளை?" என்று மன்னனிடம் வைரவன் கேட்டார்.

"இல்லறம் என்ற சிறைச்சாலையைச் சொல்லுகிறாள் மாமா" என்றான் மன்னன்.



"அது ஆயுள் தண்டனை ஆயிற்றே! அதற்குள் எப்படி விடுதலை அடைந்தீர்கள்?"

"மாமியார்-மருமகள் சண்டை!"

"அது நிரம்ப பழைய செய்தி!"

"அப்பா, இனிமேல் அந்த வீட்டில் என்னால் இருக்க முடியாது" என்றாள் பொற்கொடி.

"உன் மாமியார் இருக்கிறாளே அவள் பெண்ணா! சே சே! பேய்" என்றார் வைரவன்.

"மாமா..." மன்னன் குரல் கொடுத்தான்.

"ஓ! நீங்கள் இருக்கிறீர்களா மாப்பிள்ளை! நான் மறந்து விட்டேன்" என்று வைரவன் சிரித்தார்.

"அந்தப் பேயோடு இருக்க முடியாமல்தான் நான் இங்கே வந்து விட்டேன் அப்பா" என்றாள் பொற்கொடி.

"அது சரிம்மா. ஆனால், பேய்க்கு வாழ்க்கைப் பட்டால், புளிய மரத்தில் ஏறித்தானே ஆக வேண்டும்!"

"நான் பேய்க்கு வாழ்க்கைப் படவில்லை."

"அரச மரத்தை பிடித்த முனி, அதன் அடியில் இருக்கும் பிள்ளையாரையும் பிடிக்குமாம்."

"முனியோ சனியோ இனி நான் அந்த வீட்டுக்கு போகப் போவது இல்லை."

"குடும்பம் என்றால், நாலும் இருக்கத்தான் செய்யும். அதையெல்லாம் சமாளித்துக் கொண்டேதான் போக வேண்டும். மூட்டைப்பூச்சி கடிக்குப் பயந்து வீட்டை காலி செய்துவிட்டு, வீதியில் போய் நிற்பார்களா?"

"நான் வீதிக்குப் போகவில்லை. பிறந்த வீட்டுக்கு வந்திருக்கிறேன்."

"ஆனால், இது சத்திரமோ சாவடியோ அல்ல."

"அப்பா."

"ஆமாம்மா...பல பெண்கள் புகுந்த வீட்டில் சண்டை போட்டுக்கொண்டு, அடிக்கடி பிறந்து வீட்டுக்கு ஓடிவர என்ன காரணம் தெரியுமா? பிறந்த வீட்டில் அவர்களுக்கு அளிக்கப்படும் ஆதரவுதான் அதற்குக் காரணம்."

"அப்படியா, அப்பா? சரி, அப்படியே வைத்துக் கொள்வோம். ஒரு பெண்ணுக்கு புகுந்த வீட்டிலும் ஆதரவு இல்லை; பிறந்த வீட்டிலும் ஆதரவு இல்லை என்றால் அவள் எங்கே அப்பா போவாள்?"

"ஒரு பெண்ணுக்கு பிறந்த வீடு, புகுந்த வீடு தவிர, மூன்றாவது வீடு ஒன்றும் உண்டு. அதுதான் அவளது சொந்த வீடு."

"புரியவில்லையா பொற்கொடி? நாம் தனிக் குடித்தனம் போக வேண்டும் என்கிறார் உன் அப்பா" என்று மன்னன் விளக்கினான்.

"நீங்கள் எப்பொழுதோ தனிக் குடித்தனம் போயிருக்க வேண்டும். அப்படிப் போயிருந்தால் இந்த மாமியார்- மருமகள் சண்டையே வந்திருக்காது" என்றார் வைரவன்.

பொற்கொடி இதைக் கொஞ்சங்கூட எதிர்பார்க்கவில்லை அப்படியே இடிந்து போய் அமர்ந்து விட்டாள். என்ன செய்வது- என்ன பேசுவது என்றே அவளுக்குத் தோன்றவில்லை.

மன்னன்தான் "எங்களுக்கு நல்வழி காட்டியதற்காக நன்றி மாமா. நாங்கள் வருகிறோம்" என்றான்.

அதே மூச்சில் "பொற்கொடி புறப்படு" என்று அவளை நோக்கிச் சொல்லிவிட்டு பெட்டியைத் தூக்கிக் கொண்டு மன்னன் நடந்தான்.

மந்திர சக்தியால் கட்டுண்டவள் போல பொற்கொடி அவனைப் பின் தொடர்ந்தாள்!



## 41

"டொக்...டொக்...டொக்..."

"சார்...சார்...டொக்...டொக்..."

கதவு தட்டப்படும் ஓசை கேட்டு மன்னன் கண் விழித்துக் கொண்டான்.

கழுத்தைத் திருப்பி சுவரில் தொங்கிய கடிகாரத்தைப் பார்த்தான்.

மணி எட்டுக்கு மேல் ஆகிவிட்டது.

எழுந்து சென்று கதவைத் திறந்தான்.

ஓட்டல் பணியாள் காப்பியும், கையுமாக நின்றார்.

அவர் உள்ளே வந்து காப்பியை வைத்து விட்டுச் சென்றதும் மன்னன் மீண்டும் கதவைத் தாழிட்டுக் கொண்டான்.

வைரவன் வீட்டில் இருந்து புறப்பட்ட மன்னனும் பொற்கொடியும் இராப்பொழுதை கழிக்க இந்த ஓட்டலுக்கு வந்து சேர்ந்தார்கள். வசதியான பெரிய ஓட்டல். இரட்டை கட்டிலுடன் கூடிய அந்த அறைக்கு ஒரு நாள் வாடகை ரூ.40.

பொற்கொடி இன்னும் தூங்கிக் கொண்டு இருந்தாள்.

"காப்பி வந்து விட்டது. குடித்து விட்டு படுத்துக் கொள்" என்று மன்னன் அவளை எழுப்பினான். கொஞ்சம் சிரமமான வேலைதான்!

சிணுங்கிக் கொண்டே பொற்கொடி எழுந்தாள்.

"காப்பியைக் குடி" என்று மன்னன் அவளிடம் எடுத்துக் கொடுத்தான்.

மடமட என்று காப்பியைக் குடித்துவிட்டு, பொற்கொடி மீண்டும் படுத்துக் கொண்டாள்.

கட்டிலில் அமர்ந்த மன்னன் அவளை எழுப்பினான்.

அவள் அவன் மடியில் தலை வைத்துக் கொண்டாள்.

"எட்டு மணிக்கு மேலே ஆகிவிட்டது. எழ வேண்டாமா?"

காப்பியை பருகிக் கொண்டே மன்னன் பேசினான்.

"ஏன் எழ வேண்டும்? இங்கே மாமியார் கிடையாது! வேலைக் கிடையாது! மணியை அழுத்தினால் ஓட்டல் பையன் காப்பி பலகாரம் சாப்பாடு கொண்டு வருவான்."

அவன் மடியில் படுத்தபடியே பொற்கொடி கூறினாள்.

"அப்படியானால் ஓட்டலிலேயே தங்கிவிட உத்தேசமா?"

"அது முடியுமா? ஒரு வீடு பாருங்கள்."

"ஒரே நாளில் கிடைக்குமா?"

"அது வரையில் இங்கே இருப்போம்."

"சரி என்னை விடு எனக்கு வேலையிருக்கிறது."

"உங்களுக்கு மட்டும் என்ன வேலை?"

"அலுவலகம் போக வேண்டாமா?"

"அலுவலகம் போகப் போகிறீர்களா?"

"வேண்டாமா? நாம் வீட்டைத்தான் விட்டோம். வேலையை விடவில்லை."

அவள் தலையை தூக்கி மெத்தையில் வைத்து விட்டு, மன்னன் எழுந்தான்.

பல் துலக்கி, குளித்து அலுவலகத்துக்குப் புறப்படத் தயார் ஆனான்.

பொற்கொடியும் எழுந்து பல் துலக்கச் சென்றாள்.

இருவரும் குளித்து முடித்ததும், சிற்றுண்டி வர வழைத்தார்கள்.



சாப்பாடு ஆனதும், மன்னன் அலுவலகத்துக்குக் கிளம்பினான்.

"அறையில் கவனமாக இரு. யாராவது கதவைத் தட்டினால் திறக்காதே. வெளியில் எங்கும் செல்லாதே" என்று பொற்கொடியை எச்சரித்தான்.

"நீங்கள் வரும்வரை கதவைத் திறக்கவே மாட்டேன்" என்ற பொற்கொடி, அவன் கன்னத்தில் ஒன்று கொடுத்து, அவனை அனுப்பி வைத்தாள்.

ஈரக் கூந்தலை கொண்டை முடிந்து கொண்டே அடுப்படிக்குள் நுழைந்த லெட்சுமி மலைத்துப் போனாள்!

அந்த அதிகாலை நேரத்தில் அங்கமுத்து அடுப்புப் பற்ற வைத்துக் கொண்டு இருந்ததுதான் அதற்குக் காரணம்!!

"அத்தை! இங்கே என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்டுக் கொண்டே லெட்சுமி அருகில் சென்றாள்.

"வாம்மா" என்றாள் அங்கமுத்து. அதற்குள்ளாகவா எழுந்து விட்டாய்? மணி இன்னும் ஆறுகூட ஆகவில்லை. வாயும் வயிறுமாக இருக்கும் பெண் கொஞ்ச நேரம் தூங்கக் கூடாதா? அசதியாக இருக்குமே?"

சிங்கம் போல கர்ச்சிக்கும் அங்கமுத்துவா, சீனிப் பாகு போல இவ்வளவு கனிவாகப் பேசுகிறாள்!

லெட்சுமியால் தன் காதுகளை நம்ப முடியவில்லை.

நேற்றைய நிகழ்ச்சிகள் அங்கமுத்துவின் வாழ்க்கையில் ஒரு திருப்பு முனையாக அமைந்து விட்டன. சம்பந்தி வீட்டார் வந்து போன பின்பு யாரும் அதிகம் பேசிக் கொள்ளவில்லை. அவரவர் வேலையைப் பார்க்கச் சென்று விட்டார்கள்.

அங்கமுத்து மட்டும் தனியாக இருந்தாள்.

அவள் ஆடு போல அசை போட்டாள்.

தழையை அல்ல! பழைய நிகழ்ச்சிகளை.

அப்பொழுதுதான் லெட்சுமியின் அருமை பெருமைகளை அவள் உணர்ந்தாள்.

மகாலட்சுமியே தன் வீட்டு மருமகளாக வந்திருக்கிறாள் என்று எண்ணினாள்.

அவளை எவ்வளவு கொடுமைப்படுத்தி விட்டோம் என்று வருந்தினாள்.

பொற்கொடியைப் பற்றியும் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அவள் பொற்கொடியாகத் தோன்றவில்லை. அம்பு பாய்ச்சும் விற்கொடியாகக் காணப்பட்டாள்.

"நிழலின் அருமை வெயிலில் தான் தெரியும்!"

"பொற்கொடியுடன் ஒப்பிட்ட பொழுதுதான் லெட்சுமியின் அருமை அங்கமுத்துக்குத் தெரிந்தது.

தங்கம்- வைரம் என்று எவளை கொஞ்சினாளோ, அவள் உயிருக்கே அல்லவா உலை வைக்கப் பார்த்தாள்! மூளி என்றும், மூதேவி என்றும் எவளை வெறுத்தாளோ, அவள் அல்லவா உயிரைக் காத்தாள்!

லெட்சுமி பிடிவாதமாக பிறந்த வீட்டுக்குச் செல்ல மறுத்துவிட்டது. அங்கமுத்துவின் உள்ளத்தை மிகவும் கவர்ந்து விட்டது மட்டும் அல்ல; அவள் மனதை மாற்றி மறுமலர்ச்சி அடையச் செய்துவிட்டது.

மனதில் மாற்றம் ஏற்பட அங்கமுத்துவின் சிந்தனைகளிலும் மாற்றம் தோன்றியது. 'பெற்றோர் செய்தது. பிள்ளைகள் தலையில் என்பார்கள் எனக்கும் ஒரு மகள் இருக்கிறாள். அவளுக்கும் ஒரு நாள் ஒரு மாமியார் வருவார் அய்யோ அவள் கையில் சிக்கி என் மகள் படாதபாடு பட்டால், அதை நான் எப்படித் தாங்கிக் கொள்ளுவேன்? என் இதயமே வெடித்து விடுமே' என்று எண்ணும் அளவுக்கு சிந்தனை மாறிவிட்டது.

அப்பொழுதே லெட்சுமியை மருமகளாக அல்ல திருமகளாக நடத்துவது என்று தீர்மானித்து விட்டாள்!



ஆனால், பொற்கொடியை மறக்கவோ மன்னிக்கவோ அங்கமுத்துவால் முடியவில்லை. என் உயிருக்கே உலை வைக்கப் பார்த்தாளே' என்ற எண்ணம்தான் மேலோங்கி நின்றது.

சிந்தனைச் சுழலில் சிக்கித் தவித்த அங்கமுத்து, இரவில் தூங்குவதற்கு வெகு நேரமாகி விட்டது. அப்படியிருந்தும், அதிகாலையில் விழித்துக் கொண்டாள். எழுந்ததும் குளித்து முடித்து அடுப்படிக்குள் நுழைந்தாள்.

"நீ மாடிக்குப் போம்மா. நான் காப்பி கொண்டு வருகிறேன்" என்றாள் அங்கமுத்து.

உடனே, அவளிடம் பெரிய மாறுதல் ஏற்பட்டு இருக்கிறது என்பதை லெட்சுமி கண்டு கொண்டாள்.

"நன்றாக இருக்கிறது அத்தை! பெற்றவளை அடுப்பில் தள்ளிவிட்டு கட்டியவளோடு காடு மேடு சுற்றினானாம்! நான் உங்களை உட்கார வைத்து உபசாரம் பண்ண வேண்டும். அதை விட்டு, நீங்கள் எனக்கு உபசாரம் செய்கிறீர்களா?" என்று லெட்சுமி வரிந்து கட்டினாள்.

"நீங்கள் போய் உட்காருங்கள். நான் காப்பி கொண்டு வருகிறேன்" என்று அடுப்பு முன்னே வந்து நின்றாள்.

"உட்கார்ந்து தின்று தின்றுதான் இப்படி யானைக் குட்டி போல ஆகிவிட்டேன். இன்னுமா என்னை உட்காரச் சொல்லுகிறாய்?"என்றாள் அங்கமுத்து.

"என்னத்தைத் தின்றீர்கள்? உங்கள் உடல் வாகு அது " என்றாள் லெட்சுமி. "சோபாவில் போய் உட்காருங்கள்."

"நான் சொல்வதைக் கேளம்மா. நீ போய் கண்ணனுக்கு வேண்டியதைக் கவனி. நான் காப்பி போட்டு கொண்டு வருகிறேன்." என்று அங்கமுத்து கெஞ்சலாகக் கூறினாள்.

"அவருக்கு எந்த வேலையிலும் குறை வைக்க மாட்டேன்." என்ற லெட்சுமி மாமியாரைப் பிடித்து இழுத்து வந்து கூடத்தில் சோபாவில் உட்கார வைத்தாள்.

அதன்பின் லெட்சுமி மீண்டும் அடுப்படிக்கு வந்தாள்.

முதலில் பாலைக் காய்ச்சினாள்.

அந்தப் பாலைப் போல அவள் உள்ளமும் மகிழ்ச்சியால் பொங்கியது.

மாமியார், எவ்வளவு மாறிவிட்டார்!

நினைக்க நினைக்க நெஞ்சமெல்லாம் குளிர்ந்தது!

எந்த மனிதனும் மாறுவதற்கு மனதில் தைக்கும்படி ஒரு சிறு நிகழ்ச்சி நடந்தால் கூடப் போதும் போலிருக்கிறதே!

பொற்கொடியையும் நினைத்துக் கொண்டாள். முள்ளை முள்ளால் எடுக்க வேண்டும் என்ற அவள் கொள்கை வெற்றி பெற்று விட்டது. அதற்காக அவளுக்கு நன்றி தெரிவித்தாள்.

ஆனால், அந்தக் கொள்கையை லெட்சுமியால் இப்பொழுதும் ஒப்புக் கொள்ள முடியவில்லை. "இன்னா செய்தார்க்கும் அவர் நாண நன்னயம் செய்துவிடல்" என்ற கொள்கையில் ஊறிப் போனவள் அவள்.

அங்கமுத்துவின் மனதை மாற்றியதில் பொற்கொடிக்கு எவ்வளவு பங்கு உண்டோ, அவ்வளவு பங்கு லெட்சுமியின் 'நன்னய'த்துக்கும் உண்டு அல்லவா? அவள் தனது நற்செயல்களாலேயே அங்கமுத்துவைத் திருத்தி விட்டாள்!

காப்பியைக் கலந்து எடுத்து வந்து மாமியார் கையில் கொடுத்தாள், லெட்சுமி.

கண்களில் நன்றிப் பெருக்குடன் அதை வாங்கிப் பருகிற அங்கமுத்து, "என்னம்மா, காப்பியில் சீனி போட்டாயா?" என்று கேட்டாள்.

மகிழ்ச்சிப் பெருக்கில் தவறுதலாக காப்பியில் சீனி போட்டு விட்டதை அப்பொழுதுதான் லெட்சுமி உணர்ந்தாள்.

"பரவாயில்லை. அத்தை இன்று ஒரு நாள் இனிப்பாகக் குடியுங்கள்" என்றாள்.

"வேண்டாம்மா. வேறு காப்பி கொண்டு வா?" என்றாள், அங்கமுத்து.



"இன்று எனக்கு இருக்கும் மகிழ்ச்சியில் உங்களுக்கு பால் பாயசமும் பாதாம் அல்வாவுமே கொடுக்கலாம். அத்தை ஆனால், காப்பியில் ஒரே ஒரு கரண்டி சீனிதான் போட்டு இருக்கிறேன். குடியுங்கள்" என்றாள், லெட்சுமி.

"வேண்டாம்மா. நான் என் பேரனைப் பார்க்க வேண்டும்."

சொல்லும் பொழுதே அங்கமுத்துக்குக் கண்கள் கலங்கின.

"அத்தை..." லெட்சுமியும் உணர்ச்சிப் பெருக்கினால் உருகினாள்.

"போம்மா, சர்க்கரை போடாத காப்பி கொண்டுவா."

"சரி, அத்தை."

லெட்சுமி அடுப்படிக்குப் போய் மீண்டும் காப்பி கொண்டு வந்தாள்.

அங்கமுத்து பருகினாள்.

அதற்குள் லெட்சுமி போய் மற்றவர்களுக்கும் காப்பி எடுத்து வந்தாள்.

"நான் கொண்டுபோய்க் கொடுக்கிறேன், லெட்சுமி" என்று அங்கமுத்து எழுந்தாள்.

"வேண்டாம் அத்தை நீங்கள் இருங்கள்" என்றாள், லெட்சுமி.

"என்னை ஒரேயடியா முடம் ஆக்கி விடாதே, அம்மா" என்ற அங்கமுத்து, காப்பித் தட்டை கையில் வாங்கிக் கொண்டாள்.

கண்ணனுக்கு உரிய காப்பியை மட்டும் கையில் எடுத்துக்கொண்டு, லெட்சுமி மலர்ந்த முகத்துடன் மாடிப்படியை நோக்கிச் சென்றாள்.

அங்கமுத்து முதலில் கயல்விழியின் அறைக்குள் நுழைந்தாள்.

அவள் இன்னும் தூங்கிக் கொண்டு இருந்தாள்.

"மணி ஏழாகப் போகிறது. பெண்பிள்ளைக்கு என்ன இன்னும் தூக்கம்? எழுந்திரு!" என்று அங்கமுத்து அவள் முதுகில் தட்டினாள்.

"அய்யோ...பேய்...பேய்..." என்று அலறித் துடித்துக் கொண்டு கயல்விழி எழுந்தாள்.

"என்னம்மா? ஏதாவது கனவு கண்டாயா?" அங்கமுத்து கனிவாகக் கேட்டாள்.

"இல்லேம்மா, உங்களைத்தான் கண்டேன்!" என்றாள் கயல்விழி.

"வரவர உனக்கு வால் அதிகமாகிவிட்டது!" என்ற அங்கமுத்து, "எழுந்து பல் துலக்கிவிட்டு, காப்பியைக் குடி" என்று ஒரு தம்ளர் காப்பியை அருகில் இருந்த சிறு மேஜை மீது வைத்தாள்.

"அம்மா.."

"என்னம்மா?"

"உங்களுக்கு நீரிழிவு என்றுதானே டாக்டர் சொன்னார். தூக்கத்தில் நடக்கிற நோயும் வந்துவிட்டதா?"

"நீதான் இப்பொழுது தூக்கத்தில் உளறுகிறாய். எழுந்து முதலில் முகத்தைக் கழுவு."

சொல்லிவிட்டு அங்கமுத்து நடந்தாள்.

இன்னும் திகைப்பு நீங்காதவளாக கயல்விழி அம்மாவையே பார்த்துக்கொண்டு இருந்தாள்.

அடுத்து கணவரின் அறைக்கு அங்கமுத்து சென்றாள்.

உள்ளே மேஜை முன் அமர்ந்து சுப்பிரமணியம் 'பைல்'களை பார்த்துக் கொண்டு இருந்தார். அவர் நெற்றி நிறைய திருநீறு.

அறைக்குள் நுழைய அங்கமுத்து கொஞ்சம் தயங்கினாள். பிறகு ஒரு புன்னகையுடன் உள்ளே புகுந்தாள்.



பேச வாய் வரவில்லை. மேஜை அருகில் நின்றபடி காப்பியை எடுத்து நீட்டினாள்.

பைல் பார்த்துக்கொண்டு இருந்த சுப்பிரமணியம் பார்வையைத் திருப்பாமலே, "ஏன் லெட்சுமி இன்று இவ்வளவு நேரம்?" என்று கேட்டுக்கொண்டே காப்பியை வாங்கிக்கொள்ள கையை நீட்டினார்.

"நான் லெட்சுமி அல்ல" அங்கமுத்து கொஞ்சலாகச் சொன்னாள்.

சுப்பிரமணியம் திரும்பிப் பார்த்தார்.

பார்த்ததும் திடுக்கிட்டு எழுந்து நின்றார்!

"ஏன் பேயைப் பார்த்ததுபோல பயப்படுகிறீர்கள்?" அங்கமுத்து சாதாரணமாக கேட்டாள்.

"நீ..நீ.." சுப்பிரமணியம் தடுமாறினார்.

"நான் செத்து பேயாகி விடவில்லை. உயிரோடுதான் இருக்கிறேன்" என்றாள் அங்கமுத்து. "காப்பியை சாப்பிடுங்கள்!"

"அங்கமுத்து என்னால் நம்ப முடியவில்லை" சுப்பிரமணியம் தவித்தார்.

"நம் மருமகள் அவளது பொறுமையினால் என்னை அடியோடு மாற்றிவிட்டாள். இத்தனை நாளும் உங்கள் அருமை தெரியாமல் நடந்துகொண்டு விட்டேன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்" அங்கமுத்து தலை குனிந்தாள்.

"அப்படி அல்ல, அங்கமுத்து. ஒரு நாட்டுக்கு இரண்டு அரசர் கூடாது. அதே போல, ஒரு வீட்டுக்கும் இரண்டு தலைவர் கூடாது. கணவன் ஆட்சி செலுத்த வேண்டும் அல்லது மனைவி ஆட்சி செலுத்த வேண்டும். இருவருமே ஆட்சி செலுத்த முயற்சித்தால், குடும்பம் நடக்காது. குருச்சேத்திரம்தான் நடக்கும். அதனால்தான் நானாக ஒதுங்கிக் கொண்டேன்" என்றார், சுப்பிரமணியம்.

"இனிமேல் அப்படி இருக்காதீர்கள்" என்றாள் அங்கமுத்து. "மனைவியை பிரதம மந்திரியாக இருந்தாலும், கணவன் ஜனாதிபதியாக இருக்க வேண்டும்."

"அதாவது கணவன் வெறும் 'ரப்பர் ஸ்டாம்பு' என்கிறாயா!" சுப்பிரமணியம் சிரித்தார்.

"இரண்டு சக்கரமும் ஒன்றாகப் போனால்தானே வண்டி ஒழுங்காக ஓடும்."

"ஆனால், வாழ்க்கையைப் பல பேர் வண்டியாக நினைப்பது இல்லையே. குதிரையாக அல்லவா நினைக்கிறார்கள். ஒருவர் மீது ஒருவர் சவாரி செய்ய முயற்சிக்கிறார்களே."

"குனிந்து கொடுத்தால், முதுகில் ஏறத்தான் செய்வார்கள். நிமிர்ந்து நில்லுங்கள்."

சுப்பிரமணியம் நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு மீசையை முறுக்கிக் கொண்டார்!

"போதுமே! காப்பி ஆறுகிறது. குடியுங்கள்!" என்று அங்கமுத்து அவரை கேலி செய்தாள்!

## 42

"உலகத்தில் மொத்தம் எத்தனை அதிசயம் உண்டு?"

கணவனிடம் காப்பியைக் கொடுத்துக் கொண்டே, குறுஞ்சிரிப்புடன் லெட்சுமி கேட்டாள்.

"ஏழு என்பார்கள். அதற்கு என்ன?"

சொல்லிவிட்டு, கண்ணன் காப்பியைப் பருகினான்.



"இன்று எட்டாவது அதிசயம் நடந்து விட்டது!"

"அப்படி என்ன நடந்தது? நம்ம வீட்டு மாடு முட்டையிட்டதா!"

அவ்வளவு பெரிய அதிசயம்தான். "அத்தை மாமாவுக்கு காப்பி கொடுத்தார்கள்." பெரிய அதிசயத்தைச் சொல்வது போல லெட்சுமி தெரிவித்தாள்.

கண்ணனோ, "எந்த அத்தை? எந்த மாமா?" என்று சாதாரணமாகக் கேட்டான்.

"உங்கள் அம்மா, உங்கள் அப்பாவுக்குக் காப்பி கொடுத்தார்கள்."

லெட்சுமி சொல்லி வாய் மூடுமுன் "என்ன... என்ன..." என்று கண்ணன் பதைத்தான். அவன் வாயில் இருந்த காப்பி, செயற்கை நீர் ஊற்றுப் போல வெளியில் சிதறியது! என் அம்மா, என் அப்பாவுக்குக் காப்பி கொடுத்தார்களா?"

லெட்சுமி தன் மீது பட்ட காப்பியை துடைத்துக் கொண்டே "ஆமாம்" என்று அழுத்தமாகச் சொன்னாள்.

"நம்ப முடியவில்லையே" என்ற கண்ணன், வெளியில் எட்டிப் பார்த்தான்.

"என்ன பார்க்கிறீர்கள்?"

"மழை பெய்கிறதா என்று பார்த்தேன்."

"மழை என்ன, வால் நட்சத்திரமே தோன்றினாலும் தோன்றும்!"

"ஆமாம், இந்த அதிசயம் எப்படி நடந்தது?"

"கண்டவர் விண்டிலர்! விண்டவர் கண்டிலர்!!"

"எல்லாம் பொற்கொடி செய்த வேலைதான். அவள் போட்ட போட்டில்தான் அம்மா திருந்தியிருக்கிறார்கள். நிலைப்படியில் முட்டிய பிறகு குனிகிறார்கள்."

அப்பொழுது அங்கமுத்துவின் குரல் கேட்டது.

"கண்ணன்...லெட்சுமி...கயல்விழி...எல்லோரும் வாருங்கள்!"

அடுத்த நிமிடம் அனைவரும் கூடத்தில் கூடினார்கள்.

சுப்பிரமணியம் சோபாவில் அமர்ந்து இருந்தார். அருகில் அங்கமுத்து நின்றாள்.

"அம்மா முன்னே உட்கார்ந்து இருக்கிறீர்களே அப்பா எழுந்திருங்கள்" என்று கண்ணன் பயத்துடன் சொன்னான்.

"அண்ணா! இனிமேல் அம்மாவுக்குப் பயப்படாதீர்கள்." என்றாள் கயல்விழி.

"பிறகு.. இனி உன் அண்ணிக்குப் பயப்பட வேண்டுமா?"

கண்ணன் அப்பாவியாகக் கேட்டான்.

"யாரும், யாருக்கும் பயப்படத் தேவையில்லை" என்று அங்கமுத்து கூறினாள்.

"அச்சமில்லை... அச்சமில்லை... அச்சம் என்பது இல்லை!" கயல்விழி பாடினாள்.

"வாயை மூடுடி!" பழைய பழக்கத்தில் அங்கமுத்து அவள் தலையில் ஓங்கி ஒரு குட்டு வைத்தாள்!

"உச்சி மீது வான் இடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை.... அச்சமில்லை... அச்சம் என்பது இல்லையே!" கயல்விழி அழுது கொண்டே பாடினாள்.

சுப்பிரமணியம் அவளை தட்டிக் கொடுத்தார் "கயல்விழி, நீ மட்டும் அம்மாவுக்குப் பயந்துதான் ஆகவேண்டும்."

"அழாதேம்மா! என் கண்ணு! அழாதே!" அங்கமுத்து அவள் கண்களைத் துடைத்து விட்டாள்.

"அம்மா-!" அம்மாவின் கைகளை ஆனந்தத்துடன் பிடித்துக் கொண்டு கயல்விழி சிரித்தாள்.

"பிள்ளைகளை இப்படி அணைத்துத்தான் வளர்க்க வேண்டும்" என்றார், சுப்பிரமணியம்.

அப்பொழுதுதான் அங்கமுத்து தனது இடுப்பில் இருந்த சாவிக் கொத்தை எடுத்தாள்.



"இன்று முதல் லெட்சுமிதான் இந்த வீட்டின் தலைவி" என்று கூறிக் கொண்டே, "இந்தாம்மா, பிடி!" என்று சாவிக் கொத்தை அவளிடம் நீட்டினாள்.

லெட்சுமி அஞ்சி நடுங்கினாள். "அய்யய்யோ... நானா... வேண்டாம்! மாமாவிடம் கொடுங்கள்."

"நீ நிர்வாகம் நடத்துவதைப் பார்த்து மகிழ்ச்சி அடைய வேண்டியவர்கள் நாங்கள். செங்கோலை வாங்கிக் கொள்ளம்மா" என்று சுப்பிரமணியம் கனிவாகச் சொன்னார்.

"அப்பாவுக்கு மகன் வாரிசு. மாமியாருக்கு மருமகள் வாரிசு. வாங்கிக் கொள்" என்று அங்கமுத்து சாவியை லெட்சுமியிடம் கொடுத்தாள்.

"அண்ணி லெட்சுமி..." கயல்விழி குரல் கொடுத்தாள்.

"வாழ்க!" என்று கண்ணன் முடித்தான்.

"சும்மா இருங்கள்" என்று லெட்சுமி நாணிக் கோணினாள். "இந்த மகிழ்ச்சியான நேரத்தில் பொற்கொடியும் இருந்ததால் எவ்வளவு நன்றாக இருக்கும்?"

"மூச்!" அங்கமுத்து கர்ச்சித்தாள். "படுபாவி! என்னை கொல்லவே முயற்சித்தாளே."

"சிறு பெண்... தெரியாத்தனமாக..." என்று லெட்சுமி சொன்னாள்.

அதற்குள் அங்கமுத்து "அவள் இந்த வீட்டுக்குள் வரவே கூடாது" என்று இடித்துச் சொன்னாள்.

அதை மீறி யாரும் வாய் திறக்கவில்லை.

சற்று நேரம் அமைதி நிலவியது.

அப்பொழுது "அம்மா" என்று அழைத்துக் கொண்டு பழைய வேலைக்காரி முனியம்மா உள்ளே வந்தாள்.

"வாடியம்மா வா! நல்ல நேரத்தில்தான் வந்திருக்கிறாய்" என்று அங்கமுத்து அவளை வரவேற்றாள்.

"அம்மா குழந்தை உண்டாகி இருப்பதாகக் கேள்விப் பட்டேன். பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன்" என்று முனியம்மா உற்சாகமாக உரைத்தாள்.

"அய்! அம்மாவுக்கும் குழந்தை பிறக்கப்போகிறதா!" என்று கயல்விழி துள்ளிக் குதித்தாள்.

"எனக்கு தம்பி பிறக்கப் போவதை ஏனம்மா என்னிடம் சொல்லவில்லை?" என்று அங்கமுத்துவிடம் அவள் குழைவாகக் கேட்டாள்.

அங்கமுத்து தலையில் அடித்துக் கொண்டாள். "உன் அண்ணிக்கு குழந்தை பிறக்கப் போவதைத்தான் முனியம்மா சொல்லுகிறாள்."

"ஆண் குழந்தை பிறக்க வேண்டும்! அவன் பிறந்து தான் பெரியம்மாவை அடக்க வேண்டும்!" என்று லெட்சுமியை வாழ்த்திய முனியம்மா, "நான் வருகிறேன், அம்மா" என்று புறப்பட்டாள்.

"எங்கேடி போகிறாய்? உள்ளே போ" என்று அங்கமுத்து கட்டளையிட்டாள்.

முனியம்மா விழித்தாள்.

"என் பேரன் பிறந்து என்னை திருத்துவதை நீ பார்க்க வேண்டாம்? அதுவரை உள்ளே போய் வேலையைப் பார்" என்றாள், அங்கமுத்து.

"உண்மையாகவா சொல்கிறீர்கள். அம்மா!" முனியம்மாள் தாங்க முடியாத மகிழ்ச்சியால் மெய் சிலிர்த்தாள்.

அதற்குள் லெட்சுமி, "வேலைக்காரி எதற்கு அத்தை? வீட்டை நான் பார்த்துக் கொள்ள மாட்டேனா?" என்றாள்.

"வாயும் வயிறுமாக இருக்கிற பெண், பெரிய வேலையெல்லாம் செய்யக் கூடாது. கண்ணு, மாடியில் போய் குந்திக்கொள்" என்று அன்போடு கூறிக்கொண்டே, முனியம்மா அடுப்படியை நோக்கி நடந்தாள்.



அவள் அப்படிப் போனதும், கண்ணன் "அம்மா நான் மாடிக்குப் போகட்டுமா?" என்றாள் அங்கமுத்து.

"அது இல்லையம்மா லெட்சுமியையும் மாடிக்கு கூட்டிக் கொண்டு போகட்டுமா என்று.." கண்ணன் தலையைச் சொறிந்தான்.

"அவள் உன் மனைவி எங்கே வேண்டுமானாலும் அவளை அழைத்துக் கொண்டு போ" என்றாள் அங்கமுத்து.

அவள் சொல்லி வாய் மூடுமுன் கண்ணன் லெட்சுமியின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு மாடிக்கு ஓடினான்.

அதைப் பார்த்து அங்கமுத்துவும், சுப்பிரமணியமும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

அடுத்த நாலைந்து நாளில் மன்னன் வாடகைக்கு ஒரு வீடு அமர்த்தினான். ஒட்டல் அறையை காலி செய்து விட்டு அங்கே வந்து விட்டார்கள்.

பொற்கொடிக்கு அந்து வீடு மிகவும் பிடித்து இருந்தது. பெரிய வரவேற்பு அறை. இரண்டு மூன்று படுக்கை அறைகள், மாடி, பளபளப்பான தரை, பார்ப்பதற்கேஅழகாக இருந்தது.

"வீட்டுக்கு வேண்டிய சாமான்கள் எல்லாம் இன்றைக்கே வாங்கிவிட வேண்டும்" என்றாள் பொற்கொடி.

"புறப்படு இப்பொழுதே வாங்கி வந்து விடலாம்" என்றான். மன்னன். "முதலில் என்ன - என்ன வாங்க வேண்டும் என்று குறித்துக் கொள்வோம்."

"சொல்லுகிறேன் குறித்துக் கொள்ளுங்கள்."

மன்னன் பேனாவும் ஒரு தாளும் எடுத்துக் கொண்டாள்.

"இரட்டை கட்டில், சோபா, திரைச் சேலைகள் அங்கங்கே தொங்கவிட அழகான படங்கள்...அதோ அங்கே ஒரு விளக்கு வைத்தால் நன்றாக இருக்கும்! மறந்துவிட்டேனே இரண்டு பீரோக்கள் வேண்டும்."

பொற்கொடி சொல்லச் சொல்ல மன்னன், குறித்துக் கொண்டு வந்தான்.

அவள் யோசித்து யோசித்து சொல்லத் தொடங்கினாள்.

"சரி, வா வாங்கிக்கொண்டே யோசிப்போம்" என்று மன்னன் அவளை அழைத்துக்கொண்டு புறப்பட்டான்.

காலையில் போனவர்கள் மாலையில்தான் வீடு திரும்பினார்கள்.

ஒரு லாரி நிறைய சாமான்கள்!

ஆட்கள் சாமான்களை இறக்கி வீட்டுக்குள் கொண்டு வந்தார்கள்.

பொற்கொடியே நின்று எந்தெந்த சாமான்களை எங்கெங்கே வைக்க வேண்டும் என்று ஏவினாள்.

எல்லாம் முடிய எட்டுமணி ஆகிவிட்டது.

செலவு பத்தாயிரம் ரூபாய்க்கு மேலே என்றாலும், வீடு இப்பொழுது பார்க்க மேலும் அழகாக இருந்தது.

"அப்பாடா!" என்று மன்னன் கட்டிலில் அமர்ந்தான்.

"எனக்கு இப்பொழுது காப்பி வேண்டும் போல இருக்கிறது. ஒரே தலைவலி."

பொற்கொடியும் தலையைப் பிடித்துக்கொண்டே அவன் பக்கத்தில் உட்கார்ந்தாள்.

"எனக்கு பசி வயிற்றைக் கிள்ளுகிறது. சீக்கிரம் சமையல்செய். சாப்பிடுவோம்" என்றான் மன்னன்.

"சமையலா..." பொற்கொடி விழித்தாள்.

"உனக்குத்தான் அரைகுறையாக சமைக்கத் தெரியுமே செய். நான் மூக்கைப் பிடித்துக்கொண்டு சாப்பிட்டு விடுகிறேன்" என்றான் மன்னன்.

"ஆனால், என்னால் அப்படி முடியாதே" என்று பொற்கொடி அழுது வடிந்தாள்.



"பலே! உன் சமையலை உன்னாலேயே சாப்பிட முடியாதா? பிறகு என்ன செய்வது?"

"அதை பிறகு பார்ப்போம். முதலில் சமையல் செய்ய நாம் சாமான்களை வாங்கவில்லை."

"அட... ஆமா! சமையலுக்கு என்னென்ன சாமான்கள் வாங்க வேண்டும்?"

"எனக்கு என்ன தெரியும்?"

"சாப்பிடத்தான் தெரியும்!"

"உம்... கேலி பண்ணாதீர்கள்!"

"சமையலுக்கு முதலில் அடுப்பு வேண்டும்."

மன்னன் ஒரு விரலை மடக்கினான்.

"அடுத்து நெருப்பு வேண்டும்" என்றாள் பொற்கொடி "ஆமாம் நெருப்பு எந்த கடையில் விற்பார்கள்?"

"தெருவில் எவனாவது பீடி குடித்துக் கொண்டு போவான். அவனிடம் நெருப்பு வாங்கிக் கொள்ளலாம்!" என்றான் மன்னன்.

"சரி, நெருப்பு முடிந்தது. பிறகு பாத்திரங்கள் வேண்டும்."

"என்னென்ன பாத்திரங்கள் வேண்டும்?"

"பாத்திரக் கடைக்காரனிடம் கேட்டால் சொல்லுகிறான்."

"எதுக்கு இவ்வளவு சிரமம்? ஒட்டலிலேயே சாப்பிட்டு விட்டால் என்ன?"

"நல்ல யோசனைங்க! புறப்படுங்கள்! புறப்படுங்கள்!"

மன்னனை இழுத்துக் கொண்டு பொற்கொடி கிளம்பினாள் மறுநாள் காலை.

மன்னன் எழுந்து குளித்து முடித்து விட்டான்.

பொற்கொடி இன்னும் தூங்கிக் கொண்டு இருந்தாள்.

மன்னன் "சுப்ரபாதம்" இசைத்தட்டு வைத்தான்!

பொற்கொடி சுகமாகக் குறட்டை விட்டாள்!

"ஒட்டக் கூத்தன் பாட்டுக்கு இரட்டை தாழ்ப்பாளாக இருக்கிறதே!"" என்று கூறிக் கொண்டே மன்னன் இசைத் தட்டை நிறுத்தினான்.

மனைவியின் அருகில் சென்று "பொற்கொடி.... பொற்கொடி.." என்ற அவளை எழுப்பினான். அடித்துத்தான் எழுப்ப வேண்டியிருந்தது.

"காப்பி.."

கட்டிலில் எழுந்து அமர்ந்த பொற்கொடி கண்களை திறக்காமலே கைகளை நீட்டினாள்.

மன்னன் திரும்பிப் பார்த்தான்

தண்ணீர்க் குவளையும் கண்ணாடி தம்ளரும் இருந்தன.

ஒரு தம்ளர் தண்ணீரை ஊற்றி அவள் கையில்கொடுத்தான்.

கண்களை மூடிக்கொண்டே இரண்டு மடங்கு குடித்தவள் "சே! சே! காப்பி என்ன பச்சை தண்ணீராக இருக்கிறது" என்றாள்.

"கண்ணை திறந்து பார். தண்ணீர்தான்" என்றான் மன்னன்.

அதன் பின்தான் பொற்கொடி கண்களை திறந்தாள்.

"என்னங்க காப்பி கேட்டேன். தண்ணீர் கொடுக்கிறீர்களே" என்று சிணுங்கினாள்.

"இங்கே பண்டம் பாத்திரம் இருந்தால் தானே காப்பி போட்டுக் கொடுப்பேன்" என்றான் மன்னன். "எழுந்து பல்லை துலக்க ஓட்டலுக்குப் போவோமா?"

பொற்கொடி எழுந்து குளியல் அறைக்குள் சென்றாள்.

பத்து நிமிட்த்தில் மென்மையான அலங்காரத்துடன் வெளியில் வந்தாள். போவோமா?"

"ஓட்டலில் இப்பொழுது காப்பி சாப்பிட்டு விடுகிறோம். காலை சிற்றுண்டி, மதிய சாப்பாடு, மாலை சிற்றுண்டி, இரவு சாப்பாடு எல்லாம் என்ன செய்வது?" மன்னன் கேட்டான்.



"ஓட்டலிலேயே சாப்பிட்டு விட வேண்டியதுதான்! அதுதான் சுலபமான வேலையாக இருக்கிறது" பொற்கொடி தாராளமாகச் சொன்னாள்.

"பிறகு இந்த வீடு எதற்கு? மாதம் அறுநூறு ரூபாய் வாடகை அநாவசியமாகக் கொடுக்க வேண்டுமா?"

தேவையில்லை. நாம் மீண்டும் ஓட்டல் அறைக்கே போய்விடலாம்.

போகலாம். ஆனால், அறை வாடகை ஒரு நாளைக்கு நாற்பத்தைந்து ரூபாய். நம் இருவருக்கும் சாப்பாடு சிற்றுண்டிகள் ஒரு நாளைக்கு எண்பது ரூபாய் ஆகிறது. ஆக ஒரு நாளைக்கு ரூபாய் 125. மாதம் ஏறத்தாழ நாலாயிரம் ரூபாய்!"

"அச்சச்சோ! அவ்வளவா ஆகிறது!" பொற்கொடி வாயைப் பிளந்தாள். "வேண்டாம். இந்த வீட்டிலேயே இருந்து விடுவோம்."

"சாப்பாடு..." குழாயில் தண்ணீர் வருகிறது. குடித்துக் கொண்டு இருந்து விடுவோமா?"

அப்பொழுது ஒரு குரல் கேட்டது.

அம்மா...""

## 43

இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒரு பெண் நின்று கொண்டு இருந்தாள்.

அவ்ளைப் பார்த்து - ஆடையைப் பார்த்து அவள் யார் என்று கண்டுகொள்ளும் நிலையில் இல்லை. இரண்டுங் கெட்டானாக இருந்தாள்.

கூந்தலை கொண்டை முடிந்து இருந்தாள். அதில் கனகாம்பரம். வாயல் சேலை. வாய் நிறைய வெற்றிலை; வாளிப்பான உடல் கட்டு. வட்ட முகம். வலையில் சிக்காத மீன் விழிகள். வளையாத மூக்கு. வந்து பழக்கப் பட்டவள் போல தாராளமாக உள்ளே வந்து நின்றுகொண்டு இருந்தாள்.

"நீ யார்? என்ன வேண்டும்!" என்று பொற்கொடி கேட்டாள்.

அந்தக் கேள்வியில் இருந்தே அவள்தான் வீட்டுக்கு அதிபதி என்று அந்தப் பெண் தெரிந்துகொண்டாள் போலும். "கும்பிடுகிறேன், அம்மா" என்று பெரிய கும்பிடாகப் போட்டாள்.

"நான் நன்றாக சமையல் செய்வேன். வீட்டு வேலையெல்லாம் தெரியும். இங்கே ஏதாவது வேலையிருக்குமா, அம்மா?" என்று கேட்டாள், அவள்.

பூ! வேலைக்காரியா! பொற்கொடிக்கு எஜமானி தோரணை வந்து விட்டது. நிமிர்ந்து நின்று கொண்டாள்.

எதிரில் நின்றவளை ஏற இறங்கப் பார்த்தாள். "உன்னைப் பார்த்தால், வேலைக்காரி போலத் தெரியவில்லையே?"

"பெரிய இடத்தில் கொஞ்சம் 'நீட்'டாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள் அம்மா" என்றாள் அந்தப் பெண்.

"அடடே! ஆங்கிலங்கூட பேசுகிறாயே" என்று பொற்கொடி வியந்தாள்.

"ஐ.ஏ. எஸ் ஆபீசர் வீட்டில் ஐந்தாண்டாக வேலை பார்த்தேன், அம்மா. அவர் டெல்லிக்கு மாற்றலாகிப் போய் விட்டார். எனக்குத்தான் அவ்வளவு தூரம் போக விருப்பம் இல்லை" என்று அந்தப் பெண் தெரிவித்தாள்.

அவளை அங்கே நிற்க வைத்துவிட்டு, பொற்கொடி மன்னனைச் சற்று தூரம் அழைத்துச் சென்றாள்.

"நமக்கு ஒரு வேலைக்காரி அவசியம் வேண்டும் அல்லவா?" என்று இரகசியமாகக் கேட்டாள்.



"நிச்சயம் வேண்டும். ஏனென்றால், எனக்கு சமைக்கத் தெரியாது" என்றான், மன்னன். "முதலில் இவள் யார், என்ன ஏது என்பதை நன்றாகத் தெரிந்து கொள்."

மீண்டும் வேலைக்காரியிடம் பொற்கொடி வந்தாள்.

"வீட்டுக்கு என்னென்ன வேண்டும் என்பது உனக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

கேள்வி புரியாமல் வேலைக்காரி விழித்தாள்.

"ஒரு வீடு என்றால், அதற்கு என்னென்ன சாமான்கள் வேண்டும்? ஏனென்றால், எங்கள் வீட்டுக்கு அடுப்பு முதல் நெருப்புவரை எல்லாமே இனிமேல்தான் வாங்க வேண்டும்" என்றாள், பொற்கொடி.

"ஓ! அதைக் கேட்கிறீர்களா?" என்ற வேலைக்காரி "வீட்டுக்கு முக்கியமாகத் தேவை விளக்குமாறு!" என்றாள்.

பொற்கொடி பெருமிதத்துடன் மன்னன் பக்கம் திரும்பினாள். பார்த்தீர்களா? சரியாக வேலைக்காரி!"

பிறகு மீண்டும் வேலைக்காரியின் பக்கம் திரும்பினாள். "உன்னை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. இன்று முதலே நீ இங்கே வேலை செய்யலாம். உனக்கு என்ன சம்பளம் வேண்டும்?" என்று கேட்டாள்.

"ஐ.ஏ.எஸ் ஆபீசர் வீட்டில் இரண்டு வேளை சாப்பாடு போட்டு, மாதம் நாற்பது ரூபாய் கொடுத்தார்கள். தீபாவளி பொங்கலுக்கு துணி எடுத்துக் கொடுப்பார்கள்" என்றாள் வேலைக்காரி.

"உனக்கு நான் மூன்றுவேளை சாப்பாடு தருகிறேன். மாதம் ஐம்பது ரூபாய் சம்பளம், நிறைய துணிமணி தருகிறேன். ஆனால், நீ வீட்டோடு இருக்க வேண்டும். சம்மதமா?" என்று பொற்கொடி கேட்டாள்.

"நான் ஏழை. எனக்கு சோறு கிடைக்கிற இடந்தான் சொர்க்கம்." என்று முகம் மலர்ந்த வேலைக்காரி, "நீங்கள் என் கண்கண்ட தெய்வம்" என்று அவள் காலில் விழுந்தாள்.

பொற்கொடி பூரித்துப் போனாள். "நல்ல பணிவான வேலைக்காரி" என்று கணவனைப் பார்த்து பூரித்தாள்.

"சரி சரி, எழுந்திரு. உள்ளே போய் வேலையைப் பார். நாங்கள் வெளியில் போய் வருகிறோம். வந்ததும் நாம் இருவரும் கடைவீதிக்குப்போய், வீட்டுக்கு வேண்டிய சாமான்கள் வாங்கி வருவோம்" என்று வேலைக்காரியிடம் சொன்னாள்.

வேலைக்காரி எழுந்து, மீண்டும் ஒரு கும்பிடு போட்டு விட்டு, உள்ளே செல்ல முயற்சித்தாள்.

"அவள் பெயரைக் கேட்கவில்லையே" என்று மன்னன் நினைவுப்படுத்தினான்.

"ஏய் உன் பெயர் என்ன?" என்று பொற்கொடி கேட்டாள்.

"அன்னம்" என்று சொல்லிவிட்டு, அவள் தலுக்கிக் குலுக்கி நடந்தாள்.

"நடைகூட அன்னம் போலத்தான் இருக்கிறது!" என்று மன்னன் கேலியாகச் சொன்னான்.

பொற்கொடி அவன் தொடையை 'நறுக்' கென்று கிள்ளினாள்!

லெட்சுமி அடுப்படியில் வேலையாக இருந்தாள். முனியம்மா அவளுக்கு உதவிசெய்து கொண்டு இருந்தாள்.

கூடத்தில் அங்கமுத்து அப்பளம் உருட்டிக்கொண்டு இருந்தாள். இப்பொழுது அவள் ஒரு பொழுதுகூட ஓய்ந்து இருப்பது இல்லை. எதையாவது தொட்டுக் கொண்டே இருப்பாள். இதனால் இப்பொழுது அவள் சுறுசுறுப்பாக இருப்பது போன்ற உணர்ச்சி அவளுக்கே ஏற்பட்டது.



வீட்டுக்குள் யாரோ வருவது போன்ற ஓசை கேட்டது

அங்கமுத்து தலைநிமிர்ந்து பார்த்தாள்.

சண்முகமும், சுந்தரவடிவும் வந்து கொண்டு இருந்தார்கள்.

"சம்பந்தி அம்மாவா? வாருங்கள்!" வாருங்கள்!" என்று வாய் நிறைய வரவேற்றுக் கொண்டே அங்கமுத்து எழுந்தாள்.

அவர்கள் இருவருக்கும் தங்கள் காதுகளை நம்ப முடியவில்லை. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

அப்பளம் உருட்டிக் கொண்டிருந்த மாவு, குழவியை அப்பால் தள்ளிவைத்துக்கொண்டு இருந்த அங்கமுத்து அதைக் கவனிக்கவில்லை.

சாமான்களை ஒதுக்கி வைத்துவிட்டு, "மகளை பார்த்து விட்டுப் போக வந்தீர்களா?" என்று அங்கமுத்து கேட்டாள்.

அதே மூச்சில் உள்ளே திரும்பி, "லெட்சுமி! இங்கே வாயேன், உன்னைப் பார்க்க அப்பாவும், அம்மாவும் வந்திருக்கிறார்கள்" என்று குரல் கொடுத்தாள்.

உடனே லெட்சுமி துள்ளிக் குதித்து ஓடிவந்தாள்.

"மெல்லம்மா, வயிற்றுப் பிள்ளைக்காரி இப்படியெல்லாம் ஓடக்கூடாது" என்று அங்கமுத்து கனிவாகச் சொன்னாள்.

"வாருங்கள், அம்மா வாருங்கள், அப்பா" என்று லெட்சுமி வரவேற்றாள்.

"நீதான் வரமாட்டேன் என்கிறாய் நாங்களாவது, பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தோம்" என்று சண்முகம் சொன்னார்.

"நான் போகத்தான் சொல்லுகிறேன், சம்பந்தி அவள் தான் ஒரே பிடிவாதமாக முடியாது என்கிறாள்" என்று அங்கமுத்து தெரிவித்தாள்.

சுந்தரவடிவு கொஞ்சம் முறுக்கு, சீடை, லட்டு செய்து, ஓர் அலுமினியத் தூக்கில் போட்டுக்கொண்டு வந்திருந்தாள். மகளுக்கு வாய்க்கு சுவையாக செய்து கொடுக்க வேண்டும் என்ற ஆசை.

தூக்கைப் பார்த்ததும், "எனக்கு என்னம்மா செய்து கொண்டு வந்திருக்கிறீர்கள்?" என்று சிறு குழந்தை போல லெட்சுமி கேட்டாள்.

எடுத்துக் கொடுக்க சுந்தரவடிவு தயங்கினாள். "உன் வீட்டில் உன் வாய்க்கு சுவையாக நெய்யில் வகை வகையாக செய்து கொடுப்பார்கள். ஆனால், இந்த ஏழையால் முடியுமா?"

"ஏனம்மா அப்படிச் சொல்லுகிறீர்கள்? சுவை நெய்யில் இல்லை. அன்பில் இருக்கிறது. அன்போடு கொடுத்தால் பழைய சோறு அமுதுதான்" என்றாள், அங்கமுத்து.

அதைக் கேட்டு, சுந்தரவடிவு மலைத்துப் போனாள்.

லெட்சுமியே தூக்கைத் திறந்து முறுக்கை எடுத்துக் கொண்டாள்.

முறுக்கை வாயில் வைத்து ஒரு கடி கடித்தவள், "எல்லாம் எனக்குத் தானே அம்மா?" என்று தூக்கையே கையில் தூக்கிக் கொண்டாள்.

"பார்த்தீர்களா? அம்மா செய்தது என்றால் பிள்ளைகளுக்கு தனி ஆசைதான்" என்றான் அங்கமுத்து.

"ஏன் அத்தை? நேற்று நீங்கள் செய்து கொடுத்த அதிரசங்கூட நன்றாகத்தானே இருந்தது! நான் எல்லாவற்றையும் தின்றேன்" என்றாள், லெட்சுமி.

"ஒரு பேச்சுக்கு சொன்னேம்மா" என்ற அங்கமுத்து "நிற்கிறீர்களே, உட்காருங்கள்" என்றாள்.

சண்முகம், சுந்தரவடிவும் ஒரு சோபாவில் அமர்ந்தார்கள்.

"நீங்கள் பேசிக்கொண்டு இருங்கள்; அடுப்பில் எண்ணெய் சட்டியை வைத்தேன்" என்று லெட்சுமி நகர்ந்தாள்.



அதற்குள் அங்கமுத்து, "உன்னைப் பார்க்க அம்மா அப்பா வந்திருக்கிறார்கள். பேசிக் கொண்டு இரும்மா, நான் போய்ப் பார்க்கிறேன்" என்று எழுந்தாள்.

அங்கமுத்துவின் தலை மறைந்ததும், "என்னம்மா உன் மாமியார் ஒரேடியாக மாறிவிட்டார்!" என்று சண்முகம் கேட்டார்.

"உஸ்... மெல்லப் பேசுங்கள். அந்த அம்மா காதில் விழப்போகிறது" என்றாள், சுந்தரவடிவு.

"பட்டால் என்ன? என் மாமியார் இப்பொழுது பத்தரை மாற்று பசும்பொன்" என்று லெட்சுமி பெருமையாகச் சொன்னாள்.

"அதுதான் எப்படி இப்படி மாறினார் என்று கேட்கிறேன்" என்றார் சண்முகம்.

"நெருப்பில் போட்டு சுட்டால்தான் பொன் சுத்தம் ஆகும்" என்றாள் சுந்தரவடிவு.

"வருந்தவும் திருந்தவும்தானே மனிதனுக்கு மனம் இருக்கிறது" என்றார், சண்முகம்.

"இப்பொழுது எங்களுக்கெல்லாம் எவ்வளவு பெருமையாக இருக்கிறது தெரியுமா?" என்றாள் சுந்தரவடிவு.

இதற்குள் அங்கமுத்து திரும்பி வந்தாள். "என்ன சாப்பிடுகிறீர்கள்?"

"மகளை பார்க்க வந்தோம். பார்த்து விட்டோம். புறப்படுகிறோம்" என்றார் சண்முகம்.

"சாப்பிட்டு விட்டுத்தான் போக வேண்டும்" என்று அழுத்தமாகச் சொன்னாள் அங்கமுத்து.

சாப்பாட்டுக்குப் பிறகுதான் சம்பந்தியை அனுப்பி வைத்தாள், அங்கமுத்து. அதுவும் தனது காரிலேயே!

# 44

ஒ ங்கியும் பனியனுமாக, துண்டினால் தலையைத் துவட்டிக் கொண்டே, குளியல் அறையில் இருந்து மன்னன் வெளியில் வந்தான்.

அதே அறையில் இருந்த நிலைக் கண்ணாடி முன்பு வேலைக்காரி அன்னம் நின்று கொண்டு இருந்தாள்.

அவளைப் பார்த்தால் வேலைக்காரியாகத் தெரியவில்லை. வீட்டுக்காரியை மிஞ்சியவளாக விளங்கினாள்!

"பழைய சேலை இருந்தால் கொடுங்கள் அம்மா!" என்று அன்னம் நேற்று பொற்கொடியிடம் கேட்டாள். அவளும் ஒரு சேலை கொடுத்தாள். அந்தச் சேலையைத்தான் அன்னம் இப்பொழுது கட்டியிருந்தாள். அந்த வெங்காயச் சருகுச் சேலை அவளதுஉடலில் தோல் போல ஒட்டிக் கொண்டது. அவளுக்கு ஒரு புதிய தோற்றப் பொலிவைக் கொடுத்தது.

துண்டினால் தலையைத் துவட்டிக் கொண்டே வந்த மன்னனின் கண்களில் அவளது சேலைதான் பளிச் என்று பட்டது! அவன் பார்த்துப் பார்த்து அணைத்து அணைத்து பழக்கப்பட்ட சேலை!

"என்ன பொற்கொடி காலங்காத்தாலேயே அலங்காரம்?"

கொஞ்சலாகக் கேட்டுக் கொண்டே, அவளுடைய கொடியிடையை வளைத்துப் பிடித்தான்!

அன்னம் துள்ளவில்லை! துடிக்கவில்லை! "நான் அன்னம் எசமான்!" என்று நெளிந்தாள்! குழைந்தாள்! இஞ்சி தின்ற குரங்கு போல ஈ என்று பல்லைக் காட்டினாள்!



மன்னன் திடுக்கிட்டுப் போனான். அவனுக்கு வந்த ஆத்திரத்தில், அவன் பல் அத்தனையும் தட்டிவிடலாம் போல இருந்தது! பல்லைக் கடித்துக் கொண்டு பக்கத்து அறைக்கு விரைந்தான்.

அங்கே பொற்கொடி குறட்டை விட்டுக் கொண்டு இருந்தாள்!

"பொற்கொடி! எழுந்திரு! எழுந்திரு!"

மன்னன் "பளார்! பளார்!" என்று இரண்டு வைத்தான்!

"என்னங்க!" என்று வேகமாக விழித்து எழுந்த பொற்கொடி, முட்டியை தடவி விட்டுக் கொண்டாள்.

"நீ இங்கே படுத்துத் தூங்கு. நான் அங்கே... நீ தான் என்று நினைத்து அன்னத்தை" மன்னன் ஆத்திரத்துடன் பேசினான்.

"இவள் நீண்டநாள் இங்கே நிற்கமாட்டாள்" மன்னன் முணுமுணுத்தான்.

"ஏன்? அவளை இழுத்துக் கொண்டு எங்கேயும் ஓடப் போகிறீர்களா?"

பொற்கொடி அவன்மீது பாய்ந்தாள்!

மன்னன் வாயைப் பொத்திக் கொண்டான்.

கண் இல்லை? வேலைக்காரியைப் போய் பொற்கொடி விடவில்லை.

மன்னன் மூச்சு விடவில்லை. பேச்சுக் கொடுத்தாள் வளர்ந்து கொண்டே போகும் என்பது அவனுக்குத் தெரியும்.

சிறிது நேரத்தில் அன்னம் திரும்பி வந்தாள்.

அவளது பழைய சேலையை அவள் கட்டியிருந்தாள். அசோக வனத்து சீதை போல, ஆள் ஒரே சோகம்.

ஒரு வெள்ளி தம்ளரில் பொற்கொடிக்கு காப்பி கொண்டு வந்திருந்தாள்.

அவளும், பொற்கொடியும் கடைவீதிக்குச் சென்ற அன்று, வெள்ளிச் சாமான்கள் நிறைய வாங்கினார்கள். அடுப்படியில் பெரும்பாலான சாமான்கள் வெள்ளிதான். உங்கள் அந்தஸ்து என்ன... பெருமை என்ன... ஐ. ஏ. எஸ் அதிகாரி வீட்டில் வெந்நீர்ப் பானைக் கூட வெள்ளிதான் என்ற அன்னம் சொல்லிச் சொல்லி பொற்கொடியை எல்லா சாமான்களையும் வெள்ளியிலேயே வாங்க வைத்து விட்டாள்.

அன்னம் ஒன்றும் சொல்லாமல் காப்பியை நீட்டினாள்.

அதை வாங்கிக் கொண்டே பொற்கொடி, அவளை முறைத்துக்கொண்டே காப்பியைப் பருகினாள்.

மதியச் சாப்பாடு முடிந்தது.

அங்கமுத்து ஓய்வாக படித்துக்கொண்டு இருந்தாள். அவள் படித்தது. மு.வரதராசனார் எழுதிய கள்ளோ காவியமோ."

லெட்சுமி அவள் அருகில் அமர்ந்தாள். அவள் கால்களை பிடித்து விட்டாள்.

"என் காலுக்கு என்னம்மா கேடு? விடு" என்று அங்கமுத்து அவள் கைகளை விலக்கினாள்.

"காரியம் ஆக வேண்டுமானால் கழுதையானாலும் காலைப் பிடிக்க வேண்டுமாம்!" என்று சொல்லிக்கொண்டே கயல்விழி வந்தாள். அன்று அவளுக்கு விடுமுறை.

"முதலில் உன் காதைப் பிடிக்க வேண்டும்!" என்று சிரித்த அங்கமுத்து 'என்னம்மா விஷயம்?' என்று லெட்சுமியிடம் ஆதரவாகக் கேட்டாள்.

"ஒன்றும் இல்லை, அத்தை" என்று தயங்கிய லெட்சுமி, நான் அம்மா வீட்டுக்குப் போகலாம் என்று இருக்கிறேன்." என்றாள்.

அங்கமுத்துக்குக் கொள்ளை மகிழ்ச்சி, "எப்பொழுது அம்மா போகிறாய்? இப்பொழுதே நானே வேண்டுமானாலும் கொண்டுபோய் விட்டுவிட்டு வருகிறேன்."



"ஆனால், உங்களைப் பார்த்துக் கொள்ள ஒருவரை வைத்துவிட்டுத்தான் போவேன்."

"என்னை நானே பார்த்துக்கொள்வேன். நீ புறப்படு."

"இல்லை, அத்தை, உங்களை கவனித்துக் கொள்ள உரிமையுள்ள ஒருவர் இங்கே இருக்கவேண்டும்."

"என்னம்மா சொல்லுகிறாய்?"

"ஏன் அண்ணி, கழுத்தைச் சுற்றி மூக்கைத் தொடுகிறீர்கள்? அம்மாதான் இப்பொழுது நல்ல அம்மாயிற்றே! அங்கமுத்து தங்கமுத்து என்று அப்பாக்கூடச்சொல்லுகிறார்கள். பயப்படாமல் நேரடியாக விஷயத்தைக் கூறுங்கள்" என்றாள் கயல்விழி.

"என்ன விஷயம்? நீ தான் சொல்லேன்" அங்கமுத்து கேட்டாள்.

"வந்து அம்மா... சின்ன அண்ணி இங்கே வரவேண்டுமாம்" கயல்விழி நடுக்கத்துடன் சொன்னாள்.

"யாரு? பொற்கொடியா? ஏன், நான் உயிருடன் இருப்பது உங்களுக்கெல்லாம் பிடிக்கவில்லையா? அப்படியானால் அவளை இங்கே அழைத்து வாருங்கள்."

அங்கமுத்துவின் குரல் வேகமாக ஒலித்தது.

"சிறு பெண் தெரியாத்தனமாக ஏதோ செய்துவிட்டாள், அதை இன்னும் மனதில் வைத்துக்கொண்டு இருக்கிறீர்களே, அத்தை?" லெட்சுமி உருக்கமாக உரைத்தாள்.

"ஆமாம் அம்மா, சின்ன அண்ணியை மன்னித்து விடுங்கள்" என்று கயல்விழி சிபாரிசு செய்தாள்.

"அவளுக்கு மன்னிப்பே கிடையாது" அங்கமுத்து அழுத்தமாகச் சொன்னாள்.

"அம்மா பிடிவாதம் வேண்டாம். பிறகு உங்கள் பேரனுக்கு ஒட்டைக்காது ஆகிவிடும்" கயல்விழி எச்சரித்தாள்

அங்கமுத்து குழம்பினாள். "என்ன சொல்லுகிறாய்!"

"உங்கள் பேரனுக்கு காதில் சீழ் ஓடும்!"

"சீசீ வாயை மூடுடி!"

"அண்ணி வாயும் வயிறுமாக இருக்கிறார்கள். அவர்கள் ஆசைப்பட்டதை செய்யாவிட்டால், அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைக்குக் காதில் சீழ் வடியும் அல்லவா?"

"ஆமாம்" என்ற அங்கமுத்து, "என் கண்ணு என்ன ஆசைப்பட்டாலும் அதைச் செய்ய நான் இருக்கிறேன்" என்று பெருமிதத்துடன் கூறினாள்..

"சின்ன அண்ணி இந்த வீட்டுக்கு வரவேண்டும் அது தான் பெரிய அண்ணியின் ஆசை."

கயல்விழி திட்டவட்டமாகத் தெரிவித்தாள்.

"அப்படியா கண்ணு?" லெட்சுமியை நோக்கி கனிவுடன் அங்கமுத்து கேட்டாள்.

அவள் தலையை அசைத்தாள்.

மறு பேச்சில்லை. "உன் ஆசைப்படியே செய்யம்மா" என்றாள் அங்கமுத்து.

"மிகவும் நன்றி அத்தை" என்று லெட்சுமி களிப்புடன் கைகூப்பினாள்.

கயல்விழி முகம் மலர்ந்தாள்.

"ஏன் லெட்சுமி, பொற்கொடி மீண்டும் இங்கே வருவாளா?" அங்கமுத்து ஐயத்துடன் கேட்டாள்.

"முயற்சி செய்கிறேன் அத்தை" என்றாள் லெட்சுமி.



## 45

**க**ண்விழிக்கும் முன்பே கட்டில் அறைக்கே காப்பி வந்து விடும். ஆனால், இன்று இன்னும் அன்னத்தைக் காணோம்.

"அன்னம்... அன்னம்..."

கட்டிலில் எழுந்து அமர்ந்த பொற்கொடி குரல் கொடுத்தாள்.

இரண்டு மூன்று முறை குரல் கொடுத்தும் அன்னம் வரவில்லை. மன்னன்தான் வந்தான்.

"இந்த அன்னம் எங்கே தொலைந்தாள்?" அவனிடம் எரிச்சலுடன் பொற்கொடி கேட்டாள்.

"எனக்கு என்ன தெரியும்?" அவன் அலட்சியமாகக் கையை விரித்தான்.

"கீழே இருக்கிறாளா?"

"நான் போய்ப் பார்க்கவில்லை."

"ஏன்?"

"நீ விழித்து எழுந்து, என்னையும் காணாமல், நான் அவளோடு ஓடிவிட்டதாக நினைத்துவிடக் கூடாதே!"

வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல மன்னன் சொன்னான்.

"அழகாகத்தான் பேசுகிறீர்கள்" என்று கடுகடுத்த பொற்கொடி, எழுந்து கீழே இறங்கி வந்தாள்.

"அன்னம்... அன்னம்... " என்று அழைத்துக் கொண்டே அடுப்படிக்குப் போனாள்!

அங்கே போனதும் பொற்கொடி திடுக்கிட்டாள்!

காலி செய்யப்பட்ட வீடுபோல, அடுப்படி வெரிச் என்று கிடந்தது. ஒரு சாமானையும் - வரிசை வரிசையாக வாங்கி அடுக்கிய வெள்ளிச் சாமான்களையும் தான் காணோம்!

அடுப்படியில் இருந்து பொற்கொடி வேகமாக வெளியில் ஓடிவந்தாள். "இந்தாங்க.. உங்களைத்தானே.. கீழே வாங்களேன்" என்று கூவினாள்.

"என்ன பொற்கொடி?" மேலே நின்றபடியே மன்னன் கேட்டான்.

"வேலைக்காரியைக் காணோமுங்க!அடுப்படியில் இருந்த அத்தனை சாமான்களையும் தூக்கிக் கொண்டு ஓடிவிட்டாள்." என்றாள் பொற்கொடி.

மன்னன் கீழே இறங்கி வந்தான். "நல்லவேளை. நான் மாடியில் இருந்தேன். இல்லாவிட்டால் என்னையும் முந்தானையில் முடிந்து கொண்டு போயிருப்பாள்!"

"குத்திக் காட்ட இது தான் நேரமா? முதலில் போலீசுக்கு போன் செய்யுங்கள்" என்றாள், பொற்கொடி.

மன்னன் போனை நோக்கிச் சென்றான்.

போலீசார் வந்து விசாரணை முடித்துச் செல்ல பதினோரு மணி ஆகிவிட்டது.

அதன்பின் தான் மன்னன் அலுவலகம் போனான்.

பொற்கொடி வீட்டில் தனியாக இருந்தாள்.

அவளுக்கு ஒரே வயிற்று வலி; படுக்கையில் புரண்டு புழுவாகத் துடித்தாள்.

அப்பொழுது லெட்சுமி அங்கே வந்து சேர்ந்தாள். வீட்டில் கூடத்தில் நின்று யாரையும் காணாமல் சுற்று முற்றும் பார்த்தாள். அப்பொழுது பொற்கொடியின் முணங்கல் ஒலி கேட்டது. வேகமாக மாடிக்கு வந்தாள்.



கைகளினால் வயிற்றை பிடித்துக்கொண்டு, தூண்டிலில் சிக்கிய மீன்போல பொற்கொடி துடித்தாள்.

"பொற்கொடி! என்னம்மா செய்கிறது?" லெட்சுமி ஆதரவுடன் அவளை அரவணைத்தாள்.

வந்திருப்பது யார் என்று கூட பொற்கொடி கவனிக்க வில்லை. "வயிற்று வலி! உயிரே போய்விடும் போல இருக்கிறது!" என்று ஒடிந்து விழுந்தாள்.

"பெருங்காயம் இருக்கிறதா?" லெட்சுமி கேட்டாள்.

"பெருங்காயமோ, சிறுகாயமோ! வயிற்றுக்குள் இருப்பது எனக்கு எப்படித் தெரியும்?" பொற்கொடி சிடுசிடுத்தாள்.

லெட்சுமி சிரிக்கவில்லை. வேதனைப்பட்டாள். அவளை விட்டுவிட்டு கீழே வந்தாள். அடுப்படியைத் தேடி கண்டு பிடித்தாள்; நல்ல வேளை, அங்கே பெருங்காய டப்பா இருந்தது.

ஒரு துண்டு பெருங்காயமும், ஒரு கண்ணாடி தம்ளரில் தண்ணீரும் எடுத்துக் கொண்டு லெட்சுமி மீண்டும் மாடிக்கு வந்தாள்.

பெருங்காயத் துண்டை பொற்கொடியின் வாயில் போட்டு, தண்ணீரை குடிக்கச் சொன்னாள்.

"கொஞ்சம் படுத்துக் கொள்ளம்மா" என்று பொற்கொடியை கட்டிலில் படுக்க வைத்தாள்.

தானும் பக்கத்தில் அமர்ந்து கொண்டாள்.

சிறிது நேரம் சென்றது.

சிரித்த முகத்துடன் பொற்கொடி எழுந்தாள்.

வயிற்றில் ஈட்டியை சொருகியது போல இவ்வளவு நேரமும் வலித்த வலி இருந்த இடம் தெரியாமல் போய் விட்டது.

"அக்கா, நீங்கள் கொடுத்தது என்ன மாத்திரை?"

"அது மாத்திரை அல்ல. பெருங்காயம்" என்றாள் லெட்சுமி. "பெருங்காயம் என்றால் பெரிய இரத்தக் காயம் அல்ல. சமையலில் சேர்க்கும் ஒரு சரக்கு. அதில் ஒரு துண்டு சாப்பிட்டால், வயிற்றுவலி சரியாகிவிடும்."

"அடடே! நீங்கள் டாக்டராக இருக்கலாம் போலிருக்கிறதே. நீங்கள் மட்டும் வராவிட்டால் இந்நேரம் என் உயிரே போயிருக்கும்" என்று பொற்கொடி நன்றியுடன் சொன்னாள்.

அவளுக்கு லெட்சுமி மீது எத்தனையோ கோபம்; ஆனால், இப்பொழுது அதையெல்லாம் நினைக்கும் நிலையில் கூட அவள் இல்லை.

"நான் டாக்டர் இல்லை பொற்கொடி. இதெல்லாம் பரம்பரையாக வரும் நமது பாட்டி வைத்தியம்" என்றாள் பொற்கொடி.

"பாட்டி வைத்தியம் எப்படி உங்களுக்குத் தெரியும்?" பொற்கொடி கேலியாகச் சிரித்தாள்.

"அது பரம்பரையாக வரக் கூடியது. தாயிடம் இருந்து மகள் கற்றுக் கொள்ளுகிறாள். மாமியாரிடம் இருந்து மருமகள் தெரிந்து கொள்ளுகிறாள். உனக்குத் தெரியாமல் போய் விட்டது. உன் வீட்டு வேலைக்காரி எங்கே?" என்று லெட்சுமி கேட்டாள்.

"ஒருத்தியை நம்பி ஏமாந்து போனேன்" என்ற பொற்கொடி, அன்னத்தைப் பற்றிச் சொன்னாள்.

"நாம் எல்லாம் சிறு பெண்கள். பாம்பு எது-பச்சைக் கொடி எது என்று பார்த்ததும் தெரிந்து கொள்ள நம்மால் முடியாது. அதற்குப் பழக்கம் வேண்டும்."

"பழக்கம் இல்லாமல்தான் ஏமாந்து போனேன் அக்கா."

"பெரியவர்களுடன் இருந்துதான் சின்னவர்களான நாம் பழகிக் கொள்ள வேண்டும். நாம் எல்லாம் கொஞ்ச நாளாவது நம் மாமியாருடன் இருக்க வேண்டும்; பொற்கொடி."



"மாமியாருடனா? ராட்சசி!"

"அத்தையை அப்படிச் சொல்லாதே பொற்கொடி அவர்கள் இப்பொழுது அடியோடு மாறிவிட்டார்கள்."

"நான் நம்ப மாட்டேன்."

"நேரில் பார்த்தால் நம்புவாய். அத்தைதான் உன்னை அழைத்து வரச் சொன்னார்கள்."

"உண்மையாகவா?"

"ஆமாம். அங்கே வந்து நீ கொஞ்ச நாளாவது இருக்க வேண்டும். மாமியார் வீடுதான் மருமகளுக்குப் பள்ளிக்கூடம். அங்கே புதிய மருமகள் படித்துக்கொள்ள வேண்டிய அரிச்சுவடி பாடங்கள் நிறைய இருக்கின்றன. சில ஆசிரியர்கள் கொஞ்சம் கெடுபிடியாக இருக்கலாம். அதற்காக பாடத்தை இழந்துவிடக் கூடாது அல்லவா? அந்தப் பாடத்தை நீ படித்திருந்தால், இப்படி வயிற்றுவலியால் துடித்திருக்க மாட்டாய்."

லெட்சுமி வயிற்றுவலியை நினைவுபடுத்தியதும், பொற் கொடிக்கு அதைவிட மாமியார் வீடே சொர்க்கமாகத் தோன்றியது!

பொற்கொடியை அழைத்துக் கொண்டு லெட்சுமி திரும்பினாள்.

பொற்கொடி தயக்கத்துடன் நின்றாள்.

"வாம்மா" என்று அங்கமுத்து எதிர்சென்று அழைத்தாள்.

அவளைப் பார்த்ததுமே அவளது மாறுதலை பொற்கொடி தெரிந்து கொண்டாள். புலிக்கும் பூனைக்கும் வேறுபாடு தெரியாதா, என்ன?

"என்னை மன்னித்துக் கொள்ளுங்கள், அத்தை" என்று பொற்கொடி கூற, "முள்ளை முள்ளால் எடுத்தவள் நீ" என்று அங்கமுத்து சிரித்தாள்.

மாலையில் சுப்பிரமணியம், கண்ணன், மன்னன் மூவரும் அலுவலகத்தில் இருந்து திரும்பினார்கள்.

பிரிந்தவர் கூடினர்.

பெருமகிழ்ச்சி பிறந்தது.

“விளக்கு வைக்கு முன் லெட்சுமியைக் கொண்டு போய் அவர்கள் வீட்டில் விட்டுவிட்டு வா” என்று அங்கமுத்து மகனை விரட்டினாள்.

“இதோ, அம்மா” என்று கண்ணன் காரை எடுக்க ஓடினான்.

லெட்சுமி அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டாள்.

“ஒன்றும் அவசரம் இல்லையம்மா. நீ பேரனை பெற்று எடுத்துக் கொண்டு வந்தால் போதும்” என்றாள் அங்கமுத்து.

“நான் நாலு நாளில் வந்து விடுவேன், அத்தை” என்றாள், லெட்சுமி

“அவசரம் இல்லை, அண்ணி எங்களை கொஞ்ச நாள் தனியாக இருக்க விடுங்கள்” என்று மன்னன் சொல்ல எல்லோரும் “கொல்” என்று சிரித்து விட்டார்கள்!

MAR 2004